

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

25வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை

சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

மூன்றாவது ஆண்டு

குருபூஜை விழா மலர்

ஆனந்த - ஐப்பசி -21

7—11—74

தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம்



ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 654

உ
குருபாதம்

திரு அருட் செய்தி

(26வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருளுரைகள்)

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
திருவுளப்பாங்கின் வண்ணம்
'ஞானசம்பந்தம்' பதிப்பகத்தில் வெளியிடப்பெற்றது.

தருமையாதீனம்
7—11—1974

ஜெமினி அச்சகம்,
28, மடத்துத் தெரு,
கும்பகோணம்.

உ

குருபாதம்

முன்னுரை

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிவுடைய இறைவன் உயிர்கள் மாட்டுக் கொண்டுள்ள அளப்பரிய கருணையே 'திருவருள்' என வழங்கப்பெறும். இத்திருவருள் இன்றேல் உயிர்கள் உய்யவோ உயரவோ இயலாது. இறைவனின் இவ்வருளையே சக்தியாகப் போற்றுவது நம் முன்னோர் மரபு. 'அருளது சக்தியாகும் அரன் தனக்கு' என்பது சாத்திர வாக்கு. இறைவனின் திருவருளை உயிர்கள் உணர்ந்து உய்தி பெறுதற்கு உதவும் அருளாளர்களே ஞானிகளும், துறவிகளுமாவர். திருவள்ளுவர் திருவருட் செய்தியை உலகுக்கு உணர்த்தும் சான்றோர்களை 'நீத்தார்' என்ற சொல்லால் குறிப்பர்.

திருவள்ளுவர் சுட்டும் 'நீத்தார்' பெருமைக்கு முழு இலக்கணமாகத் திகழும், திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் 26-வது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,** தாம் ஞானபீடம் ஏறிய நாள் தொடங்கி இன்று காறும், பல்வேறு தெய்விகத் தொடர்பான நிகழ்ச்சிகளில் திருவாய்மலர்ந்தருளிய அருளுரைகள் யாவும் தொகுக்கப்பெற்று **'திரு அருட் செய்தி'** என்ற பெயரோடு இதுபொழுது வெளியிடப்பெறுகிறது.

அருளியல் வாழ்க்கை உலகியலோடு நெருக்கமான தொடர்புடையது என்பதனை நன்குணர்ந்து – சமய நெறியோடு மக்கள் சமுதாய நெறிகளையும் நன்கு கடைப்பிடித்து உய்ய வேண்டுமென்ற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளத்தை நூலுள் எங்கும் கண்டு மகிழ முடிகிறது. சமயம், இலக்கியம், கலை, தத்துவம், சமுதாயம், மரபு முதலிய பல்துறை அறிவும்பெற்று மக்கள் உய்வதற்கு இத் 'திரு அருட் செய்தி' பெரிதும் பயன்படும் என்பது திண்ணம்.

இந்நூலுள் அருளுரைகள் பலவும் முறையாகத் தொகுக்கப் பெற்று, அவ்வத்தலைப்புக்களோடு தொடர்புடைய திருக்குறள் ஒன்றை முன்னே தாங்கியும், கட்டுரையின் சாரமான கருத்தை அடுத்துத் தொகுப்பாகச் சுட்டியும், கருத்து அடிப்படையில் உள் தலைப்புக்கள் தரப்பெற்றும் வெளியிடப்பெற்றுள்ளன. இவை, இதனைக் கற்பார்க்குத் தெளிவான பொருளுணர்ச்சியைத் தோற்றி நலம்பயக்க உதவியாக அமையும்.

திரு அருட் செய்தி

இவ்வருள் நூல், தம்மை ஆட்கொண்டருளிய ஞானத் தந்தையாகிய தருமையாதீனம் 25-வது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் திருவடிகட்கு 26-வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் பக்தியோடு காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்பெற்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களது மூன்றாமாண்டுக் குருபூஜைத் திருநாளாகிய இன்று வெளியிடப் பெறுவது பெரிதும் பொருத்தமாக அமைகிறது. கட்டுரைதோறும் தம் ஞானாசாரியர் திருவடிகளில் தாம் கொண்டுள்ள பத்திமையை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் அருமைப்பாடு அவர்களது அருள் பழுத்த நன்னெஞ்சிற்குச் சான்றாக அமைகிறது.

திரு அருட் செய்தியைக் கயிலைக் குருமணி அவர்களால் உருவாக்கப்பெற்ற திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் குருபூஜைத் திருநாளாகிய இன்று (7-11-74) வெளியிடுவது மிகப்பொருத்தமாகவே அமைகிறது.

தருமையாதீனத் திங்கள் இதழாகிய 'ஞானசம்பந்தத்தில்' வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்துப் பிழைதிருத்தம் முதலியவற்றைச் செய்து அச்சிடும் பணியில் ஈடுபட்ட நம் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள், தருமையாதீனத் தமிழ்ப் புலவர் சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன், புலவர் திரு. இரா. செல்வக்கணபதி ஆகியோர்க்கும், குறுகியகாலத்தில் இதனை அழகுற அச்சிட்டுக்கொடுத்த கும்பகோணம் ஜெமினி அச்சகத்தார்க்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாசி உரியது.

அன்பர்கள் திரு அருட் செய்தி உணர்ந்து உய்தி பெறுவார்களாக.

தருமையாதீனம்,
தருமபுரம்,
7—11—1974.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
அருளாணையின் வண்ணம்,
வித்துவான், இராமலிங்கத் தம்பிரான்

பொருளடக்கம்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமையாதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள் வரலாறு

ஞானக் குழந்தை :

தமிழகத்தில் – தென்பாண்டி நாட்டில் – ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் மரபில் சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்ற நல்லறப் பெரியோர்கட்கு அருந்தவ மகவாகப் பதினாறும் நூற்றாண்டில் அவதரித்தவர் தருமையாதீன முதற் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவருக்குப் பெற்றோர்கள், திருஞானசம்பந்தரைப்போல் தமது குழந்தையும் சிவஞானம் பெற்றுச் சைவம் வளர்க்கும் ஞான சூரியனாகத் திகழவேண்டும் என்று எண்ணி 'ஞானசம்பந்தன்' என்ற நற்பெயரைச் சூட்டி வளர்த்துவருகையில், தமது குல தெய்வமாகிய சொக்கநாதரையும் மீனாட்சியம்மையையும் தரிசிப்பதற்கு ஞானசம்பந்தருடன் மதுரை சென்று, பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி வழிபட்டனர். பெற்றோர்கள் ஊருக்குப் புறப்படுங்கால், ஞானசம்பந்தர் தொடர்ந்து நின்றதாயும் தந்தையுமாகிய சொக்கநாதரைப் பிரிய மனமின்றி, உடலுக்குத் தாய் தந்தையர்களாகிய பெற்றோர்களுக்கு விடைகொடுத்தனுப்பிச் சொக்கநாதர் வழிபாட்டிலேயே ஈடுபாடு கொண்டவரானார்.

கண்ணுக்கினியபொருள் :

நாள்தோறும் பொற்றாமரைக் கரையில் அடியார்கள் சிவ பூசை புரிவதைக் கண்டார் ஞானசம்பந்தர். தாமும் அவ்வாறு சிவபூசை புரிய எண்ணினார்; சொக்கநாதரை வேண்டினார். கருத்தறிந்து முடிக்கும் கண்ணுதற் கடவுளும் அன்றிரவு கனவில் தோன்றி, 'நாம் பொற்றாமரைத் தடாகத்தின் ஈசான்ய பாகத்தில் கங்கைக்குள் இருக்கிறோம். நம்மை எடுத்துப் பூசிப்பாயாக' என அருளினார். அவ்வண்ணமே மறுநாள் காலையில் பெருமானின் கருணையை வியந்து போற்றிப் பொற்றாமரைத் தடாகத்தில் மூழ்கினார்; ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் கண்ணுக்கினிய பொருளாகத் தமது கரத்தில் வரப்பெற்றார். 'ஆசாரியன் மூலமாகத் தீக்ஷை பெற்றுத் தானே சிவபூசை புரிதல்வேண்டும்; ஆசாரியன் வேண்டுமே? சிவஞானோபதேசம் பெறவேண்டுமே? எப்படிப் பூசனை புரிவேன்' என்று எண்ணந்தோன்றவே, அது பற்றி இறைவனிடமே முறையிட்டார்.

ஞானாசாரியனை அடைதல் :

வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதுந் தருவோனாகிய சொக்கநாதப்பெருமான், மறுநாள் கனவில் எழுந்தருளி, 'திருக் கயிலாய பரம்பரை – திருநந்திமரபு – மெய்கண்ட சந்தான வழியில் திருவாரூரில் விளங்கும் கமலை ஞானப்பிரகாசர் என்ற ஆசாரியரிடத்தில், வருகிற சோமவாரத்தில் ஞானோபதேசம் பெற்று நம்மைப் பூசிப்பாயாக' என அருளினார். அன்றிரவே, கமலை ஞானப்பிரகாசரிடத்திலும் கனவில் எழுந்தருளி, 'ஞானசம்பந்தன் வருகிற சோமவாரத்தன்று வருவான். அவனுக்கு ஞானோபதேசம் செய்து சிவபூசையும் எழுந்தருளுவிப் பாயாக' என்று அருளினார். ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருவாரூர் சென்று, பூங்கோயிலில் உள்ள சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்திருந்த கமலை ஞானப்பிரகாசரைக் கண்டார்; காந்தம் கண்ட இரும்புபோல்

ஆசாரியரால் ஈர்க்கப்பட்டார். சமய விசேட நிர்வாண தீக்ஷைகளால் பாசஞானம் பசுஞானங்கள் நீங்கிப் பதிஞானம் கைவரப்பெற்றார். சொக்கநாதப்பெருமானை ஆன்மார்த்த பூஜா மூர்த்தியாகப் பூசிக்கப்பெறும் பேற்றையும் ஞான அனுபூதியையும் அடைந்தார்.

கைவிளக்குப் பணிவிடை :

பன்னாளும் ஆசாரியப் பணிவிடைசெய்து தங்கி இருக்கும் நாட்களில் ஒருநாள், தியாகராசப் பெருமானின் அர்த்தயாம பூசையைத் தரிசித்து, ஆசாரியர் தமது மாளிகைக்கு எழுந் தருளினார். அப்பொழுது கைவிளக்குப் பணியாளன் உறங்கிவிட, ஞானசம்பந்தர் தமக்கு ஞான ஒளியேற்றி நல்வழி காட்டிய ஞானாசாரியருக்கு ஒளி விளக்கு ஏந்தி முன் சென்றார். திருமாளிகையின் வாயில்முன்னர்ச் சென்றவுடன், சிவானுபூதி யிலேயே திளைத்திருந்த ஞானப்பிரகாசர், அந்நிலை கைவரும் பக்குவத்திலிருந்த ஞானசம்பந்தரை 'நிற்க' எனக் கட்டளை யிட்டு உட்சென்றார். ஆசாரியர் பெற்ற சிவானுபூதியை ஞான சம்பந்தரும் கைவரப்பெற்றவராய் மாளிகை வாயிலில் கைவிளக்கு ஏந்தியவராகவே நின்றார். ஞானசம்பந்தரின் பெருமையை ஞாலம் அறியச்செய்து அதன்மூலம் சைவப்பயிர் தழைக்கத் திருவுளம் பற்றினான் போலும் இறைவன். அன்றிரவு பெருமழை பெய்தது. சிவானுபூதியில் திளைத்திருந்த ஞானசம்பந்தர் மீது ஒருதுளி மழைகூடப் படவில்லை. விளக்கோ சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

குருஞானசம்பந்தராயினார் :

வைகறைப்பொழுதில் ஞானப்பிரகாசரின் பத்தினியார் சாணம் தெளிக்க வருங்கால், ஞானசம்பந்தர் அனுபூதி நிலையில் நிற்பதையும் விளக்குச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதையும் கண்டு உட்சென்று தம் பதியிடம் வியப்புடன் வெளியிட்டார். ஞானப் பிரகாசர் விரைந்து வந்து பார்த்து, ஞானசம்பந்தரிடம் திருவருள்

பெருகுகின்ற நிலையைக் கண்டு மகிழ்ந்து 'ஞானசம்பந்தா! நீ ஆசாரியனாக இருந்து பக்குவம் உடைய ஆன்மாக்களுக்கு உபதேசிக்கும் தகுதி பெற்றுள்ளாய்; ஆகையால் உன்னிடம் வருகின்ற பக்குவம் உடையவர்களுக்கு ஞானோபதேசம் செய்து ஆசாரியனாக விளங்குவாயாக' என்று அருளினார். அப்பொழுது ஞானசம்பந்தர்,

> "கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
> எனக்கும் உடற்கும் எனதிச்சை யோஇணங்கார்புரத்தைச்
> சினக்குங் கமலையுள் ஞானப்பிர காச சிதம்பர இன்று
> உனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே"

என்ற பாடலைப் பாடி 'எங்குச் சென்று எவ்வாறு இருப்பேன்' என்று விண்ணப்பிக்க, ஞானப்பிரகாசர், 'மாயூரத்தின் ஈசான்ய பாகத்தில், வில்வாரண்யமாய் உள்ளதும் திருக்கடவூரில் நிக்ரகம் பெற்ற தருமனுக்கு அனுக்ரகம் செய்ததும் ஆன தருமபுரத்தில் இருந்துகொண்டு, அன்பு மிக உண்டாய் அதிலே விவேக முண்டாய்த் துன்பவினையைத் துடைப்பதுண்டாய் இன்பம் தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடிவருங் காரணர்க்கு உண்மையை உபதேசித்துக் குருவாக விளங்குவாயாக' என்று கட்டளையிட்டருளினார். அன்றுமுதல் ஞானசம்பந்தர் "குருஞானசம்பந்தர்" என்று வழங்கப்படுகிறார்.

தருமபுரத்தில் ஆதீனம் கண்டார் :

ஆசாரியர் ஆணையை மறுத்தற்கு அஞ்சியவராய், கன்றைப் பிரிந்த பசுப்போலே, பிரிவுத் துயரை ஆற்றாதவராய்க் கலங்கிய ஞானசம்பந்தரை நோக்கிக் 'குருவாரந்தோறும் வந்து நம்மைத் தரிசிப்பாய்' என்று தேறுதல் கூறினார் ஞானப்பிரகாசர். குருஞானசம்பந்தர் தம் குரு ஆணையை மேற்கொண்டு தமது ஆன்மார்த்த மூர்த்தியுடன் தருமபுரத்திற்கு எழுந்தருளி, தருமபுர ஆதீன மடாலயத்தை நிறுவியருளினார். ஞானானுபூதியில் திளைத்துப் பல பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞானோபதேசம் செய்து அனுபூதிச் செல்வராய்த் திகழ்ந்தார். அவர் அனுபூதியில்

பொங்கித்ததும்பிப் பூரணமாய் எழுந்த சிவஞானப் பேரருவியே, சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, முத்திநிச்சயம், திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப்பிராசாத ஷட்கம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை; நவமணிமாலை ஆகிய எட்டு நூல்கள். பாடல்கள் எளிமையும் இனிமையும் பயப்பனவாய், பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைத் தெளிய விளக்குவனவாய் விளங்குகின்றன.

ஆனந்தபரவசருக்கு உபதேசம் :

குருஞானசம்பந்தர், தம்மை அடைந்த பக்குவமுடையவர்களுக்கு உபதேசித்து அனுபூதிமானாகி விளங்கும்போது, உபதேச பரம்பரையை வளர்த்துவர அதிதீவிர பக்குவ நிலையிலிருந்த ஆனந்தபரவசர்க்கு உபதேசித்துத் தாம் ஜீவசமாதி கூடியருளினார்கள். அதிதீவிர நிலையில் இருந்த ஆனந்தபரவசர் தமது குருநாதர் உபதேசித்த ஞானநிலை விரைவில் கூடியவராய், தம் ஞானாசாரியர் ஜீவசமாதி கூடிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலய விமான ஸ்தூபியைத் தரிசித்தவாறு சிவசமாதி கூடினார்கள்.

மீண்டும் எழுந்தருளினார் :

திருக்கயிலாய பரம்பரை வழிவழியாக விளங்கவேண்டும் என்று விரும்பிய சீடர்களாகிய அடியவர்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர் சந்நிதியில் நின்று தங்கட்கு ஓர் ஆசாரியனைத் தர வேண்டினர். குருஞானசம்பந்தர் ஜீவசமாதியினின்றும் மீண்டும் எழுந்தருளி, சச்சிதானந்தருக்கு ஞானோபதேசம் செய்தார்கள். மந்ததர நிலையிலிருந்த அவருக்கு அனுபூதி நிலை கைகூடாமையால் திருக்கண்ணோக்கம் செய்து, அனுபூதி நிலை கைகூடச் செய்து அவரிடத்து சொக்கநாதர் பூசையையும் ஞானபீடாதிபத்யத்தையும் அருளி மீண்டும் ஜீவசமாதியில் எழுந்தருளினார்கள். குருஞானசம்பந்தர் ஜீவசமாதி நிலை கூடிய ஆலயமே ஞானம்பிகை உடனாகிய ஞானபுரீசுவரர் ஆலயமாக எல்லாப் பரிவாரங்களுடனும் திகழ்ந்து வருகின்றது.

அற்புத நிகழ்ச்சி :

தஞ்சை மன்னன் காவிரி கடலொடு கலக்குமிடத்தில் கடலாடச் சென்றான். தருமபுரத்திற்கு அண்மையில் வருகின்ற போது இரவு நேரம் ஆனதால் ஞானபுரீசுவரர் ஆலய அர்த்தயாம பூசையின் மணியோசை கேட்டு, மன்னன் கீழிறங்கி நின்று வணங்கினான். அருகிருந்த ஒருவர் 'இது சூத்திர சமாதிக்கு நடைபெறுகின்ற பூசை. இதைத் தாங்கள் வணங்குவது பாபம்; இவ்வாறு மற்றவர்களும் செய்யாதிருக்கக் கோயிலை இடித்து விடுதல் வேண்டும்' என்றார். அரசனும் ஏவலர்களை ஏவினன். ஏவலர்கள் கோயிலை இருப்புக் கோல் கொண்டு இடிக்க முற்பட்டனர். குருநாதர் கோயிலை இடிப்பதைக் கண்ட அடியவர்கள், அப்பொழுது ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்த, 7ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் சென்று,

> "தேசம் சிவாலயங்கள் சேர அலைய ஒரு
> மோசம் வந்ததையோ முதல்வனே - தேசத்து
> மன்னை வெறுப்பேனோ வருவினையை ஊட்டுவிக்கும்
> உன்னை வெறுப்பேனோ உரை."

என்ற பாடல்மூலம் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். அதனைச் செவியுற்ற குருமூர்த்திகள்,

> "ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தில்
> மோசம் வந்ததென்று மொழியலாம் - ஈசனே
> ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவுந் தானானல்
> நோக்குவதென் யாம்பிறரை நொந்து"

என்ற பாடலை அருளிச்செய்தார்கள். உடனே இரும்புக் கோல் பட்ட இடம் எல்லாம் குருதி பெருகிற்று. இடித்தவர்கள் இடியுண்ட நாகம்போல மூர்ச்சித்து விழுந்தனர். மன்னனும் கண்ணொளி மழுங்கி மயங்கினான். ஏவலரும் மன்னனும் குறை உணர்ந்து பிழை பொறுக்க வேண்டினர். 7ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் குருஞானசம்பந்தப் பெருமானைத்

தியானித்துத் திருநீறு அளித்தார்கள். திருநீறு அணிந்த மாத்திரத்தில் ஏவலர்கள் மயக்கம் தெளிந்து வணங்கினர். ஏவலர்களை ஏவிய மன்னன் ஒரு கண் ஒளி பெற்றான்.

மன்னன்பந்தல் :

மற்றொரு கண்ணும் ஒளிபெற வேண்டினான் மன்னன். குருமூர்த்திகளும் ஒரு மண்டலம் தங்கியிருந்து அர்த்தயாம பூசை வழிபாடு செய்தால் பாப விமோசனம் (விடுதலை) பெறலாம் என அருளினார்கள். அதன்படியே மன்னனும் தருமபுரத்திற்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் பாடிவீடு அமைத்து அர்த்தயாம பூசையைத் தரிசித்து மற்றைக் கண்ணும் ஒளிபெற்று மகிழ்ந்தான். பாடிவீடு அமைத்த இடம் தற்பொழுது மன்னன் பந்தல் என வழங்கிவருகிறது. தான் அருள்பெற உதவிய அர்த்தயாம பூசை சிறப்புற நிகழ ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஆலயத்திற்கு நிலம் அளித்து அருள்பெற்றுச் சென்றான். அத்தகைய பேரருளாள ராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரால் நிறுவப்பெற்றதே தருமை ஆதீனத் திருமடாலயம். குருஞானசம்பந்தர் பரம்பரையில் தற்பொழுது 26ஆவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** தருமையாதீன மடாலயத்தைப் புரந்து வருகின்றார்கள். இத்தருமையாதீனம் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க நாட்டு மக்களுக்கு நல்வழி காட்டிவருவதோடு இருபத்தேழு சிவாலயங்களையும் பாதுகாத்து வருகிறது. இதுவரை 650க்கு மேற்பட்ட ஞான சாத்திர தோத்திர நூல்களை வெளியிட்டு அதன்மூலம் ஒல்லும் வகையால் அறப் பணியும் புரிந்து வருகிறது.


ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

தோத்திரம்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

– ஸ்ரீ சம்பந்த சரணாலயர்.

தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்
பரிபூரணமான பத்தாம் நாள் குருபூஜை விழாவில்
(19—11—1971)



25ஆவது குருமூர்த்த ஆலயத்தில்

சிதம்பரம்

டாக்டர். திரு. K. அரங்கசாமிப் பிள்ளை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு

ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

குன்றக்குடி

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

ஆகியோருடன், தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

[1]

திரு அருட் செய்தி *

*"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு"*

[தம்மை ஆட்கொண்டருளிய ஞானத் தந்தை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பரிபூரணம் எய்திய பத்தாம் நாள் குருபூஜை விழாவில் திருவாய் மலர்ந்தருளிய இவ்வாசிச் செய்தியில் தம் குருநாதரின் பிரிவால் தம் திருவுள்ளத்தெழுந்த ஆற்றொண்ணாத் துயரினையும் – குருநாதரின் அருள் விளக்கத்தையும் – அருளாட்சிச் சிறப்பினையும் 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் நன்றிப்பெருக்கோடு வெளியிட்டருளியுள்ளார்கள்]

ஒளிவளர் விளக்கு :

*"அடியனேன் அறிவிலாமை கண்டும்என் அடிமை வேண்டிப்
படிமிசைக் குருவாய்வந்து பவவினை நீக்கி ஆண்டுக்
கடிபொழில் தருமைமேவிக் கயிலையைக் கண்டுவந்து,
விடிவெள்ளி விழவும்கொண்ட விமலசற்குருவே போற்றி"*

"ஒளிவளர் விளக்காய் உலப்பிலா ஒன்றாய் உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வாய்த் தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றாய்ச் சித்தத்துள் தித்திக்கும் தேனாய் அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியாய்" எமது உள்ளத்து இனித்த நம் குருநாதர் நம்மையெல்லாம்விட்டு செந்தமிழ்ச் சொக்கன் திருவடியில்

---

* 19—11—1971இல் *வெளியிடப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணம் எய்திய பத்தாம்நாட் குருபூசை விழா மலருக்குத் திருவாய் மலர்ந்தருளியது.*

இரண்டறக் கலந்துவிட்டார்கள். அவர்கட்குக் கிடைத்தற்கரிய பேறு என்றாலும், நம்போன்றாருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகவே அமைந்துவிட்டது. "கயிலைமலையனைய செந்திற் பதியில்" கயிலைக் குருமணியவர்கட்குத் தோன்றிய முன்னுணர்வும், குறுகிய காலத்தில் முத்தித்தலம் ஆகிய வாரணாசி சென்று, சென்ற பன்னிரண்டு மணி நேரத்திற்குள் சிவப்பேறு எய்தியமையும் அவர்களின் தூய உள்ளத்தையும், ஆசாரியத் திறனையும் எடுத்துக்காட்டுவதாய் இலங்குகின்றன.

கயிலைக் குருமணி :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் உலகறிந்த புகழ் உடையவர்கள்; புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி காட்டுவிப்பதுடன் நவையறு காட்சியும் நல்கி, அனைவரையும் அடிமைகொள்ளும் அருளாளராக விளங்கினார்கள்; அரசியல்வாதிகள், திருமடத்துத் தலைவர்கள், புலவர்கள், ஆசிரியர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், உழைக்கும் தொழிலாளர்கள், பல்வேறு நாடுகளில் வாழும் வேற்றுச்சமயத்தவர்கள் ஆகிய அனைவர் உள்ளங்களிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தனியிடம்பெற்று விளங்கினார்கள் என்பது அனைவரும் அனுபவத்தில் உணர்ந்த விழுமிய உண்மை.

ஆட்கொண்ட அருள் :

அவர்கள் ஞானபீடம் ஏறிய நாள்தொட்டுச் சரியாக இருபத்தாறரை ஆண்டுகளுக்குள், திருமுகமண்டலப் பொலிவாலும், திருமேனியின் தோற்றத்தாலும், நோக்காலும், வாக்காலும், உள்ளத்துணர்வாலும் எல்லாத் துறையிலும் உள்ளவர்களைக் கவர்ந்து, சைவமும், தமிழும் தழைத்தினிதோங்க, ஞான அரசு புரிந்தார்கள். எல்லாவகையிலும் சமயப்பணிபுரிந்த குருமணியவர்கள் எளியேமுக்குத் தமிழறிவு புகட்டித் தத்துவவுணர்வூட்டித் திருவடிசூட்டி, அறுபகை தெறும் ஆற்றலைக் கூட்டி அருள்பாலித்துள்ளமைக்கு,

"சொல்லுவ தறியேன்வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லவந் தருளி என்னைவழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி"

என வணங்குவதும் வாழ்த்துவதும் அன்றி வேறு கைம்மாறு காண்கிலேம்.

திருவருள் துணை :

தாயைப்பிரிந்த சேய்போலவும், கன்றைப் பிரிந்த பசுப் போலவும், ஆதவனைப் பிரிந்த பயிர்போலவும், வாடுகின்ற உள்ளம் படைத்த நம்மைத் தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியார்களும், அடியவர்களுள் முதல்வரான நமது கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் அவர்களும், திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்களும், ஸ்ரீ காசி மடத்தின் இளவரசு வித்துவான், ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் உடன் இருக்க, பெறற்கரிய ஞானபீடத்தில் ஏற்றிவைத்துள்ளார்கள். கயிலைக் குருமணியவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி அவர்கள்காட்டிய அறவழியில், அருள் நெறியில், தருமையாதீனத் திருமடத்தைக் கொண்டு செலுத்தும் ஆற்றலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருளாசியும் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தப்பெருமானின் பேரருளும் நமது ஆன்மார்ந்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானின் திருவருளும் வழங்கித் துணைநிற்கும் என்று திண்ணமாக எண்ணுகின்றோம். அடியவர்களும், அலுவலகத் தொண்டர்களும், சைவப்பெரு மக்களும், சமயநெறி நிற்கும் சான்றோர்களும், நம்முடைய அருள்நெறிப் பயணத்தில் உற்றதுணையாக இருந்து உதவு வார்கள் என்று நம்புகின்றோம்.

நினைவு மலர் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருமை பெருமைகளை ஆயிரக் கணக்கான அன்பர்கள் எழுதியுள்ளார்கள். அளவில் லாமல் வந்தவற்றுள் பொருள்நலம் பொதுளும் கட்டுரைகள், கடிதங்களுடன் கயிலைக் குருமணி பரிபூரணம் ஆகிய பத்தாம் நாட் குருபூசைவிழா அன்று (19—11—1971) விழாமலர் வெளி வருகிறது. இம்மலரைத் திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணா மலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகா மணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் வெளி யிடுகின்றார்கள். குருமணியின் பெருமைகளை இதன்வாயிலாக எல்லோரும் அறிந்து நலம்பெற வேண்டுமாய்ச் செந்தமிழ்ச் சொக்கன் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

[2]

குருவருள் விளக்கம் *

" துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று "

[ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருள்நலத்தை- அளவிறந்த கருணையை - அருளாட்சிச் சிறப்பை - ஆண்டவன் திருவடி சேர்ந்த அற்புதச் சூழலை வியந்து தொடங்கும் இச்செய்தி கயிலைக் குருமணி அவர்களது அருளாட்சி தருமையாதீன வரலாற்றில் பொற் காலமாகத் திகழ்ந்த அருமைப்பாட்டினை விளக்கு வதாக அமைந்து உள்ளது.]

எழில்வளர் சோதி :

" முப்பொரு ளுண்மை நாளும் மொழிந்தருள் மெய்கண் டான்தன்
திப்பிய சந்தா னத்துத் திருநகர்த் தருமை மேவி
இப்புவித் தொடர்பின் நீக்கி என்னையும் அடிமை கொண்ட
சுப்பிர மணிய ஞான சம்பந்தன் துணைத்தாள் போற்றி "

அருளுடைச் சுடராய், அளிந்ததோர் கனியாய், பெருந்திறல் அருந்தவர்க்கரசாய், பொருளுடைக் கலையாய், புகழ்ச்சியைக்

---

* தருமையாதீன 26வது குருமகா சந்நிதானமாக ஞானபீடத்தமர்ந்த பின்னர் முதன்முதல் ஆதீனத் திங்கள் இதழ் ஞானசம்பந்தத்திற்கு 10—12—1971இல் வழங்கியருளிய அருளாசி.

கடந்தபோகமாய், யோகத்தின் பொலிவாய், தெருளிட்டு அடியார் சிந்தையுட் புகுந்த சிவமாய், இருளிடத்திருந்த எம்மை யாட்கொண்ட எழில்வளர் சோதியாய்த் தருமை ஆதீன ஞானபீடத்தை அழகுசெய்த எம் குருநாதர் முத்தித்தலமாகிய காசியம்பதியில் இறைபேரொளியில் இரண்டறக் கலந்தார்கள்.

அன்புக் கண்ணீர் :

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை – முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை – பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புன்மையனை, புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறி ஒழுகச்செய்து ஆட்கொண்டருளிய எமது கயிலைக் குருமணியின் அருள்திறத்தை– ஆட்சி நலத்தை, 'மோனம் என்பது ஞானவரம்பு' என்பதற் கேற்ப, சொல்லாமல் சொல்லி எம்மைச் செயற்படுத்தும் சீர்மையை நினைதொறும், அகக்கண்ணால் காண்தொறும், பேசுந் தொறும், எப்போதும் அனைத்தெலும்பும் நெக்குருக அன்புக் கண்ணீர் பெருகுகிறது. பக்தர்களும் – அன்பர்களும் – சீடர்களும் அஞ்சலிக் கடிதமும், ஆறுதற் கடிதமுமாக அளவில்லாமல் எழுதியுள்ளமை நெஞ்சத்தைத் தேற்றுகிறது.

அருளறப்பணிகள் :

கயிலைக் குருமணியின் அருள் நலத்தை, ஆட்சித் திறத்தை அளந்து தெளியும் அளவுகோலாகவும் அமைந்துவிட்டது அவர்கள் வீடுபேறெய்திய நிலைமை. எம் ஞானத் தந்தையாக இருந்து 26½ ஆண்டுகள் எம்மையும், திருக்கூட்டத்து அடியவர்களையும், திருமடத்துப் பணியாளர்களையும், திருக்கோயில் தொண்டர் களையும், பக்தர்களையும் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து வளர்த்தவர்கள் நம் கயிலைக் குருமணி. 'ஞானசம்பந்தம்' என்னும் திங்கள் இதழ்மூலம் நானில மக்களுக்கு ஞானசம்பந்தம் நல்கினார்கள். தருமையில் தமிழ்க் கல்லூரி நிறுவிக் கண்ணென வளர்த்தவர்கள். திருக்குறளுக்கு உரைவளங் கண்டவர்கள். திருமுறைகட்கு உரைநலங் காணும் துணிவுகொண்டு ஒன்பது திருமுறைகளை வெளியிட்டவர்கள். சமயப் பெருமையைத் தமிழரும், பிறரும் உணரத் தமிழகத் தலைநகரில் சமயப்பிரச்சார நிலையம் கண்டவர்கள். சமயத் தலைவர்கள் ஒன்றுகூடித் தற்கால நிலைக்கு ஏற்பச் சமயப் பணிபுரியத் 'தெய்விகப் பேரவை' யையும் உருவாக்கியவர்கள்,

கனகாபிஷேகம் :

ஆதீனக் கோயில்களுக்குத் திருப்பணி செய்து திறம்படக் குடமுழுக்குச் செய்ததன் மூலம் தமிழகத்தில் ஒரு புத்துணர்ச்சியையும், எழுச்சியையும் உண்டாக்கியவர்கள். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தரிசிப்பதன் மூலம் பக்தர்களைத் திருக் கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தியவர்கள். சமயகுரவர்களால் பாடல்பெற்ற 274 தலங்களுள் ஐந்து தவிர அனைத்தும் தரிசித்தவர்கள். திங்கள்தோறும் தம் ஜென்ம நக்ஷத்திரத் தன்று ஒவ்வோர் பாடல்பெற்ற தலத்திற்குரிய பதிகங்களை அச்சிட்டு வழங்கியதோடு அபிடேக ஆராதனைகள் செய்வித்த வர்கள். கிடைத்தற்கரிய கயிலையைக் கண்டதால் 'கயிலைக் குருமணி' எனப் போற்றப் பெற்றுக் கனகாபிஷேகம் கொண்டவர்கள்.

எழுத்திலடங்காப் பணிகள் :

காலத்தைப் பொன்னெனப் போற்றியவர்கள். கடமையைக் கண்ணெனக் காத்தவர்கள். ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானிடத்தும், ஆதீனக் குருமுதல்வராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரிடத்தும் அளவிலாப் பக்தி பூண்டவர்கள். தருமையில் பதினெண் திருக்கரங்களோடு கூடிய மகாலட்சுமி துர்க்காதேவியை எழுந்தருளச் செய்து நாளும் வழிபட்ட நலமுடையவர்கள். ஆநந்தபரவசர் பூங்காவில் வனதுர்க்கைக்கு ஆலயமெடுத்து வழிபட்ட வளமுடையவர்கள். சமய ஒற்றுமைக்கு அடிப்படையான பாவை மாநாட்டிற்கும், பக்தி வளர்ச்சிக்கு அடிப்படையான கோடி அருச்சனைக்கும் வித்திட்டவர்கள். பல துறை அறிஞர்களுக்கும் பட்டம் வழங்கிப் பாராட்டிப் பண் பாட்டை வளர்த்தவர்கள். அப்பர் அவதரித்த திருவாமூரில் அப்பருக்கோராலயம் எடுத்துக் குடமுழுக்கும், குருபூசை விழாவும், மாநாடும் நிகழ்த்தப் பெருந்துணை புரிந்தவர்கள். இன்னும் எழுத்திலடங்காத் திருப்பணிகள் பலப்பல செய்தவர்கள்.

ஆசாரிய பக்தி :

இவ்வாறு அருள்நலங்கனிய ஞானச் செங்கோலோச்சிய அருளரசாம் கயிலைக் குருமணிக்குக் காசித் தலத்தில் கடவுள் நிலை கிட்டியது, குருமணியின் அருளாற்றலை நமக்கெல்லாம் தெளிவுபடுத்துகிறது. கங்கையிலும், கயிலாயத்திலுள்ள மானச சரோவரம் போன்ற புனித நீர் நிலைகளிலும் நீராடும் போதெல்

லாம் தம் ஆதீனக் குரு முதல்வர்கள் ஒவ்வொருவரையும் நினைந்து திருமஞ்சனம் ஆடி மகிழ்வார்கள். தமக்கு முன்னிருந்த ஆசாரியர் களிடத்தில் அவர்கள் கொண்டிருந்த அளவற்ற பக்தியை இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

காசிகண்ட குருமூர்த்திகள் :

தருமையாதீனக் குருபீடத்தில் எழுந்தருளியிருந்த அருளா ளர்களுள் 10ஆவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியும் ஆகிய இவ்விரு அருளாளர்கள் மட்டுமே காசிக்கு எழுந்தருளிக் கங்கையில் திருமஞ்சனங்கொண் டவர்கள். முத்திப்பேறு எய்துவதற்கு மூன்றுமணி நேரத்திற்கு முன்னர் பத்தாவது குருமூர்த்திகள் அருளிச்செய்த,

"மின்னும் உத்தரீ கத்தை வீசும் விசாலாட்சி பங்கன்
தன்னிகராம் காசியில்வாழ் சற்குருமுன் சென்றெனக்கு
உன்னுமொரு தாரகத்தை ஓதுநாள் என்றென்று இங்கு
அன்னமே கேட்டுவந்து என்அகமகிழ விளம்புவையே"

என்ற தாரகப்பத்தின் பாடலை உடன்வந்த பக்தர்களுக்கும் சிஷ்யர்களுக்கும். பணியாளர்களுக்கும் அருளுரையாக உப தேசித்து. காசித்தலத்தின் பெருமையையும், அங்கு முத்திப்பேறு எய்துவதன் சிறப்பையும் எடுத்துரைத்து அருள்நிலை எய்தி னார்கள்.

ஞானசம்பந்தம் வளர்க :

இத்தகைய ஞானத் தந்தை எமக்கு மட்டுமன்றி, இந்த 'ஞானசம்பந்தம்' இதழுக்கும் ஞான பிதாவாக இருந்து பேணி வளர்த்தவர்கள். அவர்கள் வழியிலே அவர்களாலே வளர்க்கப் பெற்ற நாமும் "ஞானசம்பந்தம்" இதழை வளர்க்கத் திருவருள் துணைசெய்திருக்கிறது. "ஞானசம்பந்தம்" இதழுடன் தொடர்பு கொண்டுள்ள நல்லன்பர்களுக்கு நாளும், கலைஞானமும், மெய்ஞ் ஞானமும் கைவரப்பெற்று நலமெலாம் பெருகச் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளையும், கயிலைக் குருமணியின் அருளையும் பிரார்த்திக்கிறோம்.

[3]

பழமையும் - புதுமையும் *

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

[புதுமையை விழைவதும் - பழைமையை வெறுப்பதும் உலக இயற்கை. ஆயினும் மக்களுடைய இந்த விருப்பு வெறுப்பு ஆழ்ந்த நோக்கில்லாதன. புதுமை - பழமை இரண்டிலும் நன்மையும் - தீமையும் இணைந்தே உள்ளன. அறிவுடைமையால் எதனையும் ஆய்ந்து காண வேண்டுமென்பதை வலியுறுத்தி சிந்தனைக்கு விருந்தாக அமைகிறது இக்கட்டுரை.]

புதுமை நாட்டம்:

'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாக - இன்று, தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா' என்பது உமாபதி சிவத்தின் அருள்வாக்கு. ஆயினும், புதியனவற்றில் விருப்பும் பழையனவற்றில் வெறுப்பும் உண்டாவது உயிர்களின் இயல்பு. ஆனல் புதியனவற்றுள் தமக்குப் பெருநன்மை கிடைக்கும் என்றே நாட்டம் செலுத்துகின்றனர் மக்கள். புதியவை பொலிவையும் உற்சாகத்தையும் பெரும்பாலும் கொடுக்குமேயன்றிப் பெரு நன்மையைக் கொடுத்துவிடாது. அப்படியிருந்தும் புதியவற்றுள் எல்லோரும் மோகம் கொள்கின்றனர்.

பழமையின் பயன்:

புதியனவும் இறைவன் படைப்பே. பழையனவும் இறைவன் படைப்பே. இறைவன் அருளின்றிப் புதியனவும் தோன்ற;

---

* பொங்கல் புதுநாளை ஒட்டி 10-1-1972 ஞானசம்பந்தம் இதழுக்கு வழங்கியருளியது.

பழையனவும் நில்லா. புதுமைக்குப் புதுமையாய் பழமைக்குப் பழமையாய் உள்ளவனே பரமன். இதனை மணிவாசகர், "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" என்னும் திருவெம்பாவைச் சொற்றொடரால் தெளிவுபடுத்துகின்றார். இறைவன் உயிர்களுக்குப் புதுமையாற் பொலிவைக் காட்டி, பழமையால் வளமை காட்டி வாழ்விக்கின்றான். புதுமையை விரும்புகிற மக்கள் புதிய தானியங்களைப் பெரிதும் விரும்பாமல் பழைய தானியங்களையே விரும்புகின்றனர். இதனால் பழமையில் நன்மை இருப்பதை எல்லோரும் உணர்கின்றனர் என்பது தெளிவாகிறது.

திருவிழாக்கள் ஏன் ?

எந்தத் துறையிலும் மக்கள் புதியவர்களைச் சிலநேரம் விரும்புவரே தவிர வாழ்க்கையில் எப்பொழுதும் விரும்புவதில்லை. ஆனால், மக்கட்கு உணர்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்து ஊக்கப்படுத்துவது புதுமை. இவற்றைச் சரிவரப்புரிந்துகொண்டு வாழ்க்கையில் உயிர்கள் வளர்ச்சியடையவேண்டும் என்பதே இறைவன் திருவுள்ளம். அதற்காகவே, திருவிழாக்களை அமைத்து விழாக்களின் மூலம் புதுமைப் பொலிவையும் விழிப்பையும் உற்சாகத்தையும் ஊட்டி உணர்ச்சியினாலும் உற்சாகத்தினாலும் நல்லனவற்றையும் தீயனவற்றையும் அனுபவிக்கச் செய்து, பட்டறிவு எனப்படும் அனுபவ அறிவைப் பெறச்செய்து என்றும் பழமையாக – நிலைபேறாக உள்ள நலனை அடையச் செய்வன இறைவனின் செயல்முறைகள்.

புதிய சங்கற்பம் :

அவ்வருளிப்பாட்டில் ஆண்டுதோறும் பழையன கழிந்து புதியன புகுந்து பொலிவைப் பெருக்கும் பொங்கற் புதுநாளில், புதியன போற்றிப் பழையன பாராட்டிப் பண்பை வளர்த்து, பலருக்கும் பயனுடையவர்களாக வாழச் சங்கற்பம் செய்து கொள்வதையும் புதியவற்றில் ஒன்றாகவே ஆறறிவுபெற்ற மனித இனம் கொள்ளவேண்டும். இந்நிலையை மக்களனைவரும் இப் பொங்கற் புதுநாளில் மேற்கொண்டு எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பார்கள் என்பது உறுதி. இத்தகைய நல்லுணர்வை – நற்செயலை எல்லோருக்கும் வழங்கச் செந்தமிழ்ச்சொக்கர் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

[4]

அன்பும் - அருளும் *

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு"

[இல்லறத்திற்கும் - துறவறத்திற்கும் இன்றியமையாத அன்பினையும் - அருளினையும் விளக்கும் இச் செய்தியில், சமயவளர்ச்சியில் திருமடங்களின் பங்கினையும் - சமுதாய மக்களின் பல்வேறு கடமைகளையும் - ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தொடரின் உண்மைப் பொருளினையும் ஒருங்கே அறிந்து மகிழும் வாய்ப்பினைப் பெறமுடிகிறது]

ஆசாரிய மூர்த்தம்:

"என்னை இப் பவத்தில் சேரா வகைஎடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி ஞானே தாளிணை தலைமேல் சூட்டும்
மின்னமர் தருமைமேவி மெய்கண்டான் மரபில் வந்த
மன்னவ! சுப்ர மண்ய வள்ளலே போற்றி! போற்றி!"

இறைவனுகவே கருதத்தக்க மூர்த்தம் ஆசாரியமூர்த்தம்! 'எட்டினோடு இரண்டும் அறியா என்னைப் பட்டிமண்டபம் ஏற்றினை' என்பர் மாணிக்கவாசகர். நம்மை, திருவருள் ஞான பீடமேற்றியிருக்கிறது. இப்பீடமேறினல், அதற்குரிய தகுதி தானே வந்து அமையும் என்பது முன்னோர் கொள்கை.

---

* மாயூரம் சிவநேயச் செல்வர்கள் நிகழ்த்திய குரு வழிபாட்டில் திருவாய்மலர்ந்தருளி 10—2—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளிவந்த ஆசியுரை,

மாயூரம் அன்பநாதபுரம் வகையார்
அறத்துறைத் திருமண மண்டபத்தில்
மாயூரம் சிவநேசச் செல்வர்கள்
1—2—1972இல் நிகழ்த்திய குருவழிபாட்டின்போது



விழாக் குழுவின் சார்பில்
டாக்டர். திரு. மு. சுவாமிநாதன், M. B., B. S., அவர்கள்
பாராட்டிதழ் வாசித்து, சிவலிங்கப் பேழையில் வைத்து
தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குச்
சமர்ப்பித்தல்

வளர்ச்சிக்குத் துணை :

பாராட்டுரைகளைக் காட்டிலும், எதிர்முனைப் பேச்சுக்கள் ஒருவனது வளர்ச்சிக்குத் துணை செய்யவல்லன. இங்கே பேசிய அன்பர் ஒருவர் ஆதீனத்தின் சமயப்பணி முடிந்துவிட்டது. ஆதீனம் சமுதாயப்பணி செய்ய முன்வரவேண்டுமெனத் துணி வோடு அழைத்தார். இன்று சைவத்திலும், வைணவத்திலும் பிற மதங்களிலும் இருப்பவர்கள் அவ்வச்சமய நெறிகளை உணர்ந்து ஈடுபட்டவர்கள் எனக் கூறமுடியாது. சமயத்தின் உண்மைகளை உள்ளவாறு உணர்த்த இன்றைய நிகழ்ச்சிகள் போல்வனவோ, நம்மிடமிருக்கும் பொருள்களோ போதா.

அருள்வளர்க்கப் பொருள் :

சிலதினங்களுக்குமுன் புதுவை மாநில ஆளுநர், கனம் திரு. ஜட்டி அவர்கள் திருமடத்திற்கு வந்திருந்தார். ஆகமங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரப்பும்படிக் கேட்டுக்கொண்டார். மேலும், இவ்வாறு சந்நியாசிகள் மக்கள் உள்ளங்களைப் பண்படுத்தித் திருத்தினுல் அரசியல் துறையினர்க்கு வேலைப்பளு இல்லை என்றும் குறிப்பிட்டார். அவரிடம் கூறும்போது சுவரின்றிச் சித்திரம் எழுதமுடியுமா ? பொருளை உருவாக்கிய பின்னரல்லவா அவர்கள் மனங்களைத் திருத்தமுடியும் ? சுவர் எழுப்பவே நேரம் போதவில்லை ; சித்திரம் எழுதுவது பற்றி நினைக்க முடியவில்லை என்றேம்.

உண்மை நிலை :

விவசாயப் பெருங்குடி மக்களைப் பட்டினிபோட்டுத் திருத்த முடியாது. அவர்களது நெடுநாளைய பாக்கிகளைத் தள்ளிக் கொடுக்க நினைக்கிறேம். பலர் முறையாக - நேர்மையாக நடந்து கொள்வதில்லை. நல்லவர் இருவர் நட்பு நெடுநாள் நீளும். நல்லவனும் - தீயவனும் நட்புச்செய்தால் நல்லவன் ஏமாறுவான். குடிமக்களுள் நல்லவர்களும் இருக்கிறுர்கள். அல்லாதவர்களும் இருக்கிறுர்கள். ஒரு சிலர் ஆதீனத்திற்குச் சேரவேண்டிய நெல்லை அளக்கிறுர்கள். நாட்டில் தீயவர்கள் சிலர் ; அவர்களே பலரையும் கெடுக்கிறுர்கள். நாம், தாய்-தந்தையர் ஸ்தானத்தில் இருக்கிறேம். குழந்தைகளாகக் குடிமக்களை வளர்க்கும் கடமை நமக்கு இருக்கிறது. ஆனுல் புலருக்கு இந்நிலை புரியவில்லை. இத்தகு

நிலையில் ஆகமங்களை வெளியிடும் எண்ணங்கூடத் தோன்றுவது இல்லை என்றோம். அவரும் உடன்பட்டு, இயன்றவரை செய்யும்படி வலியுறுத்திப்போனார்.

தேசபக்தியும் தெய்வபக்தியும் :

'ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே' என்ற புறநானூற்றுப்பாட்டு, கடமைகள் பலதரப்பட்டன என்பதை விளக்குகிறது. உடல் வளர்ச்சியைக் காட்டிலும் ஆதீனங்கள் உயிரை வளர்க்கப் பாடுபடவேண்டும். தேசபக்தியும், தெய்வபக்தியும் இருகண் போன்றன. அண்மையில் நடந்த பாகிஸ்தான் போரில் பதினாறு ஆயிரம் பேர் உயிர் இழந்தனர். அவர்கள் குடும்பத்தாரைப் பாதுகாக்கவேண்டிய கடமை நமக்கு உண்டு. அவ்வகையில் நம் கடமையை ஒரு சிறு தொகை கொடுத்ததன் மூலம் நிறைவு செய்தோம். தேசபக்தி இல்லை என்றால் தெய்வபக்தி இல்லை. என்றும் அருட்டுறைத் தேவைகளுக்குப் போக எஞ்சிய தொகையைச் சமுதாய நலன்களுக்குச் செலவிட நாம் தயங்கப்போவது இல்லை. சமுதாயமும் - அறநிலையங்களும் ஒன்றிற்கு ஒன்று உதவியாக நின்று செயற்பட்டதாகக் கல்வெட்டுக்கள் விளக்குகின்றன.

உடலும் உயிரும் :

உயிரைப் போலவே உடம்பும் பேணப்படவேண்டுமென்பது சான்றோர் கருத்து. 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பது திருமூலர் வாக்கு. உயிரைப் பாதுகாக்கவே உடம்பு என்ற எண்ணம் வரவேண்டும். சமயங்கள் மனித உயிர் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காகவே தோன்றின. உயிர் வளர்ச்சியின்போது உடலும் வளர்கிறது. நெல்லுக்கு இறைத்த நீரில் புல்லும் வளர்வதைக் காண்கிறோம். தேசம் உடல் என்றால் தெய்வபக்தி உயிராகத் திகழ்கிறது.

மூர்த்தி பேதங்கள் :

அழைப்பில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என அச்சிட்டிருந்தனர். குலம் ஒன்றுதான்! தேவன் ஒருவன்தான்! ஆனால், தேவனின் நிலை ஓராயிரம்! காவிரி ஒன்றாக இருந்தாலும் பல கிளையாகப் பிரிந்து பல லட்சம் மக்களை வாழ்வித்துக் கடலில் சேர்கிறது. ஒன்றாக இருந்தால் காவிரியின் பயனை எல்லோரும் பெற இயலாது. வாய்க்காலில் ஓடும் தண்ணீரும் காவிரியாதல்போல ஆயிரம் நாமங்கள் இருந்தாலும் இறைவன்

ஒருவன் தான் ! ஆறு, கால்வாய் – சிற்றோடை – குளமாகப் பாய்வது போல, சிவன் என்ற பேராற்றுக் கிளை–அம்மை, முருகன், விநாயகர் என்ற மூர்த்தி பேதங்களாக விளங்கி நிற்கின்றன.

சமயப் பணிக்கு அழைப்பு :

இல்லறத்திற்கு அன்பும், துறவறத்திற்கு அருளும் திருவள்ளுவரால் எடுத்துக்காட்டப்படுகிறது. தாய், மனைவி, குழந்தை, மாமன், மாமி என்று தொடர்புடையார்மாட்டுத் தொடங்கிய அன்பு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நிலைவரும்போது அருளாக மாற்றம் பெறுகிறது. அனுபவம் ஓரளவு முற்றிய நிலையிலேயே துறவறம் சித்திக்கும். ஒருவன் ஒரு குடும்பத்தில் துறவு நெறி மேற்கொண்டால், 21 தலை முறையின் பாவங்கள் போகும் என்பர். இல்லறநெறி நின்றோ, அல்லது துறவற நெறி நின்றோ செயலாற்றும் தொண்டர்கள் சமயத்துறைக்குத் தேவை. தொண்டுள்ளம் கொண்டவர்கள் முன்வந்தால்தான் சமயப்பணி வெல்லும்.

சின்முத்திரைத் தத்துவம் :

இறையவர் திருமேனிகளின் அமைப்பில் உள்ள தத்துவங்களை நாம் புரிந்து வழிபட வேண்டும். தட்சிணாமூர்த்தித் திருவுருவத்தின் முத்திரையில் எவ்வளவோ உட்பொருள் உண்டு. கட்டை விரல் இறைவன், சுட்டுவிரல் உயிர், நடுவிரல் ஆணவம், மோதிர விரல் கர்மம், சுண்டுவிரல் மாயை, மும்மலத்தோடு பிணைந்து நிற்கும் உயிர் அவற்றை விடுத்து இறைவனோடு இணைதல் வேண்டுமென்பதே இம்முத்திரையின் பொருள். இவ்வாறு தத்துவம் உணர்ந்து வழிபடவேண்டும். அன்பும் வேண்டும் - அதிலே விவேகமும் வேண்டும். அன்பும் விவேகமும் கொண்ட சமய நெறி செழித்தால் இவ்வட்டாரமும், இந்நாடும் வாழ்வு பெறும். சைவ நல்லன்பர்களுக்குச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருவருளும் பெருகுக என பிரார்த்திக்கிறோம்.

[5]

இல்லை என்பான் யாரடா ? *

" உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும் "

[ஆகாயத் தலம் என்பதற்கு ஏற்ப நிலத்தில் சொத்துக்கள் ஏதுமில்லாதிருந்தும் நடராசப் பெருமானுக்கு நிகழும் வழிபாட்டுச் சிறப்பு இராஜ தர்பாராகத் திகழ்வதையும் - தில்லைத்தலத்தின் பெருமையையும் - தில்லை சைவர்களுக்குத் தலைமையான தலமாக விளங்குவதையும் இச்செய்தி ஒருங்கே தருகிறது.]

பஞ்சபூதத் தலங்கள் :

சிதம்பரம் தலங்கள் எல்லாவற்றிலும் சிறப்பு மிக்க தலம் இதற்குக் காரணங்கள் பல. பஞ்ச பூதங்களில் ஆகாயமே மேலானது; அந்த ஆகாயத்தலமாக விளங்குவது சிதம்பரமே. பிருதிவிஸ்தலமாகத் திருவாரூரும் காஞ்சியும் சொல்லப்படுகின்றன. அதற்குக் காரணம் அந்த இரு தலங்களிலும் மூலத்தானம் பிருதிவி லிங்கமாய் இருப்பதே. திருவாரூர் வன்மீகநாதம்; அதாவது புற்றிடங் கொண்டது. காஞ்சிபுரம் உமாதேவி மணலை இலிங்கமாக்கிப் பூசித்தது. இம்முறையில் பார்க்கும் பொழுது திருவையாறும் பிருதிவிஸ்தலமேயாகும். ஏனெனில், பெருமான் அங்கும் புற்றிடங் கொண்டே விளங்குகின்றார். திருநாவுக்கரசர்,

---

* *சிதம்பரம் சிவநேயச் செல்வர்கள் நிகழ்த்திய குருவழிபாட்டில் திருவாய்மலர்ந்தருளி 10—2—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

தில்லை ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில்
சிதம்பரம் சிவநேசச் செல்வர்கள் நிகழ்த்திய
குருவழிபாட்டின்போது

அறப்பணிச் செல்வர்
டாக்டர். திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை, M.B., B.S., அவர்கள்



தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு,
பாராட்டிதழ் படித்தளித்தல்
(4—2—1972)

சிதம்பரம் ஸ்ரீ சிவகாமியம்மை திருக்கோயில்
கும்பாபிஷேக விழாவில்
யாகசாலை தரிசனத்திற்கு எழுந்தருளியபோது



தில்லைத் திருக்கோயிலில் பொது தீட்சதர்கள்
தருமையாதீனம் 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு
வரவேற்பளித்தல்
(4—2—1972)

"எல்லா உலகமும் ஆனாய் நீயே ;
ஏகம்பம் மேவி யிருந்தாய் நீயே
... ...
திருவையா றகலாத செம்பொற் சோதி"

என்று திருவையாற்றைக் காஞ்சிபுரத்தோடு இணைத்துப் பாடி யருளினார். திருவாசகத்தில்,

"ஆரூர் அமர்ந்த அரசே போற்றி!
சீரார் திருவை யாறு போற்றி!

என்று, அது திருவாரூருடன் இணைந்து நிற்பதைப் பார்க்கின்றோம். இக் குறிப்புக்கள், திருவாரூர் – காஞ்சிபுரம் போலத் திருவையாறும் பிருதிவிஸ்தலமே என்பதைக் குறிப்பனவாகும். திருவானைக்காவில் மூலத்தான மூர்த்தி தண்ணீரிலேயே யிருத்தல் யாவரும் அறிந்தது. அதனால் அஃது அப்புஸ்தலம். திருவண்ணாமலை பிரம விட்டுணுக்களுக்கு முன் சிவபெருமான் அக்கினிப் பிழம்பாய்த் தோன்றிய தேயுஸ்தலம். காளத்தி வாயுஸ்தலம். அங்கு மூலத்தானத்தில் உள்ள விளக்கு எப்பொழுதும் அசைந்துகொண்டேயிருப்பதைப் பார்க்கலாம். சிவபெருமான் நடனம் புரியும் இடம் **'சிற்பர வியோமம்'** எனப்படும் சிதாகாசமேயாதலால், கூத்தப் பெருமான் எழுந்தருளியுள்ள இந்தச் சிதம்பரம் ஆகாசத் தலமாகும்.

தில்லைத்தலச் சிறப்பு :

மற்றும் உயிர்களின் இருதய வெளியும் ஆகாசமே. இதனை **'தகராகாசம்'** என்பர். இறைவன் இருதய வெளியாகிய தகராகாசத்தில் நடிப்பதே இருதயத் துடிப்பாக அமைகிறது. அது போலவே உலகம் நடைபெறுவதற்கு இறைவன் புறத்தில் – அண்டத்தில் நடனம் செய்கின்ற இடம் சிதம்பரமே, இதனால் சிதம்பரம், **'விராட் புருடனுக்கு இருதயஸ்தானம்'** என்று சொல்லப்பெறுகிறது.

தில்லைச் சிதம்பரம் நம் 25ஆவது குருமகாசந்நிதானத்தின் அவதாரஸ்தலம். அவர்கள் நடராஜப்பெருமானது திருநடனமே உலகத்திற்கெல்லாம் காரணம் என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு ஓர் ஆண்டில் மூன்றுமுறை ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தரிசனம் செய்வது என்ற நியமத்தைக் கொண்டிருந்தார்கள். திருவாதிரை, மகாசிவராத்திரி, ஆனித்திருமஞ்சனம் என்பவை அந்த மூன்று நாட்களாகும்.

இன்ன பல சிறப்புக்களால் இச் சிதம்பரத் தலம் ஒன்றே, **'கோயில்'** என வழங்கப்பெறுகின்றது. சிதம்பரத் தலமே கோயிலாய் இருப்பதால், இங்குப் பள்ளிகொள்ளுதல் கூடாது என்று ஞானசம்பந்தர் இதற்கு அருகில் உள்ள திருவேட்களத்தில் சென்று இரவில்தங்கிக் காலையில் மீள இங்கு எழுந்தருளினர். சிதம்பரம் சமயாசாரியர் நால்வராலும் பாடப்பெற்றது. சந்தானசாரியருள் இருவர் அன்று இங்கு எழுந்தருளினர்கள். இன்றும், அவர்களில் **மறைஞானசம்பந்தர்** இத்தலத்திற்கு வடக்கிலும், **உமாபதி சிவாசாரியார்** இத் தலத்திற்குக் கிழக்கிலும், எழுந்தருளியிருக்கின்றனர்கள். அவர்களில் உமாபதி சிவாசாரியார் தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தில்லைவாழ் அந்தணர் :

தில்லைவாழ் அந்தணர்களைச் சிவபெருமானே **"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"** என்று சொல்லிச் சுந்தரருக்கு அடியெடுத்துக் கொடுத்தார் என்றால், அவர்களது பெருமை எத்தகையது என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. இவர்கள் கூத்தப்பெருமானைத் தீண்டிப் பூசிக்கும் பேறு பெற்றவர்கள். சுந்தரர் பொதுவாக ஆதிசைவ அந்தணர்களை, **"முப்போதும் திருமேனி தீண்டுவார்"** என்றார். தில்லைவாழ் அந்தணர்கள் திருச்சிற்றம்பலமுடையாரையும், கூத்தப் பெருமானையும் காலந்தோறும் தீண்டிப் பூசிக்கும் உரிமை உடையவர்கள்.

இராஜதர்பார் :

இவர்களால் பூசிக்கப்படும் தில்லைத் திருக்கோயில் இன்றும் உலகியல் ஆட்சிக்கு உட்படாமல் சுதந்திரமாக இருக்கின்றது. இக்கோயிலுக்கு நிலையான சொத்தாக எதுவும் இல்லை. பிற கோயில்களுக்கு நூற்றுக்கணக்கான வேலி நிலங்கள் இருப்பது நாம் அறிந்தது. நடராஜப்பெருமானுக்கு ஒரு குழி நிலங்கூடக் கிடையாது. ஆனால், நடராஜப் பெருமானுக்கு நிகழ்கின்ற நித்திய நைமித்திக வழிபாடு போல மிக்க சொத்துடைய கோயிலிலும் நடைபெறுவதில்லை. அதோடு, அந்த வழிபாடுகள் காலம் தவறாமல் நடைபெறுவது ஒரு தனிச் சிறப்பு. நடராஜா என்பதற்கு

ஏற்ப, அவருக்கு ராஜதர்ப்பாரில்தான் நடக்கின்றது. இவை யாவும் கட்டளைகளாலே நடைபெறுகின்றன. அது கூத்தப் பெருமானது திருவருட் சிறப்பேயாகும். தெய்வம் இல்லை என் பவர்கள் இத் தில்லை நடராஜரது கோயில் நிகழ்ச்சிகளைக் கண்டால் நிச்சயமாகப் பக்தி உண்டாகும். "இல்லை என்பான் யாரடா – தில்லையிலே பாரடா" என்ற ஒரு பாட்டும் உண்டு.

சிறுதுளி பெருவெள்ளம் :

இத்தகைய சிறப்புக்களில் இப்பொழுது நடைபெறுவது சிவகாமி யம்மை திருக்கோயிலின் பெருஞ்சாந்தியாகிய மகா கும்பாபிஷேக விழாவாகும். இச்சிறப்பிற்கிடையில் இங்குள்ள தில்லைவாழ் அந்தணர்களும், சிதம்பரம் அன்பர்களும், மற்றும் இதைச் சார்ந்துள்ள ஊர்களில் உள்ளவர்களும் தங்களுக்கு உள்ள சிவபக்தி, குருபக்தி மிகுதியால் சைவ ஆதீன மகாசந்நி தானத்தை வரவேற்க விரும்பிச் செய்த நல்ல ஏற்பாட்டின்படி இன்று காலை முதலாக இவ்வரவேற்புவிழா மிகச் சிறந்தமுறையில் நடைபெறுகின்றது. வரவேற்பு இதழ்கள், பொன்னுடைகள், மாலை மரியாதை முதலிய பலவற்றால் சைவப் பேரன்பர்கள் பலரும் சமயப் பற்றையும், ஆர்வத்தையும் புலப்படுத்தி இருப்பது மிக்க மகிழ்ச்சியையும், நமது சமயத்தின் வளர்ச்சி பற்றிய நம்பிக் கையையும் நமக்குத் தருவனவாய் உள்ளன. இந்த ஊக்கத் தோடு ஊக்கமாக இக்கோயிலின் திருமதில் திருப்பணி முதலிய பல திருப்பணிகளும முற்றுப் பெறுதற்கு அன்பர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளுதல் வேண்டும. ஒவ்வொருவரும் மாதந் தோறும் வருகின்ற தங்கள் ஜென்ம நட்சத்திரத்தில் நடராசப் பெருமானுக்குக் காணிக்கையாகச் சிறுதொகை கொடுப்பது என்று உறுதி எடுத்துக் கொண்டால், மிக எளிதில் பெருந்தொகை திருப் பணிக்குச் சேர்ந்துவிடும். மேலும்சிலர், இப்படிப்பட்ட அன்பர்கள் நூறுபேரையாவது சேர்ப்பது என்று அதற்குத் தாங்கள் செல் வாக்கைப் பயன் படுத்தலாம்.

திருப்பணி நமது கடமை :

நமது ஆதீனத்தின் சார்பில் அவ்வாறு நாம் ஒரு நூறு பேரைச் சேர்த்து வைப்போம். நமது ஜென்ம நட்சத்திரத்தில் அத்தகைய காணிக்கையை நாம் கூத்தப்பெருமான் திருவடிக்குச் சமர்ப்பிக்கலாம். அன்பர் பலரும் இதில் ஊக்கங்கொண்டால் இத்திருப்பணி பெரிதல்ல. அன்று சோழமன்னர், பல்லவ மன்னர்கள் பல கோயில்களைக் கற்றளிகளாக்கினர், இன்று எந்த மன்னரும் இல்லை. மக்கள்தாம் மன்னர்கள். ஆகையால், அவர்கள் தாம் திருப்பணியைச் செய்யக் கடமைப்பட்டவர்கள். ஆகவே, அவர்களுக்கு உள்ள கடமையை நாம் இப்பொழுது நினைவு படுத்து கின்றோம். இறைவனுக்குத் திருப்பணி செய்வதால் நாம் பயன்

அடைகின்றோமேயல்லது, அவனுக்கு ஒன்றும் அதனால் பயனில்லை, கைம்மாறு கருதாத கருணை காரணமாக அவன் எல்லோருக்கும் நலம் புரிவதல்லது, அவனுக்கு நாம் செய்யும் நன்மை ஒன்று மில்லை. ஆகவே, இந்த நல்ல செயலில் அனைவரும் ஆர்வங் கொண்டு உழைத்தல் வேண்டும். அதற்குத் தில்லைவாழ் அந்தணர்களும், அன்பர்களும் தங்களுக்குள் பரஸ்பரம் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். எல்லாவற்றிற்கும் கூத்தப்பெருமானது திருவருள் முன்நிற்க வேண்டும்.

தில்லையும் – திருவாரூரும் :

திருவாரூரில் எருந்தருளியிருக்கும் ஸ்ரீ தியாகராஜப் பெருமான், சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடுவதற்கு முதற்கண் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தார். தியாகராஜர் எடுத்துக்கொடுத்தது நடராஜர் எடுத்துக்கொடுத்தது தான். சுந்தரர் தில்லையில் வழிபட்டபோது 'திருவாரூருக்குச் செல்க' என்று அருளியவர் நடராஜர். தியாகராஜர் வேறல்ல; நடராஜர் வேறல்ல. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலர் திருமந்திரத்தால் இது நன்கு தெளிவாகின்றது. அத்தகைய தில்லைவாழ் அந்தணர்கள் உள்ள சிதம்பரத்தில் நாம் கூடியுள்ளோம்.

கூத்தப்பெருமாள் திருவருள் :

மக்களும், திருப்பணிக் குழுவினரும் ஒத்துழைத்துத் திருப்பணிக்கு உழைப்பார்களேயானால், நாமும் நம்மால் கூடியதைச் செய்ய மகிழ்ச்சியுடையவர்களாய் இருக்கின்றோம் 'நாமே தனிமையில் திருப்பணியைச் செய்கின்றோம்' என்று சொன்னால், அது, "உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்" என்னும் திருக்குறளுக்கு இலக்காகும். இந்த நல்ல நினைவுகளுக்கெல்லாம் காரணமாக அமைந்த வரவேற்பு விழாவை ஏற்பாடு செய்து நிகழ்த்திய அன்பர் பலரும் குருவருளுக்கும், திருவருளுக்கும் உரியவர்கள். அறப் பணிச் செல்வர், டாக்டர், திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை, திரு. பொன்னம்பலம் பிள்ளை முதலியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் அனைவரும் நமது ஆதீன குரு முதல்வரது அருளால் எல்லா வகையான நலங்களும் பெற்று நீடு வாழ இறைவன் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம். **'தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர்'** என்பது மரபு. ஆனால், **அவர்களில் இன்று இருநூறு குடும்பமே உள்ளன என்கின்றார்கள். அவர்கள் எல்லா நன்மைகளும் பெற்று வாழக் கூத்தப்பெருமான் திருவருள் புரிவானாக.**

[6]

ஆதீனங்கள் ஏன்? *

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை."

[திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் தோற்ற வரலாறும் - இதனைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானின் கருணைத் திறமும், சைவமும் - தமிழும் தழைக்க ஆதீனம் ஆற்றிவரும் அளப்பரிய அரும்பணிகளும் - பிறவும் இங்கே சிறப்பாக விரித்துரைக்கப்பட்டுள்ளன]

உணர்த்த உணரும் உயிரியல்பு:

தருமையாதீனம் இன்றைக்கு 450 ஆண்டுகட்கு முன் இவ் வில்வாரண்ய க்ஷேத்திரமாகிய தருமபுரத்தில் நமது ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளால் தோற்றுவிக்கப் பட்டது. இவ்வருள் வரலாறு பலருக்குத் தெரியும். சிலருக்குத் தெரியாது. உலகியலில் வாழும் நமக்கு நம்மைப்பற்றிச் சரியாக உணர்ந்துகொள்ள நேரமில்லை. உணர்த்தவும் ஆள் இல்லை.

"உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன்"

என நம் ஆதி குருமூர்த்திகள் இதனை அருமையாக எடுத்துக் கூறியுள்ளார்கள். வழிகாட்டிகள் நம்மிடையே பலர் இல்லை. இருந்தால் ஆண்டவனைக் காணுதல் என்பது எளிதாக இருக்கும். இதனை, குருஞானசம்பந்தப் பெருமான்,

---

* ஆடூர் பஞ்சுக்காரச் செட்டியார்கள் நிகழ்த்திய குரு வழிபாட்டில் திருவாய் மலர்ந்தருளி 10—4—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.

"என்னால் உனைஅடைய வல்லேன் எனில்இடரில்
இந்நா ளளவும் இருப்பேனோ"

என்று விளக்குகிறார்கள். இதனையே திருச்சிராப்பள்ளித் தேவாரத்துள்ளும் 'சென்றடையாத திருவுடையானை' எனத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார். உலகியலுள்ளும் தாயே பால் கொடுத்தாலன்றிக் குழந்தை பால்பெறுதல் இல்லை; தொடர்ந்து நின்ற தாயானவன் பரமபொருள்.

அனுபவத்திற்கு ஒத்தமுறை :

ஊனை வளர்ப்பவர் தாய், தந்தையர்; உயிர் வளர்க்க குரு. இதனையே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' எனவும் 'மாதா பிதா குரு தெய்வம்' எனவும நம்முன்னோ குறித்தனர். ஆரம்பப்பள்ளி ஆசிரியர் உதவியின்றி எம். ஏ., ஆசிரியரைப் பற்ற முடியாது. முதலில் தாய்; தாய்வழி தந்தை; தந்தை வழி குரு; குருவழி தெய்வம் என்பதே நம்முன்னோர் கண்ட அனுபவத் திற்கும் ஒத்த முறை.

தாயன்பினன் இறைவன் :

நீர்வளமில்லாத இடத்திற்கு அரசே முயன்று நீர்வளத்தை ஆக்கித்தருவது போல, அடியார்கள் தேவையறிந்து 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' இறைவன் தானே சென்று அருளுகிறான். தாய் இல்லை என்றால் பிண்டம் இல்லாதது போல அம்மை அருள் இல்லை என்றால் அண்டமும் இல்லை. 'அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் வரும்' என்பது பழமொழி, அம்மை அருளே வடிவானவள், இதனைச் சேக்கிழார் பெருமான் ஆனாய நாயனார் வரலாற்றில்,

"ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடைய தவவல்லி யுடன்"

எனக்குறிப்பிடுவர். உலகியல் காரியங்களும் சக்தியின்வழி நடை பெறுவதை எங்கும் காண்கிறோம். சம்ஹார காலங்களில் இறை வன் சக்தியோடு செல்லவில்லை. இராமன் சீதையுடன் இருந் திருந்தால் இராவணவதம் நடந்திருக்காது. அருள் உள்ள முடையவர்கள் பெண்கள். இதனால்தான் நீதிமன்றங்களில் பெண்கள் கூடாது என ஆங்கிலேயர் கூறுகின்றனர். பெண் மையை அருளாக வைத்துப் பெருமை கொடுத்திருப்பது நமது சமயம். ஆண்டவன் எல்லாவற்றிலும் உடனாய் இருந்து நம்மை வளர்க்கிறான். ஆமை, மீன் முதலியவற்றின் முட்டைகளைப்

பக்குவப் படுத்துவதே தாயின் கருணைதான். சூரியன் தாமரைப் போதினை மலரவைக்கிறான். தாமரை மொக்கு அரும்பி நாளும் வளர்வதற்கும் சூரியனின் கருணையே காரணமாகிறது. அது போல, உயிர்களை நாளும் நாளும் வளர்ப்பதும், அவை பக்குவம் பெற்ற நிலையில் அவற்றிற்குப் பேரருள் நல்குவதும் இறைவனுடைய பெருங்கருணையேயாகும். யாவும் திருவருளால்தான் நிகழ்கின்றன என நாம் உணரவேண்டும்.

திருவருள் வெளிப்பாடு :

ஆயினும் அத்திருவருள் எங்கே எப்படி வெளிப்படும் என அறிதல் நமக்கு இயலாது. காசியில் சென்று நம் கயிலைக் குருமணி பரிபூரணம் அடைந்தமையை எண்ணும்போது,

“ இன்னவினை இன்னதலத் தின்னபொழு தின்னபடி
இன்னதனால் எய்தும் என அறிந்தே – அன்னவினை
அன்னதலத் தன்னபொழு தன்னபடி அன்னதனால்
பின்னமறக் கூட்டும் பிரான் ”

என்ற சிவபோக சாரத் திருப்பாட்டு நம்நெஞ்சில் எழுகிறது. ஆனால் குருமணியின் உயிரைக் காசியம்பதியிலே பிரித்து அவர்கள் பெருமையை விளக்கிக் காட்டினான் என நாம் நினைப்பதுண்டு. இப்படித் திருவருள் வெளிப்பாட்டை விளக்க எவ்வளவோ உதாரணம் கூறலாம்.

அன்பும் விவேகமும் :

உயிர்களுக்கு அன்பு வேண்டும். அதிலும் விவேகம் கலந்த அன்புவேண்டும். ஈசனுக்கு அன்பிலார், அடியவர்க்கும், எவ்வுயிர்க்கும் அன்பில்லார், தமக்கும் அன்பில்லாதவர் என்பது சாத்திர வாக்கு. நமது அறிவு குறையுடையது. அறம் என்பது மனத்தில் மாசற்றிருப்பது. ‘அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயன்’ என்பர் நன்னூல் ஆசிரியர். இதனையே சதுர்வித புருஷார்த்தம் என்பர் வடமொழியாளர். திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், மக்கள் இந்நான்கில் முதலும் கடையும் விடுத்து இடையுள்ளதையே பெற விரும்புகின்றனர் என்பர். இன்பத்தை அடையப் பொருளைப் பெறவேண்டும். பொருளை ஈட்ட முதல்வேண்டும்; முதல்தான் அறம். முதலை வைத்துக் கடையில் (வீட்டில்) வணிகம் செய்யவேண்டும். ‘நான் யார் என் உள்ளம் யார்’ என தற்சோதனைசெய்ய மறக்கிறோம். இதனை நினைவூட்டவே ஞானபீடங்கள், ஆதீனங்கள் முதலியன இருக்கின்றன,

மூவகைச் சீடர்கள் :

சமயாசாரியர் நால்வரும் நான்குதிசையில் நமக்கு வழிகாட்டினர். இவர்களை இறைவன் பாலைக் கொடுத்தும், சூலை கொடுத்தும், ஓலை கொடுத்தும், காலைக் கொடுத்தும் ஆண்டு கொண்டருளினன். நம்முடைய தரத்திற்குத் தகவே இறைவன் ஆட்கொள்வன். யாரிடத்திலிருந்து அறிவு கிடைத்தாலும் அதனைக் குருவருளாகக் காணவேண்டும். இறை எண்ணமே சமயத்துறையில் நாம் பெறும் ஊதியம். இறைவனே நம்மை நடத்திப் போகிறான். நல்ல எண்ணமிருந்தால் நாமும் உய்ந்து மற்றவர்களையும் உய்விக்கலாம். நல்ல ஆசிரியர் கிடைப்பதும், நல்ல மாணவர்கள் கிடைப்பதும் அருமை. சீடர்களை, கற்பூரம், கரி, கதலி ஆகிய மூன்று பொருள்களைக் காட்டி விளக்குவர். இந்த பாக்கியத்துச் செட்டியார்கள் நல்ல சீடர்கள்.

பிறவிப் பயன்பெற :

இத் திருமடம் எல்லார்க்கும் உரியது. சைவ நெறியாளர் ஒன்றுபடவேண்டும். ஏனையோரையும் திருத்தி ஆட்கொள்ள வேண்டுவது நம் கடமை. ஆசாரியனின் விழாவிற்கு நீங்களெல்லாம் வரவேண்டும். வைகாசி மாதத்து அமரபட்ச சஷ்டி திதியில் குருபூசை நிகழும். மறுநாள், பேசும்குருவின் பட்டணப் பிரவேசம் நிகழும். இவ்விரண்டு நாளும் வந்திருந்து ஆசாரிய மூர்த்திகளை நினைந்து வழிபடவேண்டும். ஆசாரியர் விழாவிலும் ஆசாரியரால் பூசிக்கப்பெற்ற ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானின் ஆவணிமூல விழாவிலும் பங்கு கொள்ளவேண்டும். பிறவியின் பயனைப் பெறுதற்குரியதொண்டு செய்து உய்யவேண்டும்.

நல்ல உணர்வு வரும்போது நல்லகாலம் வருகிறது என்பது பொருள். அருகில் உள்ளவர்கள் குருவாரந்தோறும் வந்து வழிபடலாம். இயன்றவர் வரலாம். இயலாதவர், இயன்றவகை இந்நாட்களில் தத்தம் இருப்பிடத்திலிருந்து வழிபாடு நிகழ்த்தலாம். இந்நாளில் அன்போடும், பக்தியோடும் குருவழிபாடு நிகழ்த்தியவர்கள் பக்திப் பரவசத்தைப் பாராட்டுகிறோம். இனி எந்நாளும் இந்நிலை நீடிக்க ஆதி குருமூர்த்திகள் கருத்திலும் கரத்திலும் இருந்த சொக்கநாதப் பெருமானைச் சிந்திக்கிறோம்,

[7]

கண்மணியிற் சிறந்த நன்மணி *

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "

[திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் ஒழுக்கம் – சீலம் – கொடைவளம் – தருமையோடு அவர்கள் கொண்டிருந்த இணக்கம் முதலியனவற்றைத் தொகுத்துத் தருவதன் மூலம் அவர்களைப் பற்றிய ஒரு முழுமையான வடிவத்தை நெஞ்சில் நிறுத்துதற்குத் துணையாகிறது இக்கட்டுரை]

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் :

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே "

அருளுடைச் சுடராய், அளிந்ததோர் கனியாய், பெருந்திறல் அருந்தவர்க்கரசாய், பொருளுடைக் கலையாய், புகழ்ச்சியைக் கடந்த போகமாய், யோகத்தின் பொலிவாய், தெருளிடத்து அடியார் சிந்தையுள் புகுந்த செல்வமாய், சிவமாய் விளங்கியவர்கள் நம் கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய காசிவாசி அருணந்தித் தம்பிரான் அவர்கள்.

** திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் நினைவு மலராக வெளியிடப்பெற்ற 'குமர குருபரன்' திங்கள் இதழுக்கு வழங்கியருளி 10—6—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

அருள் கனிந்த வாழ்வு :

அவர்கள், குமரகுருபரர்க்குத் திருமலைநாயக்க மன்னனால் முற்றூட்டாக வழங்கப்பெற்ற அரியநாயகிபுரத்தில் தோன்றிய வர்கள். இளமையிலேயே ஆங்கிலமும், அருந்தமிழும் கற்றுத் தேர்ந்தவர்கள். தீந்தமிழ்த் தேவாரப் பாடல்களை நாளும் இன்னிசையால் பாடிப் பரவி மகிழ்ந்தவர்கள். தருமையாதீனம் இருபத்துமூன்றுவது குருமகாசந்நிதானத்தினிடத்தில் துறவறம் பெற்றவர்கள். ஆதீனத்தைச்சேர்ந்த திருக்கடவூர், திருவையாறு, திருநள்ளாறு, திருபுவனம், திருவாரூர் இராஜன்கட்டளை ஆகிய ஆலயங்களில் கட்டளை விசாரணையாகப் பணியாற்றிய பண்பு மிக்கவர்கள். ஆதீனத்தில் மிகப் பெருஞ் சிறப்புடன் நடத்தப் பெற்ற மெய்கண்டான் சித்தாந்த மாநாடு, பத்தாண்டு ஆட்சி விழாப் போன்ற பெரிய சமய மாநாடுகளில் பெரும் பங்குகொண்டு பணியாற்றிய சிறப்புக்குரியவர்கள். குருபக்தி மிக்கவர்கள். தருமைக் குருமூர்த்திகளை நனவிலும், கனவிலும், வாழ்விலும் மறவாது போற்றும் மாண்புடையவர்கள்.

பண்டார சாத்திரங்களில் படிந்த நெஞ்சம் :

"கிடந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்கிடந்தே எழுந்து
படர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்பசியோடு பிணி
அடர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்அந்த அந்தகனூர்
தொடர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்பிணைச்சொல் இல்லையே."

என்ற 'ஞானப்பிரகாச மாலை' பாடலுக்கு இலக்கியமாய்த் திகழ்ந்தவர்கள்.

"காரே சுமந்த கிரிமீது நின்று கடுங்கனலில்
நேரே அருந்தவஞ் செய்வீர் கமலையன் நெஞ்சிலன்பர்
ஆரேனும் ஆள்பவன் ஞானப்ர காசன் அடியரெனும்
பேரே படைமின் அதுபோதும் போதும் பிறப்பறவே."

என்ற இப்பாடலைப் பலருக்கும் அறிவுறுத்திப் பலரைப் பண் படுத்தியவர்கள். "ஞானப்ரகாசன் பயின்மடத்தில் கெவுளி உரைக்கும் பதி பசு பாசத்தின் கேள்விகளே" என்ற பாடற் பகுதியை அன்பர்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தி முப்பொருள் உண்மையை வற்புறுத்தியவர்கள். தருமையாதீனத்தின் இருபத்து நான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு ஆகிய மகாசந்நிதானங்கள் ஞானபீடம் ஏறுவதற்குத் துணை நின்றவர்கள்.

கனகாபிஷேகம் செய்த கரங்கள் :

சிவதல யாத்திரையில் விருப்பம் மிக்கவர்கள். திருக்கேதாரத் தலத்தில் மிகுதியான ஈடுபாடு உடையவர்கள். ஆண்டிற்கு ஒரு முறை, இருமுறை சென்று தரிசித்து மகிழ்பவர்கள். தாம் கண்ட கேதார யாத்திரையின் அருளனுபவத்தை, நம் குருமூர்த்திகளாகிய கயிலைக் குருமணியிடத்தில் அடிக்கடி தெரிவித்து, கேதார யாத்திரை, அமரநாத யாத்திரை, பசுபதிநாத யாத்திரை, கயிலாய யாத்திரை முதலியவற்றைச் செய்யத் தூண்டியவர்கள். கயிலையைத் தரிசித்த நம் குருமணிகளை, 'கயிலைக் குருமணி' என்று முதன்முதலாக அழைத்தவர்கள். பக்தர்களின் சார்பில் தமது திருக்கரத்தாலேயே கயிலைக் குருமணிக்குக் கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தவர்கள்.

அறக் கட்டளைகள் அமைத்த அருளாளர் :

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பரமற்கே ஆளானவர்கள். " குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றார்யார் ", " நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால், அல்லற்படுவதெவன் ", " அவரவர் வினைவழி அவரவர் வந்தனர் ", " பரபரக்கவேண்டா பலகாலும் சொன்னேன் " என்ற இப் பாடல்களை நாளும் சிந்தித்தும், பிறர்க்கும் அறிவுறுத்தியும் அவ்வழி நின்றவர்கள். இடையறாப் பேரன்பும், சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும், நடையறாப் பெருந்துறவும், சிவவேடப் பொலிவழகும் கொண்டு திகழ்ந்தவர்கள். குமரி முதல் இமயம் வரையுள்ள புனிதத் தலங்களில் ஒரு கோடி ரூபாய்க்குமேல் மூலதனம் வைத்து ஐந்நூற்றுமுப்பத்துமூன்று அறக்கட்டளைகள் நிறுவிய அருளாளர்.

காசியில் முத்திப்பேறு :


காசிவாசி என்பதற்கேற்ப, பெரும்பகுதி ஸ்ரீ காசியில் வாசம் செய்தவர்கள். காசிவாசியாக வந்தவர்களில் ஸ்ரீ காசியில் முத்திப் பேறெய்தியவர்கள் ஸ்ரீ குமரகுருபரர் முதல் சடையப்ப முனிவர் வரை ஐவராவர். பல்லாண்டுகளுக்குப் பிறகு அப்பெரும்பேற்றை ஸ்ரீ காசியில் பெற்றவர்கள் இவர்கள். அந்தப் புனித உடல்

ஸ்ரீ காசி கங்கையில் ஜலசமாதி பெறும்பேறு ஆருவதாக இவர் களுக்கே கிடைத்தது தனிச் சிறப்புக்குரியது. அவர்களது குரு பக்தி விசேஷத்தால் கயிலைக்குருமணி முத்தி அடைந்த ஆருவது மாதத்தில், கயிலைக் குருமணி முத்திப்பேறெய்திய அதே காசித் தலத்திலேயே முத்தி எய்திய ஒருமைப்பாடு உடையவர்கள்.

கருத்திற்கிசைந்த வாரிசு:

தமது கருத்திற்கிசைய ஒழுகும் உள்ளப்பாங்கும், தமது கருத்தறிந்து முடிக்கத்தக்க ஆற்றலும், தம்மால் நியமிக்கப்பட்ட அறங்கள் பலவற்றையும் திறம்பட நடாத்தும் திறனும், இனிய எளிய பண்பும், செந்தமிழ்ப் புலமையும், ஆங்கில அறிவும், சிவ நெறிப் பற்றும் உடைய நமது கண்மணியிற் சிறந்த நன்மணி யாகிய காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் அவர்களைத் தமக்கு வாரிசாக நியமித்துக்கொண்ட வள்ளன்மை உடையவர் கள். அருணந்தித் தம்பிரான் அவர்களின் பிரிவு சைவநெறிக்கு நிறைவு செய்ய முடியாத குறைவேயாம். ஆயினும், அவர்களது உள்ளப்பாங்கு அறிந்து ஒழுகும் காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் அவர்கள் அக்குறையை நிறைவுசெய்வார்கள் என்பது உறுதி. இவர்கள் வாழையடி வாழையென வந்த சமய நன்மரபு களைப் பல்லாண்டு காத்து, சமயத்திற்கும், சமுதாயத்திற்கும், தாய்மொழிக்கும், நாட்டிற்கும் நல்லன எல்லாம் செய்து நீடு வாழ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில் நிகழ்ந்த சமய விரிவுரை வகுப்பை
புதுவை ஆளுநர் மாண்புமிகு. திரு. பி. டி. ஜட்டி அவர்கள் தொடங்கிவைத்தபோது



தருமையாதீனம் 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாசி வழங்குதல் (22—5—72)

[8]

மதமும் - மனிதனும் *

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

[மதம் மக்களுக்கு அபினிபோன்றதல்ல - பிராண வாயு போன்று இன்றியமையாத ஒன்று என்பதனை அடிப்படையாகக் கொண்டு – அன்பின் ஆற்றலையும் – கடமை உணர்ச்சியின் மேன்மையினையும் விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.]

ஞானப் பண்ணை :

இன்று ஓர் நல்ல நாள். இக்காலத்தில் அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள மக்கள் எல்லோரும், மத உண்மைகளைப் புரிந்து கொண்டு அறநெறியில் வாழவேண்டும். இந்த உண்மையைத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு உணர்த்துவதற்காகத்தான் இங்குக் கூடியிருக்கின்றோம். இத் தருமையாதீனம் ஞானப்பண்ணையாக விளங்கி வருவது. கி. பி. 16ஆம் நூற்றுண்டில் ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப்பெற்றது இவ்வாதீனம்.

இவ்வாதீனத்தின் 25ஆவது பட்டத்தில் வீற்றிருந்து அருட் செங்கோல் செலுத்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இவ்

---

* *தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழாவை ஒட்டி நிகழ்ந்த சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்துத் திருவாய்மலர்ந்தருளி, 10—7—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்ற ஆசியுரை.*

வாதீன வரலாற்றில் ஒரு பொற்காலத்தைப் படைத்தவர்கள். தமிழ் மக்கள் – குறிப்பாகச் சைவ மக்கள், தங்களை – தங்கள் மதத்தை – குருபீடத்தை – குருவருள் விளக்கத்தைப் பெற வேண்டும் என்று கருதியவர்கள். அவர்களது அக்கருத்து வளம்பெறவே நாம் இங்குக் கூடியிருக்கின்றோம்.

உரிமைக்குக் குரல் :

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் ஆகிவிட்டார்கள். இப்போது மன்னர்கள், ஜமீன்தார்கள், பெருநிலக்கிழார்கள், நிலச்சுவான்தார்கள் நிலையும் மாறிவிட்டது. மடங்கள், கோயில்களின் நிலைகளையும் கூர்ந்து நோக்கத் தொடங்கியிருக்கிறார்கள். மக்கள் நலமாக வாழவேண்டும் என்றால், கோயில்களும் மடங்களும் அவசியம். வாழ்வியலுக்கு வேண்டிய அறநெறியை விளக்கும் சமய நிறுவனங்களாக உள்ளவை மடங்களும் கோயில்களுமேயாகும். இது எந்த ஒரு தனி மனிதனின் சொத்தும் அல்ல. தனி ஒரு மனிதனின் அனுபவத்திற்கு உரியதும் அல்ல. கோயில்களும் மடங்களும் பக்தர்கள், அறநெறியாளர்கள் கையிலிருக்கவேண்டும் ; அரசியல்வாதிகள் கையில் அகப்பட்டால் கட்சிச் சார்பில் போய்விடும். நமது ஆதீனம் கட்சிச் சார்பில்லாமல் அரசியலுக்கு என்றும் ஒத்துழைத்து உதவும் நிலையில் இருந்துவருகிறது. கட்சிக்கு வேறாக, சமய நிறுவனங்கள் தொடர்புவைத்து இயங்கவேண்டும். உரிமைக்குக்குரல் கொடுப்போம் என்ற முழக்கம் கேட்கும் இந்நாளில் நாம் சமயத்துக்குக் குரல்கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

இன்றைய சூழ்நிலை :

புண்ணியங்கள் சுவர்க்கத்தையும், பாவங்கள் நரகத்தையும் கூட்டிவைக்கின்றன என்றும், கடவுள் ஒருவன் இருக்கிறான் என்றும் எண்ணும் இக்காலத்திலேயே போலீஸ் நிலையம், நீதி மன்றங்கள், கோத்ரெஜ் பூட்டுக்கள் போன்றவை அதிகமாகத் தேவைப்படுகின்றன. புண்ணியபாவத்தையும் கடவுள் ஒருவன் இருக்கிறான் என்பதையும் உணரும் இக்காலத்திலேயே இந்நிலை இருக்கிறது எனில் இதனை உணராவிட்டால் என்ன நிலை ஏற்படும்? கடவுள் உள்ளபடியே இல்லை என்றாலும் நாம் ஒரு கடவுளைச் சிருஷ்டி செய்துகொள்ளவேண்டும் என்று மேலைநாட்டு அறிஞர் ஒருவர் கூறியுள்ளார்.

பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் மாணவர்கள் எவ்வளவோ அடக்க ஒடுக்கத்துடனும், பயபக்தியுடனும் இருந்தனர். இப்போது கட்டவிழ்த்தநிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் சமுதாயச் சூழ்நிலைகளால் ஒரு சிலர் தூண்டிவிட்டு இந்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். உருவாக்கியவர்களே பின்னர் அவற்றிற்கு இரையாகிறார்கள். இதை நாம் அதிகம் கூற விரும்பவில்லை.

மதத்தின் மாண்பு :

மதம் மக்களுக்கு அபினி அல்ல. பிராணவாயு எப்படி மனிதனுக்கு இன்றியமையாததோ — உணவு எப்படி மனிதனுக்கு இன்றியமையாததோ - மீனுக்கு நீர் எப்படி இன்றியமையாததோ-அதேபோல்தான் மதமும் மனிதனுக்கு இன்றியமையாதது; சமய உணர்வு மக்களுக்கு இன்றியமையாதது. ஒவ்வொருவனும் தனது தவற்றை எண்ணுகிறான். தவறான எண்ணங்களை, தான் எண்ணியவாறே செயல்படுத்தத் தொடங்குகிறான். அதைச் செயல்படுத்தினால் யாராலும் தடுக்கமுடியாது. தவற்றைச் செயல் படுத்தாமல் தடுப்பதே கடவுள் பக்தி; சமயக்கொள்கை; மதாபிமானம்.

அன்பின் ஆற்றல் :

அறிவுக்கு முதலிடம் கொடுக்கக்கூடாது. அன்புக்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டும். தந்தையிடம் கட்டுப்படாத மகன் தாயிடம் கட்டுப்படுகிறான். இதிலிருந்தே அறிவைவிட அன்பு மேலானது என்று புரியவில்லையா ? ஞானபீடமாய் விளங்குகிற இவ்வாதீனத்தை நானூறு ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ குருஞான சம்பந்தர் தோற்றுவித்தார். அது முதற்கொண்டு சைவத்தையும் தமிழையும் இருகண்களாகப்போற்றி வருவது தருமையாதீனம்.

கடமை உணர்ச்சி :

எல்லா நெறிகளையும் எல்லா மதத்தினரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். மனம் என்ற ஒன்று இருப்பதால்தான் மனிதன் என்ற பெயர் வந்தது. சிந்திக்கவும் சிரிக்கவும் தெரிந்தவன் மனிதன். சிந்திக்கத் தெரிந்தவன் என்ற முறையில் பொறுப்பையும் கடமையையும் உணரவேண்டும். சென்ற ஆண்டிலே இருந்த நம் நிலைவேறு; இப்போதுள்ள நிலைவேறு; இடமாற்றம் மட்டும் அல்ல; பொறுப்பும் அதிகம்.

சமயமே ஆட்சி நலத்திற்குத் துணை :

மிருகத்திற்குப் பொறுப்பு என்பது இல்லை. மனிதனுக்கு அப்படி இல்லை; பொறுப்பு அதிகம். மனிதனுக்கு ஆறாவது அறிவாகப் பகுத்தறிவு இருக்கிறது; சிந்தித்துச் செயல் புரிவதற்குத்தான் இந்தப் பகுத்தறிவு. பகுத்தறிவால் சமய உணர்வு ஏற்படுகிறது. சமயலட்சியத்தை உணர்ந்த மக்கள் இருப்பதால்தான் – கடவுள் உண்டு, நன்மை உண்டு, தீமை உண்டு என்ற எண்ணம் உடையவர் இருப்பதால்தான் மக்கள் அமைதியுடன் வாழ்கிறார்கள். சமயம் இல்லாவிடில் மக்கள் அமைதியுடன் வாழமுடியாது. இத்தகைய நல்ல பல கருத்து களைக்கொண்ட சமயமும் சமயநெறியைப் பின்பற்றுவோரும் இருப்பது ஆட்சியாளருக்கும் பெருந்துணையாக இருக்கிறது.

நாட்டிற்கு நாம் என்ன செய்தோம் :

மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு உறுதுணையாயுள்ள சமயங் களின் கருத்துக்களைப் பலரும் அறிவதற்கு வாய்ப்பாகச் சமயப்பயிற்சி வகுப்பு நடத்தப்பெறுகிறது. சமயப்பயிற்சி வகுப்பிலே பயிற்சிபெறுவோர் தங்களது வாழ்க்கையையும் உயர்த்திக்கொண்டு, பிறர்வாழ்வையும் உயர்த்த வேண்டும். நம்மைப் பாராட்டி வளர்த்துப் படிக்கவைத்து மனிதனாக்கிய நம் குடும்பத்திற்கு நாம் என்ன செய்தோம், நம் குடும்பத்தைத் தாங்கியுள்ள வட்டத்திற்கு நாம் என்ன செய்தோம், பல வட்டங் களையும் ஒன்றாக இணைத்து விளங்கும் மாவட்டத்திற்கு நாம் என்ன செய்தோம், மாவட்டங்கள் பலவற்றை ஒருங்கு இணைத் துள்ள மாநிலத்திற்கு (நந்தமிழ் நாட்டிற்கு) என்ன செய்தோம், தமிழகத்தைப் பல மாநிலங்களோடு இணைத்துள்ள இந்தியப் பெருநாட்டிற்கு என்ன செய்தோம் என்று ஒவ்வொருவரும் சிந்தித்துக் கடமையாற்ற வேண்டும். நமக்கு நாடு என்ன செய்தது என்று எண்ணுமல் நாம் நாட்டிற்கு என்ன செய்தோம் என்று எண்ண வேண்டும். அதுபோல உலகில் நம்மைப் படைத்து அறிவும், உணர்வு அனைத்தும் தந்து நம்மைப்பால் நினைந்தூட்டும் தாயினும்பரிந்து வளர்த்துவரும் ஆண்டவனுக்கு நாம் கைம்மாருக என்ன செய்யவேண்டும் என்று சிந்தித்தால், அவரவர்களும் தத்தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளை ஒழுங்காகச்

செய்து, உரிமைகளைப் பெறுவதையே இறைவன் தன் படைப்புக்குரிய நன்றிக் கடனாகக் கருதுவான் என நாம் அறிந்து ஒழுகுதல் முடியும்.

பயிற்சி வகுப்புப் பயன் தருவதாகுக :

தருமையாதீனத்தில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டி, தமிழகத்தின் பேரறிஞர்கள் பலரும் பங்குகொள்ளும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நடைபெறுவதை அனைவரும் அறிவர். இவ்வாண்டு திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சியோடு கோடைக்காலச் சமயப் பயிற்சி வகுப்பும் நிகழவுள்ளது ; எல்லா மதங்களையும், அவற்றின் கோட்பாடுகளையும் அறிந்து சமய உண்மைகளைத் தெளிந்திட இவ்வகுப்புத் துணைபுரியும். இதில் கலந்துகொள்ளுதற்குத் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்துள்ள ஆசிரிய மாணாக்கர்களை வாழ்த்துகின்றோம்.

சிவஞான சித்தியார், முதலிய நூல்களில்கண்ட புறச் சமயங்கள் இக்காலத்தில் எவ்வெவ்வாறு விளங்குகின்றன என்பதையும், சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் இவற்றுள் எவ்வாறு பொருந்தி மேம்பட்டு விளங்குகின்றன என்பதையும் உணர்ந்து தெளிந்திட இவ்வகுப்பு உறுதுணை புரிவதாகுக. இதனைத் தொடங்கி வைக்கும் புதுவை மாநில ஆளுநர் திரு. ஜட்டி அவர்களுக்கு நல்லன எல்லாம் பெருகவும், சமய வாழ்வு வையகம்எல்லாம் ஓங்கவும் எல்லாம்வல்ல சொக்கலிங்கப் பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

[9]

உழைப்பும் - உயர்வும் *

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு"

[விடுதலை பெற்று இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்திருக்கும் நாம் விடுதலையின் பயனை அடைவதற்குப் பொறுப்பும் - கடமையுணர்ச்சியும் உழைப்பும் இன்றியமையாதன என்பதனை விளக்கி, தேசபக்தியும் - தெய்வபக்தியும் இருகண்களாகப் போற்ற வேண்டுவன என்பதனையும் வலியுறுத்தி நிற்கிறது இக்கட்டுரை.]

விடுதலை வெள்ளிவிழா :

திருச்சிற்றம்பலம்

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை

தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்

கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே."

திருச்சிற்றம்பலம்

---

* இந்தியப் பெருநாட்டின் சுதந்திர தின வெள்ளிவிழாவை ஒட்டி 10—8—1972 ஞானசம்பந்தம் இதழுக்கு வழங்கியருளியது.

பண்டைக் காலந் தொட்டே பலவகைப் பண்பாடும் பெற்று விளங்கும் நமது பாரத நாடு இடையில் இரண்டு நூற்றாண்டுகள் அந்நியர் ஆட்சியில் தன்னுரிமை இழந்து நின்று, மீளவும் தன்னுரிமை பெற்று, 25ஆவது ஆண்டில் வெள்ளி விழாக் காண்கின்றது. இவ்விழா நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

மக்களாட்சியில் நமது கடமை :

தன்னுரிமை யாவது **ஜனநாயகம்** அல்லது **மக்களாட்சி.** இம் மக்களாட்சியில் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். 'மன்னர்கள்' என்று சொல்லும்பொழுது எல்லோர்க்கும் மகிழ்ச்சிதான். ஆனால், குடிமக்களாய் இருக்கும் நிலையைவிட, மன்னர்களான நிலையில் ஒவ்வொருவருக்கும் பொறுப்பும் கடமையும் அதிகமாகின்றன. ஆயினும் மக்கள் பொறுப்புணர்ச்சியை விடுத்து, உரிமையைத்தான் கொண்டாடுகிறார்கள். ஜனநாயகம் என்பது எல்லோரும் உழைத்து வாழ்வதேயன்றி, பிறர் உழைக்கத் தாம் சும்மா இருந்து சுகம் பெறுவதல்ல. இயற்கை நியதியும், உழைத்து வாழ அமைந்திருக்கின்றதேயன்றி, சும்மா இருந்து வாழ்வதாக அமையவில்லை. அமைக்கப்படவும் இல்லை.

இறைவன் திருவுள்ளம் :

'உயர்வு' என்பது உழைப்பினால் வருவதேயன்றிச் சோம்பலால் வருவதன்று. ஆயினும், உழைப்பு இல்லாதவர்கள் உழைப்பினால் உயர்வு பெற்றிருப்பவர்களைக் கண்டு மனம் புழுங்குவது தவிர, உழைத்து முன்னேற முயல்வதில்லை. அந்நிலையில் உள்ளவர்களையும் உழைத்து முன்னேறச் செய்வதே மக்கள் அரசாங்கத்தின் மாட்சிமிக்க மாபெரும் கடமை. பொறுப்பு, கடமையுணர்ச்சி, உழைப்பு முதலிய பண்பாடுகளும் அவ்வவ் உயிர்களின் அறிவு நிலைக்கு ஏற்பவே அமைவன. இயற்கையில் அறிவுத்திறன் பெற்றவர்கள் எவ்வகையிலோ உழைத்து முன்னேறிவிடுகின்றனர். அவர்கள் மற்றவர்களையும் அந்நிலைக்குக் கொண்டுவர முயலுதல் வேண்டும். உலகத்தைப் படைத்த இறைவன் திருவுளக் குறிப்பும் அதுவே. பிறந்த குழந்தை

உழைக்க இயலாதவரையில், அதற்குத் தாய் பால்கொடுத்து வளர்க்கின்றாள். வளர்ந்தபின் அது தானே பிழைத்துக் கொள்ளுகிறது. வளர்ந்து பலர்க்கு உதவியும் புரிகின்றது.

சமுதாயத்தில் பல்லோர் கடன் :

பறவை விலங்கு முதலிய பலவும் முதலில் தம் தாயின் உதவி பெற்று வளர்ந்து, பின் தம் இனத்திற்குப் பயன் தருகின்றன. ஆடு, மாடுகள் மக்கட்கும் பயன்பட்டு உதவி செய்தல் வெளிப்படை. தாவரங்களும் முளைக்கும்பொழுது விதையில் உள்ள உணவை உண்டு, பின் மண் வளம், நீர் வளம் முதலிய வற்றைக்கொண்டு வளர்ந்து, பின் மக்கட்கும் பறவை விலங்கு முதலியனவற்றிற்கும் பயன் தருகின்றன. இஃது இயற்கை நியதியாய் உள்ளது. இவ்வாறே பிறர் உதவியால் வளர்ந்து, பின் தமது உழைப்பினுல் செல்வத்தைப் பெருக்கிக்கொண்ட மக்களும் அச்செல்வம் பிறர்க்கும் பயன்படச்செய்து வாழ்தல் வேண்டும். செல்வத்தைப் பிறர்க்கு ஈயும் ஈகை என்பது இங்குப் பிறர் உழைப்பிற்கு உதவிசெய்து, பின் உழைப்பிற்கு ஏற்ப ஊதியம் பெறச் செய்வதையே குறிக்கும். இவ்வுதவி நாட்டிற்கு நலம் பயப்பதாதலைச் செல்வர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இத்தகைய நாட்டுப்பற்று ஒவ்வொருவருக்கும் உண்டாகி விடுமாயின் நமது நாடு பொன்னுடாய் விளங்கும். தேசப்பற்று மக்களிடம் உண்டாகிவிடுமாயின், கடமை உணர்ச்சி தானுகவே வந்துவிடும். பின் அவரவர்களது கடமையில் அவரவரும் தவருது நிற்பர்.

இம்முறையில், உழைத்துப் பெருக்கிய செல்வம் படைத்தோர், அதனைப் பிறர்க்கு ஈந்து அவர்களையும் பயனடையச் செய்தல் வேண்டும்.

> "செல்வத்துப் பயனே ஈதல் ;
> துய்ப்பே மெனினே தப்புந பலவே"

என்று சங்கத்துச் சான்றோரும்,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்று திருவள்ளுவரும் கூறுகின்றபடி, செல்வத்தைப் பலர்க்கும் பயன்படச் செய்தல் செல்வர்களது கடமையாகும்.

வெள்ளிவிழா வாழ்த்து :

இத்தகைய பகுத்துண்டலே இன்று நம் ஜனநாயகத்தில் வேண்டத்தக்கது. இந்நிலை இயற்கையில் நிகழுமாறு அமைந்த அமைப்புக்களே தேவாலய மடாலயங்கள். பகுத்துண்ணும் நிலை, இவைகளில் இறையுணர்வோடு இயற்கையில் நிகழ்கின்றது. இவற்றையெல்லாம் உணர்ந்து, உழைப்பும், உதவியும் ஒற்றுமையும் வளர இறையருளை முன்னிட்டு முயல்வதே இன்று நாம் கொண்டாட வேண்டிய உண்மை வெள்ளி விழா வாகும். அத்தகைய விழா எங்கும் நிகழ்ந்து, யாவர்க்கும் பயனளிக்க, செந்தமிழ்ச் சொக்கர் திருவருளை நினைந்து,

வாழ்க தன்னுரிமை !

வளர்க பாரத நாட்டு வளம் !!

என்று வாழ்த்துகின்றோம் !

[10]

வினையும் - விளைவும் *

> "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்"

[நல்வினை - தீவினைகளின் விளைவுகள் எல்லா விடத்தும் ஒப்பத்தோன்றுமைக்குரிய காரணத்தை இனிய உவமைகள் மூலம் எடுத்துக்காட்டி, பெண்ணாகடத் திருத்தல வரலாற்றையும், ஸ்ரீ மெய்கண்டதேவரின் அவதாரச் சிறப்பையும் இனிதே இயம்பி நிறைகிறது இக்கட்டுரை.]


திருத்தூங்கானை மாடம் :

'தில்லை மூவாயிரம், கடந்தை ஆறாயிரம்' என்ற வழக்காறு ஒன்று உண்டு. திருஞானசம்பந்தர் காலத்தே ஆறாயிரம் அந்தணர் குடும்பங்கள் இங்கே வாழ்ந்திருந்து மறை ஓதி வழிபட்ட **செய்தி** *அவரது 'ஒடுங்கும் பிணிபிறவி' என்று தொடங்கும் பதிகத்துள் 'கெழுமனைகள் தோறும் மறையின் ஒலி தொடங்கும் கடந்தை' என வரும் தொடரால் உறுதிப்படுகின்றது. அந்தணர்கள் மறைஓதி வழிபட்ட தூங்கானை மாடத்தைத் தொழுதால் பிணி நீங்கும்; நிலையான வாழ்வு வரும். மூலத்தான இறைவர் எழுந்தருளியிருக்கும் கருவறை யானையின் அமைப்பாக இருப்பதால் இக் கோயிலைத் தூங்கானை மாடம் என அழைக்கின்றனர்.*

---

* *பெண்ணாகடம் சிவநேயச் செல்வர்கள் நிகழ்த்திய குருவழிபாட்டில் திருவாய்மலர்ந்தருளி 10—9—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்ற ஆசியுரை.*


திருப்பெண்ணுகடத்தில்,
திருப்பெண்ணுடகம் வட்டம் பக்தர்கள் நிகழ்த்திய
கொலுவழிபாட்டின்போது
(13—8—1972)



திரு. சீனிவாசம் பிள்ளை ; திரு. குஞ்சிதபாதம் பிள்ளை ;
திரு. இராதாகிருஷ்ண பிள்ளை ; திரு. தங்கவேல் பிள்ளை
ஆகியோருக்கு
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
ஆசிக்கவசமாகப் பட்டாடை போர்த்தியருளியது

திருப்பெண்ணாகடத்தில்,

திருப்பெண்ணாகடம் வட்டம் பக்தர்கள் நிகழ்த்திய குருவழிபாட்டின்போது (13—8—1972)



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்குதல்

நிலைபேறுடைய செல்வம் :

எது நிலையான வாழ்வு? தற்காலத்தே வீட்டையும், நிலத்தையும் பணத்தையும் பலர் நிலையானவை என எண்ணுகின்றனர். இவையெல்லாம் நிலையுடையன அல்ல. நிலையில்லாதனவற்றை நிலை என்று மயங்கும் நெஞ்சை அப்பர் பெருமான் அழைக்கிறார்; அழைத்து 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா!' என்ற தாண்டகத்தால் எது நிலைபேறுடைய செல்வம் என அறிவிக்கிறார். உடம்பு நிலை என்று பலர் கருதுகிறார்கள், உடம்பென்னும் மனையில் ஆவியார் இருக்கும் குடி எத்தனை ஆண்டு ஒப்பந்தம் என யாருக்குத் தெரியும்! சில நேரத்தில் இந்த வீட்டைக் காலி செய்யும்படி உயிர்க்கு முன்னறிவிப்புத் தரப்படும். நோய்தான் அந்த முன்னறிவிப்பாகும். நோயின்றி உயிர்பிரியும்பேறு நமது கயிலைக் குருமணி போன்ற அருளாளர்களுக்கே சித்திக்கும்.

வீடுபேறு விளக்கம் :

குடியிருக்கும் வீடும் நிலையல்ல – உயிர் குடியிருக்கும் உடம்பாகிய வீடும் நிலையல்ல; ஆனால் இவை எல்லாம் தற்காலிகமான வீடுகளே. நிலையான வீடு இறைவனது திருவடிப்பேறேயாகும். உயிர் விடுதலை பெற்று அமைதிபெறுகிற இடத்தை வீடு என்கிறோம். விடுதலைபெறுவது – வீடு. வீடு, பேறு, மோட்சம் என்பன ஒரே பொருளைக் குறிக்கும் தனித்தனிச் சொற்கள். விடுதலை பெறுவதை உயிர்கள் இயல்பாகவே விரும்புகின்றன. மாணவன் பள்ளியிலிருந்து விடுதலைபெற விரும்புகின்றான். அலுவலகத்திலிருந்து பணியாளர் விடுதலைபெற விரும்புகின்றனர். மக்கள் பிறர் ஆட்சியில் இருந்து விடுதலைபெற விரும்புகின்றனர். விடுதலை வேட்கை இயல்பு. எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் பரவெளியில் உயிர் செல்வதே வீடு என்பது. அதுவே உண்மையான வீடு; அங்கே கிடைப்பதே உண்மை இன்பம். உலகின்பம் கருவிகளைக் கொண்டு அனுபவிப்பது; அங்கே கருவிகள் தேவையில்லை.

வணங்கவே தலை :

அவ்வீடுபேற்றிற்கு வழிகாட்டுகிறார் அப்பர் பெருமான்; அவ்வழியும் உழைப்பின் வழிப்பட்டது. எதனையும் உழைக்காமல் பெறமுடியாது – உழைக்காமல் உயரவும் முடியாது; என்ன செய்யவேண்டும்......?

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டு"

என்று வழிகாட்டியருளுகிறார். தலையாரக் கும்பிடுதல் என்றால் தலை பூமியிலே படும்படி கும்பிட்டு வணங்கவேண்டும். தலையார என்பதில் ஆர்தல் — என்பது நிறைதல். தலையைப் பெற்றிருப்பதே வணங்குவதற்குத்தான். இதனைத் திருவள்ளுவர்,

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்று அழகாக விளக்குவர். 'வணங்கத் தலைவைத்து' என்பர் மணிவாசகர். சேரமான்பெருமாளும் 'சிந்தனைசெய்ய மனம் அமைத்து செப்ப நா அமைத்து வந்தனைசெய்ய தலை அமைத்தேன்' எனப் பேசுகிறார். வேறொரு இடத்தில் அப்பர்பெருமானும் 'தலையே நீ வணங்காய்' எனக் குறிப்பிடுகிறார்.

படும் என்னும் சொற்பொருள் :

இறைவன் நம் வினைக்கீடாகப் பிறப்பைக் கொடுக்கிறார். நல்வினைக்கு நன்மையும், தீவினைக்குத் தீமையும் அனுபவித்தே ஆகவேண்டும். சில நல்லவர்கள் துன்பம் அனுபவிப்பது போலவும், சில தீயவர்கள் இன்பம் அனுபவிப்பது போலவும் வெளிப்படையாகத் தோன்றும். ஆழ்ந்து பார்த்தால் யாவும் வினைப்பயன் என்பது விளங்கும். திருவள்ளுவர் மிக அழகாக இந்த எண்ணத்தை விவரிக்கிறார்.

'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'

என்கிறார். படும் என்பது 'தோன்றும்' என்றும், 'அழியும்' என்றும் பொருள்தரும். இங்கே ஆழமாக ஆராய்ந்தால் — சிந்தித்தால் இதன் அடிப்படை உண்மை நம் கருத்தில்படும்; அதாவது தோன்றும் என்று விளக்குகிறார். இலக்கணக் கொத்து சுவாமிநாத தேசிகர் 'பலகால் பயிலவே பழகுக' என்பார். மாறுபட்ட உலகியலை ஆழச் சிந்தித்தால் காரணம் அறிவிற்குத் தானே புலப்படும் என்பதே கருத்தாகும்.

வினையின் விளைவு :

வினை உடனடியாகவும் பயன் தரும் – காலந்தாழ்த்தும் பயன் தரும். கீரை, வாழை, தென்னை, பனை இவை பயன் தரும் கால அளவை உற்றுநோக்கவேண்டும். கீரை ஒருமாதத்தில் பலன் தரும்; வாழை ஓராண்டில் பலன் தரும், தென்னை ஐந்து ஆண்டில் பலன் தரும்; பனை இருபது முப்பது ஆண்டு கழித்துப் பலன் தரும்; அதுபோல வினையின் ஆற்றலுக்குத் தக அது பயன் விளைக்கும். சிறு குற்றங்களுக்கு உடன் தண்டனை தரப் படுவதும், பெருங் குற்றங்களுக்கு நெடுநாள் விசாரித்துத் தண்டனை தருவதும் உலகியலிலும் உண்டு. அதுபோலத் தீவினை மிக மிகத் தண்டனை மெதுவாக வரும், பல்வேறு பிறவிகட்குப் பின்பும் தண்டனையை இறைவன் தந்தே தீருவான். வலுவில்லாத நோயாளிக்கு வலிமை உண்டாக்கிப் பின் அறுவை சிகிச்சை செய்வது உலகியல். அதுபோலச் சில உயிர்களை வளர வைத்துத் தண்டனை தருகிறான் இறைவன்.

புதிய சிந்தனை :

நல்வினையாயினும், தீவினையாயினும் அவனவன் அனுப வித்தே தீரவேண்டும். 'கொன்றால் பாவம் - தின்றால் தீரும்' என்பதொரு பழமொழி தமிழ்நாட்டில் வழங்கி வருகிறது. அது புலால் உண்பதுபற்றி எனப் பலர் நினைக்கிறார்கள். இது வினை பற்றிய பழமொழி. 'தின்றால்' என்பது இங்கே 'அனுபவித்தால்' என்ற பொருளில், 'பாவத்தை அனுபவித்தல்லது தீர்த்தல் இயலாது' என அறிவுறுத்துகிறது. தண்டனைகள் திருத்தத்திற் காகவே! 'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது - கொல்ல அல்ல, பொல்லாக்குணம் போக்க' என்பது பழம்பாட்டு. பெண்ணாகடத்திறைவனைத் திருஞானசம்பந்தரும், அப்பரும் பாடிப் பரவியுள்ளனர். மெய்கண்ட தேவரும், பெரிய புராண மெய்யடியாருள் ஒருவராகிய கலிக்கம்பரும் இங்கே அவதரித்தனர் என்றாலும், இப் பழம்பெருமையை மட்டும் பேசிப் பகட்டுக் காட்டினால் பயன் இல்லை.

போதமும் – சித்தியும் :

இங்கே இவ்வளவு பெரிய வரவேற்பில் கலந்துகொள்ள நாம் இசைந்ததற்குக் காரணமே, பெருங்கூட்டத்தில் சில

கருத்துக்களை வெளியிடுவதற்கே ஆகும். நாம் அடக்கமாக இங்கே வந்து இறைவனைத் தரிசித்துச் சென்றிருக்கலாம். என்றாலும், உனக்காக இல்லாவிட்டாலும், மற்றவர்களை ஈர்க்கவாவது இவை எல்லாம் இருக்கட்டும் என மெய்கண்டார் உணர்த்தினார். "உலகவாழ்வே நாம் அறியாமையில் இருந்து நீங்குவதற்கு" என்பர் மெய்கண்டார். மெய்கண்டாரின் தத்துவத்தை நாமெல்லாம் புரியாதது என்று ஒதுக்குவது அறியாமை ஆகும். திருவள்ளுவரினும் சுருக்கமாக 12 நூற்பாவில் 40 வரியில், நூல் செய்தார். செய்து விளக்கத்திற்காகச் சில வெண்பாக்களும் அருளினார். அவரது மாணாக்கர் அருணந்தி சிவாசாரியார் சிவஞான போதத்தை விளக்குவதற்காகச் சிவஞானசித்தியார் என்ற அருள் நூலைச்செய்தார். மேலும் விளங்கச் சிவஞான முனிவரால் பேருரை காணப்பட்டது. அதையும் எளிமையாக்கிப் பேராசிரியர்கள் பலர் விளக்குகிறார்கள். அப்படியும் புரியவில்லை என்றால் நீ படிக்கவில்லை - அல்லது அறிந்துகொள்ளும் விருப்பம் இல்லை என்பதே கருத்தாகும்.

கல்வியின் குறிக்கோள் :

பேராசிரியர் திறமுடையவராயிருந்தாலும் மாணவனுக்கு ஓரளவு அறிவும் ஆற்றலும் இருக்கவேண்டும். ஆர்வமும், அக்கறையும் இல்லாதவர்களைச் சொல்லித் திருத்தவேமுடியாது. எதற்காக, ஏன் படிக்கிறோம் என்பதை நூற்றுக்குநூறு தெரியாமலேயே மனிதன் இன்று படிக்கிறான். நம்மில் பலருக்கு நாம் ஏன் கல்வி கற்றிருக்கிறோம் எனத் தெரியாது. கல்வி - வேலைக்காகவோ, ஊதியம்பெறவோ படிக்கப்பெறவில்லை. அதன் நோக்கம் வேறு. இதனை,

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே"

என விளக்குவர் பவணந்திமுனிவர். அறத்தை அறியவும், பொருள் ஈட்டும் நெறிகளைத் தெரிந்து கொள்ளவும், இல்லற இன்பத்தை நேர்மையாக நுகரவும் செய்து, வீடுபேற்றை விளக்குவதே கல்வியின் குறிக்கோளாகும். கண்ணால் காண்பது, காதால் கேட்பது, மூக்கால் முகர்வது. நாவால் சுவைப்பது, உடலால் உணர்வது போன்ற பொறிவழி இன்பமெல்லாம் சிற்றின்பம். உயிர்கள் அறத்தைத் தாமே விரும்பிச் செய்யா. திருமணம் ஆண்டவுன் மக்களை அறவழியில் செலுத்த வைத்து

ஜாலவித்தை! அறத்தை இருவர் கூடி இயற்ற இறைவன் திருமண வாழ்வைக் கூட்டுகிறான். உடல் பலம்பெற உண்ணவேண்டும். அதிலும் சுவை வைக்கிறான் இறைவன். இவற்றையெல்லாம் உணர்த்தும் கடமையும், பொறுப்பும் எங்களைப் போன்ற அறத்துறையினர்க்கு உண்டு. உலகம் வியக்கும் தத்துவம் தந்த பேராசிரியர் இந்த ஊரில் அவதரித்தார் என்ற பெருமையோடு, நமக்கிருக்கும் கடமையுணர்ச்சியையும் மறவாது இருத்தல் வேண்டும்.

பெண்ணாகடம் பெயர்ப்பொருத்தம் :

பெண்ணாகடம் என்ற பெயர், விண்ணிலிருந்து இந்திரன் பூசை புரிதற்கு மலர் கொய்ய இந்நகர்க்கு வந்த பெண் (தேவ மகளிர்) ஆ. (காமதேனு) கடம் (மதம் பொருந்திய வெள்ளானை) என்பன மீண்டும் திரும்பாமல் இறைவனைப் பூசித்துக்கொண்டே இந் நகரில் தங்கிவிட்டன. இந்திரன் இவை வாராமைகண்டு, இந்நகர்க்கு வந்து தாமே மலர் கொய்து இறைவனை வழிபட்டான். இதனால் இந்நகர் பெண்ணாகடம் எனப் பெயர்பெற்றது. இவ் வரலாற்றுக்கு ஏற்ப இத்தலத்தில் அவதரித்த மெய்கண்டார் வாழ்வியலிலும் இது பொருத்தமாக அமைந்தது. அருணந்திசிவம் தம் சிஷ்ய பரம்பரையினரான மெய்கண்டாரைக் காணத் திருத்துறையூரிலிருந்து திருவெண்ணெய்நல்லூர்க்கு வருகிறார். வந்தவர் ஆணவ முனைப்பால் தான் சென்று காணாது தம் மாணாக்கரை அனுப்புகிறார். ஒருவர்பின் ஒருவராகச் சென்ற மாணாக்கர்கள் மெய்கண்டாரின் சிவஞானோபதேசத்தில் ஈடுபட்டு அங்கேயே தங்கி விடுகிறார்கள். பின்னர் அருணந்திசிவமே நேரிற்சென்று ஆணவம் நீங்கி அடியவரானார் என்பது வரலாறு.

ஆணவ நீக்கம் :

அருணந்திசிவம் தம் ஞானசாரிராகிய மெய்கண்டாரைச் சிவமாகவே கருதி, 'கண்ணுதலும், கண்டக்கறையும் கரந்தருளி' வந்ததாகப் போற்றுகிறார். கடல்நீர் போன்ற ஆணவத்தால் பாழ்பட்டுக் கிடந்த அருணந்தி சிவத்தின் அறிவு மெய்கண்டாரைக் கண்டவுடன் - அவர் பார்வை பதிந்தவுடன் குடிநீர் போலத் தூய்மைபெற்றது. மாணவனுக்கும் உரிய பக்குவநிலை வந்தால் தான் ஞானசிரியன் பார்வை புலன்தரும். அத்வைத நெறியில்

இராமகிருஷ்ணரிடம் விவேகானந்தர் அறிவு பெற்றிருக்கிறார். நமது ஆதீனத்திலும் பெரும் புலவராய் வந்த குமரகுருபரர் மாசிலாமணி தேசிகரின் சொல்லில் அடங்கினார். அடங்கிக் காசியில் மடங்கண்டு, தருமையாதீனச் சீடர் மரபை உருவாக்கினார்.

பற்றுதலும் விடுதற்கே :

இந்த ஊருக்கு நாம் புதிதாகவரவில்லை. ஞானபீடத்திற்கு வந்த பிறகு இங்கே வருவது இதுதான் முதன்முறை. நமது குருவான மெய்கண்டார் மீது கொண்ட - அவர் பிறந்த மண்மீது கொண்ட அன்பால், அம்மண்ணில் வாழும் உங்களிடமும் பற்றுக் கொண்டோம், மனைவிமூலம் அவள் உறவினர்களைத் தமராக்கிக் கொள்வதுபோல. இப்பற்றெல்லாம் உங்கள் பற்றையும் நம் பற்றையும் நீக்கிக்கொள்ளவே.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளில் இக்கருத்தை அழகுற விளக்குவர் வள்ளுவர். பற்றுதலும் விடுதற்கே என்பார், பற்றுவிடற்கு அப்பற்றைப் பற்றுக என்றார்.

தொண்டின் பயன் :

மெய்கண்டார் பெருமைக்கு உலகையே காணிக்கையாகக் கொடுத்தாலும் ஈடாகாது. பள்ளிகள் ஆசிரியர் வாழ்வுக்கு அமைக்கப்படவில்லை. மாணவர் உய்விற்கே! இங்கே மெய்கண்டாரின் பள்ளியுண்டு. அதில் முறையாகப் பயின்றால் உய்யலாம். கடமையைக் காலத்தில் செய்துவருவோமேயானால் பெருமை தானாகவே வரும். பொருள் என்பது காசு அல்ல; உண்மையான அறிவேயாகும். அதுவே பெறத்தக்கது. **'அடியார்க்கென்றும் வாராதசெல்வம் வருவிப்பான்'** என்பது வேளூர்த் தேவாரம். இறைவனுடைய திருவருள் விலாசத்தைப் புரிந்துகொள்ளும் அறிவே கிடைத்தற்கரிய பெருஞ்செல்வம். இங்குப் பலரும் நாம் அப்பர் கோயிலைக் கட்டியதாகக் கூறினார்கள். அப்பணி முன்னரே தொடங்கியிருந்தது. நாம் இடையில் சென்று கலந்துகொண்டோம். அதனைக் கட்டி முடித்தோம் என்பதைவிட, அதனால் பெற்றிருக்கும்

அறிவும், வளர்ச்சியுமே மிகப்பெரியது என உணர்கிறோம். முற்பிறப்பில் செய்த தவப்பயன் அப்பர் பணியில் ஈடுபத்தியது. இதில் நம் பங்கெல்லாம் அணில் இராமர் அணைக்கு உதவியது போலத்தான். பெண்ணாகடத்தில் மெய்கண்டார்க்கு இயற்றிய பணியே, இங்கே இவ்வளவு உயர்ந்த வரவேற்பைத் தந்திருக்கிறது என உணர்கிறோம்.

திருந்திய திருடன்கதை :

இராமகிருஷ்ணர் ஓர் உவமைக்கதை சொல்கிறார். ஒரு மன்னன் தம் மகளை ஒரு சிவனடியார்க்கே மணமுடிக்கவிருப் பதாகக் கூறியதைக்கேட்ட திருடன் ஒருவன், ஒரு நாள் சிவனடியார் போல் வேடமிடுகிறான். மன்னனும் வேடமிட்ட திருடனுக்கே மகளை மணமுடிக்கிறான். திருடன் சிந்திக்கிறான். ஒருநாள் பொய்யாகச் சிவனடியார் வேடமிட்டதற்கே மன்னன் மகளை மணக்கும்பேறு கிடைக்கிறதே; உண்மை அடியாரானால் எத்தகு பெரும்பேறு வாய்க்கும் எனக்கருதி உண்மை அடியரானான். இது ஓர் உவமைக் கதை. இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டும் என்பதற்காகவே இங்குக் குறிப்பிடுகிறோம்.

கல்லூரி காணலாம் :

இந்நாட்டை நன்னெறியில் வளர்க்கும் பிள்ளைகளாக உங்கள் பிள்ளைகளை வளர்க்கவேண்டும். தேசப்பற்றும், தெய்வப்பற்றும் பிள்ளைகளிடையே வளரவேண்டும். அக்காலை மண்ணுலகே - பொன்னுலகாக மாறும். நாமெல்லாம் இறைவனை வழிபடு கிறோம். ஆனால், இறைநெறியைப் பின்பற்றவில்லை. வேலைக்குத் தகக் கூலி தரும் முதலாளிபோல, உழைப்பிற்குத் தக்க ஊதியத்தையே இறைவன் தருவான். நமது வழிபாட்டு முறைகளை எல்லாம் நம் முன்னோர்கள் விஞ்ஞான ரீதியில்தான் அமைத் துள்ளார்கள். இங்கே ஒரு குருகுலம் அமைப்பதெனவும், அதனையே தத்துவஞானக் கலைக்கல்லூரியாக விரிக்கலாம் எனவும்

நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் நினைத்தோம். குருகுலம் அமைவது அவசியம். அதனை நடத்துவதற்கு நல்ல தகுதி வாய்ந்தவர்களை இறைவன் தந்து அருள்பாலிக்க வேண்டும். நீங்கள் முழு ஒத்துழைப்பும் தருவதாக இருந்தால் மெய்கண்டார் அருளால் இதில் முயலலாம்.

நல்லறப்பணிக்கு உதவி :

இத்தகு பெருவிழா எடுப்பதுமட்டும் போதுமானதல்ல. மெய்கண்டாருக்கு நிரந்தர பூஜை நிதிஒன்று அமைக்கவேண்டும். நம்மால் இயன்றவரை இந்நல்லறப் பணிகளுக்கு உதவுவோம். இங்கே குழுமியுள்ள எல்லார்க்கும் எல்லா நலன்களும் பெருகச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளையும், மெய்கண்டார் திருவருளையும் நினைந்து வாழ்த்தி, நாடு செழிக்க ஊர்செழிக்க, மக்கள் உள்ளங்கள் செழிக்க இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.

மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருப்புறம்பயம் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவின்போது
(13—9—1972)



மதுரை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்,
ஸ்ரீ அம்பாள் திருக்கோயில் வாயிலைத் திறந்துவைத்த
தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்

[11]

குடமுழுக்கு ஏன்? *

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையான் காணப் படும்"

[திருக்கோயில்களில் நடைபெறும் குடமுழுக்குப் பெருவிழா நிகழ்த்தப் பெறுவதற்குரிய காரணங்களையும் - அஷ்டபந்தனம் என்பது இன்னது என்பதனையும் - குடமுழுக்கு நிகழ்த்துவதால் வரும் பயனையும் இக்கட்டுரை அழகுற விளக்கி நிற்கிறது.]

தெய்விக ஆற்றலைப்பெற :

வீட்டில் திருமணம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறுங் காலங்களில் வீட்டைத் தூய்மைசெய்து பழுது பார்த்து வெள்ளையடித்து வண்ணம்தீற்றி அலங்கரிப்போம். அதுபோலத் திருக்கோயில் மகாகும்பாபிஷேக காலங்களில் புனருத்தாரணம் செய்து கோயிலைப்பழுதுபார்த்துத் தூய்மைசெய்து அழகுறுத்துகிறோம். கோயிலுக்கு வெளியே யாகசாலை அமைத்து அலங்கரித்து அங்கே சுவாமியை எழுந்தருளச்செய்து கோயிலைத் தூய்மைசெய்கிறோம். 12-ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில்களுக்கு மகாகும்பாபிஷேகங்கள் செய்விக்கவேண்டும். இயலாத கோயில்களில் அஷ்டபந்தனம் சாத்தியாவது மகாகும்பாபிஷேகம் செய்விக்கவேண்டும். திருவுருவங்கள் அஷ்டபந்தனம் இல்லாமல் இருத்தல் கூடாது. பன்னிரண்டு ஆண்டு

---

* *திருப்புறம்பயம் குடமுழுக்கு விழாவை ஒட்டி எழுந்தருளி அன்பர்களிடையே திருவாய் மலர்ந்தருளி 10—10—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்ற ஆசியுரை.*

களுக்கு ஒருமுறை மின்சார சாதனங்களை வீடுகளில் புதுப்பிக்கிறோம். பழுதடைந்த மின்கம்பிகளை அகற்றிப் புதியனவற்றைப் பொருத்துகிறோம். அவ்வாறு செய்யத் தவறினல் அதன்வழி கிடைக்கும் ஒலி, ஒளி, காற்று முதலியவற்றைப் பெறுதல் முடியாது. அதுபோல அஷ்டபந்தனமில்லாத கோயில்களில் திருவுருவங்களில் தேங்கி நிற்கும் தெய்விக ஆற்றலை நாம் பெறுதல் இயலாது.

அஷ்டபந்தனம் விளக்கம் :

அஷ்டபந்தனம் கொம்பரக்கு, கருங்குங்கிலியம், சுக்கான், காவிக்கல், வெண்மெழுகு, வெண்ணெய், செம்பஞ்சு, இலிங்கம் முதலிய எட்டுப்பொருள்களால் செய்யப்பெறுவது. சிமெண்டினல் மட்டும் பதிய வைப்பது ஏகபந்தனம் எனப்படும்.

கொம்பரக் கொருபங்கு திரிபங்க தேகருங்
குங்கிலியம் மூன்றுசுக்கான்
கொண்டமுக் காற்பங்கு காவிக்கல் வெண்மெழுகு
கூறுநவ நீதமூன்று
செம்பஞ்ச தத்தொகை யிலிங்கமே காற்பங்கு
சேர்த்திடித் திளமெழுகுபோற்
செய்வதுய ரட்டபந் தனவிதிய தென்றுமறை
செப்பினை யிலிங்கமாதி
விம்பபீ டத்தணிந் துயர்சம்பு ரோட்சணம்
வியன்பொழுதி லபிடேகமா
விதிசெய வமைத்தனைகொ லதுபெயர்ந் திடிலரசு
வியனிராச் சியவிநாசம்
செம்பதும வல்லிதன தம்புயநல் வீடெனத்
தினமுமக லாதுவாழுஞ்
சிவசிதம் பரவாச சிவகாமி யுமைநேச
செகதீச நடராசனே.

குடமுழுக்கின் உட்பொருள் :

அறிவற்ற பொருள்களால் விளையும் ஆற்றல் சடசக்தி எனப்படும். மின் சக்தி முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இறைவனுடைய சக்தி சித்சத்தி, (சித்து – அறிவு)

இந்தத் தெய்விக ஆற்றல் திருக்கோயில்களில் பிரமரந்திரம் எனப் படும் விமான உச்சித்துளை வழியாக விமானக்கலசம்வரை ஊடுருவி நிற்கிறது. வானொலி நிலையங்களில் அமைக்கப்படும் ஒலி அலைகளை வாங்கி உலகில் பரவச்செய்யும் கருவிபோலத் தெய்விக ஆற்றலைக் கலசம் வெளிப்படுத்தி நிற்கிறது. அதனால்தான் கலசங்கள் செம்பினால் இயன்றதாக அமைக்கப்படுகிறது. அஷ்டபந்தனம் இல்லாத மூர்த்திகளில் தெய்விக ஆற்றல் நிலைபெறாது. ஓட்டைக் குடத்தில் தண்ணீர் தேக்கிவைத்தல் முடியுமா? அஷ்டபந்தனம் தெய்விக மூர்த்திகளுக்கு இன்றியமையாதது. யாகசாலை என்பது சர்வலோக நாயகனாக விளங்கும் இறைவன் எழுந்தருளும் தற்காலிக இடமாகும். திருக்கோயில் கருவறைகளைத் தூய்மை செய்ய, குறிப்பிட்ட சில நாட்களில் இறைவனைக் கடங்களில் எழுந்தருளச் செய்து யாகசாலைகளைக் கலையழகோடு மிளிரச் செய்து அதில் எழுந்தருளச்செய்து யாகங்கள், வேதசிவாகம பாராயணம், மங்கல வாத்தியங்கள், இன்னிசை, சமய விரிவுரைகள் முதலியவற்றால் சிறப்பாகக் கொண்டாடித் தரிசித்து மகிழ்கின்றோம்.

திருக்கோயில் வழிபாடு :

இறைவன் எங்கும் இருக்கின்றார். கோயிலில் அவர்தம் அருளைப்பெறும் வகையில் வெளிப்பட்டு நிற்கின்றார். சுந்தரர் வரலாற்றில் இறைவனை மகிழ மரத்தடியில் எழுந்தருளுமாறு வேண்டிக்கொண்டதாகக் காண்கின்றோம். இறைவனைப் பக்தி விசுவாசங்களினால்தான் நாம் காணமுடியும். "காதன்மையால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே" என்றும், அன்போடு அகங்குழைந்து உருகு வார்க்கு அல்லாமல் ஏனையோர்க்கு இறைவன் தோன்றான் என்றும் அப்பர் சுவாமிகள் அருளிச் செய்கின்றார்கள். திருக் கோயில்கள் இறைவனது ஆற்றல் தேங்கி நிற்கும் இடங்கள். மின்னலாற்றலைத் தேக்கி நிற்கும் நிலையங்கள் போலவும், அணைக்கட்டுகளில் தண்ணீர் தேங்கி நிற்குமாறு போலவும் தெய்வ ஆற்றல் தேங்கி நிற்கும் இடங்களாகக் கோயில்கள் உள்ளன. இதனை உணர்ந்து மக்கள் இறையருள் பெறத் திருக்கோயில் களுக்குச் சென்று இறைவன் திருவருளைப் பெறுதல் இன்றி யமையாதது.

திருப்புறம்பயச் சிறப்பு :

திருப்புறம்பயம் ஊழிக் காலத்திலும் அழியாத இயல் புடையது. புறம்பு – அயம் என்று பிரித்துப் பொருள் காணல்

வேண்டும். ஊழிக்காலத்துப் பிரளய வெள்ளம் புறம்பே நிற்க அழியாது விளங்கிய தலம் என்ற பொருளுடன் இத்தலம் விளங்குகிறது. புறத்தே நீர் வளம் பெற்றது என்ற நிலையிலும இத்தலம் உள்ளது என்று கொள்ளலாம். ஊழி வெள்ளத்தில் அழியாது மிதந்த பிறிதொரு திருத்தலம சீகாழி.

இத்தலம் ஆதித்த சோழ மன்னன் பல்லவன் துணையோடு பாண்டியனைப் புறங்கண்ட இடம் என்ற வரலாற்றுச் சிறப்புக்குரியதாக விளங்குவது. வன்னி, கிணறு, இலிங்கம் ஆகிய வற்றுடன் இறைவன் வணிகனுக்கு நடைபெற்ற திருமணத்தினை உலகோர் அறியச் சாட்சி கூறியருளிய தலச்சிறப்புடையது. மணிவாசகர், "புறமபயமதனில் அறம்பல அருளியும," என்று இத்தலத்திறைவன அறமுரைத்த பாங்கை அருளிச் செய்கின்றார்.

திருவாயில் திறப்பு :

இத்திருக்கோயிலில் அம்பிகை திருக்கோயிலுக்கு எதிரே அமைக்கப்பெற்ற வாயிலைத திறந்து வைக்கும் பேற்றைத் திருவருள நமக்கு வழங்கியிருக்கிறது. திருமறைக்காட்டில வேதங்களால் அடைக்கப்பெற்ற திருக்கதவுகளை ஞானசமபந்தர் முன்னிலையில் அப்பரடிகள் திறந்தருளினர். திருஞானசம்பந்தர் திருமடத்து மகாசன்னிதானத்தின் முன்னிலையில வேதாரணியம் நிகழ்ச்சியை நினைப்பூட்டும் வகையில் வரணி ஆதீனகர்த்தரும் உடனிருக்க இத்திறப்புவிழா நிகழ்ந்துள்ளது. நாளை திருக்கோயில் மகா கும்பாபிஷேகத்தைக் கண்டு மகிழ இருக்கிறீர்கள். எல்லோரும் பார்த்துத் தரிசிப்பதற்குத்தான் விமான கும்பாபிஷேகம் நிகழ்கிறது. கருவறை விமானம் சிரசு; மூர்த்தி உயிர். கும்பாபிஷேகம் ஒரு குழந்தையின் பிறப்புக்கு ஒப்பாகக் கருதற்குரியது. கும்பாபிஷேகத்தின் போது மூலவரைத் தரிசிக்க இயலாதவர்கள் பின் நிகழும் மண்டலாபிஷேகத் திருநாட்களில் ஒருநாளில் இறைவனை வழிபாடு செய்யலாம. ஆண்டுதோறும் கும்பாபிஷேக நாளில் சம்வத்சராபிஷேகம் நிகழும். நமது சமய வழிபாடுகளில் அமைந்துள்ள இத்தகைய நுணுக்கமான உண்மைகளை மக்கள் உணர்ந்து இறைவழிபாடுகளில் தம்மை ஈடுபடுத்தி வாழ்தல் வேண்டும். இத்தகைய மகா கும்பாபிஷேகத்தை மதுரையாதீனம் மகாசந்நிதானம் அவர்கள் சிறப்பாகச் செய்விப்பது பாராட்டுக்குரியது. அன்பர்கள் மகா கும்பாபிஷேகத்தைத் தரிசித்து இறைவன் திருவருள் பெற்று இன்புறுவார்களாக.



தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில்
ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயில்
விமான வடிவில் அமைந்து விளங்கும்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்த ஆலயம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் முதலாண்டுக் குருபூசை விழாவில்
(29—10—1972)



குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
உடன் எழுந்தருளியிருக்க,
தருமையாதீனம் 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
வாழ்த்துரை வழங்குதல்

[12]

அருளும் - வெகுளியும் *

"ஒன்ஞர்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்"

[அருட் செல்வர்கள் அருளியும் – வெகுண்டும் கூறுவன உடனடியாகப் பயன் விளைப்பன என்பதனை இரு நடைமுறைச் சம்பவங்கள் வழி விளக்கும் இக் கட்டுரை தவத்தின் ஆற்றலையும் – பெருமையையும் விளக்குவனவாக அமைகிறது.]

குருமணியின் நினைவு மலர் :

கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் குருமூர்த்த ஆலயத்தை இங்கே எடுப்பித்து, அவர்கள் பரிபூரணமான முதல் ஆண்டுநிறைவு நாளாகிய இன்று, குடமுழுக்கு விழாவும், குருபூஜை விழாவும், அபிஷேக ஆராதனைகளுடன் நடந்து இருக் கின்றன. கயிலைக்குருமணி அவர்கள் பரிபூரணமான பத்தாம்நாள் குருபூஜை விழாவில் வெளியிடப்பெற்ற நினைவுமலரில் கயிலைக் குருமணியின் ஒருசில சிறப்பியல்புகள் மட்டுமே வெளியிடப் பட்டன. இன்று வெளிவரவிருக்கும் நினைவு மலரில் கயிலைக் குருமணி அவர்களின் ஒப்பற்ற தொண்டின் அருமை பெருமை களை அனுபவித்த பெருமக்கள் எந்த எந்தக் கோணத்தில் கண் டிருக்கிருர்கள் என்பதனை இம்மலர் தாங்கி வருகிறது. முதல் பதிப்பைக் குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் வெளியிட்

** ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் குருமூர்த்த ஆலயக் குடமுழுக்கு விழாவில் திருவாய்மலர்ந்தருளி 10—11—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளிவிடப்பெற்ற ஆசியுரை.*

7-8

டார்கள். இரண்டாம் பதிப்பை தருமையாதீனத்தின் தலை சிறந்த மாணுக்கராக விளங்கிய குமரகுருபரரின் வழிவந்த காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் அவர்கள் வெளியிடு கிருர்கள்.

திருவருள் உறைப்பு :

தவச்செல்வர்கள் அருளியும், வெகுண்டும் கூறும் மொழிகள் உடனே பயன் தருவன. கயிலைக் குருமணியவர்கள் காசியம்பதியில் முத்திப் பேறு எய்தியபின்னர், எவ்விதப்பிணக்கும் இல்லாது இம்மடாலயம் அவர்களது அருளாசியின்படி தொடர்ந்து அமைதிப்பணி ஆற்றிவருவது ஒன்றே அவர்கள் திருவருள் உறைப் பிற்குச் சான்ருக விளங்குகின்றது. இந்த அருளாட்சியின் சிறப்புக்கு அவர்கள் இறைவன்பால் கொண்டிருந்த அழுத்தமான பக்தியே காரணம்; நமது சாமர்த்தியம் காரணம் அல்ல. கயிலைக்குருமணி அவர்களுக்குச் சிதம்பரம் என்ருல் உயிர். நடராஜப்பெருமான் திருவடிகளில் அளவற்ற ஈடுபாடு. அந்த ஈடுபாட்டின் வெளிப்பாடுதான் உரிய நேரத்தில் இங்கே நடராஜப் பெருமானின் அருட்பிரசாதம் வந்து சேர்ந்தது. 26½ ஆண்டுக்காலம் குடிகளை அவர்கள் கண்போல் ஆதரித்து அரவணைத்துக் காத்து வந்தார்கள்.

அருளியல் விளக்கம் :

ஆதீன அன்பர் திரு. எம். ஆர். பிள்ளை அவர்கள் குமார ருக்குக் குழந்தைப்பேறு இல்லையென்று ஒருமுறை வந்து கயிலைக் குருமணியிடம் தெரிவித்துக் கொண்டார்கள். செல்வமுத்துக் குமாரப்பெருமானைத் தொடர்ந்து ஐந்து கார்த்திகைக்குச் சென்று வழிபட உத்தரவாயிற்று. மகாசந்நிதானத்தின் அருளிப்பாடு நிறைவேறிற்று. அவர்கள் அருளிக் கூறிய அருள்விளக்கத்திற்கு இதுபோல் பல சான்றுகள் கூறலாம்.

வெகுண்டு ஒன்றும் கூருவிட்டாலும், அவர்கள் திருவுள்ளம் நோக நடப்பவர்கள் தண்டனைபெற்ற நிகழ்ச்சிகளும் பல உள்ளன. ஓராண்டில், வழக்கம்போல் திருச்செந்தூரில் கந்தசஷ்டி தரிசனத்தை முடித்துக்கொண்டு சுசீந்திரம் வழியாகக் கன்னியா குமரி சென்று வழிபடத் திருநெல்வேலியிலிருந்தே திட்டமிட்டார் கள். சுசீந்திரத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த தருமையாதீனக்

கிளை மடத்தில் இரண்டு நாள் தங்க அனுமதி கேட்டிருந்த கிறித்துவ சமயத்தைச் சார்ந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவர் பல நாள்வரை கிளை மடத்தைக் காலி செய்யவில்லை. கயிலைக் குருமணி அவர்கள் வருகையைக் கூறியபோது. அவர்களைப் பயணிகள் விடுதியில் தங்கச் சொல்லுங்கள் என்று அலுவலர்களிடம் அவர் கூறினர். இச்செய்தி கயிலைக் குருமணி அவர்களுக்கும் எட்டியது. இருந்தும் தடையின்றிக் கன்னியாகுமரி சென்று வழிபட்டு மீண்டார்கள். அவர்கள் திருவுள்ளத்தில் என்ன நினைத்தார்களோ! இது நடந்து ஒருவாரத்திற்கெல்லாம் கர்ப்பிணியாக இருந்த அப்போலீஸ் அதிகாரியின் மனைவி, கனவில் சாமியார் ஒருவர் சூலத்தால் குத்த வருவதுபோல் கனவு கண்டு அஞ்சி, கருச்சிதைவேற்பட்டு இறந்துபோனுள்.

"ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி ஆணையே"

என்ற திருமூலர் வாக்கிற்கு அவர்கள் ஆற்றல் விளக்கமாக அமைந்தது.

குரு லிங்க சங்கமம் :

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள்"

என்ற திருமந்திர வாசகத்தை நேற்றுச் சிந்திக்கும்போது கயிலைக் குருமணி அவர்களோடு இணைத்துக்காணும் திருவருள் எண்ணம் உண்டாயிற்று. ஒன்று என்பது சிவத்தைக் குறித்தது. இரண்டாவது பெருமானின் அருளை விளக்கிற்று. "அருளது சக்தியாகும் அரன் தனக்கு", என்பது சித்தியார்வாக்கு. மூன்றினுள் நின்றனன் என்பதில், இறைவன் மூன்றுவதாகிய சங்கம வடிவங்களில் தோன்றி நின்று அருளுவன் என்பது விளங்குகின்றது. அத்தொடரைப் பிறிதோர் வகையில் பொருள் காண்கையில் மூன்றினுள் நின்றனன் என்பதற்கு இறைவன் குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று வடிவங்களில் தோன்றி நிற்பான் என்றும் பொருள் காணலாம்.

கயிலைக் குருமணி அவர்கள் முதலில் இங்கே சங்கமராக (அடியாராக) விளங்கி, ஞானபீடம் ஏற்றபின் குருவாக அருள் விளக்கஞ்செய்து, முத்திப்பேறு எய்திய நிலையில் இன்று இங்கே இலிங்கத் திருமேனியில் விளக்க முற்றுத் திகழ்கின்றார்கள். நின்றனன் மூன்றனுள் என்ற திருமந்திரத் தொடர் கயிலைக் குருமணி அவர்களுக்குப் பொருந்திவரும் இயைபு திருவருளால் நம் சிந்தனையில் உதித்தது. அதனால்தான் அவர்கள் நினைவைக் குரு, லிங்க, சங்கமத் திருநாளாகக் கொண்டாடுகின்றோம்.

இறையருள் உணர்த்தும் இருபத்தைந்து:

இங்கே அவர்கள் காசியில் முத்திப்பேறு எய்தியதன் நினைவாகக் காசி ஸ்ரீ விசுவநாதர் ஆலய அமைப்பில் ஆலயம் எடுக்க எண்ணி ஸ்தபதிக்குப் பணித்தோம், அவரும் குருமூர்த்த ஆலயத்தை எழுப்பியபின் 21 கலசங்கள் வேண்டுமென்றார். 21 கலசங்கள் வாங்கப்பெற்றன. வேலை முடியும் தறுவாயில் எண்ணிப்பார்த்தால் 25 கலசங்கள் தேவைப்படுவது தெரிய வந்தது. 25 ஆவது குருமணியாக விளங்கிய அவர்கள் ஆலயத்தில் நாம் எண்ணிச் செய்யாமலேயே 25 கலசங்கள் அமைந்ததை அவர்கள் திருவருள் விளக்கத்திற்கு உரிய சான்றாகக் கூறலாம். இவ்விழாவில் கலந்து, கண்டும் கேட்டும் மகிழ்ந்த அன்பர்களுக்கு திருவருளும் குருவருளும் பெருகச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளி விழாவில்



தருமையாதீனம் 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்குதல்

(25—10—1972)

[13]

இறைவன் - கடவுள் - இயவுள் *

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்"

[தருமையாதீனத்தின் அருளாட்சியில் தழைக்கும் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவைத் தொடங்கி வைத்து வழங்கியருளிய இவ் ஆசியுரையில் - இக்கல்லூரியைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ லஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அஸ்த விசேஷமும், இறைவன் - கடவுள் - இயவுள் என்ற சொற்களின் பொருள் இயைபும், ஆட்சித் தலைவர்கள் ஆண்டவனோடு ஒப்பக் கருதப்படுவதற்குரிய காரணமும் விளக்கப் பெற்றிருக்கின்றன]

கடமையும் பொறுப்பும் :

இற்றைநாள், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் இரண்டாவது திருநாள். இத் திருநாள், மிகச் சிறந்த முறையில், வானவர் மாரி நல்க - உடலும் உள்ளமும் குளிரும் வண்ணம் கொண்டாடப்படுகிறது. குருவருள் நம்மையெல்லாம் எவ்வாறு இயக்குகின்றது என்பதை இவ்விழா நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. கயிலைக் குருமணி அவர்கள் கலைஞர் அவர்களைக்கொண்டு வெள்ளி விழாவை நடத்தத் திட்ட

---

* *தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவில் திருவாய் மலர்ந்தருளி 10—11—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப் பெற்றது.*

மிட்டிருந்தார்கள். அவர்கள் எண்ணம் இன்று நிறைவேறுகின்றது. அவர்கள் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு உண்டு.

இருபத்தைந்தின் சிறப்பு:

கயிலைக் குருமணி 25 ஆவது குருமூர்த்தியாக விளங்கியவர்கள். 25 என்ற எண்ணிக்கை மிகச்சிறந்த ஒன்று. மகேசுவர மூர்த்தம் 25. அவை மதுரைத் திருக்கோயிலில் ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் நந்தி மண்டபத்தில் 25 சிவ மூர்த்தங்கள் சிற்பங்களாகத் தூண்களில் செதுக்கப்பெற்று விளங்குகின்றன. கயிலைக் குருமணி 25 ஆண்டுகளுக்குமேல் அருளாட்சி செலுத்தினார்கள். அவர்கள் கை வண்ணத்தால் தோன்றிய இக்கல்லூரியும் பூத்துக் காய்த்துக் கனிந்து இன்று 25 ஆண்டு நிரம்பப்பெற்று வெள்ளிவிழாக் காணுகிறது. இங்கே கனிந்த ஒருகனி நமது குன்றக்குடி மகாசந்நிதானம் ஆவார்கள். நாமும், காசிவாசி அவர்களும் இங்கே உருவானவர்களே.

அஸ்த விசேஷம்:

கயிலைக் குருமணி அவர்கள் அஸ்த விசேஷம் உடையவர்கள். இந்த ஆதீன அருளாட்சியில் பொற்காலம் தோற்றுவித்தவர்கள். தங்கள் அருளாட்சிக்கு உட்பட்ட 27 திருக்கோயில்களையும் தெய்வ மணம் கமழும் கலைக் கோயில்களாக மாற்றி - 27 விண்மீன்களாக விளங்கச் செய்தவர்கள். அவர்கள் தூய உள்ளம் தோற்றிய பல்கலைக் கல்லூரி, பண்புமிக்க நல்ல பல புலவர்களை உருவாக்கியது. செயல்களின் சிறப்புக்கள் யாவும் உள்ளத்தைப் பொறுத்தே அமையும். அவர்களது தூய பக்திஉள்ளத்தின் சிறப்பிற்கு, பெறலரும் பேருகக் காசியம்பதியில், உடல்நலங் குன்றுது அமர்ந்த நிலையில் இறையடி சேர்ந்த நிகழ்ச்சி ஒன்றே சான்றாகும். முப்பது மணி நேரத்தில் ஈராயிரம் கல் தொலைவைக் கடந்து அவர்கள் திருமேனி தருமைக்கு வந்து சேர்ந்த சிறப்பிற்கு அவர்கள் உள்ளமே காரணம். அவர்கள் திருவுள்ளம் நினைந்தன யாவும் முறையாக நிறைவேறி வருகின்றன.

ஆட்சித் தலைமையில் ஆதீனக் குடிமகன்:

இன்று 25 ஆம் தேதி, இந்நன்னாளில் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா வந்து அமைந்ததைத் திருவருளின் விளக்கமாகவே

கருதுகின்றோம். இங்கே, இன்றைய விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் நம் தருமையாதீனக் குடிமக்களில் ஒருவராவர். அவர்கள் தந்தையார் நமது ஆதீனத்துத் திருக்கோளிலி (திருக்குவளை) தேவஸ்தானத்தில் பணியாற்றியவர். நம்முடைய ஆதீனக் குடிமக்களில் ஒருவர் தமிழ் நாட்டின் தலைமை அமைச்சராக விளங்குவது குறித்து நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். கலைஞர் அவர்கள் தமிழ்மொழி – நாகரிகம் – பண்பாடு – கலை இவற்றிற்காகவே பாடுபட்டு வருகிறார்கள். கடந்த ஒன்றரை ஆண்டாக அவர்களை நாம் இவ்விழாவிற்கு அழைத்து வருகிறோம். திருநாளைப் போவாரைப்போல் வருகிறேன் வருகிறேன் என்றே அவர்களும் நாட்களைத் தள்ளிவந்தார்கள். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்ற வாக்கிற்கு ஒப்ப, நம்கொள்கை வேறு அவர் கொள்கை வேறு என்று கருதி அவர் இங்கே வருதற்குத் தாமதித்திருக்கலாம். மடாதிபதிகள் இன்றைய அமைச்சர்களுக்குப் பொன்னுடை போர்த்துவதைப்பற்றிப் பழுத்த அரசியல்வாதி ஒருவர் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். இது பற்றிய ஓர் உண்மையைக்கூற விரும்புகிறோம்.

கட்சியைக் கடந்தது அரசு:

நாம் மட்டுமல்ல, மடாதிபதிகள் எல்லோரும் ஆட்சித்தலைமை ஏற்றிருப்போரை மதித்துச் சிறப்பிக்கும் கடமை உடையவர்கள். இம்மதிப்புத் தனிமனிதர்களுக்குத் தரப்படுவதல்ல. தலைமை ஆற்றலுக்குத் தரப்படுவதாகும். ஒப்பற்ற பரம்பொருளை, ‘இறைவன், கடவுள், இயவுள்’ என்ற மூன்று சொற்களால் நம் முன்னோர் குறித்தனர். ‘இறைவன் – எங்கும் நிறைந்திருப்பவன்; கடவுள் – எல்லாவற்றையும் கடந்து நிற்பவன்; இயவுள் – வழியாக இருந்து நம்மை நல்வழிப் படுத்துகின்றவன்’ என்பன இவற்றின் பொருள். எங்கும் வியாபித்திருக்கும் அந்தச் சக்தி ஓராண்டாக நம்மைப்பற்றி நிற்கிறது. இவ்வாற்றலே உலகத்தை, விண்மீன்களை, சுடர்களை, அண்டகோளங்களை இயக்குகின்றது. அவ்விறையருளின் – ஆட்சி முறையின் – அடையாளமே முதல்வர். அவர் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட உடனேயே – இறைமையாற்றல் அவர் வழி இலங்கத் தொடங்கிற்று என்பது கருத்து. அவ்வாற்றலையே போற்றவும், சிறப்பிக்கவும் செய்கிறோம். ஆற்றல் பலர் மூலம் உலகில்

விளங்குவது கண்கூடு. சிவனது ஆற்றல் தலைமையாகவும், விநாயகர், முருகன் போன்ற இறையவர் ஆற்றல் துணையாகவும் விளங்குவதுபோல முதல்வர் சிவன் போல என்றால், நம் அறநிலைய அமைச்சரை விநாயகர் போலக் கொள்ளலாம். 'திருவுடை மன்னரைக்காணின் திருமாலைக் கண்டேனே' என்பது ஆழ்வார் வாக்கு. இறைவனுடைய அருட்சக்தி ஆட்சித்தலைவர்கள் வழி நின்று நிலவுவதால்தான் நாம் அவர்களைச் சிறப்பித்து வரவேற்கிறோம். கட்சிக்கு அப்பாற்பட்டது அரசும் அமைச்சர் பதவியும். இதனை அமைச்சர்களும், கட்சிக்காரர்களும் அறிதல் நலம் பயக்கும்.

பொன்னுடை போர்த்தல் எதற்கு?

இங்கே அமைச்சர்களுக்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தோம். அது வெறும் ஆடம்பரத்திற்காக அல்ல. ஒரு தத்துவம் அதில் இருக்கிறது. பொன், பயன் கருதாத தன்மையுடையது.

> "பொன்னால் பிரயோசனம் பொன்படைத்
> தார்க்குண்டு பொன் படைத்தோன்
> தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்
> கேதுண்டு அத்தன்மையைப்போல்
> உன்னால் பிரயோசனம் வேணதெல்
> லாமுண்டு உனைப்பணியும்
> என்னால் பிரயோசனம் ஏதுண்டு
> காளத்தி யீசுரனே"

என்பது பட்டினத்தார் திருவாக்கு. இது கருதியே அப்பர் பெருமானும் இறைவனின் கைம்மாறு கருதாது அருள் வழங்கும் திருவடிகளைப் 'பொன்னார் திருவடி' என்று சிறப்பித்தார். எனவே தான் பயன் கருதாத தொண்டர்களுக்குப் பயன்கருதாத பொன்னால் இழைக்கப்பெற்ற ஆடையை அணிவிக்கின்றோம். கடமையைப் போற்றிக் கண்ணியம் காத்துக் கட்டுப்பாட்டுடன் விளங்கும் நம் முதல்அமைச்சர், தமக்கு உடல்நிலை சரியில்லாத போதிலும் நம் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவில் விழா மலரை வெளியிட்டு அறவுரையாற்ற வருகைதந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அவர்களை அன்போடு ஆசிகூறி வரவேற்கிறோம்.

திருவருள் பெருகப் பிரார்த்தனை :

இங்கே அறநிலைய அமைச்சர் அவர்களும் வந்திருக்கிறார். அவர்களும் நம்மோடு தொடர்புடையவர்களே! இறையவர் திருக்கோயில்களை எல்லாம் ஆளுகின்ற வாய்ப்பு அவர்களுக்கு வாய்த்திருப்பதே ஒரு சிறப்பாக விளங்குகின்றது. அவர்களுக்கு நம்மோடு உள்ள தொடர்பு மண்ணால் இல்லை என்றாலும், விண்ணால் - கண்ணால் ஏற்பட்டதாகும். அவர்கள் பெயரோ கண்ணப்பன். பெரியபுராண அடியார்களுள் கண்ணப்ப நாயனாரை ஒத்த சிறப்பு வேறு எவர்க்கும் இல்லை. 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்று மணிவாசகர் பாராட்டுவர். அந்த அடியார் பெயரைத் தாங்கிய அறநிலைய அமைச்சர் அவர்களும் விழாவில் பங்கேற்பது மகிழ்ச்சி தருவதாகும். அவர்களையும் அன்போடு ஆசிகூறி வரவேற்கிறோம்.

வெள்ளிவிழாக்காணும் நம் பல்கலைக் கல்லூரி, தனிச்சிறப் புடையது. முதற்சிறப்பு இங்கே பணியாற்றும் ஆசிரியர்கள் இங்கேயே பயின்றவர்கள். தங்களுக்குள் எவ்விதப் பிணக்கும் இல்லாது பணியாற்றும் சிறப்பு வேறு எங்கும் காணமுடியாததாகும். மற்றொரு சிறப்பு; மாணவர்களும் - மாணவியர்களும் ஒருங்கு பயிலும் இக்கல்லூரியில் எவ்விதமான பிரச்சனைகளும் கிடையாது என்பது. இவ்விழா நன்னாளில் மாணவ - மாணவியர் களுக்கும், பயின்ற பழைய மாணவர்களுக்கும், விழாவில் பங்கு பற்றும் அனைவருக்கும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் பெருகப் பிரார்த்திக்கின்றோம்.

[14]

சிவஞானபோதச் சிந்தனை *

"சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு"

[சித்தாந்த சாத்திரங்களின் தலைமணியாக விளங்கும் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாரின் சிவஞான போதத்தினையும் – அதன்கண் நுட்பமுற விளக்கப் பெறும் பதி – பசு – பாசம் என்ற முப்பொருள்களைப் பற்றியும் இக்கட்டுரை அரிய செய்திகள் பலவற்றைத் தொகுத்தளிக்கிறது.]

மெய்கண்டார் திருக்கோயில் :

சைவ சந்தானாசாரியர் நால்வருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவவதாரம் செய்தருளிய இத்திருத் தலத்தில் (பெண்ணாகடத்தில்) அவர்தம் தந்தையார் பெயரால் 'களப்பாளர்மேடு' என்று இன்றும் வழங்கிவருகின்ற இந்த இடத்தில், அவ்வாசாரியருக்கு அமைந்துள்ள இக்கோயில் மிகவும் சிறந்ததாகும். இதனை அமைக்க முதலில் முயன்றவர் இவ்வூரிலே தோன்றிய வழக்கறிஞர் திரு. அரங்கசாமிப் பிள்ளையவர்கள். அவரும், இன்னும் சில அன்பர்களும் மெய்கண்ட சந்தானத்தில் விளங்கும் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானத்தில் தெரிவிக்க, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அவ்வாதீனத் திற்கே இந்த இடத்தை விலைக்கு வாங்கினார்கள். பின்பு வயலூர்

---

* பெண்ணாகடம் ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை விழாவில் திருவாய் மலர்ந்தருளி 10—11—1972 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப் பெற்ற ஆசியுரை.

அன்பர் ஒருவர் கோயில் திருப்பணியைத் தொடங்கிக் கட்டி முடித்தார். கும்பாபிஷேகம் நிகழ்ந்தபின், நாள் வழிபாடு, மெய்கண்டாரது திருநட்சத்திரமாகிய சுவாதிச் சிறப்பு வழிபாடு முதலியவைகளை இவ்வூரிலும், சுற்று வட்டாரத்திலும் உள்ள சைவப் பெருமக்கள் நடத்தி வருதல் மிகவும் பாராட்டத்தக்கது. இவர்கள் அனைவர்க்கும் மெய்கண்டாரது அருளாசி எல்லா நலங்களையும் அருளுவதாக.

சிவஞானபோத விரிவுரை :

சென்ற ஆண்டில், மாதந்தோறும் வருகின்ற சுவாதியில், சிவஞான போதச் சொற்பொழிவு நடைபெறவேண்டும் என்று கருதிய அன்பர்களது விருப்பத்தாலும், முயற்சியாலும், முன்பு அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராய் இருந்து, இப்பொழுது பூம்புகார்க் கல்லூரியில் அப்பணியை மேற்கொண்டுள்ள திரு. வை. இரத்தினசபாபதி அவர்களைக் கொண்டு 'மாதம் ஒரு சூத்திரம்' என்ற முறையில் 12 சூத்திரங் களும் நடத்துவிக்கப்பெற்றன. இன்று அவர் அச்சொற்பொழிவை நிறைவு செய்துள்ளார்.

ஆசாரியர் வழியே ஆண்டவன் அருள் :

சூரியனது சக்தியும், சந்திரனது சக்தியும் பயிரை வளர்ப்பது போல, இறைவனது சக்தி உயிர்களை வளர்க்கின்றது. அந்தச் சக்தி நம்ஆசாரியர்கள் மூலமாகவே நம்மை ஆட்கொள்ளுகின்றது. எதுபோல எனின், இன்று நமது குடியரசுத்தலைவர் நம்மையெல்லாம் ஆள்கின்றார் என்றால், அவர் நேரே நம்மிடம் வந்து நமக்கு வேண்டுவனவற்றைச் செய்வதில்லை. எத்தனையோ அதிகாரிகள் மூலமாக இந்நாட்டில் உள்ளோர் அனைவர்க்கும் அவரவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்து வருகின்றார். அதுபோலவேதான் இறைவனும். இத்தகைய ஆசாரியர்கள் மூலமாக நமக்கு வேண்டியவற்றை அருள்கின்றான். இதனையறிந்து நாம் நமது ஆசாரியப் பெருமக்களை வழிபட்டுப் பயன்பெற வேண்டும். அவர்கள் அருளிச்செய்த நூல்களையும் தக்கவர்கள் வாயிலாகக் கேட்டு உணரவேண்டும்.

சிவஞானபோதச் செம்பொருள் :

சித்தாந்த சாத்திரங்களுள் தலைமணியாக விளங்குவது ஸ்ரீ மெய்கண்டார் அருளிச் செய்த சிவஞானபோதமே. சித்தாந்த உண்மைகள் பழமையானவையே என்றாலும், அதனைத் தெளிவாக எடுத்து விளக்கியவர் மெய்கண்ட தேவரே. சைவ சித்தாந்தம் முப்பொருளை அடிப்படையாகக் கொண்டது. முப்பொருள், 'பதி, பசு, பாசம்' என்பன. பதி பேரறிவுப்பொருள் : பிறர் அறிவிக்க வேண்டாது, எல்லாவற்றையும் தானே அறியவும், உயிர்கட்கு அறிவிக்கவும் வல்லது. 'பசுக்கள்' எனப்படும் உயிர்கள், அறிவித்தால் அறியும் தன்மையுடையன. தாவரம் முதல் தேவர் ஈறாக உள்ள எல்லா உயிர்களும் ஒருவர் அறிவித்தாலன்றித் தாமே அறியும் தன்மையுடையன அல்ல. உலகம் – அஃதாவது பஞ்ச பூதம், அவற்றிற்குமேல் உள்ள தத்துவங்கள் அனைத்தும் சடம் – அறிவே இல்லாதது; அறிவித்தாலும் அறியமாட்டாதது. அதனால், அவைகளை இறைவன் உயிர்கட்குக் கருவியாகத் தந்துள்ளான். 'தத்துவம்' என்றால் 'கருவி' என்பதுதான் பொருள். உயிர்கள் இக்கருவிகளைக் கொண்டு அறிவைப் பெருக்கி, முடிவில் இறைவனை அடைந்து இன்புறும். இதுபற்றிய விரிவான விளக்கங்கள் அனைத்தையும் மெய்கண்டார் 12 சூத்திரங்களில் நாற்பதே வரியில் அடக்கிக் கூறியுள்ளார். இதுபோன்ற நூல் வேறு எந்த மொழியிலும் இல்லை. இத்தகைய அருஞ்செயல் ஸ்ரீ மெய்கண்ட தேவருக்குத் திருக்கயிலையில் விளங்கும் சிவபெருமான் நந்தி தேவருக்குச் செய்த உபதேசத் தினை வழி வழியாகப் பெற்ற அருளால் வாய்த்தது. அவர் வழியாகவே சைவ ஆதீனங்கள் தோன்றின. சைவ ஆதீனங்களின் ஞானத்தந்தை ஸ்ரீ மெய்கண்டாரானமை பற்றியே, அவை 'திருக்கயிலாய பரம்பரை, நந்தி மரபு, மெய்கண்ட சந்தானம்' என்று குறிப்பிடப் பெறுகின்றன. மெய்கண்டாரது சித்தாந்தம் இன்றுள்ள விஞ்ஞானிகளாலும் ஒப்புக்கொள்ளப்பெறுகின்றது.

ஆசிக்கவசம், பொன்னாடை :

திரு. இரத்தினசபாபதியவர்கள் ஓராண்டுக் காலமாகச் சிவஞான போதச் சொற்பொழிவை இவ்வூரிலும், மற்றும் சுற்று வட்டாரத்திலும் உள்ள அன்பர்கள் கேட்டுப் பயன் அடையும் வண்ணம் முறையாக ஆற்றி வந்துள்ளார். இதனை அவர் பிரதி

பயன்கருதிச் செய்யவில்லை. சிறந்த தொண்டு மனப்பான்மையிலேதான், எத்தனையோ தடைகள் இருப்பினும், அவற்றையெல்லாம் கடந்துவந்து செய்திருக்கின்றார். அவருக்கு நாம் இப்பொழுது ஸ்ரீ மெய்கண்டாரது ஆசிக் கவசமாகப் பொன்னுடை போர்த்துகின்றோம். பிரதி பயன் கருதாதவர்களுக்குத்தான் பொன்னுடை போர்த்திச் சிறப்பிப்பது என்று பெரியோர்கள் கொண்டிருந்தார்கள்.

கற்றறிந்து உய்க :

சிவஞான போதச் சொற்பொழிவைத் தொடர்ந்து செய்து வந்து, இன்று காலை நிறைவு செய்த இவர், இப்பொழுதும் 'முன்னேற்றத்துக்குரிய வழிகள்' என்ற பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு செய்ய இருக்கின்றார். மெய்கண்டாரது குருபூஜைச் சிறப்பாகிய இவ்விழாவில் நம் ஆதீனப் புலவர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், 'உலகம் ஏன்' என்ற பொருள்பற்றியும், மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், 'முன்னேறியபின்' என்ற பொருள்பற்றியும் சொற்பொழிவாற்ற இருக்கின்றார்கள். இவையெல்லாம், நீங்கள் ஓராண்டுக் காலமாகக் கேட்டுவந்த சிவஞான போதத்தை மீண்டும் சிந்திப்பதற்குத் துணைசெய்யும். இனியும் நீங்கள் இதுபோன்ற நூல்களைத் தொடர்ந்து கேட்டுப் பயன் பெறல் வேண்டும். ஸ்ரீ மெய்கண்டாரது குருபூஜைத் திருநாளில் அவரது வழிபாட்டிலும், சொற்பொழிவிலும் ஈடுபட்டும், மற்றும் பலவகையில் பங்கு பற்றியும் மகிழ்கின்ற அன்பர்கள் அனைவர்க்கும் ஸ்ரீ மெய்கண்டாரது அருளாசி எல்லா நலங்களையும் வழங்குவதாக. வாழ்க வையகம்! வளர்க சிவநெறி!

[15]

கல்வியும் - கேள்வியும் *

"கற்றில ராயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை"

[கல்வி - கேள்விகளின் சாரங்களை மக்களுக்கு விளக்கும் கடமையையும் - பொறுப்பினையும் மேற் கொண்டிருக்கும் பலவகை இதழ்களின் கடமைகளைச் சுட்டி, இவ்வகையில் தருமையாதீனத் திங்கள் இதழாகிய 'ஞானசம்பந்தம்' இயற்றிவரும் இனிய பணிகளை விளக்குவது இக்கட்டுரை.]

இதழ்களின் பணியும் – கடமையும் :

மக்களை மக்களாகச் செய்வன கல்வியும், கேள்வியுமாகும். **"கற்றல் கேட்டல் உடையார் பெரியார்"** என்று ஞான சம்பந்தரும் அருளிச்செய்தார். 'கல்வி' என்பது ஏட்டுக் கல்வியும், 'கேள்வி' என்பது அக்கல்வியைக் கற்றவர் அக்கல்வி அனுபவத் தால் சொல்வனவற்றைக் கேட்டலும் ஆகும். இவ்விரண்டையும் ஒருங்கே தருவனவாக இக்காலத்தில் அமைந்துள்ளவை, பலவகை இதழ் வெளியீடுகளாகும். ஆகவே, இதழ் வெளியீட்டாளர்கள் தங்களுக்குள்ள பொறுப்பினை உணர்ந்து, அவற்றை நன்முறையில் நடத்துதல் இன்றியமையாதது.

அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் முதலிய அனைத்துத் துறைகட்கும் இன்றைய உலகில் இதழ் வெளியீடுகளே சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன. இதனை நோக்கும்

* 10—12—1972இல் வெளிவந்த ஞானசம்பந்தம் 32வது ஆண்டுத் தொடக்க இதழுக்கு வழங்கியருளியது.

பொழுது இதழ் வெளியீட்டினை ஒரு தொழிலாகக் கருதி நடத்தாமல், மேற்குறித்த அனைத்துத் துறைகளிலும் நல்ல நோக்கும், ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு, அவ்வத் துறைகளில் 'தக்கன இவை, தகாதன இவை' என்பவற்றை மக்கள் உளங் கொள்ளுமாறு நேர்மையாகவும், எளிய முறையிலும் எடுத்துக் காட்டிச் சொல்லவேண்டிய கடமை வெளியீட்டாளர்களுக்கு இருத்தல் வேண்டும் என்பது புலனாகும்.

சமுதாயத்தில் – சமய இதழ்கள் :

மேற்குறித்த துறைகள் பலவற்றிலும் நாள் வெளியீடு, திங்கள் வெளியீடு முதலிய வகையில் தமிழகத்தில் வெளிவரும் இதழ்கட்குக் குறைவில்லை. ஆயினும் மேற்குறித்த பொறுப் – புணர்ச்சியுடன் வெளியிடப்படும் இதழ்கள் எத்தனை என்பதைத் தான் அறிய இயலவில்லை. 'யதார்த்தவாதி வெகுசன விரோதி' 'உண்மையைச் சொன்னால் உறவற்றுப் போகும்' என்னும் பழமொழிகளின்படி எந்தத் துறையிலும் உண்மையைச் சொல்பவர்க்குச் செல்வாக்குக் குறையவே செய்யும். செல்வாக்கின் குறைவு, தொழில் வளர்ச்சிக்கு ஒரு தடையே. அது கருதி விளையும் அச்சத்தால், இதழ் வெளியீடுகள், தங்கள் நோக்கத் திற்கும், கடமைக்கும் மாறான வழிகளில் சென்று, காதல், பொழுது போக்கு முதலிய வகைகளில் உள்ளத்தைக் கவர்கின்ற கதைகள், ஓவியங்கள் முதலியன நிரம்பிய காட்சிகளுடன் வெளிவரு கின்றன. இந்நிலையில் சமயத் தொடர்பான இதழ்களுக்கு உள்ள இடம் அரிதாகும்.

நற்பணியாற்றும் ஞானசம்பந்தம் :

நமது ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானத்தின் அரு ளாட்சிக் காலத்தில் சமயத்தை முதன்மையாகக்கொண்டு தொடங் கப்பட்டு, 25 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களால் 26 ஆண்டுகளுக்கு மேலாகப் பல வகையிலும் நன்கு வளர்க்கப்பட்ட '**ஞானசம்பந்தம்**' திங்கள் இதழுக்கு 31 ஆண்டுகள் முடிந்து, 32 ஆவது ஆண்டு தொடங்குவது நேயர்கள் அனைவர்க்கும் பெருமகிழ்வைத் தரும். 32 தருமங்கள் போல, இம்முப்பத்திரண் டாவது ஆண்டில் "ஞானசம்பந்தம்" அறநெறியிலும், அருள் நெறியிலும் ஆர்வம் மிக்க அன்பர் பலர்க்கும் நல்லுரை பலவற்றை நல்கி நலம் பயக்கும் என்று நம்புகின்றோம்.

மக்களுக்கு உள்ளது ஊனசம்பந்தம்; அதாவது உடல் சம்பந்தமும், அது வழியாக வரும் உற்ருர் உறவினர் சம்பந்தமும் ஆகும். இந்தச் சம்பந்தம் உயிர்க்குத் துணைபுரிவதற்குத்தான் இறைவனுல் தரப்பட்டது. ஆனுல், இஃது உலகியலுக்கே பயன்படுத்தப்படுகிறது. உயிர்க்குத் துணைபுரிய ஞானசம்பந்தம் வேண்டும். அதனை அம்மை தந்த அருட்பாலின் வழியாகப் பெற்றவர் ஆளுடைய பிள்ளையார். அதனுல், அவரே '**ஞான சம்பந்தர்**' எனப் பெயர்பெற்று விளங்கினுர். அவரது திருப் பெயரையே உடையவராய், ஆலவாய்ப் பெருமானது திரு வருளையும், கமலை ஞானப்பிரகாசரது நல்லுபதேசமாகிய குரு வருளையும் பெற்று விளங்கியவர் நமது ஆதீன முதற் குரவர் **ஸ்ரீ குருஞானசம்பந்தர்.** அவரது திருப்பெயரைத் தாங்கி வெளிவருகின்ற 'ஞானசம்பந்தம்' எத்துணையோ அன்பர்க்கு ஞானசம்பந்தத்தை வழங்கியுள்ளது - வழங்கி வருகின்றது.

பெற்ருேர் - ஆசிரியர் கடமை :

பெற்ருேர்களும், மாணவர்களை உருவாக்குகின்றவர்களாகிய ஆசிரியர்களும் நல்லனவாகிய - சிறப்பாகச் சமயத் தொடர்பா யுள்ள இதழ்களைப் படிப்பதில் அவர்கட்கு ஆர்வத்தை ஊட்டி நல்லாற்றுப்படுத்தக் கடமைப்பட்டவர்கள். சமயத் தொடர்பான இதழ்கள் இளைஞர்களுக்குச் சிறிது கைப்புடையன போலத் தோன்றுதல் இயல்பு. நோயைப் போக்குகின்ற மருந்து சிறிது கைப்புடையதாகத்தான் இருக்கும். ஆயினும், அதனைப் பிள்ளைகளுக்குப் பெற்ருேர்கள் ஊட்டத்தான் வேண்டி உள்ளது.

பெற்ருேர் பிள்ளைகளை ஏதோ கல்வி நிலையங்கட்கு அனுப்பி விடுவதும், ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் திட்டத்தில் அமைந்த பாடங்களை நடத்திவிடுவதும் மட்டும் போதமாட்டா; இளந் தலைமுறையினரது நல்வாழ்விலும், நாட்டின் எதிர் காலத்திலும் பெரிதும் நாட்டங்கொண்டு அவற்றிற்கு ஆவன செய்தலில் அயராது முயலுதல் வேண்டும். அத்தகைய முயற்சிக்குத் துணை புரியத் தக்கது, 'ஞானசம்பந்தம்' இதழ் என்பதை நினைந்து, நேயர்கள், தாங்கள் 'ஞானசம்பந்தம்' பெற்றுப் பயனடைவ துடன், தங்கள் உறவினர், நண்பர் போன்றவர்களும் 'ஞானசம்பந்தம்' பெறச்செய்து நற்பயன் அடைய இம் முப்பத்திரண்டாவது ஆண்டின் தொடக்கத்தில் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்ருேம்.

[16]

அடியார் இலக்கணம் *

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்"

[மார்கழித் திங்களின் சிறப்பினையும், திருவெம் பாவையின் தத்துவத்தினையும் விளக்கும் இக் கட்டுரைக்கண் "பத்துடையீர் ஈசன்பழ அடியீர்" என்ற தொடரில் வரும் அடியார்க்கு உரிய புறத் திலக்கணம் பத்தும் - அகத்திலக்கணம் பத்தும் இவை என்பது இனிது விளக்கப்பெற்றுள்ளது.]

ஆதிரைத் திருநாள் :

இவ்வாண்டில் திருவாதிரைத் திருவிழா மிக முன்னதாகவே-கார்த்திகை மாதத்திலேயே தொடங்குகின்றது. சிவபெருமானுக் குரிய பற்பல விழாக்களுள் திருவாதிரை விழாவே தலையாயது. இருபத்தேழு நட்சத்திரங்களுள் திருவாதிரையேசிவபெருமானுக்கு உரியது. இது பௌர்ணமியோடு சேர்ந்து வருவது மார்கழித் திங்களிலேதான். அதனல் திருவாதிரைத் திருவிழா மார்கழி மாதத்தில் கொண்டாடப் பெறுகின்றது. ஆகவே, திருவாதிரையை முன்னிட்ட பத்து நாட்கள் சைவர்களுக்கு மிகச் சிறந்த நோன்பு நாட்களாகும். இந்தப் பத்து நாட்களிலும் திருமுறைகளைக் காப்பிட்டு வைத்துத் திருவெம்பாவை ஒன்றை மட்டுமே ஓதுதல் சைவ மரபாய் உள்ளது.

---

* ஆதீன மடாலயத்தில் திருவெம்பாவை வகுப்பைத் தொடங்கி வைத்துத் திருவாய்மலர்ந்தருளி 10—1—1978 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.

9–10

பீடுடைய மார்கழி :

மார்கழித்திங்கள் மற்றைய திங்கள்களை விட மிகமேலானது. அதற்குக் காரணம், அது தேவர்கட்கு வைகறைப் பொழுதாக இருப்பதேயாகும். அதனால் இத்திங்கள் முழுவதும் விடியலில் எழுந்து நீராடி, சூரியோதயத்திற்கு முன்பே வழிபாடுகளை முடிக்க வேண்டுவது இன்றியமையாததாகும். மார்கழித்திங்கள் முழுவதிலும் இந்நியமங்களை இவ்வாறு தவறுமற் செய்தால் ஆண்டு முழுவதும் செய்தபயன் உண்டாகும். நம் கயிலைக்குருமணி அவர்கள் மார்கழி வழிபாடு விடியல் வழிபாடாதல் பற்றி, தொலைவில் உள்ள தலங்கட்கு யாத்திரை செய்வதாயின் மற்றைய காலங்களில் செய்வதல்லது மார்கழி மாதத்தில் செய்யாது ஆன்மார்த்த மூர்த்தியின் வழிபாட்டிலேயே ஈடுபட்டு வந்தார்கள். மார்கழி மாதம், வழிபாட்டிற்கே உரிய மாதம் என்பது பற்றியே, மற்றைய உலகியல் நிகழ்ச்சிகளில் ஒன்றையும் இதில் இயற்றுதல் கூடாது என்று பெரியோர்கள் விலக்கியுள்ளார்கள். இம்மாதம் பீடுடைய (பெருமையுடைய) மாதமே தவிர பீடை மாதமல்ல. மாயூரம் (அம்மை, மயில் வடிவமெடுத்து இறைவனைப் பூசித்ததால் மாயூரம் எனப்பெற்றது) என்பது வழக்கத்தில் மாயவரம் என வழங்கப்படுகிறது. யாரும், மாய வரம் கேட்க மாட்டார்கள். இதுபோன்றே பீடுடைய மாதத்தைப் பீடை மாதம் என அறியாமல் வழங்குகின்றனர்.

திருவெம்பாவைச் சிறப்பு :

மார்கழி மாதம் முழுவதுமே சிறந்தது என்றாலும், திருவாதிரையை முன்னிட்ட பத்து நாட்களும் மிகவும் சிறந்தன வாகும். இப் பத்து நாட்களிலும் ‘திருவெம்பாவை ஒன்றையே ஓதுதல் வேண்டும்’ என்று முன்னோர் விதித்திருப்பதற்குத் தக்க காரணம் இருத்தல் வேண்டும். திருவாசகத்தில் திருவெம்பாவை ஒரு தனிச் சிறப்புடையது என்பது, சிவபெருமான் மாணிக்க வாசகரைத் திருக்கோவையார் பாடும்படிக் கேட்டபொழுது, **‘பாவை பாடிய வாயால் கோவை பாடுக’** என்று கேட்டதாகச் சொல்லப்பட்டு வரும் செவிவழிச் செய்தியால் அறியலாகும்.

திருவெம்பாவையின் உட்பொருள் :

திருவெம்பாவையின் தத்துவப் பொருள் மனோன்மணி முதலிய சக்திகள் ஒன்பதின்மருள் ஒருத்தி மற்றொருத்தியை எழுப்பப், பின்பு இருவரும் சேர்ந்து மூன்றாமவளை எழுப்ப, இவ்வாறே எல்லாச் சத்திகளும் எழுந்து **பிரபஞ்ச சிருட்டி** யாகிய உலகத் தோற்றத்தை நிகழ்த்துவது என்பர். அதற்கேற்ப இதன் இறுதிப் பாடலில் சைவத்தில் சிறப்பாகச் சொல்லப்படும் இறைவன் தொழில் ஐந்தும் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ஐந்தொழில்கள் திருமுறைகளில் வேறு எந்த இடத்திலும் இவ்வளவு தெளிவாகக் காணப்படவில்லை. மக்களாயினும், தேவராயினும் அவரவர்கட்கு அமைந்த விடியற்காலமே அன்றாடச் சிருட்டிபோல அமைவது. அது கருதித்தான்போலும், பிரபஞ்ச சிருட்டி, மற்றும் திதி (காத்தல்) முதலியவற்றைக் கூறும் திருவெம்பாவையையே இந்தப் பத்து நாட்களிலும் ஓதுதல் வேண்டும் என்று முன்னோர்கள் விதித்துள்ளார்கள்! இன்னும் இத்திருவெம்பாவையில் உலக வாழ்க்கைக்கு வேர்போல உள்ள பெண்களின் நலத்திற்கும், மற்றும் உலகப் பொது நலத்திற்கும் ஆவன பல அமைந்துள்ளமை காணலாம்.

திருவண்ணாமலையில் - திருவெம்பாவை :

திருவெம்பாவையை மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் அருளிச் செய்தார் என்பது வரலாறு. அதற்கேற்ப இதில் திருவண்ணாமலையைப் பற்றிய குறிப்புக்கள் பல உள்ளன. முதற் பாடலே, **"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை"** என்று தொடங்குகின்றது. சிவபெருமான் திருமாலும் பிரமனும் ஆகிய இருவராலும் அடிமுடி அறியப்படாத சோதியுருவாய்த் தோன்றியது திருவண்ணாமலையிலே என்பது உலகம் அறிந்தது.

> "பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர் ;
> போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே"

என்பதிலும் இக்குறிப்பு அமைந்துள்ளது. **"மால் அறியா நான்முகனும் காணா மலை"** என்பது முன் சொன்னவற்றிலும் சற்று வெளிப்படையாக உள்ளது **"அண்ணாமலையான்**

அடிக்கமலம் சென்றிறைஞ்சும்" என்ற தொடர் திருவண்ணாமலையில் இது பாடப்பெற்றது என்பதை வெளிப்படையாகவே குறிக்கின்றது எனலாம்.

முதற்பாட்டின் முருகிய பொருள் நலம் :

முதற் பாடலில் "சோதியை யாம்பாட" என்பதில் 'யாம்' என்றது ஒருத்தியே தன்னை உயர்வு பற்றிப் பன்மையாகக் கூறினாள் எனக்கொள்ளுதல் தத்துவக் கருத்துக்குப் பொருந்துவதாய் இருக்கும். எவ்வாறெனில், 'மனோன்மனி' என்னும் சக்தி ஒருததியே முதலில் தானே எழுந்து, பின் 'சர்வபூத தமனி' என்னும சக்தியை எழுப்புவதாகச் சொல்லப்படுகின்றது. இதில், "யாம் பாடக் கேட்டேயும் வளருதியோ" என்று சொல்லிப் பின்பே, "வன்செவியோ நின் செவிதான்" என்றமையால் முதலில் கேட்டுக்கொண்டே உறங்கினாள் என்று நினைத்துப் பின்புதான் நமது பாட்டு அவளது காதில் விழவில்லை; அப்படி உறங்குகிறாள் என்று, எழுப்ப வந்தவள் அறிந்தாள் என்பது தெரிகின்றது. இன்னும், 'உன் காது செவிடோ' என்று சொல்லாமல் 'வன் செவியோ' என்று இனிமையாகக் கூறிய நயம் அறிந்து இன்புறத் தக்கது.

அடியார் இலக்கணம் :

"முத்தன்ன வெண்ணகையாய்" என்ற பாடலில், "பத்துடையீர்" என்பதனை 'பற்று, பத்து என வந்தது' என்றும் சொல்வதுண்டு. என்றாலும், 'அடியார் இலக்கணம் பத்தும் உடையீர் என்பதுதான் சிறப்பாக இருக்கும். இறைவனிடத்து மெய்யன்புடைய அடியவர்க்கு உள்ள புறத்திலக்கணம் பத்து, அகத்திலக்கணம் பத்து என்று சொல்லப்படுகின்றது. புறத்திலக்கணம் செய்கைகளாக நிகழும். அவை ;

> **விபூதி - உருத்திராக்கம் அணிதல், குருவை வணங்கல், சிவனைத் துதித்தல், சிவநாமத்தை எப்பொழுதும் சொல்லுதல், சிவ பூசை செய்தல், சிவ தருமம் (சரியைத் தொண்டு, ஆலயத் திருப்பணி முதலியவை) செய்தல், சிவ புராணம் படித்தல் - கேட்டல், ஆலய**

> **வழிபாடு செய்தல், சிவனடியாரிடத்தில் அல்லாது பிறரிடத்தில் உணவு கொள்ளாமை; அடியார்க்கு வேண்டுவன கொடுத்தல் என்பன.**

அகத்திலக்கணம் மெய்ப்பாடுகளாக நிகழும்.

> **அவை, சிவபெருமானைத் துதித்துக்குமிடத்துக் கண்டம் விம்முதல், சொல் தடுமாறல், இதழ் துடித்தல், உடல் நடுங்கல், மயிர்க்கூச்செறிதல், உடல் வியர்த்தல், நாவெழாமை, கண்ணீர் அரும்பல், வாய்விட்டு அரற்றல், தன்வசம் இழத்தல் என்பன.**

இவ்வாறு உபதேச காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. இவற்றை உடைய அடியவர் வழிவழி அடியவரான பழவடியாராய் இருத்தல் இன்னும் சிறப்பு என்பதை, "பழவடியீர், பாங்குடையீர்" என்னும் தொடர்கள் உணர்த்துகின்றன.

பல்வகைச் சிந்தனைகள் :

எழுப்பப்படுகின்ற பெண்ணொருத்தி, "வண்ணக்கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ" என்று கேட்பதும், "நாளை வந்து உங்களை நானே எழுப்புவன்" என்று முதல்நாட் சொல்லியவள் மறுநாளும் உறக்கத்தினின்று எழாமையும், தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பவளாகிய மிக்க அன்புடைய ஒருத்தியும் ஒருநாள் வன்னெஞ்சப் பேதையர்போல், எழுப்ப எழுப்ப வாளாகிடத்தலும் போல்வன உறக்கத்தின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றன.

நீர் நிரம்பிய மடு பெருமானும் பெருமாட்டியும்போல் காணப் படுதலைக் கூறுகின்ற "பைங்குவளைக் கார்மலரால்" என்ற பாடலில் இறைவன் குருவாகி வந்து நயன தீட்சை முதலிய தீட்சைகளால் ஆன்மாக்களின் மலங்களைப் போக்கும் குறிப்பு அமைந்துள்ளது. 'காதார் குழையாடப் பைம்பூண் கலன் ஆட" என்னும் தொடர்கள் பெண்கள் அணிகலன்களோடே நீராடல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது. "சீதப் புனலாடி" என்பதனுல், விடியற்காலையில் தண்ணீரிலேதான் முழுக வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. விடியற் காலையில் குளிர்ந்த நீரில் முழுகுவதால் நலன்கள் பல உள்ளன. தண்ணீரில்

குளிக்கும்பொழுது குளிர் இருக்கும். குளித்த பின்னர் குளிர் இராது. ஆனால், வெந்நீரில் குளிக்கும்பொழுது குளிர் இராது. பின்பு குளிர் உண்டாகும். தண்ணீரில் குளிப்பதால் காமம் முதலிய குற்றங்கள் உண்டாகமாட்டா. இப்படிப் பல நன்மைகள் உண்டு. இப்பாடலில், பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்பது இறைவன் எல்லார்க்கும் ஒரேவகையாக அருள் செய்யாமல் அவரவர் தரத்திற்கு ஏற்பப் பலவகையாக அருள்செய்து ஆட்கொள்ளுதலை விளக்குகின்றது. இந்தப் பேதம் (வேறுபாடு) ஆன்மாக்களின் இயல்பு பற்றி உண்டா கின்றதேயன்றி இறைவன் இயல்பு பற்றி உண்டாகவில்லை.

கூடுக கூத்தப்பிரான் அருள்:

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என்ற பாடல் இறைவன் கால எல்லையைக் கடந்தும், "பாதாளம் ஏழினுங் கீழ்" என்னும் பாடல் இட எல்லையைக் கடந்தும் நிற்றலை உணர்த்துகின்றன. பெண்கள் சிவபத்தி உள்ளவர்களே தங்களுக்குக் கணவராக வருதல் வேண்டும் என்று கேட்கும் பாடல்கள், சைவ மைந்தரும் மகளிரும் எல்வாறு இருத்தல் வேண்டுமென்று மாணிக்கவாசகர் விரும்புகின்றார் என்பதைக் காட்டும், அவர்கள் தங்களுக்காகவும் வேண்டுதல் செய்வது, இறைவன் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் அருள் வள்ளலாய் இருத்தலை விளக்கும். இறுதிப்பாடல் அவனது ஐந்தொழில் களையும் நன்கு எடுத்து ஓதி, அவை அனைத்தையும் செய்வன அவனது திருவடிகளே' என அத்திருவடிகளின் சிறப்பை விதந்து போற்றி செய்தலும், "போற்றி யாம் மார்கழி நீ ராடேலோ ரெம்பாவாய்" என்று மார்கழி நீராட்டை எடுத்துக்கூறி முடிப்பதும் மார்கழி நோன்பிற்கு மிகமிகப் பொருத்தமாய் அமைவனவாகும். 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று திருவாசகத்தில் சிறப்பாக எடுத்துக் குறிக்கப்பட்டமைக்கு ஏற்பப் பல அருமை பெருமைகளை உடைய திருவெம்பாவையைத் திருவாதிரை விழா நாட்கள் பத்திலும், ஓதவும், சிந்திக்கவும் முற்பட்டுள்ள பக்தர்கட்கு ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியும், சிற்றம்பலத்து ஆடும் கூத்தனும் ஆகிய இறைவன் எல்லா நலங்களையும் அருள்வானாக.

[17]

தோத்திரமும் - சாத்திரமும் *

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

[நாயன்மார்கள் அருளிச்செய்த தோத்திரங்களும், சந்தானசாரியர் அருளிச்செய்த சாத்திரங்களும் ஒன்றோடொன்று கொண்டுள்ள இணைப்பையும், இவை 'சைவ சமயமே சமயம்' என்ற கூற்றை மெய்ப்பிக்கும் அருமைப்பாட்டையும், இவை வாழ்வியலில்பெறும் சிறப்பிடத்தையும் இங்கே விளங்கக் காண்கின்றோம்.]

அருள் நலம் வழங்கிய ஆசாரியர்கள் :

திருநாவுக்கரசர் மெய்கண்டார் திருவுருவப் படங்களை இக்கல்லூரியில் திறந்து வைத்திருப்பது போற்றற்குரியது. இவை தொண்டு, ஞானம் இவற்றை மாணவர்கட்கு நினைவூட்டு வனவாய் விளங்கும். அருளாளர்களின் திருவுருவப் படங்களை, 'திறந்துவைப்பது' என்ற சொல்லால் கூறுவதை விட 'எழுந்தருளுவித்தல்' என்ற சொல்லால் குறித்தலே பொருத்த மாகும். சமயாசாரியர்களில் ஒருவரும், சந்தானசாரியர்களில் ஒருவரும் ஆகிய இவ்விருவரும் நமக்கு அருளிச்செய்த ஞான நூல்களை ஓதி உணர்ந்து உய்திபெறுதல் மக்கட்கு இன்றி யமையாத கடமையாகும். நம் முன்னோர்களில் ஒரு பகுதினர் இந்

---

* பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியில் ஸ்ரீ மெய்கண்டார் திருவுருவப் படத்தை எழுந்தருளச்செய்து வழங்கியருளிய ஆசிச்செய்தியாகிய இது 10—2—78 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.

நூல்களைப் பக்தியோடும் மரியாதையோடும் பூசித்துப் போற்றிப் பாதுகாத்தனர். பிறிதொரு பகுதியினர் தென்னாட்டிற்குப் பெருமை தரும் இத்தெய்வத் தமிழ்ப் பனுவல்களை போற்றாது மறந்தனர். பக்தி செலுத்தியவர்களுள்ளும் விவரமறியாத முறையில் பலர் இருந்தனர். இந்நிலையில் சமய நூல்களின் அருமை பெருமை களையும் ஆசாரியர்களின் சிறப்புக்களையும் மக்கள் உணர இயலாத வராயினர். பள்ளிப் பாட நூல்களில் சமய வரலாற்றுப் பகுதியில் சங்கரர், இராமாநுசர், மாத்துவர் போன்றவர்களைக் குறித்த வர்கள், சமயாசாரியர்களைக் குறிக்கத் தவறினர். வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறு தவறிய காரணத்தால் மக்களில் பலரும் இவர்களை மறக்கும் நிலை ஏற்பட்டது. சமய உண்மைகளை உணராத நிலையில் சமுதாயம் தூங்கியது. இனியேனும் சமுதாயம் விழித்தெழுந்து நாம் வாழ, நாடு வாழ அருள் நலம் வழங்கிய ஆசாரியர்களை அறிந்து போற்றுதல் வேண்டும்.

தோத்திர நெறி வளர்த்தோர் :

திருநாவுக்கரசு சுவாமிகளைத் தந்தை நிலையில் ‘அப்பரே’ என்றழைத்தார் ஞானசம்பந்தர். அஃது அவரது பெயராகவே வழங்கிவருகிறது. திருநாவுக்கரசரோ ‘அடியேன்’ என்றுகூறி அந்நிலையிலேயே அவரிடம் அன்பு பூண்டார். இவ்விரு பெரு மக்களும் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். இவர்கள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களில் சைவ சித்தாந்தத் தத்துவ உண்மைகள் பலவும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இவ் இலக்கியங்களுக்குப் பின்னர் இலக்கணமாய்த் தோன்றி யனவே சைவ சித்தாந்த சாத்திரங்களாகும்.

சாத்திரநெறி கண்டார் :

‘இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்’ என்ற நன்னூல் சூத்திரத்தின்படி இலக்கியங்கள் முதலில் தோன்று கின்றன. அதற்குப் பின்னர்தான் அவைகட்கு வரம்பு செய்வனவாய் இலக்கணங்கள் தோன்றுகின்றன. வாழ்வியல் முறைகளில், மக்கள் நடைமுறைகள் முதலிலும் அவற்றின் வரம்பு களாகிய சட்டங்கள் பின்னரும் தோன்றுகின்றன. ஞானசம்பந்தர் முதலாக இருபத்தேழு அருளாசிரியர்களால் அருளிச் செய்யப்

பெற்ற பன்னிரு திருமுறைகளும் தோத்திரங்கள் ஆகும். மெய் கண்டார் முதலாகிய அருளாசிரியர் அறுவர் அருளிச்செய்த பதினன்கு சித்தாந்த நூல்களும் சாத்திரங்கள் எனப்படும்.

வினையளவே – பயன்விளையும் :

சைவசித்தாந்த சாத்திரங்கள் விதிக்கும் வாழ்வியல் உண்மை களை மக்கள் சிந்தித்து உணர்ந்து போற்றுதல் வேண்டும். நல்வினை தீவினைகளாகிய இருவினைகள், இவற்றின் பயன் இவைகளை இளைஞர் சமுதாயம் எண்ணிப்பார்த்து உண்மை உணர வேண்டும். இவற்றையே மேம்போக்காகப் பார்த்துவிட்டு இவற்றையும் இவற்றின் பயனை நிர்ணயிக்கும் விதியையும் இல்லை என்று மறுத்தல் பொருந்தாது. நாம் செய்யும் நல் வினை தீவினைகள் உடனுக்குடனும் காலப்போக்கிலும் நமக்கு நன்மை தீமைகளை விளைவிக்கின்றன.

கடவுளைக் காணமுடியும் :

'கடவுளைக் காட்டு பார்ப்போம்' என்பது எளிதான கேள்வி. அருளாளர்களும் ஞானிகளும் கூட உணர்ந்தும் உணர முடியாமல் இருக்கும் அப் பரம்பொருளை அனுபவித்தறியலாமே தவிர முற்றிலும் காணுதல் என்பது இயலாது. உணர்ந்தார்க்கு உணர்வரியோன் என்று கூறுகிறார் மணிவாசகர். அவரே திருவண்டப்பகுதியில் 'கண்ணால் யானும் கண்டேன் காண்க; சிவனென யானும் தேறினன் காண்க' என்று கூறி, திருப்பள்ளியெழுச்சியில் 'கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' என்றும் கூறுகிறார். இவ்விரு தொடர்ப்பொருள் களும் முரண்பாடுடையன அல்ல. இரண்டிலும் உண்மை இருக்கிறது. கண்ணால் கண்டது உண்மை. ஆனால் அவன் இயல்பை முற்றிலும் கண்டது இல்லை. இதனை விளக்கும் ஓர் உவமையை உய்யவந்த தேவநாயனார் திருக்களிற்றுப்படியாரில் கூறுகிறார். கடலில் நீராடும் ஒருவன் கடலைக் காண்கிறான். கடற்கரையில் வாழும் மக்கள் நாடோறும் கடலில் பலகாலும் ஊடாடுகிறார்கள். அவர்கள் கடலை முற்றிலும் கண்டார்களா? கடலின் ஆழம், அகலம், விளைபொருள்கள் ஆகிய அனைத்தையும் அவர்கள் அளந்தறிவார்களா? அதுபோலத்தான் கடவுளை முற்றிலும் கண்டவர்கள் இல்லை என்று கூறுகிறார் உய்யவந்த தேவர்.

"கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடலளக்க வாராதாற் போலப் — படியில்
அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனைக் காண்"

இவ்வாறு தோத்திர சாத்திரங்கள் நமக்கு எழும் ஐயங்களை அகற்றி நாம் கடவுளை உணரவும் உய்யவும் வழிகளைக் கூறுவன. சமயாசாரியர்கள் தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடிச் சமுதாயத்தைப் பண்படுத்தியவர்கள். அவர்கட்குப் பின் தோன்றிய சாந்தாணசாரியர்கள் தாம் இருந்த இடத்தில் இருந்தே தம்மை நாடி ஓடிவரும் தக்கவர்களுக்கு உண்மைப் பொருள்களை உணர்த்தியவர்கள். கரம்பு நிலத்தை நன்செய் நிலமாக்கி விளைவு கண்டவர்கள் சமயாசாரியர்கள் என்றும், அவர்கள் விளைத்த பயனை ஒழுங்குற வகைப்படுத்தியும் தொகைப்படுத்தியும் முறை செய்து காப்பாற்றியவர்கள் சந்தாணசாரியர்கள் என்றும் கூறலாம்.

மெய்கண்டதேவர் திருவவதாரம் :

தோத்திர ஆசிரியராகிய ஞானசம்பந்தர் மூவாண்டில் சிவஞானம் பெற்றார். சாத்திர ஆசிரியராகிய மெய்கண்டார் ஈராண்டில் சிவஞானம் பெற்றார். மெய்கண்டாரின் தந்தை திருப்பெண்ணாகடத்தில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னர். அச்சுத களப்பாளர் என்பது அவர் பெயர். இன்றும் களப்பாளர்மேடு என்ற ஓர் இடம் அங்குள்ளது. அண்மையில் அங்கு மெய் கண்டாருக்கு ஒரு கோயில் எழுப்பிச் சிறந்த முறையில் வழிபாடுகள் முதலியன செய்வித்து வருகின்றனர். அச்சுத களப்பாளர் மகப்பேறின்றி வருந்தி அவர் தம் குலகுருவாகிய அருணந்தி தேவரிடம் தம் மனக்குறையை விண்ணப்பித்தார். அருணந்தி தேவர் கல்வி கேள்விகளில் வல்லவர். "சகலாகம பண்டிதர்" எனப் போற்றப்பெற்றவர். களப்பாளரின் வேண்டு கோளை நிறைவேற்றித்தர விரும்பிச் சிவபூசை முடித்துத் திருமுறையில் கயிறுசாத்திப் பார்த்தார். திருவெண்காட்டுத் திருப்பதிகத்தில்,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளம்நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே"

என்ற பாடல் உதயமாயிற்று. அச்சுத களப்பாளர் மகிழ்ந்து தம் துணைவியாருடன் திருவெண்காடு சென்று முக்குளநீராடி இறைவனை வழிபட்டார்; மெய்கண்டார் திருவவதாரம் செய்தார். இன்றும் இத்தலத்தில் முக்குள நீராடி மக்கட் பேற்றைப் பெற்று வருவோர் பலராவர். 'சுவேதவனப் பெருமாள்' என்று பிள்ளைமைப் பெயரிடப்பெற்று வளர்ந்துவரும் நிலையில் குழந்தையைத் தாய் மாமன் திருவெண்ணெய்நல்லூருக்கு எடுத்துச் சென்று வளர்த்து வந்தார். 2 ஆண்டு நிரம்பியது. குழந்தை வீதியில் விளையாடிக் கொண்டிருந்தது.

சிவஞானபோத மலர்ச்சி:

திருக்கயிலாயபரம்பரையில் உபதேசம் பெற்ற பரஞ்சோதி மாமுனிவர் வான்வழியே செல்பவர், தம் தேர் ஏதோஒர் ஆற்றலால் தடைப்பட்டு நிற்பதை உணர்ந்து, கீழே உற்று நோக்கினார். சுவேதவனப் பெருமாள் சாமுசித்தராய் எல்லாக்கலை ஞானங்களும் நிரம்பிய நிலையில் இருப்பது தெரிந்தது. திருவருட் செயலை நினைந்து வியந்து உடனே கீழே இறங்கி வந்து கயிலாயபரம்பரை நிலவுலகில் தழைத்துச் சிறப்பதற்கு இக்குழந்தையே ஞான குருவாக விளங்குதற்குரியவராதலை உணர்ந்தார். தாம் பெற்ற அருள் நலங்களைப்பெற்று மண்ணுலக மக்கள் கடைத்தேறும் பொருட்டு அக்குழந்தைக்குச் சிவஞானோபதேசம் செய்து 'மெய்கண்டார்' எனத் தீக்ஷாநாமம் சூட்டிச்சென்றார். மெய்கண்டார் சிவஞானச் செம்மலாக விளங்கினார். தத்துவக் கடலாக விளங்கும் சிவஞான போதத்தைப் பன்னிரு சூத்திரங்களாக நாற்பது வரிகளில் அருளிச்செய்தார். தம்மை வந்தடைந்த அன்பர்கட்கு அதன் மெய்ப்பொருள்களை உணர்த்திக்கொண்டு எழுந்தருளி விளங்கியிருந்தார். மெய்கண்ட தேவரின் அருள் விளக்கம் உலகெங்கும் பரவியது.

ஆணவத்தை வீழ்த்திய ஆசாரியன் அருள்:

அருணந்திதேவரும் இதனை அறிந்தார். தம்பால் கயிறு சாத்திப் பார்க்கப்பெற்று அதன்வழித் தோன்றிய பிள்ளை தம்மை வந்து காணவில்லையே என்று எண்ணினார். இந்நிலையில் தாமே செல்வதெனக் கருதித் திருவெண்ணெய்நல்லூர் சென்றார் அங்கும் தம்மைவந்து அவர் காணாமையால் தம் சீடரில் ஒருவரை அவரிடம்

அனுப்பினார். சென்ற சீடர் மெய்கண்டாரின் உபதேசங்களில் ஈடுபட்டுத் தம்மையிழந்து அங்கேயே தங்கினார். இவ்வாறே அடுத்தடுத்துச் சென்ற பலரும் திரும்பாமையால் மெய்கண்டார் உறையும் திருமடத்திற்குத் தாமே சென்றார். அப்பொழுது மெய்கண்டார் பாச இலக்கணங்களில் ஆணவத்தின் தன்மைகளை அடியவர்களுக்கு உணர்த்திக்கொண்டிருந்தார். இங்கே ஒன்று குறிப்பிடவேண்டும்.

ஆசாரியர்களாக இருப்பவர்களைப் பற்றி இதுபோன்று கூறுதல் கூடாது என்றாலும், வரலாற்றைச் சிந்திக்கும் வகையில் இதைச் சொல்லத்தான் வேண்டியுள்ளது. எவ்வளவு கல்வி நிரம்பியவர்களாக இருந்தாலும் குருவருள் இல்லையானால் ஞானத்தை அடைய முடியாது அல்லவா? ஆசாரியனின் அருள் கிட்டும் வரை ஆணவம் என்ற குறை உடையவராகத்தான் அருணந்திதேவர் இருந்தார். மெய்கண்டாரைச் சிறு குழந்தை என்றெண்ணி ஆணவத்தின் சொரூபம் யாது என்று வினவினார். மெய்கண்டதேவர் இவரது பரிபாக நிலையை உணர்ந்து தமது கைவிரலால் அவரையே சுட்டி, தம் திருக்கண்களால் நோக்கினார். ஆசாரியரது அருள் நோக்கம்பட்ட அளவில் ஆணவக்குறை அகன்றது. அடியற்ற மரம்போல் அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்து அருள்நலம் பெற்றார் அருணந்தி தேவர்.

குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் ‘திருநோக்கால் ஊழ்வினையைப் போக்கி’ என்று கூறும் தொடருக்கு விளக்கமாக இந்நிகழ்ச்சி அமைந்து விளங்குகின்றது. குமரகுருபரரை நமது தருமையாதீனத்தின் நான்காவது குருமூர்த்திகள் ‘ஐந்து பேரறிவும் கண்களேகொள்ள’ என்ற பெரிய புராணப் பாடலுக்கு அனுபவப் பொருள் வினவியபோது வாக்குத் தடைப்பட அவ்வாறே ஆசாரியன் அருள் வாக்கால் ஆணவம் அகன்று ஆட்கொள்ளப்பெற்றார். அருணந்தி தேவர் சக்ஷு தீக்ஷையினாலும், குமரகுருபரர் வாசக தீக்ஷையினாலும் ஆட்கொள்ளப்பெற்றனர் என்பதை இங்கு நாம் உணர்தல் வேண்டும்.

ஆசாரியனால் விளங்கும் அருள்ஞானம் :

உலகில் உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்ற மூவகை நிலையில் உள்ளன. ஆணவத்தில் மட்டும் அழுந்தி நிற்றல் கேவல

நிலை என்றும், அதனோடு மாயை கன்மங்களும் சேர்ந்து பிறப் பிறப்பில் உழல்வது சகலநிலை என்றும், மும்மலங்களும் நீங்கி இறைவனை அடைவது சுத்தநிலை என்றும், கூறப்படும். உயிர்கள் மாணிக்கம்போல – வைரம்போல உள்ளவை. அவற்றிற்குப் பட்டை தீட்டி விளங்கச் செய்பவனே ஆசாரியன்.

தேவாரத்துள் தத்துவ விளக்கம் :

சைவசித்தாந்த தத்துவ உணர்வு, தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றிய மெய்யுணர்வு. சங்க நூல் களிலும், சிறப்பாகத் திருக்குறளிலும இதனை அறியலாம். திருமுறைகளில் அவை சிறந்து காணப்படுகின்றன. சிறப்பாகத் திருஞானசம்பந்தர் பாடலைக் குறிப்பிடலாம். மண், புனல், அனல் கால் வெளி எனப் பூதங்கள் ஐந்து மெய் வாய் கண் மூக்கு செவி என அறிகருவிகள் ஐந்து. வாக்கு, கை, கால், எருவாய், கருவாய் எனத் தொழிற்கருவிகள் ஐந்து, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனத் தன்மாத்திரைகள் ஐந்து. இவை, புலனாகப் புறத்தே விளங்கும் தததுவக் கூறுகள. மனம், புத்தி, சித்தம், அகங்காரம எனப் புலனாகாது அகத்தே விளங்கும் அந்தக் கரணங்கள் நான்கு இவ்விருபத்து நான்கும் ஆன்ம தத்துவங்கள். இவற்றை

"புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலைந்தாய்க் கரணம்நான்காய்
அவையவைசேர் பயனுருவாய் அல்லஉரு
வாய்நின்றான் அமருமகோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறி கற்போற்சுனையில் கரைசேரப்
புள்ளிரியும் கழுமலமே."

என்று கூறுகிறார் ஞானசம்பந்தர். இறைவன் உயிர்கட்கு உடலையும், கருவிகளையும், உலகங்களையும், அனுபவங்களையும் தந்தருளுகின்றான். இவற்றைத் தனு, கரண, புவன, போகம் என்பர். உடல் 'மாயா இயந்திர தனு' என்றும், பேரொளியாகிய பரம்பொருளைக் காணுதற்கு உயிர்கட்குத் தரப்பெற்ற விளக்கு என்றும் கூறப்படும். எத்தனைவிதமான நுண்பொறிகளோடு இறைவன் இவ்வுடலைப் படைத்துள்ளான் என்பதை எண்ணிப் பார்த்தால்தான் இறைவனது கருணை புலப்படும். பெற்றவள்

அன்னை தான் என்றாலும் இறைவனது அருளால்தான் நமக்குப் பிறப்பு அமைகிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற சொல் வழக்கில் உள்ள உண்மையை உணர்தல் வேண்டும்.

மாதா பிதாவையும், பிதா குருவையும், குரு தெய்வத்தையும் காட்டுதல் வேண்டும. இறைவன் மக்கள் அனைவரும் இன்புற்றிருக்கவே செல்வங்களைத் தந்துள்ளான். அச் செல்வங்களைப் பேணிப் போற்றுதவர் வருந்துகின்றனர். அத்தகையவர்கட்கு வழங்குவதற்குச் சிலரிடம் செல்வத்தைத் தந்துள்ளார்கள்.

"இரப்பவர்க் கீயவைத்தார், ஈபவர்க்கு அருளும்வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்"

என்பது அப்பர் திருவாக்கு. செல்வத்தை ஓரளவுமட்டுமே அனுபவிக்க உரிமையுண்டு. ஒல்லும் வகையால் அறவினை செய்தல் செல்வர்களின் சீரிய கடமையாகும். இவ்வாறு சமய நூல்கள் வாழ்வியல் அருளியல்பற்றிக் கூறும் கருத்துக்களை உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகுதல் இன்றியமையாதது.

செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் மிகுக :

இக்கல்லூரி துறவியார் ஒருவர் வழங்கிய இடத்தில் தோன்றி வளர்ந்து, துறவியார் ஒருவராலேயே வளர்க்கப்படுகிறது. தோன்றுதற்குத் துணைசெய்தவரும் துறவியார்; வளர்ப்பவரும் துறவியார். அதனால் இங்குப் பயிலும் மாணவர்கள் தியாக உணர்வோடு பயின்று நாட்டுக்கும், மொழிக்கும், சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் பயன்படவேண்டும். புறநானூற்றுப் புலவர் ஒருவர் கூறியதுபோல, 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக' விளங்குதல் வேண்டும். தெய்விகப் பேரவையின் சார்பில் இயங்கிவரும் இக்கல்லூரி சிறந்ததொரு சமயப் பல்கலைக் கழகமாக வளர்ந்து சிறப்பெய்தல் நாட்டிற்கும் நமக்கும் நலமாகும். பேரவைக் கல்லூரி, பெயரும் புகழும் பெற்றுச் சிறக்கவும், இங்குப் பயிலும் மாணவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டுத் திகழவும், ஆசிரியர்கள் மற்றும் கல்லூரிக் குழுவினர், ஊர்ப் பொதுமக்கள் அனைவரும் நலம்பல பெற்று நீடு வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்தித்து நிறைவு செய்கிறோம்.

[18]

மனம் - மொழி - மெய் *

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய் வாரின் தலை"

[இறைவழிபாட்டின் இன்றியமையாமையும், பூஜை என்பதன் உட்பொருளையும் – பொய் – மெய் என்ற சொற்களின் உள்ளார்ந்த ஆழ்பொருள்களையும், உண்மை, வாய்மை, மெய்மை என்ற சொற்களின் விளக்கத்தையும் பிறவற்றையும் இக்கட்டுரை நுணுக்கமாக விளக்குகிறது]

உயிர்களின் தலையாய கடமை :

ஒவ்வொரு மனிதனும் உய்திபெறுவதற்குப் பூஜை செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாதது. எல்லாம் வல்ல முழு முதற் பரம்பொருள் காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டு இருந்த உயிர்களுக்கு, அவற்றின் பக்குவத்திற்கேற்ப உடலையும், கரணங்களையும், உலகத்தையும், இன்பத்துன்பங்கட்கு ஏதுவான பொருள்களையும் படைத்துக் கொடுக்கிறது. மனிதனால் இவற்றைச் செய்ய இயலாது. மனித முயற்சியால் செய்ய இயலாத இவற்றை உயிர்களின் உய்விற்காகவே படைத்துக் கொடுக்கும் பரம் பொருளைச் செய்ந்நன்றி அறிதலின் அடையாளமாக வழிபடுவதே உயிர்களின் தலையாய கடமை.

---

* 10—3—1973 ஞானசம்பந்தம் இதழுக்கு வழங்கியருளியது.

வழிபாடு நமக்காகவே :

மக்கள் இறைவனை வாழ்த்துவதும், வழிபடுவதும் அவர்களின் நலங் கருதியே யல்லாமல் இறைவன் நலங் கருதி அல்ல என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். வழிபடுகிற உயிரின் அறிவு தெளிவுற்று மேன்மை அடைகிறது. இதற்கு உதாரணம், கல்வி பயிலும் மாணுக்கன் பள்ளிக்குச் சென்று படிப்பது, அவன் அறிவு தெளிவுபெறுதலாகிய நலங்கருதியே யல்லது பள்ளியின் நலங்கருதியன்று. தன்னைவிடப் பலவகையிலும் உயர்ந்தாரைச் சார்ந்து வாழ்கின்ற மனிதன் அவ்வாறு வாழ்வது அவர்களுக்குப் பெருமை தேடித் தருவதற்கன்று; இவன் நலம் அடைவதற்காகவேயாகும். பூசனை புரிவதும், புரிபவருடைய நலங் கருதியே என்பது ஊன்றி உணர்வார்க்கு நன்கு தெளிவுபெறும்.

இருவகை வழிபாடு :

பூசை ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படுகின்றது. ஆன்மார்த்தம் என்பது தன்னுயிர் தானறப் பெறுவதற்கும், வாழ்வில் நலம் பலபெற்று வாழ்வதற்கும் ஆசாரியரிடத்தில் உபதேசம்பெற்றுப் பூஜை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு பூசிப்பதாகும். பரார்த்தம் என்பது ஆலயங்களில் மகரிஷிகளாலும், மன்னர்களாலும், முனிவர்களாலும் பிரதிஷ்டை செய்யப்பெற்று எழுந்தருளியிருக்கும் இறைவனைத் தகுதியும், வசதியும், அவகாசமும் இல்லாத உயிர்களின் நலங்கருதிப் பூசிப்பதாகும். கோயில் வழிபாட்டின் சிறப்பை அறிந்தவர்கள் இங்கு ஆசாரியர்களை நியமித்து இரண்டுகாலம், நான்குகாலம், ஆறுகாலம் என்ற முறையில் பூசைகளை அமைத்து முறையாக வழிபாடு செய்துவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருக்கோயில் சென்று தரிசிக்காத மக்களுக்கும் அவர்கள் நலங்கருதி இறைவன் பிரமோற்சவத்தில் உலாவந்து காட்சி கொடுத்து அருள் செய்கின்றான்.

பூஜை என்பதன் பொருள் :

வடமொழியில் பூஜை என்பதே தமிழில் பூசை என வழங்குகிறது. "பூர்யதே பூ; ஜாயதே ஜா; இதி பூஜா" என்று

வடமொழியில் பொருள் விரிப்பர். பூ நிறைவு. இது கர்ம பூர்த்தியைக் குறிப்பிடுகிறது. ஜா உண்டாதல்; இது ஞானத் தோற்றத்தைக் குறிப்பிடுகிறது. எனவே பூஜையால் கர்மங்கள் பூர்த்தியாகி, ஞானம் யாவும் தோன்றுகின்றன என்பதாம். ஒவ்வொருவரும் கர்மத்தைச் செய்யச் செய்யத்தான் ஞானம் தோன்றுமே யல்லாமல் கர்மத்தைச் செய்யாமல் ஞானம் தோன்ருது. எந்தக் கர்மத்தையும் செய்யச் செய்ய அறிவு வளர்கிறது. இது இறைவனைக் குறித்து அமையும் பொழுது மெய்ஞ்ஞானமாக மிளிர்கிறது. பூசை என்பது பூவைக்கொண்டு செய்வதனுல் பூசை என மருவி வழங்கி வருகிறது என்றும் கூறுவர். அதில் மேற்கூறிய தத்துவப் பொருள் அமையவில்லை. பரார்த்த பூஜை செய்வதற்கு சிவாசாரியர்களே உரியவர்கள். ஆன்மார்த்த பூஜை தகுதி வாய்ந்த யாவரும் செய்ய வாய்ப்பாக உள்ளது.

திரி கரணம் :

இவ்விருவகைப் பூஜைகளையும் செய்வோர். மனம் வாக்குக் காயம் (உடல்) என்ற திரிகரணங்களையும் (மூன்று கருவியையும்) இறைவனின் உடைமையாகக் கருதிச்செய்தல் வேண்டும். இதனை உலகியலில் திரிகரண சுத்தியோடு செய்தல் என்பர். மனத்தால் நினைத்தலும், வாக்கால் வழுத்தலும், மந்திரங்கள் சொல்லலும், கை முதலிய உறுப்புக்களால் மலர் சூட்டுதலும் ஆகிய செயல்களைச் செய்தல் பூஜையில் முக்கியமானவை. இதனை அருணந்திசிவம்,

> "மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
> இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி"

என்ற தொடரால் குறிப்பிடுகிருர். மனம் மெய்யாக வழிபடுவதை உள் மெய் (உண்மை) என்றும், வாக்கு மெய்யாக வழிபடுவதை வாய்மெய் என்றும், உடல் மெய்யாக வழிபடுவதை மெய் மெய் என்றும் பெரியோர்கள் அறிவித்துள்ளனர்.

பொய் என்ருல் என்ன ?

உலகியலில் உண்மை, பொய்மை என்ற இரண்டையும் எல்லோரும் பொதுவாக அறிவர். ஆனல் அதன் நுட்பத்தைப்

பெரும்பாலோர் அறிவதில்லை. பொய் என்பதை இல்லாதது என்றே கருதுகின்றனர் அது அப்படி அல்ல. நிலைமாறுபாடு உடையது என்பதே பொய் என்ற சொல்லுக்குப் பொருள். உதாரணமாக, ஒரு பொருளை இழந்தவன் அப்பொருள் தொலைந்து போய்விட்டது என்றே சொல்கின்றான். உண்மையில் அப்பொருள் தொலையவில்லை. இவனிடமிருந்து வேறு இடத்திற்கு மாறியிருக்கிறது; அல்லது உருமாறி நிலைவேறுபட்டிருக்கிறது. அதுபோலவே பொய் என்பதற்கு நிலையில்லாதது; மாறுதல் உடையது என்பதே பொருளாம்.

மெய் என்றால் என்ன ?

மெய் என்பது நிலையானது; மாறுதல் இல்லாதது. ஒவ்வொரு மனிதனும் அடிக்கடி மாறக்கூடியவற்றை விரும்பாமல், மாறாது என்றும் நிலைத்ததை அடைய முற்படுவதே அறிவுடைமையாகும். இதுபற்றியே, சைவர்கள் நிலைமாறுபடாத திருநீற்றை ஒருநாளில் பலமுறையும் அணிந்து வருகின்றனர். அணியும் போதெல்லாம் நிலைத்த இன்பத்தை அருள இறைவனை வேண்டுகின்றனர். அந்த எண்ணம் மிகமிக, நிலையிலா இன்பவேட்கை குறைந்து, நிலையுடைய பேரின்ப வேட்கை வளர்கின்றது. திருநாவுக்கரசரும், 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா' என்று நெஞ்சை அழைத்து, நிலைபேறான இன்பத்தைப் பெறவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். ஆகவே நிலையான நன்மையைப் பெறவே அறிவுடைய எல்லோரும் விரும்புவர்.

உள், வாய், மெய் :

திரிகரணமாகக் கூறப்பெற்ற மனம் மொழி மெய் என்ற மூன்றனுள், மனத்தை உள்ளம் என்று குறிப்பிடுகிறார்கள். அந்த உள்ளத்தை நிலையிலாச் செயலில் ஈடுபடுத்தாமல் நிலையுள்ள செயலில் ஈடுபடுத்தி உண்மைப்பொருளை அடைய வேண்டும்.

> "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
> உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற திருக்குறளில் உள்ளம் மெய்ம்மையில் நிற்பதாகிய உள் மெய்யின் (உண்மை) உயர்வைக் காண்கின்றோம். வாயினால்

மெய்யான பொருளை எடுத்து ஓதுதலே வாய் மெய் எனப்படுகிறது. மெய்யால் (உடலால்) மெய்யான செயலைச் செய்தலே மெய் மெய் எனப்படுகிறது. மெய்யாக – என்றும் நிலைபேருக உள்ள உயிர்கள் அறியாமையால் கட்டுண்டு கிடக்கின்றன. அவை, நிலைபேறுடையதாய், எல்லாம் வல்லதாய், நுட்பமாய் உள்ள பரம்பொருளை நாள்தோறும் உள்மெய், வாய்மெய், மெய்மெய் – ஆகிய மூன்ருலும் நினைத்து வாழ்த்தி, வழிபடின் அப் பரம்பொருளை அடைந்து இன்புறும். உள்மெய் முதலிய மூன்றினுலும் இறைவனை அடையவேண்டும் என்பதை,

> "பாரார அட்டாங்க பஞ்சாங்க
> விதிமுறையால் பணிந்து, **உள்வாய் மெய்**
>
> நேராகச் சூழ்ந்துடலம் கம்பித்துக்
> கும்பிட்டு நிருத்தம் செய்து
>
> தாராரும் தொடைமிதப்ப ஆனந்தக்
> கண்ணருவி ததும்பநின்று அன்பு
>
> ஆராமை மீக்கொள்ள அஞ்சலித்துத்
> துதிக்கின்ருன் அமரர் கோமான்."

என்ற திருவிளையாடற் புராணப் பாடலால் அறியலாகும். இத்தகைய வழிபாட்டை அனைவரும் திரிகரண சுத்தியோடு செய்து செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமானது திருவருளைப் பெற்று உய்வோமாக.

[19]

குரு - லிங்க - சங்கமம் *

*" ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து "*

[திருஞானசம்பந்தர் திருவவதாரத்தால் உலகம் பெற்ற அளப்பரிய நலன்களும் – மந்திரமாவது இது என்ற விளக்கமும் - மெய்யறிவு தலைப்பட நாம் இயற்ற வேண்டுவன இவை என்பதும் – சீகாழி, குரு-லிங்க-சங்கமத் தலமாகத் திகழ்கிறது என்பதும் இங்கே விளக்கம் பெற்றுத் திகழ்கின்றன.]

சிவஞானப் பாலமுது :

வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை விளக்கம் பெறவும், இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன் திருவவதாரம் செய்தார் திருஞானசம்பந்தர். பல பிறவிகளில் செய்த நல்வினைப் பயனால் மூன்று வயதிலேயே அம்மையளித்த சிவஞானப் பாலமுதுண்டு, உலகம் உய்ந்து கடைத்தேறுதற் பொருட்டுத் தேவாரத் திருமுறைகளை அருளிச் செய்தார். இவர் சிவஞானப் பாலுண்ட இத் திருநாளைப் பன்னெடு நாட்களாகச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகின்றோம்.

ஒருவர் அழுகை பலருக்கு மகிழ்ச்சி :

சமய ஆசாரியர்களைப் போற்றி வழிபடுவது சமய வளர்ச்சிக்கு உறுதுணை புரியும். வையகம் அனைத்தும் துயர்தீர்ந்து மக்கள்

** சீகாழி திருமுலைப்பால் திருவிழாவைத் தொடங்கிவைத்துத் திருவாய்மலர்ந்தருளி 10—4—1973 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

திருமையாதீனம்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

திருமுலைப்பால் விழாவன்று (19—4—72)



பிரம்மதீர்த்தக்கரையில் திருஞானசம்பந்தருக்கு
ஸ்ரீ உமாதேவியர், ஞானப்பால் வழங்கிய காட்சி நிகழ்ந்தபோது
மதுரை, திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் உடன் எழுந்தருளியிருக்க,
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அன்பர்களுக்கு அருளாசி வழங்குதல்

நல்வாழ்வு பெறுதற் பொருட்டு வாழ்ந்தருளிய ஞானசம்பந்தர் போன்ற பெருமக்களை உலகம் நன்றியோடு வழிபடக் கடமைப் பட்டுள்ளது. ஞானசம்பந்தர் அன்று அழுததால்தான் இன்று நாம் மகிழ்ச்சியோடு வாழ்கின்றோம். பிறந்த குழந்தை அழுதால் தான் பெற்றோர் சிரிப்பர். குழந்தை அழமறந்தால் உற்றார் அழுவர் என்று கூறுவார்கள். ஞானசம்பந்தர் அழுகையால் உலகமே மகிழ்ச்சியுற்றது என்று கூறுகின்றார் சேக்கிழார்.

"கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை யொலிபெருக எவ்வுயிரும் குதுகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமிஅழு தருளினார்"

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

குழப்பம் நீங்கத் துணை புரியும்:

ஞானசம்பந்தரைப்பற்றிய நினைவு குழப்ப காலங்களுக்குத் தெளிவுதரும் அரிய சாதனமாகும். அவர் அவதரித்தருளிய காலம் சமயக் குழப்பம், சமுதாயக் குழப்பம், அரசியல் குழப்பம் என்று நாடு பல்வேறு இடர்ப்பாடுகளில் இருந்த காலம். ஞானசம்பந்தர் அவதரித்தபின் அக் குழப்பங்கள் விலகி நாட்டில் தெளிவுநிலை ஏற்பட்டது. ஞானக்கதிரவனாகிய இவர் அவதரித்தருளிய பின்னர்ப் புறச்சமய இருள் விலகி ஓடிற்று. சமுதாயத்தில் ஒற்றுமை, நம்பிக்கை, தொண்டுள்ளம் முதலியன வளர்ந்தன. அரசியல் சூழ்நிலை திருத்தம் பெற்றது. ஞானசம்பந்தரை நாம் போற்றினால் நமக்குள்ள அறிவுக் குழப்பங்கள் மனக்குழப்பங்கள் விலகிப் போகும். இன்றைய வாழ்வியலில் எல்லாத் துறைகளிலும் குழப்பங்கள் ஏற்பட்டு மக்கள் மனவளர்ச்சி சீர்கேடடைந்து வருகின்றது. இக் குழப்பங்கள் அனைத்தும் விலக, மனநலம் சிறக்க ஞானசம்பந்தர் விழா துணைபுரியும்.

ஞானசம்பந்தர் பெயர் முறை:

இத்தகைய விழாக் காலங்களில் ஈடுபடும் அன்பர்களாவது தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொள்ள சில முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். ஞானசம்பந்தர் என்ற பெயரின் பொருளை உணர்ந்து அதைப் போற்றுதற்காகவாவது உறுதி

யெடுத்துக்கொள்ள வேண்டும். 'சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஆகியவற்றை அம்பிகை திருமுலைப்பாலில் கலந்துகொடுக்க உண்ட அவர், ஞானத்தோடு சம்பந்தப்படுத்தப்பட்ட காரணத்தால் சிவஞானசம்பந்தர் ஆயினர். உலகியலில் ஒருவருக்கு ஒருவர் பெண் கொடுத்தும் – கொண்டும் உறவு கொள்கின்றனர். இவ் வகையில் பெண்ணின் பெற்றோர்களுக்கும், பிள்ளையின் பெற்றோர் களுக்குமிடையில் தோன்றும் உறவு முறையைச் சம்பந்தி என்று அழைக்கின்றனர். இவை ஊனோடு (உடலோடு) வரும் சம்பந்தமாகையால் 'ஊனசம்பந்தம்' என்று பேசப்பெறும். இன்றும் ஞானசம்பந்தர் என்ற பெயரையும் சம்பந்தி என்ற பெயரையும் பொருள் உணராமல் வழங்குவோர் பலர் உள்ளனர்; சம்பந்தர் என்பதனைச் 'சம்மந்தர்' என்றும், சம்பந்தி என்பதனை சம்மந்தி என்றும் பகரத்திற்குப் பதில் மகரத்தை இட்டு எழுதுவோரும் பேசுவோரும் உள்ளனர். இச்சொற்களின் பொருளறிந்துத் திருத்தமுற எழுதுவதும் – பேசுவதும் மொழி வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் துணையாகும்.

நிறைமொழிமாந்தர் மறைமொழியே மந்திரம்:

ஞானசம்பந்தர் என்ற பெயர் ஒற்று நீக்க ஐந்தெழுத்தாக விளங்குவது. நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மணிவாசகர் என்ற திருப்பெயர்களும் இவ்வாறே ஐந்தெழுத்துக்களாக விளங்குவன. இவற்றைப் 'பக்த பஞ்சாக்ஷரம்' என்பர். 'ஞானசம்பந்தர் என்னும் நாம மந்திரம்' என்று கூறுகிறார் சேக்கிழார். இதனால் ஞானசம்பந்தராதிய பெருமக்கள் இறைவனாகவே கருதி வழிபடத் தக்கவர்களாக விளங்கியமையும், ஞானசம்பந்தரை வழிபட்டு, நின்றசீர் நெடுமாறரும், நாவுக்கரசரை வழிபட்டு அப்பூதி அடிகளும், சுந்தரரை வழிபட்டுப் பெருமிழலைக்குறும்பரும் சிவப் பேறு எய்தியமையும் இக்கருத்துக்கு அரண் செய்கின்றன. படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களும் இப் பெருமக்கள் வாழ்வியலில் இடம்பெற்ற சிறப்புக்கள் இவர்களது இறைமைத் தன்மைகளை விளக்கி நிற்கின்றன. மந்திரம் என்ற சொல்லுக்கு நினைப்பவரைக் காப்பது என்பது பொருள்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பது தொல்காப்பியம். அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைத் தந்தேவிடும் மொழியுடையார் நிறைமொழி மாந்தராவர். வாழ்க்கையில் நன்மை தீமைகளைச் சமமாக எண்ணி – யாரையும் குறை சொல்லாமல் – யார்மீதும் குறைபட்டுக்கொள்ளாமல் – எதிலும் நிறைவையே காண்கின்ற சிறப்பினால் இவர்கள் இப்பெயர் பெற்றனர். எவற்றிலும் குறை காணும் இயல்பும் யாவரையும் குறையாகப் பேசும் பழக்கமும் உடைய ஏனையோர் குறைமொழி மாந்தராகவே கருதப்படுவர். நிறைமொழி மாந்தர் அருளியவை அனைத்தும் மந்திரங்கள் என்றே மதித்தற்குரியனவாகும்.

மெய்யறிவு எது?

இறைவனை முக்கரணங்களாலும் பக்தி செய்தவர் ஞான சம்பந்தர். உள்ளத்தால் - வாக்கால் - மெய்யால் பொய்யா தொழுகியவர் ஞானசம்பந்தர். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் தூயனவாக இருந்தால்தான் இறைவன் திருவருளைப் பெறமுடியும். "உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன்" என்று வள்ளுவர் கூறுகின்றார். பொய் - மாறுபடுவது, மெய் மாறுபடாதது. நம் உடல் பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் இயன்றது. அவரவர் செய்த கன்மங்களுக்கு ஏற்ப இறைவன் உடல் உறுப்புக்களைத் தருகின்றான். கர்மம் என்பது அவரவர் செய்யும் செயல்களாகும். நல்ல கர்மம் - புண்ணியம். தீயகர்மம் - பாவம். இவ்விருவினைப் பயன்களின்படியே உலகில் உயிர்களுக்கு நன்மை தீமைகள் நிகழ்கின்றன. பாவம் செய்தவர் துன்பமடைவர். புண்ணியம் செய்தவர் இன்பம் அடைவர். முப்பொருள்களின் உண்மை யியல்புகளை உள்ளவாறறிந்து இறைவன் திருவடி அடைதலே உயிர்கள் பெறுதற்குரிய பயனாகும். அத்தகைய இறையருளைப் பெறுதற்கு இறைவழிபாடு இன்றியமையாதது.

" பல்லூழி காலம் பயின்றரனை அர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றே நகும் "

என்று கூறுகின்றவாறு இறைவனை இடைவிடாமல் நினைப்பதும், வாழ்த்துவதும், வழிபடுவதுமே ஞானம் பெறுதற்கு உரிய வழிகளாகும்.

குரு லிங்க சங்கமத்தலம் :

சீகாழி சிறந்த தலம். குரு லிங்க சங்கமத்தலம் என்று இதனைச் சிறப்பித்துக் கூறுவர். தோணியப்பர் - குருமூர்த்தம், பிரமபுரீசுரர் - இலிங்க மூர்த்தம், சட்டைநாதர் - சங்கம மூர்த்தம் என்ற நிலையில் இத்தலம் சிறந்து விளங்குகிறது. ஞானசம்பந்தர் உலகம் உய்தற்பொருட்டுத் தாம்பெற்ற அருளனுபவங்களை நாமும் பெற்றுய்தற் பொருட்டுத் தேவாரத் திருமுறைகளை அருளிச் செய்தவர். அப்பெருமான் திருவருளினால் உலகம் சமய நெறியில் நின்று சிறப்புற வேண்டும் என்பதுதான் நமது எண்ணம்.

துன்பம் வரும்போதுதான் மனிதன் திருந்துகின்றான்; சுடச்சுடரும் பொன்போல் ஒளிபெறுகின்றான். இன்பக்காலத்தும் துன்பக் காலத்தும் இறைவனை மக்கள் மறவாது போற்றுதல் வேண்டும். துன்பம் வரும்போது தளராது நம் பக்தியை, உரம் பெறுமாறு செய்து கோடல் வேண்டும். இத்தகைய அருள்விழாக் களில் ஈடுபடுவதன் மூலந்தான் நம் பக்தி மேலும் உறுதிப்படும். ஞானசம்பந்தர் திருவிழாவை 15 ஆண்டுகளாக ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மிகச் சிறப்பான பல திட்டங்களுடன் அற்புத விளக்க விரிவுரைகளோடு நிகழ்த்தியருளினார்கள். அவர்கள் திருவுள்ளம்போல இவ்விழா, சிறப்புற நிகழ்கிறது.

பண்சுமந்த பாடகர்க்குப் பரிசு :

ஞானசம்பந்தர் விழாவில் ஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பணியை ஞாலமெல்லாம் பரவச்செய்யும் தொண்டரைப்

பாராட்டுவதுதான் ஞானசம்பந்தருக்கு மிக உகந்ததாகும் என்ற முறையில் ஆண்டுதோறும் கயிலைக் குருமணி அவர்கள் திருமுறைப் பண்ணிசைவாணர் ஒருவர்க்குத் "திருமுறைக் கலாநிதி" என்ற பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கிப் பொன்னுடை போர்த்திப் பணமுடிப்பு வழங்குவது என்ற திட்டத்தை அமைத்தருளினார்கள். இதுபோலத் திருவாமூரிலும் அப்பர் சுவாமிகள் குருபூசை விழாவில் திருமுறைப் பண்ணிசை வாணர் ஒருவர்க்குப் பட்டமும் பணமுடிப்பும் வழங்கும் திட்டத்தை வகுத்தருளினார்கள். அன்று இறைவன் திருவீழிமிழலையில் ஞானசம்பந்தருக்கும் அப்பருக்கும் பொற்காசுகள் வழங்கினான். அதனை நினைவுறுத்துவதுபோல திருமுறை ஓதுவார் இருவர் ஆண்டுதோறும் பரிசில்பெற்று வருகின்றனர்.

இந்த ஆண்டு இச்சிறப்பைப் பெறுபவர் இத்தலத்தில் பயின்று தேவகோட்டையில் திருமுறைப் பணி புரியும் திரு. தியாகராசப்பிள்ளை ஆவார். அவருக்குத் "திருமுறைக்கலாநிதி" என்ற பட்டத்தை ஞானசம்பந்தருடைய நல்லாசியோடு வழங்கு கின்றோம். விழாவிற் பங்குகொள்ளும் அன்பர்கள் அனைவரும் எல்லா நலங்களும் பெற்று இனிது வாழ திருஞானசம்பந்தப் பெருமான் திருவருளை எண்ணி வாழ்த்துகின்றோம்.

[20]

மக்களும் - மனமாற்றமும் *

"மனநலம் மன்னுயிர்க்(கு) ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்"

[அறநூல்கள் அளவில்லாதிருந்தும் மக்கள் வாழ்வில் மனமாற்றம் ஏற்படாமை எதனால் என்ற சிந்தனையைத் தூண்டி - அதற்கான விளக்கத்தையும் தரும் இக்கட்டுரை, சைவத்தின் தனிச் சிறப்பையும் - முரண்பாடில்லா அதன் அருள் நூல்களையும் வியப்பதாக அமைகிறது.]


ஆதீனப் பணிகள் :

நமது தருமையாதீனம் இற்றைக்கு நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானால் வில்வாரண்யம் எனப் பெயர்பெற்று விளங்கிய இத்தருமபுரத்தில் தோற்றுவிக்கப் பெற்றது. அவர்களது குருபூஜை விழாவில் அவர்களது இலட்சியங்களை - அவர்கள் போதித்தவற்றை உணர்த்தவேண்டிய கடமை நமக்கிருக்கிறது. அவர்களது உயர்ந்த போதனைகளையும் திருவருள் குறிப்புக்களையும் சமுதாயத்துக்கு உணர்த்தி மக்களை நெறிப்படுத்தவே இவ்வாதீனம் இலங்கிவருகிறது. நாள்தோறும் இவை செய்யப்பெற்றாலும், ஆதிபரமாசாரியரது விழாவை, அவரது அருள்மொழிகளையும் அவரது முன்னோர்களாகிய சமயாசாரியரது நெறிகளையும் விளக்கும் வகையில் கொண்டாடுவதே அவரை நாம் போற்றி நிற்பதாகும்.

---

* *தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவின் அங்கமாக நடைபெற்ற சமயப் பயிற்சி வகுப்பைத தொடங்கிவைத்துத் திருவாய்மலர்ந்தருளி 10—6—1973 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்ற ஆசியுரை.*

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூசை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
சமயப்பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்து
அருளாசி வழங்குதல்
(14—5—1973)

சமுதாய வீழ்ச்சிக்குக் காரணம் யார் ?

அறநெறிகள் நம் முன்னோர்களால் எவ்வாறெல்லாம் போதிக்கப்பெற்றன ? அவர்கள் முயற்சியால் மக்கள் வாழ்வில் மனமாற்றம் ஏற்பட்டதா ? அம்முயற்சியில் அவர்களுக்கு வெற்றி கிடைத்ததா, அல்லது தோல்வி ஏற்பட்டதா என்பன போன்ற செய்திகளை எல்லாம் இப் பத்துநாள் வகுப்பில் நாம் சிந்திக்க இருக்கின்றோம். அறநெறிகள் இந்நாட்டில் வெற்றிபெறவில்லை என்றால், அதற்கு யார் காரணம் ? ஆசிரியர்கள் காரணமாக மாட்டார்கள் ; மக்களே அதற்குக் காரணமாவார்கள் !

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்ற குறட்பாவில் திருவள்ளுவர் அறநெறி வழி ஒழுகாத மக்கள் இனம் கெட்டு அழியும் என்பதை விளக்கியுள்ளார். ஆயினும் மக்கள்மேல் எல்லாக் குறைகளையும் சுமத்த விரும்பவில்லை. ஏனெனில் பெரும்பாலான மக்கள், வாழ்வில் அறநெறிகளை மேற்கொள்ளத்தக்க காலமோ அல்லது சூழ்நிலையோ அவர்களுக்கு அமைவதில்லை. அதனால் வாழவேண்டிய முறையையே அவர்கள் அறிவதில்லை. மணிவாசகப் பெருமான் இதனை விளக்கிப் பேசுகின்றார்.

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே"

நல்வினை நீத்து வல்வினைப்பட்டு வீழ்கின்ற மனித இனம் முன்னேற வேண்டுமானால், நம்முன்னோர்கள் காட்டிய அறநெறி நிற்றலே அதற்குத் துணைபுரியும். அதனைச் சிந்திக்கவே இப் பயிற்சி வகுப்பை நாம் துணையாகக் கொள்ளவேண்டும்.

கேட்டால் கொடுக்கப்படும் :

'தட்டினால் திறக்கப்படும் கேட்டால் கொடுக்கப்படும்' என்ற வாசகத்தைக் கேட்கிறோம் ! கேட்டால் கொடுக்கப்படும் என்பதற்கு இறைவனிடம் ஒரு பொருளை விரும்பிக் கேட்டால் கொடுத்தருளுவான் என எல்லாரும் பொருள் கூறுகின்றனர்,

உண்மைப்பொருள் அதுவன்று; ஏனெனில், இறைவன் திருவருளை அவன் கொடுக்க நாம் பெறவேண்டுமே யல்லாது, நாமே வலிந்து எடுத்துக்கொள்ள இயலாது.

> "தாமே தரும் அவரைத் தம்வலியி ைறக்கருத
> லாமே? இவன் ஆர் அதற்கு"

என்பது திருவருட் பயன். எனவே, "கேட்டால்" என்பதற்கு, 'இறைவன் சொல்லியதைக் கேட்டு நடப்பவர்களுக்கு அவனது அருள் எல்லா நலங்களையும் அளிக்கும். இறைவன் சொல்லியவை, வேதாகமங்கள்; திருமுறைகள்; சாத்திரங்கள். அவற்றில் சொல்லியவற்றை உணர்ந்து அவற்றின்படி நடந்தால் வேண்டிய பயனை வேண்டியவாறு அடையலாம்.

உயிர் வளர்க்கவே கல்வி :

நன்மை தீமைகளினால் விளையும் விளைவுகளைக் கதைகள் வாயிலாக உணர்த்துவன நமது இதிகாச புராணங்கள். இன்றைய கல்வியாவும் வெறும் உடல் வளர்க்கவே உபகாரப் படுகின்றன. 'உயிர், வளர்ச்சிபெற்று உய்யவே கல்வி' என்ற சிந்தனை ஒவ்வொருவரிடமும் வளரவேண்டும்; உயிர் வளர்க்கத் தெரியாத மாந்தர்களை நோக்கி அப்பர் பெருமான்,

> "பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
> நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
> ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
> காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே"

என இரங்கிக் கூறுகின்றார். எனவே உயிர் வளர்ச்சிபெற்று இறையருள் எய்துவதே வாழ்வின் பயன் என்ற நிலை மக்களிடையே வளரவேண்டும்.

விஞ்ஞானத்திற்கிசைந்த சைவம் :

உயிர் ஆணவம் என்ற அழுக்கில் (அறியாமையில்) ஆழ்கிறது அதனை அடிக்கடி அறநெறி – இறையுணர்வு இவற்றால் தூய்மை செய்துகொள்ள வேண்டும். மூக்குக் கண்ணாடியை ஒவ்வொரு முறை கழற்றும்போதும் போடும்போதும் துடைத்துப் போடுகிறோம். அவற்றில் அழுக்கேறிவிட்டால் காணும் பொருள் தெளிவாக விளங்குவதில்லை. அதுபோல் நம் உயிரில் மலமாகிய அழுக்குகள் பற்றி நிற்பதனால் நம் காட்சிகள் திரிபு பட்டு, நம்

வாழ்க்கை வீணாகும். நம் ஆன்ம அழுக்கை நீக்கிக்கொள்ளப் பாடுபடவேண்டும். நீக்கிக்கொள்வோமானால் நாம் பரமேசுவரனோடு சேர்ந்துவிடலாம். இவற்றை எல்லாம் தெரிந்துகொள்ளவே இவ்வகுப்பு இங்கே தொடங்கப்படுகிறது. அரசியல் வாழ்வில் இவர்தாம் எனக்குத் தலைவர் எனத் தெரிந்து தேர்ந்துகொள்ளுகின்றோம். அதுபோலவே, ஆன்மீகத்துறையிலும் இவர்தாம் தலைவர் என ஒருவரை நாம் தேர்ந்துகொள்ளவேண்டும். நமக்குத் தலைவர்கள் சமயாசாரியர்களே, நமது பண்பாட்டிற்கும், இனத்திற்கும், மொழிக்கும் வெள்ளம்போல் பெருந் தீங்கு வந்தபோது அதனைத் தடுத்து நிறுத்தி அரண்கோலிக் காத்தவர்கள் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஆவார்கள். இந்த நாட்டிற்கே ஒரு பண்பாடு உண்டு என்பதனைத் தெளிவுபட விளக்கிய பெருமை அவர்களுக்கு உரியது. சந்தானசாரியர்கள் சமயத்தை விஞ்ஞான அடிப்படையில் வரையறுத்துக் காட்டியவர்கள். தற்கால விஞ்ஞானக் கொள்கைகளுக்கு இவர்களது கருத்து மிகவும் இசைந்து வருவதைக் காண்கிறோம்.

முரண்பாடில்லாச் சமய நெறி :

சமய இலக்கியங்களிலே அருளாளர்களது அருளனுபவங்கள் வெளியிடப்படும்போது, நமது வளர்ச்சியின்மை காரணமாக அவற்றில் முரண்பாடு உள்ளதுபோலத் தோன்றும். 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' என்ற மாணிக்கவாசகப்பெருமான், 'கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' என்கின்றார். மேம்போக்கில் இது முரண்பாடுபோல் தோன்றலாம்; இதற்கு விளக்கம் தருவனவே சாத்திரங்கள். கண்டதும் — பேசியதும் அனுபவித்ததும் அனுக்கிரகித்ததும் உண்மை; ஆனால் முழுதுங் காணவில்லை என்பதே உண்மை. உயிர்கட்கு இறைக் காட்சி கிட்டினும் அதுவே அதன் எல்லையன்று என்பதைச் சாத்திரங்கள் விளக்கும் அருமைப்பாட்டினைக் காணலாம். எனவே, சமய இலக்கியங்களில் சாதாரண மாணவர்கட்கு முரண்போலத் தோன்றுவன சாத்திரப் பயிற்சியுடையவர்கட்கு உண்மையாக விளங்கும். அத்தகைய சமயப் பயிற்சி இங்கு நடைபெற இருக்கின்றது. இதில் கலந்துகொள்பவர்கள் இதன்கண் ஆசிரியர்களாக வருவோர் கூறும் சாத்திர தோத்திர உண்மைகள் பலவற்றைக் கருத்தூன்றிக் கேட்பார்களாயின் அறிவு விளக்கம் மட்டுமன்று; இறையருள் நலத்தையும் இனிதுபெறுவர். அங்ஙனம் பெற்றுப் பயனடைய நம் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

[21]

தகுதியும் - தலைமையும் *

" ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை "

[ஊக்கத்தோடு தன்னை உயர்த்திக்கொள்ளும் போது – தலைமையும் – பதவியும் ஒருவனை நாடிவரும் என்பதனையும், நாடு வளம்பெற மக்கள் தொண்டு நெறிபூண்டிலங்க வேண்டுமென்பதனையும் – பிற வற்றையும் இக்கட்டுரை தொகுத்து வழங்குகிறது]

திருவருள் வாய்ப்பு :

திருக்கயிலாய பரம்பரை என்பதற்கு ஏற்ப நமது கயிலைக் குருமணி அவர்கள் திருக்கயிலாய யாத்திரை மேற்கொண்டு அதனைத் தரிசித்தார்கள். நமக்குக் கயிலாயம் தரிசிக்கும் திருவருள் வாய்ப்பு வாய்க்காவிடினும், அப்பர் பெருமானுக்குத் திருக் கயிலாயக்காட்சி வழங்கிய தென்கயிலாயமாகிய – திருவை யாற்றுத்தலத்தைத் தரிசிக்கும் திருவருள் வாய்ப்பு, தருமையாதீன அருளாட்சி ஏற்ற ஒன்றேமுக்கால் ஆண்டிற்குப்பின் இன்று வாய்த்திருக்கிறது.

விழாச் சிறப்பு :

திருவையாற்றின் சிறப்பினை நீங்கள் அறிவீர்கள். நந்தியெம் பெருமான் அவதரித்து, ஞானோபதேசம்பெற்று, மணங்கொண்ட சிறப்பினையும், ஏழூர்ப்பெருவிழாச் சிறப்பினையும் அறிந்து போற்ற

---

* *திருவையாற்று வரவேற்பு வழிபாட்டில் திருவாய்மலர்ந்தருளி* 10—9—1973 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.

வேண்டும். நந்தியெம்பெருமானது விழாவே இவ்வூர்க்குத் தனிச் சிறப்பு. விழாக்களை அதன் உட்பொருள் தெரிந்து கொண்டாட வேண்டும். விழாக்கள் நம்மையும், நம் உணர்வுகளையும் வளர்க்கவே திருக்கோயில் சார்பில் கொண்டாடப் படுகின்றன. விழா என்றால் (இரவில்) விழித்திருந்து கொண்டாடுவது என்பது பொருள். சைவசித்தாந்தத்தில் உயிர்தங்கும் நிலைகளை ஐந்தாகக் கூறுவது மரபு. அவற்றுள் முதல்நிலை ஜாக்கிரம் எனப்படும். ஜாக்கிரம் என்பது விழிப்புநிலை. இந்த ஜாக்கிரம் என்பதிலிருந்தே ஜாக்கிரதை என்ற சொல் வருகிறது. எனவே விழா என்பதற்கு விழிப்பாக இருந்து கொண்டாடுவது என்றும் பொருள் கூறலாம். விழாக்கள் மக்களின் தகுதிகளுக்குத் தகுந்தாற்போல் பலவகையாகக் கொண்டாடப்பெறும். மாரியம்மன் விழா; கரக ஆட்டம், கஞ்சிவார்த்தல் போன்ற விழாக்களும், விழா நிகழ்ச்சிகளும் எளியமக்களுக்கு மகிழ்ச்சி தருவன. ஐயாற்றிற்குச் சிறப்பான விழா நந்தியெம்பெருமான் விழாவே யாகும். இவை போன்ற விழாவை அனைவரும் நன்கு உணர்ந்து கொண்டாட வேண்டும். சிவபெருமானுக்கு முதல் சீடர் நந்தியெம்பெருமான், ஆசாரிய அபிடேகம் பெற்றபின்னரே 'அபிடேக நந்தி' எனப்பெற்றார். அவர்வழி உபதேசம் பெற்றவர்களே திருக்கயிலாய பரம்பரையில் வந்த அருளாளர்கள். அவர்களது ஞானபீடங்களே ஆதீனங்கள் ஆகும்.

பூமி அன்னை :

ஒருமனிதன் தனது நாடு எந்த நாடாயினும், அதனைத் தாயாக-தாய்நாடாகப்போற்றி வணங்கவேண்டும். மண் - நம்மையெல்லாம் பெற்று - போற்றி - வளர்க்கிறது. மண் பெண்ணைப் போன்றது. ஈன்ற தாய்க்கும் தாயாக விளங்குவது பூமி. தாய் ஈன்றெடுத்து ஒரு பருவம் வரை நம்மைப் பாலூட்டி வளர்க்கிறாள். அதற்குப் பிறகு பூமி அன்னை, நெல்லாக, சோளமாக, கம்பாக விளைத்துத் தர அதனை உண்டு வாழ்கின்றோம். உண்மையாக நம்மை வளர்ப்பவள் பூமித்தாய்தான். தாய்போலத் தாய்நாட்டிடமும் பற்று வைக்கவேண்டும்.

பெண்மைச் சிறப்பு :

பெண், உடலாலும், மனத்தாலும் சீலமுடையவளாக விளங்க வேண்டுமென நம் நாட்டினர் அழுத்தமாகச் சொல்லிவைத்தனர்.

இதன் ஆழம் புரியாதவர்களில் சிலர் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா என வினு எழுப்புகின்றனர். யாருடைய சீலம் கெட்டால் உலகத்தின் சீலம் கெட்டொழியுமோ அவர்கள் சீலமுடையவர்களாக இருக்கவேண்டுமென நம் முன்னோர்கள் வலியுறுத்தினர். இதனை உளங்கொண்டே பெரியபுராணம் பாடவந்த சேக்கிழார், சிறுத்தொண்டர் வரலாற்றில் அவர் மனைவியார் திருவெண்காட்டு நங்கையைக் குறிக்கும்போது 'மனையறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை' எனக் குறிப்பிட்டார். இல்லற விருட்சத்திற்கே வேராக விளங்குபவர்கள் பெண்கள். வேர் புழுத்துக்கெட்டால் மரமே அழிந்துவிடும். மரமோ, கிளைகளோ கெட்டால் மீண்டும் துளிர்க்கவும் – வளரவும் இடமுண்டு. அதனுல்தான் வேராக விளங்கும் பெண்மையின் சீலம் கெடுமானுல் அக்குலமே கெட்டழியும். மரமாக – கிளையாக விளங்கும் ஆடவர்கள் சீலங்கெடின் அதனுல் வரத்தக்க இழப்பைச் சீர்செய்துகொள்ள முடியும். எனவேதான், தமிழர்கள் பெண்மையைப் பேணிப் பாதுகாத்துப் போற்றுவதைப் பண்பாகவும், மரபாகவும் கொண்டிருந்தனர்.

நாடு வளம்பெற :

இந்தப் பூமாதேவிக்கு-ஈன்றெடுத்த பெற்ரேர்களுக்கு-நம்மை வாழ்விக்கும் சமுதாயத்திற்கு நம்மால் என்ன பயன் என்று ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவேண்டும். சிந்தித்தால் இந்த நாடும் வாழும்; நாமும் வாழ்வோம். எந்த ஸ்தாபனமாக இருந்தாலும் அதில் பணியாற்றும் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டுவது ஒன்று உண்டு. ஸ்தாபனத்தால் நாம் உயர்ந்தோம்; நம்மால் ஸ்தாபனத்திற்கு என்ன பயன் என்பதைச் சிந்தித்தால் இந் நாட்டில் நிலவும் பூசல்கள், பிணக்குகள், கட்சித்தாவல்கள் அத்துணையும் நீங்கி நாடு வளம்பெறும் என்பது நிச்சயம். இதையே மறைந்த அமெரிக்க நாட்டு ஜனுதிபதி, ஜான். கென்னடி அவர்களும், 'நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே! இந்த நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்பதை முதலில் சிந்தித்துப்பார்' எனக் குறிப்பிட்டார்.

தகுதியைத் தேடினால் :

ஒவ்வொரு மனிதனும் தன் தகுதியை உயர்த்திக்கொள்ள வேண்டும். மகாவித்துவான். மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தகுதியான வேலை ஒன்றிற்குச் சிபாரிசு செய்யும்படி வேண்டியபோது, பிள்ளை அவர்கள், உன் தகுதியை உயர்த்திக்கொள் – பதவி உன்னைத் தேடிவரும் என்று கூறினார்களாம். இருளை விலக்கவேண்டுமென்றால் விளக்கு ஏற்றுவது ஒன்றே வழி. நம்முடைய அருளாளர்களும் இக்கொள்கைவழி நின்றவர்கள். ‘இருக்குமிடந் தேடி என்பசிக்கு அன்னம் உருக்கமுடன் தந்தால் உண்பேன்’ என்ற உறுதி அவர்களிடம் காணப்பட்டது. தகுதி உயர, உயிர் பண்பட உழைப்பையும் முயற்சியையும் கவனமாகச் செலுத்துதல் வேண்டும். இந்நிலை அரசியல், சமுதாய, ஆன்மீகத்துறையினர்களுக்கும் பொருந்தும். தொண்டனுக்கு உள்ள தகுதி தலைவனுக்கும் வேண்டும். கீழிருந்தே மேல் வரவேண்டும். கீழிருந்து மேலே வருபவர்கள் பல நிலைகளிலும் ஈட்டிய அனுபவத்தைத் துணையாகக் கொண்டு உயருகிறார்கள், அப்போதுதான் பலரையும் அனுசரித்து நலஞ்செய்ய முடியும்.

தொண்டு நெறி :

எல்லோரும் மனிதர் தாம் என்று கருதுவது தவறு. மனிதரிலும் விலங்குகள் உண்டு. சிலருக்கே முழுத் தகுதிகளும் அமைகின்றன. தொண்டு மனப்பான்மையே மனிதனை உயர்த்தும். சிறந்த அடியார்கள் கூடத் தொண்டு செய்யும் பேற்றினையே இறைவன் பால் வேண்டுகின்றனர். படியாய்க்கிடக்கவும், மீனாய்ப்பிறக்கவும் ஆழ்வார்கள் வேண்டுவதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எங்களைப்போன்ற ஆதீன மகாசந்நிதானங்களுக்கும் உலகைப் பற்றிய கவலைகள் உண்டு! அல்லும் பகலும், அனவரதமும் நாடும், நாட்டு மக்களும் நன்னெறியில் செல்லவேண்டும் என்பதுதான் அந்தக்கவலை. எங்கள் கவலையும் பிரார்த்தனையும் மக்கட் சமுதாயத்தை நன்னெறிப்படுத்தும் என்பது உறுதி. மனிதன் மனிதனாக வாழவேண்டும். ஏன், தெய்வமாகவும் வாழலாம் என்பதே அருளாளர்கள் கண்ட உண்மை.

யார் மனிதன் ?

பிரஞ்சு நாட்டு அறிஞர் ஒருவர் பகலில் விளக்கேற்றிக் கொண்டு தெருவில் எதையோ தேடினார். என்ன தேடுகிறீர்கள் என வினவியபோது, மனிதனைத் தேடுகிறேன் என்றாராம். மனித வடிவம் பெற்றவர்கள் எல்லாம் மனிதர்கள் ஆகிவிடுவதில்லை. இதனையே தொல்காப்பியரும் 'உயர்திணை என்மனார் மக்கள்' எனக் குறிக்காது, 'மக்கள் சுட்டே' எனக் குறித்தார். இராமலிங்க அடிகளும் 'மனிதருள் கல்லுண்டு' எனத் தொடங்கி 'மனிதருமுண்டு' என முடித்தார்கள். மனிதர்கள் மற்றவர்களுக்கு உதவிசெய்து வாழவேண்டும். இவ்வுணர்ச்சி இல்லாதவர்கள் மனிதராகமாட்டார்கள்.

புறமும் – குறளும் :

நல்லது ஒன்றும் செய்ய இயலவில்லை என்றாலும் பரவாயில்லை ; தீமை செய்யாதிருத்தலே அறமாகும். இதனை,

> "நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
> அல்லது செய்தல் ஓம்புமின்"

என்று புறநானூறு வலியுறுத்திச் சொல்கிறது. அறம் என்பது செய்ய முடியாத கடினமானதல்ல. மனத்தில் மாசில்லாதிருத்தலே அறத்திற்கு அஸ்திவாரம்.

> "மனத்துக்கண் மாசில னாதல் அனைத்திறன்
> ஆகுல நீர பிற"

என்பது திருவள்ளுவர் வாக்கு.

பணியும் பலனும் :

இங்கே நீங்கள் தந்த வரவேற்பில் நாம் பல பணிகளைச் செய்ததாகக் குறிப்பிட்டீர்கள். இவற்றால் பயனடைந்தது யார் என்று தெரியுமா? பணிகளால் பயனடைந்தது நாம்தான்.

பணிகளால் நாம் உயர்ந்தோம். கல்லோடு சேர்த்துத் தீட்டுகிற போது கத்தி கூர்மை பெறுகிறது; கல்தேய்கிறது. தொண்டு, மனிதர்களை எப்போதும் உயர்த்தவேசெய்யும். நாம் இதுவரை செய்த பணிகளால் பல பண்பாடுகள் வளர்ந்தன. சுடச்சுடப் பொன் ஒளிவிடுவதைப்போல், வேலைகளை இயற்ற இயற்ற அனுபவம் பெருகுகிறது.

நான்கு நெறிகள் :

தொண்டின் படிமுறை வளர்ச்சியையே நம்முன்னோர்கள் சரியை. கிரியை, யோகம், ஞானம் என்றனர். தொண்டு நிலையில் (சரியை) தொடங்கியே அறிவுநிலையைப் (ஞானத்தை) பெற வேண்டும். அறிவு வளர்ச்சிக்கு உழைப்பு வேண்டும். சரியை என்பது தொண்டு. கிரியை என்பது தொண்டும் – அறிவும் இணைந்தது. யோகம் என்பது சிறிது உழைப்பும் அறிவு மிகுதியும் கொண்டது. ஞானம் என்பது தூய அறிவுநிலை. எனவே, முதல் மூன்று நிலைகளிலும் உழைப்பு இணைந்திருப்பதை நாம் உணரவேண்டும். வஞ்சகமில்லாது உழைக்க ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

வாழ்த்து :

இன்று இங்கே இப்பெரிய விழாவினை ஏற்பாடு செய்து, வரவேற்பளித்து மகிழ்ந்த அன்பர்கள் அனைவரும், திருவருள் மேலும் மேலும் நிறைந்து நல்ல சிந்தனைகள் பெற்றுச் சிறக்க வேண்டி ஐயாறப்பர் அடிமலரைச் சிந்தித்து வாழ்த்துகிறோம். ஐயாறன் அடித்தலம் அனைத்தும் தரும்.

[22]

நன்றுடையான் - தீயதில்லான் *

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது "

['நன்றுடையானை' என்று தொடங்கும் திரு-ஞானசம்பந்தரின் தேவாரத்தை அழகுறவிளக்கி, அதுவே ஆசீர்வாதமாகத் திகழ்வதையும் புலப்படுத்தி, உலகமே ஆண் பெண் பகுப்புடையதாக விளங்குவதை எடுத்துக்காட்டி - நுட்பமான சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் சிறப்பினை இக்கட்டுரைக்கண் காண முடிகிறது]

நமது விருப்பம் :


திருச்சிராப்பள்ளிக்குரிய சிறப்பினையும், தருமையாதீனத்திற்கும் - திருச்சிராப்பள்ளிக்கும் உரிய தொடர்புகளையும், ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் அருளினையும் வரவேற்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தீர்கள் ! அவற்றுள் நம் சிந்தனையைத் தூண்டிய ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறுவதே நமது விருப்பம்.

ஆசீர்வாதமாவது யாது ?

திருஞானசம்பந்த சுவாமிகள் 1300 ஆண்டுகளுக்கு முன் இங்கே எழுந்தருளியிருக்கும் பெருமானைத் தரிசித்துப்

** திருச்சிராப்பள்ளிச் சிவநேயச் செல்வர்கள் நிகழ்த்திய வரவேற்பு வழிபாட்டில் திருவாய் மலர்ந்தருளி 10—9—1963 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

திருச்சிராப்பள்ளி — மலைக்கோயில்
நூற்றுக்கால் மண்டபத்தில்
சிவநேசச் செல்வர்கள் நிகழ்த்திய
குருவழிபாட்டின்போது



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்
கொலுவில் அமர்ந்து காட்சி வழங்குதல்
(19—8—1973)

பாடியுள்ளார். அவர் அருளிய பதிகத்தின் ஒரு பாட்டு அனைவருக்கும் பொருத்தமான ஆசீர்வாதமாக அமைகிறது. நல்ல கருத்துக்களை நம் உள்ளத்தில் பதியவைப்பதே ஆசீர்வாதம். உயிர்கள் உய்திபெற்று வளர்வதற்கான நல்ல உணர்வுகளைக் கூறும் இத்தலத் தேவாரப் பதிகத்தின் முதற்பாடலில் ஞானசம்பந்தர் இரண்டு விஷயங்களை நமக்காக அருளிச் செய்துள்ளார். இறைவனை எத்துணை முயன்றாலும் நாமே சென்று அடைவது என்பது முடியாது. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்பார் மாணிக்கவாசக சுவாமிகள். இக்கருத்தையே ஞானசம்பந்தப் பெருமானும்,

"நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன் உள்ளம் குளிருமே"

என்று அருளிச்செய்கிறார். இப்பாடலில் திருஞானசம்பந்தர் அருளியிருக்கும் ஆசீர்வாதத்தைப் புரிந்துகொள்வதே இவ்வரவேற்பிற்குப் பயனாக அமையுமென்று கருதுகிறோம்.

அறவடிவினன் இறைவன் :

இறைவன் நன்மையே நிறைந்தவன் - தீமையே இல்லாத தன்மையன். மனிதர்களில் நன்மையே நிறைந்தவர்கள் எவரும் இலர். தீமையே செய்யாதவர்களும் உலகில் இல்லை. வெளிப்படையாகச் சிலரிடம தீமை தெரிவதில்லை. பேச்சிலும், செயலிலும் தீமை காணப்பட்டால் அதனைத் தண்டிக்கச் சட்டங்கள் இருக்கின்றன. நெஞ்சால் தீமை நினைப்பாரைத் தண்டிக்க முடியாது. நமது முன்னோர்கள் சமயம் - சமயம் என ஒன்று வைத்துக் கடவுள் - கடவுள் என்று கூறுவதெல்லாம் நாம் இந்நெஞ்சத் தீமையை மாற்றி உய்தி பெறுவதற்கேயாகும்.

நன்றுடையானைத் - தீயதில்லானைப் பெருமான், நாம் கண்டு வழிபடற்கென்றே - சிராப்பள்ளிக் குன்றுடையானை எழுந்தருளியுள்ளான் என்கின்றார் ஞானசம்பந்தர். அவன் அறமே வடிவினனாக - தீமையற்றவனாக விளங்குகின்றான் என்பதற்கு அவன் வாகனமாக இவர்ந்துவரும் காளையே சான்றாகும். அறமே வடிவமான காளை அவனுக்கு வாகனமாக

அமைவதோடன்றி அவன் கொடியிலும் இடம் பெற்றுள்ளது. இவ்வுயர்ந்த தத்துவத்தை நமக்கு அறிவுறுத்தவே 'நரை வெள்ளேறு ஒன்றுடையான்' எனப் பிள்ளையார் குறித்தருளுகின்றார்.

ஆண் பெண் பகுப்பு :

உலகம் முழுவதும் ஆணும் பெண்ணுமாக விளங்குவதை ஊடுருவிப் பார்ப்பவர்கள் நன்கு அறியமுடியும். எல்லார் உடலிலும் ஆண் பெண் கூறுபாடு உண்டு. வலப்பாகம் ஆண் தன்மை உடையது; வலியது. இடப்பாகம் பெண்மைக்குரியது. மென்மையானது. இதனை நாம் சிறிதும் உணர்வதில்லை. மின்சாரத்தில் கூட இவ்விரு திறமும் இருக்கிறது. இதனையே 'Passitive' என்றும் 'Negative' என்றும் கூறுகின்றனர். தமிழில் பாயும் சக்தி என்றும் தாங்கும் சக்தி என்றும் இவற்றை விளக்குவர். இவ்விரண்டு சக்திகள் இல்லாமல் உலகம் இல்லை. ஓர் இரும்பினை வெட்டவேண்டுமானால் ஒரு பட்டடையின்மேல் வைத்து வெட்டுகிறோம். அங்கே பட்டடை, தாங்கும் சக்தி, மேலிருந்து அடிக்கப் பயன்படும் சுத்தி, பாயும் சக்தியாக அமைகிறது. பெரிய பொருளை எடுக்க இரு கைகள் தேவைப் படுகின்றன. சிறிதாயினும் இருவிரல் சேர்ந்தே ஒன்றினைப் பற்ற இயல்கிறது. சைவ-சித்தாந்தம் மூன்று பொருள்களைச் சிறப்பாக விளக்குகிறது. பதி, பசு, பாசம் என்பன அவை. இவற்றையே கடவுள், உயிர், தளை என்றும் கூறலாம். இம் மூன்று பொருள் களும் ஆண் பெண் என்ற பாகுபாட்டோடு விளங்கி நிற்பதனை ஆழ்ந்து நோக்குபவர்கள் கண்டுகொள்ள முடியும். கடவுள் சிவ-சக்தியாக விளங்குகிறார். உயிர்கள் ஆண் - பெண் எனப் பாகுபட்டு நிற்கின்றன. தளை எனப்படும் அறிவற்ற ஜடம் தாங்கும் சக்தி – பாயும் சக்தி என இரு கூறுபட்டு விளங்குகிறது. இவ்வுண்மைகளை எல்லாம் ஆய்ந்தறிந்தே ஞானசம்பந்தர் இத் தலத்திறைவனைப் பாடும்போது 'உமையொரு பாகம் உடையான்' என விளக்கிச் செல்கிறார்.

கருணை வெளிப்பாடு :

அடுத்து ஞானசம்பந்தர் 'சென்றடையாத திருவுடையான்' என இறைவனைக் குறித்தருளுகின்றார். ஆணவ முனைப்பாலோ,

உடல் வலியாலோ — அறிவுத் திறத்தாலோ இறைவனைச் சென்றடைதல் என்பது முடியாது. அவன் அருள் இருந்தாலன்றி உயிர்கள் தாமே முயன்று அவன் திருவடிகளைச் சேர்வதென்பது இயலாது. அவ்வருள் எல்லார்க்கும் ஒரு சேரக் கிடைத்துவிடும் என்பதில்லை. உயிர்களின் பக்குவம் அறிந்து இறைவன் அருள் செய்கின்றான். குழந்தையின் தேவையை உணர்ந்து அதற்கு வேண்டுவனசெய்யும் தாய்தந்தையரைப் போன்று இறைவனது கருணையும் வெளிப்படுகிறது. சிலவற்றைச் சிலருக்கு இறைவன் தராமைக்குக்காரணம் அவ்வுயிர்கள் பக்குவப்படாமையே ஆகும். நம்முடைய குறைகளையும் குற்றங்களையும் உணரத்தக்க நிலையில் நாம் இல்லை. இதனால்தான் இறைவனது அருளிப்பாட்டினை நம்மால் முற்றும் உணர்ந்துகொள்ள முடியவில்லை. இவற்றையெல்லாம் உளங்கொண்டே 'சென்றடையாத திருவுடையான்' என ஞானசம்பந்தர் குறித்தருளுகிறார். எனவே, இத்திருப்பாடலிலிருந்து ஞானசம்பந்தர் அருளும் ஆசீர்வாதமாக நாம் கொள்ளத்தக்கது மனிதர்களுள் தீமையே அற்ற நன்றேயுடையவர்கள் எவருமிலர் என்பது ஒன்று; பிறிதொன்று, இறைவன் உயிர்களின் பக்குவமறிந்து அருள் செய்தாலல்லது உயிர்கள் தாமே அவன் அருளை அடைய முடியாது என்பது. இந்த இரண்டு செய்திகளும் நமக்குப் புரிந்துவிடுமானால், உலகியல் குழப்பங்கள் யாவும் தீர்ந்துவிடுமென்பது உறுதி.

உள்ளக்குளிர்ச்சி :

ஒரு நல்ல மனிதரைப்பற்றிப் பேசுவது, நினைப்பது, விழா எடுப்பது யாவுமே மனதிற்குக் குளிர்ச்சி தருவனவாகும். தீயோர்களுக்குச் செய்வதோ நெஞ்சில் எரிச்சலை விளைவிக்கும் என்பது உலகியற்கையாகும் இவற்றை எல்லாம் உள்ளடக்கியே 'சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என் உள்ளம் குளிரும்' என்றார். இறைவன் புகழைப் பேசுவதும் - சிந்திப்பதும் நெஞ்சிற்குக் குளிர்ச்சி தரும் என்பதைச் சொல்லால் விளக்க முடியாது; அனுபவத்தால்தான் உணரமுடியும்.

நல்லோர் கடன் :

தீயோர்களிடமிருந்து நல்லோர்களைக் காப்பாற்றவேண்டுவது நல்லவர்கள் அனைவருக்கும் இன்றியமையாக் கடமையாகும். இதனைச் செய்யாவிடில் நான்கு தீயவர்களால் நாலாயிரம் நல்லவர்களுக்குத் தீங்கு நேரும்; அவர்களைத் திருத்தி நல்லவர்க

ளாக்கவேண்டுவதும் தேவையேயாகும். காவிரியோடு சாக்கடை கலக்கிறது. காவிரி தன் தூய்மையால் சாக்கடையின் தன்மையை மாற்றிப் புனிதமாக்கி விடுகிறது. நல்லவர்களைத் தீயவர்கள் கெடுக்கமுடியாது என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

அர்ச்சகர் நிலை :

சிவாசாரியர்கள் சார்பில் இங்கே வரவேற்பளிக்கப்பட்டது. ஆரம்பக் காலத்தில் தொண்டாகத் தொடங்கியன யாவும் பிற்காலத்தில் தொழிலாக மாறிவிட்டன. வழக்குறைஞர் தொழிலும் ஆரம்பக் காலத்தில் தொண்டாகத் தொடங்கியது. தங்கள் தொழிலுக்காக அவர்கள் ஊதியம் பெறுவதில்லை. அணிந்திருக்கும் பெரிய மேலங்கியின் பின் பக்கம் ஒரு பை இருக்கும். கட்சிக்காரர்கள் விரும்பினால் சிறிது தொகையை அப் பையுள் போட்டுவிட்டுப் போவது வழக்கமாக இருந்துவந்தது. இன்றோ அத்தொழில் வருமான நோக்கம் கொண்டதாக மாறி விட்டது. அது போலவே திருக்கோயில்களில் அர்ச்சிக்கும் சிவாசாரியர்களும் தொண்டாகத் தொடங்கியது தற்போது தொழிலாக மாறிவிட்டது. தத்துவ ரீதியில் கோயில்களில் இறைவன் திருமேனியைத் தீண்டி அர்ச்சிக்கும் சிவாசாரியர் களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூடாது. ‘பிராமணன் சம்பளம் வாங்கினால் பிராமணத்துவமும் ஆசார்யத்துவமும் போய்விடும்’ என்று ஒரு நீதி சுலோகம் கூறுகிறது. அவர்களது உலகியல் வாழ்விற்குத் தேவையானவற்றை உணர்ந்து மக்கள் அவர்களுக்குக் காணிக்கையாக வழங்கவேண்டும். சிவாசாரியர்கள் பட்டினி கிடப்பது கூடாது. அவர்கள் வளமாக வாழ பக்தர்களும், நிர்வாகிகளும் நன்கு போற்றுதல் வேண்டும். இருசாராரும் கடமை யுணர்ச்சியோடு கூடிய தகுதியுடையவர்களாக இருத்தல் அவசியம்.

கடமைப் பகுப்பு :

மக்கள் பணியும் இறைவன் பணியும் ஒன்றே என்று சொல்கின்றனர். இதற்குப் பொருள் என்ன? அவரவர்களும் தத்தமக்குரிய பணிகளை ஒழுங்காகச் செய்யவேண்டும் என்பதே யாகும். ஆண்டவன் நேரே ஒவ்வொன்றுக்கும் வந்து அருள் செய்வான் என்பதில்லை. ஆற்று நீர் வாய்க்கால்வழி வந்து சிறு கிளைகளாக ஓடி மடைவழியாக வயலுள் பாய்வது போல, அவரவர்

களும் இயற்றும் கடமை வழியே இறைவன் அனைத்துயிர்களுக்கும் அருள்கின்றான். ஒவ்வொருவரும் தத்தமக்கு இயன்றவகையில் கடமையாற்ற வேண்டும். எல்லோரும் ஒழுங்காகச் கடமையைச் செய்தால் சுபிட்சமாக இருக்கலாம். இதுவே 'சோஷலிசம்'. கடமையில் கடவுள் இருக்கிறான். இதனையே நமது புராண இதிகாசங்கள் கதைகளாகக் கூறுகின்றன. ஆனால், அதன் உட்பொருளை நாம் உணர்ந்து கொள்வதில்லை, அகத்தியர் இறைவன் திருமணக் காலத்தில் தென்னாடிற்குச் செல்ல இறைவனால் பணிக்கப்பட்டதும், அக்கடமைவழி நின்றார்க்கு இறைவன் இருந்த இடத்தில் மணக்கோலம் காட்டியதும் இதற்குச் சான்று பகர்வனவாகும். பணி யாதாயினும் அதன் மாட்டுச் சிறுமையில்லை. எல்லாப் பணிகளையும் செய்த காந்தியடிகள் பெருமை பெற்றார். பெண்களைப் பொறுத்தவரை கணவன் பணியே அவர்களுக்குக் கடவுள் பணியாகும் என்கிறார் திருவள்ளுவர்.

கருணை வெள்ளம் :

இறைவன் நுட்பமாக - கண்ணுக்குத் தெரியாத நிலையில் இருந்து அருள்கிறான். நாம் செயலற்று இயலாத நிலை அடையும் போது இறைவன் முற்பட்டுக் காத்தருளுகிறான். இறைவன் தந்த உடல் இரும்பினும் வலியது. இரும்புகூட சில ஆண்டுகளுள் துருப்பிடித்துக் கெடுகிறது. பல்லாயிரக்கணக்கான நுண் அணுக்களால் இவ்வுடலை உள்ளிருந்து இயக்குபவன் இறைவன். தாயாகவும் எழுந்தருளிவந்து அருள் வழங்கும் பெருமான் இறைவன். கடமையுணர்வும் பக்தியும் இருக்குமானால் பள்ளத்தை நோக்கிப் பாயும் தண்ணீர்போல இறைவனது கருணைப் பெருவெள்ளம் நம்மிடம் பாய்ந்தோடிவரும்.

வாழ்த்து :

அன்போடும், பரிவோடும், ஆர்வத்தோடும் ஒரு தத்துவத்தையும் - சமய ஒழுக்கத்தையும் - மொழியையும் - பண்பாட்டையும் பேணிக்காத்துவரும் ஒரு நிறுவனத்தை நம் உருவத்தில் இன்று இங்கே வரவேற்றுப் பாராட்டிப் போற்றியுள்ளீர்கள் என்றே கருதுகின்றோம். இவ்விழாவில் பங்கேற்ற அன்பர்களுக்கு நலம்பல பெருகவும், நாடு செழித்து மக்கள்நிலை உயரவும் வேண்டித் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்,

[23]

தமிழறியும் பெருமான் *

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு "

[செந்தமிழ்ச் சொக்கனுக்கு உகந்த ஆவணிமூலத் திருநாளின் சிறப்பையும் - செந்தமிழ் சுவைமாந்திச் சிறந்த ஆலவாய்ப் பெருமானின் தமிழன்பும் - இந்தத் திருநாள் தருமையில் சிறப்பாகக் கொண்டாடப் பெறுதற்குரிய காரணமும் இக்கட்டுரைக்கண் விளக்கப் பெற்றிருக்கின்றன]

கருணைத் திருநாள் :

" ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரியுமையாள்
அத்தனே ஆலவா யா "

இன்று ஆவணி மூலத் திருநாள் ; தருமையாதீனத்தின் பெருநாள். இந்நாள் நாம் உயிரெனப் போற்றத்தக்கது. உயிர்க்கு உயிராக விளங்கும் சொக்கநாதப் பெருமான் அடியார்களுக்குப் பெருங்கருணை பாலித்தநாள் – ஆவணி மூலத் திருநாள்.

அருளியலும் உலகியலும் :

இறைவன் அடியார்களுக்கு இரங்கி அருள்பாலிக்கும் பெருங் கருணையுடையவன். குதிரை வாங்கச் சென்ற மாணிக்கவாசகர்

---

* *தருமையாதீன ஆவணிமூலத் திருநாளில் திருவாய்மலர்ந்தருளி 10—10—1973 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

தருமையாதீனம் ஆவணிமூலப் பெருவிழாவில்



திருச்சிராப்பள்ளி
திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களுக்குச்
'செந்தமிழ்க் கவிதைச் செம்மல்' என்ற பட்டம் வழங்கி,
தருமையாதீனம் 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
ஆசியருளியது
(6—9—1973)

திருவருள் வயப்பட்டுத் தம்மை மறந்த நிலையில், அரசாங்கப் பொருளில் திருக்கோயில் கட்டினர். உபதேசப்பயனுல் அறநெறிக்கு மாருகத் தோன்றும் இச் செயலை அவர் செய்தார். இறைபணிக்கு, அவனுல் படைக்கப்பெற்ற அனைத்தையும் அர்ப்பணித்தல் பிழை இல்லை என்ற நோக்கு அவரது செயலில் வெளிப்பட்டது. ஆனுல் உலகினரோ தவறு என்று தெரிந்தே பிழை செய்கின்றனர். அவர்களுக்கு ஆண்டவன் தண்டனை என்றேனும் கிடைக்கும்.

பரிமேலழகன் :

திருவருள் வயப்பட்டிருந்த மாணிக்கவாசகப் பெருமான் மன்னனது ஏவலர் வந்தபிறகே உலக நிலை உணர்ந்தார். இறைவனே தமக்கு உதவவல்லவன் என உணர்ந்து அவனையே வேண்டினர். செயலற்ற நிலையில் அன்போடு ஆண்டவனை வேண்டினுல் இறைவன் இன்றும் நம்மிடையே தோன்றி அருள் பாலிப்பான் என்று மாணிக்கவாசகர் இறைவனிடம் முறையிட்டார். இறைவன் குதிரை வீரனுகப் பரிமேல் எழுந்தருளினுன். இது குறித்தே இறைவனைப் பரிமேலழகன் எனக் கூறும் மரபு தோன்றிற்று. திருக்குறளுக்குச் சிறந்த உரை எழுதிய உரை யாசிரியர் பரிமேலழகர் என அறிவோம். அவரை 'வைஷ்ணவர்' என ஒரு செய்யுள் கூறுகின்றது. ஆனுல், அவர் பெயரை நோக்கும்போது அவர் சைவர் என்றே கொள்ள இடமிருக்கிறது.

இந்த ஆவணி மூலத் திருநாளில்தான் இறைவன் மாணிக்க வாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டுவந்து அருள் பாலித்தான். நரியைப் பரியாக்கியதும், பின் பரியை நரி யாக்கியதும், பிட்டுக்கு மண் சுமந்ததும், வைகையில் பெரு வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்ததும் சிவபெருமான் அன்புடை அடியார்க்கு எளியனுய் வந்து அருள் பாலிக்கும் தன்மையை விளக்கும் திருவிளையாடல்களாகும். இந்த அரிய திருவிளையாடற் செய்திகளைப் பரஞ்சோதி முனிவர், 'வாதவூரர்க்கு உபதேசித்த படலம்' முதலிய நான்கு படலங்களால் மிகச் சுவையாகப் பாடியுள்ளார்.

மூலமாய் முளைத்தான் :

அடியார்களுக்கு அருள்பாலிக்கும் மதுராபுரிச் சொக்கநாதப் பெருமானைத் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகப் பெற்ற நமது ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தமது சொக்கநாதப் பெருமானை 'ஆலந் தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம் – மூலமாய் எங்கும் முளைத்த லிங்கம்' என்று குறித்தருளுகின்றார். உலகில் முதன் முதல் தோன்றிய மூர்த்தி மதுரைச் சொக்கநாதப் பெருமானே என்பதனை அப்பர் பெருமானும் 'முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி' என்று போற்றுவதைக் கொண்டு ஆலவாய்ப் பெருமானின் தொன்மைச் சிறப்பினை உணருகிறோம்.

மதுரைநிகர் தருமை :

நமது ஆதீனக் குருமுதல்வர் திருக்கரத்தில், மதுரைப் பொற்றாமரையினின்றும் 'கண்ணுக்கினிய பொருளாக'ச் சொக்கநாதப் பெருமான் எழுந்தருளி வந்தான். ஞானாசிரியராகிய கமலை ஞானப்பிரகாசரிடம் அருளுபதேசம் பெற்றார் ஸ்ரீ குருஞான சம்பந்தர். பின் தருமையில் திருமடம் கண்டார். 'இராமன் இருக்குமிடம் அயோத்தி' என்பது போல சொக்கலிங்கப் பெருமான் இருக்குமிடமெல்லாம் மதுரை என்றே கொள்ளத்தகும். இதனையே, குமரகுருபர அடிகளும் பண்டார மும்மணிக் கோவையுள் தமது ஞானாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரைப் போற்றுங்கால்,

> "தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
> திருநக ராக அரசுவீற் றிருக்கும்
> மாசிலாமணித் தேசிகர்"

என்று குறித்தருளினார். மதுரையும் – கமலையும் (திருவாரூர்) தருமபுரமும் ஒருநிகர்த்தன்மையன என்ற குறிப்பை இதில் காணுகின்றோம். மேலும், மதுரையிலும் சித்திவிநாயகர்; தருமையிலும் சித்திவிநாயகர், இவையும் இத்தொடர்பினை வலியுறுத்துவனவாகும்.

தமிழறியும் பெருமான் :

இப்புனிதநாள் செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் புரிந்த நாள். சிவபெருமானே தலைச் சங்கத்தின் தலைமைப் புலவனாக அமர்ந்து தமிழாய்ந்த செய்தியைத் திருவிளையாடல் புராணம் உணர்த்துகிறது.

"கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ்"

என்ற தொடர் தமிழுக்கும் – சொக்கநாதப் பெருமானுக்கும் உள்ள தொடர்பினை விளக்குகிறது. தலைச் சங்கப் புலவர்களுள் இறைவன் 'திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்' என்று குறிக்கப் படுகிறான்.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்"

என்று அப்பரடிகளும் இதனைக் குறித்தருளுகின்றார்.

இறைவன் சௌந்திரபாண்டியனாக நிலவுலகில் வந்து மதுரை மாநகரில் ஆட்சி செய்ததும், அம்மை தடாதகாதேவி என்று பெயர் தாங்கி மதுரையில் அவதரித்து வளர்ந்ததும், குமரவேள் உக்கிர குமாரனாக வந்துதித்து ஆட்சியை ஏற்று விளங்கியதும், தமிழின் சுவையைக் குடும்பத்தோடு ஒன்றாக இருந்து சுவைத்து மகிழ வேண்டுமென்ற வேட்கையால்தான் எனக் குமரகுருபர அடிகள் குறித்தருளுகின்றார். இவற்றை எண்ணும்போது இறைவன் குடும்பத்தோடு தமிழ் வளர்த்த பாங்கு நன்கு உணரக்கிடக்கிறது.

சிவபெருமான் - முருகன் முதலியோர் சங்கத்தமர்ந்து தமிழாய்ந்ததனை வெறும் புனைகதையென்பார்களும் உண்டு. ஆனால் இறைவனேவந்து மொழிபோற்றிச் சங்கத் தலைமை ஏற்றுச் சிறப்பித்தான் என்பது போன்ற ஒரு கதையினைக்கூடப் பிறமொழிகள் கொண்டிருக்காத நிலைமையில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மொழியின் வளர்ச்சியும் சிறப்பும் தெய்வத் தொடர்போடு கூடி நன்கு புலனாவதைக் காண்கிறோம்.

ஓர் உண்மை :

ஓர் உண்மையை மாணிக்கவாசகர் வரலாற்றின் வழியே ஆலவாய்ச் சொக்கன் உலக உயிர்களுக்கு அறிவுறுத்தியருளினுர். அது, யாராயிருப்பினும் ஊதியத்தைப்பெற்று உழைப்பைச் சரியாகச் செய்யவில்லை என்ருல் தண்டனைபெற்றே ஆகவேண்டு மென்பதனைப் பிரம்படிபட்ட திருவிளையாடலினுல் உணர்த்தி யருளியதேயாகும்.

திருவருட் குறிப்பு :

இந்நாள் தமிழோடு நெருங்கிய தொடர்புடைய இறைவனது திருநாள், இன்றைக்கு 26 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இந்தத் திருநாளில் தமிழில் சிறந்த புலமை பெற்ற தக்கார் ஒருவருக்குச் சிறப்புப் பட்டம் அளித்து ஆசி வழங்கும் மரபினை ஏற்படுத்தியருளினுர்கள். ஒவ்வோர் ஆண்டும் மார்ச்சு மாதத்தில் கொண்டாட வேண்டிய ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாவினை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே வரும் ஆவணி மூலத் திருநாளில் இணைத்துக் கொண்டாடத் திருவுளங்கொண்டது ஆழ்ந்த நோக்குடையதாகும். செந்தமிழ்ச் சொக்கனுக்கு இசைந்த திருநாளில், செந்தமிழ்வல்ல ஒருவர்க்குப் பட்டம் வழங்குவது, மாணவர்களும் உள்ளக்கிளர்ச்சியடைந்து, நாமும் இங்ஙனம் உயர்ந்து பெருஞ்சிறப்புக்களைப் பெறவேண்டு மென்பதற்காகவேயாகும். இறைவனுக்கு உகந்த ஆவணிமூலத் திருநாளில் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாவினைக் கொண்டாடு வதும், இறைவன் தக்கார்க்குப் பொற்கிழி அளித்தருளியதுபோல, இந்நாளில் தக்கார் ஒருவர்க்குப் பட்டமளித்துப் போற்றுவதும, அவர்கள் வழியே மாணவர்களுக்கு அறிவுரைகள் வழங்கச் செய்வதும் இத்திருவருட் குறிப்பினதேயாகும்.

அருள்பெறும் அன்பர் :

இத்தகு பெருமைமிக்க திருநாளில் அன்பர் அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் இன்று 'செந்தமிழ்க் கவிதைச் செம்மல்' என்ற பட்டத்தைப் பெறுகிருர். திருச்சிராப்பள்ளியில் நல்லறப்பணிகள் பலவற்றை

நெடுநாட்களாகச் செய்துவரும் அன்பர் அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் சிறந்த கவிஞர் - பேச்சாளர் - எழுத்தாளர் என்ற மூன்று துறைகளில் சிறப்படைந்துள்ளார். வடமொழி 'சௌந்தர்யலகரியை' 'அழகு வெள்ளம்' என்ற தலைப்பில் கவிதை நூலாகச் செய்துள்ளார். 'எழுத்தாளன்' என்ற பத்திரிகை ஒன்றையும் நெடுநாட்களாக நடத்திவருகிறார். வித்தகம்பேசாது பணிசெய்துவரும் தொண்டர் இவர். இவர் தாயுமானவர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் பெரும்பங்கு வகித்தார்.

'செம்மல்' - விளக்கம் :

செந்தமிழ் வல்ல ரெட்டியார்க்குச் 'செந்தமிழ்க் கவிதைச் செம்மல்' என்ற பட்டம் பொருத்தமானதே. நினைக்க வேண்டுவதை நினைக்கும் உள்ளத்தைச் செம்மல் உள்ளம் என்று திருமுருகாற்றுப்படை பாராட்டுகிறது. 'சேவடி படரும் செம்மல் உள்ளமொடு' என்பது அத்தொடர். தள்ளத்தக்கன தள்ளி கொள்ளத்தக்கன கொள்ளுவதே செம்மல் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

ரெட்டியாரைப் பாராட்டிப்பேச அவரது ஊராகிய திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் 'திருக்குறள்வேள்' என்ற பட்டம் பெற்ற திரு. ஜி. வரதராஜ பிள்ளை அவர்களே வந்துள்ளது பொருத்தமுடையதாகும். ரெட்டியார் எல்லா நலமும் பெற்று மேலும் நற்பணிகளில் ஈடுபட்டுச் சிறக்கச் செந்தமிழ்ச்சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

[24]

உழைப்பும் - உயர்வும் *

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

[கிடைக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி நன்கு உழைத்தாலன்றி உயர்வு பெறல் இயலாது என்பதனையும் – சமய நோக்குப் படைத்தவர்கள் உலகியலைக் காண வேண்டிய வழி முறைகளையும் – அரசும், அறநிலையங்களும் ஒரு லட்சியத்தை நோக்கியே பாடுபடுகின்றன என்பதனையும் இக் கட்டுரை இனிது விளக்குகிறது.]

சமய எழுச்சி :

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் ஆண்டுவிழா இரண்டு நாட்களாக மிகச் சிறந்த முறையில் திருச்சி மாநகரத்தில் கொண்டாடப்பட்டு வருவதை அறிய மகிழ்ச்சி மிகுகின்றது. தமிழ்நாடு முழுவதிலுமிருந்து பேரவையின் கிளைச்சங்கங்களின் பிரதிநிதிகளாக ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வந்திருக் கின்றார்கள். வரலாற்றில் இடம் பெறத்தக்க அளவிற்கு அமைதி யான – புரட்சிகரமான மாபெரும் தெய்விக ஊர்வலம் திருச்சி மாநகரத்தில் நிகழ்த்தப்பெற்றிருக்கிறது. இந்த மாநாட்டை – ஆண்டு விழாவை இவ்வளவு சிறப்பாக நடத்திவைத்த பெருமை திருச்சி மாநகரத் தெய்விகப் பேரவையினரையும், பேரவையின் தலைவர் குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களையுமே சாரும்.

திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு தெய்விகப் பேரவை ஆண்டுவிழாவில் திருவாய்மலர்ந்தருளி 10—11—1973 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.

தமிழகத்தின் பல பாகங்களிலிருந்தும் பேரவைத் தொண்டர்கள் பலர் வந்திருக்கின்றனர் ; சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்கள் பலரும் இதில் பங்குகொண்டுள்ளனர்.

பழமையும் புதுமையும் :

பழமையில் ஈடுபாடும், புதுமையில் விருப்பும் கொண்டுள்ள வர்களை இந்நாளில் காண்கிறோம். பழையனவற்றையெல்லாம் கழித்துப் புதியனவற்றையெல்லாம் புகுத்தவேண்டும் என்று தீவிரவாதிகளாய் உள்ளோர் கருதுகிறார்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்று இலக்கணங்களுள் ஒன்றாகிய நன்னூலும் நமக்கு அறிவிக்கின்றது. அதே கொள்கையைத்தான் சமய – சமுதாய – இலக்கண வரலாற்றிலும் கண்டு வருகின்றோம். அதனையே நம்முடைய சமயநெறி முறைகளிலும் காண்கிறோம். மாறுதல் காலப்போக்கில் தானாக அமையவேண்டுமே யல்லாமல், நாமே வலிய ஒரு கருத்தைக் கழித்து, ஒரு கொள்கையைப் புகுத்தினால், குழப்பம் தோன்றி, மக்களுக்கோ – சமுதாயத்திற்கோ நன்மையில்லாமல் செய்துவிடும்.

உழைப்பே உயர்த்தும் :

ஒருவரை அல்லது ஓர் இனத்தவரை உயர்த்தவேண்டும் என்று இறைவன் திருவுளம் பற்றினாலும், அதற்கு அவ் இறைவனோ, இறைவன் வழிப்பட்ட சான்றோர்களோ, பல வகையிலும் துணைபுரியலாமேயல்லாமல், அவர்களே உயர்த்திவிட முடியாது. ஒரு மனிதன் அல்லது ஒரு சமுதாயம் தமக்குத் தரப்படும் சந்தர்ப்பத்தை – வாய்ப்பை – உதவிகளைப் பயன்படுத்தி உயரத்தலைப்படல் வேண்டும். அவ்வாறு பயன்படுத்தி உயரத் தெரியாத உயிரினங்கள் இறைவனையோ சமுதாயத்தையோ குறைகூறிப் பயனில்லை. அவரவர் செயல் முறைகளுக்கு ஏற்பவே அவரவரும் அல்லது அவ்வவ் இனமும், அவ்வச் சமுதாயமும் உயர்கின்றன. அதனைத்தான்,

> "அவரவர் வினைவழி அவரவர் வந்தனர் ;
> அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் ;
> எவர்எவர்க் குதவினர் எவர்எவர்க் குதவிலர்
> தவர்அவர் நினைவது தமை உணர்வதுவே"

என்ற இப்பாட்டில் நம் ஆதீன ஆதி பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளியுள்ளார்கள்.

வினையாவது யாது?

வினை என்ற உடனேயே புரியாத பரிபாஷையாக எண்ணிக் கொள்ளவேண்டியது இல்லை. வினை என்பதற்குச் செயல், என்பதே பொருளாகும். இதனை, வினைத்தூய்மை, வினைத் திட்பம் முதலிய தொடர்கள்பற்றியும் அறியலாம். மேலும் வினை முற்றிய தலைமகன் பாகற்கு உரைத்தது' என்று வரும் அகப் பொருள் துறையிலும் கூட 'வினை' என்பதற்கு, செயல் என்றே பொருள் அமைந்து கிடக்கிறது. ஆகவே "அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்" என்றால் ஒவ்வொருவரும் தாம் முன்செய்த செயலுக்கு ஏற்ற வகையில் பிறந்துள்ளனர் என்பதாகும். அவ்வாறு பிறந்த அவர்கள் அடையும் நன்மை தீமைகள் யாவும் முன்செய்த செயலின் பயனை அனுபவம் என்பதே, அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் எனப்படுகின்றது. ஆகவே உலகத்தில் யார், யாருக்கு உதவி செய்கிறார்கள்; யார், யாருக்கு உதவி செய்யவில்லை என்ற ஆராய்ச்சி வேண்டுவதில்லை. அவரவர் கடமையை அவரவர் செய்யும்பொழுது அவைகள் சிலருக்கு உதவியாகின்றன. சிலருக்கு உதவியாகவில்லை. இந்த உண்மையை உணர்ந்த தவ சிரேஷ்டர்கள் பிறரிடத்தில் உறவோ பகையோ பாராட்டாமல் தம்மை உணர்ந்து நிற்பதில் தலைப்படுவார்கள். உலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இவ்வாறு சமய நுட்பமாகப் பொருள் காண்போமேயானால் யாவும் நல்லனவாகவே முடியும்.

சீர்த்திருத்தம்:

சீர்திருத்தம் என்பதுபற்றிப் பலரும் பேசி வருகின்றனர். நெறிதவறுவோரை — நெறிதவறும் சமுதாயத்தை நெறியில் நிலைநிறுத்துவதே சீர்திருத்தமாகும். சீர்திருத்தம்பற்றிப் பேசு கின்றவர் பலரும் சீர்திருத்தம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பதே ஐயப்பாடாக இருக் கிறது. நமது சமயம் இறைவனாலும் இறைவன் அருள்வழிப்பட்ட சான்றோர்களாலும் அமைக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட — தூய்மையான — சிறப்புமிக்க நெறியாகும். இந்நெறியில் மக்களின் அறியாமையால் அவ்வப்போதும் சில குறைபாடுகள் நிகழலாம். அக்குறைபாடுகளை அகற்றி நெறியைச் செம்மைப்படுத்துவதும்

செம்மையான நெறியில் மக்களை அழைத்துச் செல்வதும் சான்றோர்களின் கடமை. இதுவே சமய நிலையங்களின் தலையாய கடமையுமாகும்.

> "நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
> நெறியில் வழுவின் நெருஞ்சில் முள்பாயும்
> நெறியில் வழுவாது இயங்க வல்லார்க்கு
> நெறியில் நெருஞ்சில்முள் பாயகி லாவே"

என்கின்றார் திருமூலர்.

அரசும் அறநிலையங்களும் :

இம்முறையில் சமய நிலையங்களின் தலைவர்கள் ஒன்றுகூடித் தங்கள் கடமையைப்பற்றிச் சிந்தித்து, சமயத்தின் ஆக்கத்திற்கு ஊக்கமூட்டி வருகின்றனர். இவ்வூக்கப்பாட்டின் ஒருபகுதியே தெய்விகப் பேரவை. தமிழ்நாடு தெய்விகப் பேரவை ஆண்டு தோறும் நடத்திவரும் ஆண்டு விழாக்களில் இத்தகைய சிந்தனைகளைச் செய்து செயலாற்றி வருகின்றது. சமய நிலையங்கள் சமுதாயத்திற்குச் செய்துவரும் பணிகள் பல. இத்தகைய நிலையான பணிகளால் இந்நிலையங்கள் அரசாங்கத்திற்குப் பலவகையில் துணையாய் நிற்கின்றன. அறத்தின் அடிப்படையில் மக்கள் அன்புடன் காணிக்கையாகக் கொடுத்த பொருள்களை அம்மக்கள் நல்வாழ்விற்கே பயன்படுத்தி, மக்களிடையில் அறவுணர்வையும் நற்பண்பையும், ஒழுக்கத்தையும், கடமை உணர்வையும், வளர்த்து வருவது சமய நிலையங்களாகிய திருமடங்களும் திருக்கோயில் களுமாகும். சட்டத்தின் அடிப்படையில் அதிகாரத்தின் மூலமாக மக்களிடத்தில் வரி வசூலித்து மக்கள் நல்வாழ்விற்காக உணவு உற்பத்தி, கல்வி வசதி, மருத்துவ வசதி முதலியவற்றைச் செய்து அளிப்பது அரசாங்கமாகும். சுருங்கச் சொன்னால் உடலை வளர்க்க உறுதுணையாய் நிற்பது அரசு என்றும், உயிரை வளர்க்க உறுதுணையாய் நிற்பது சமய நிலையங்கள் என்றும் கூறலாம். ஆகவே அரசும் சமய நிலையங்களும் தனித்தனியே வேறுவேறு துறையில் செயற்பட்டாலும் இரண்டும் சமுதாய நலமாகிய ஒரு லட்சியத்திற்கே பாடுபடுகின்றவையாகும்.

உடலும் உயிரும் :

உடம்பில்லாமல் உயிர் உயர்வுபெற இயலாது. உயிர் இல்லாத உடலை யாரும் போற்றமாட்டார்கள். இருப்பினும் உயிருக்காக உடல் படைக்கப்பட்டதா? உடலுக்காக உயிர் படைக்கப்பட்டதா? என்றால், உயிர் உய்வதற்காகவே இறைவனால் இவ்வுடல் படைத்துக் கொடுக்கப்பட்டது என்ற உண்மை ஊன்றி உணர்வார்க்குப் புலனாகும். எனவே உடம்பைப் போற்றுவதெல்லாம் உயிரை வளர்ப்பதற்கே என்பதும் தெளிவாம். இதனையே திருமூலர்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ் ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்று கூறுகிறார். உடலை நாம் போற்றுவது எல்லாம் உயிர் நன்னிலை பெறவேயாகும். உடம்பில் தங்கியுள்ள உயிரை நன்னிலையில் போற்ற வேண்டியது மிகமிக இன்றியமையாதது என்பதை யாவரும் உணரவேண்டியது அவசியமாகும்.

பேரவையின் சிறப்பு :

வேறு எந்த அமைப்பினருக்கும் இல்லாத ஓர் சீரிய அமைப்பு பேரவைக்கு அமைந்து இருக்கிறது. உடல் வளர்ச்சிக்கு உறுதுணையாகிய அரசும், உயிர் வளர்ச்சிக்கு உறுதுணையாகிய சமயநிலையங்களும் ஒருங்கு இணைந்து உருவாக்கியிருப்பதே தெய்விகப் பேரவையாகும். மடாலயங்கள் மட்டும் இப் பேரவையை வளர்ப்பதாகச் சொல்வதற்கில்லை. திருமடங்களும், அறநிலையத்துறையினர் வழியாக அரசும் இணைந்தே இப் பணியைச் சிறக்கச் செய்து வருகின்றன. இவ்வமைப்பு மேலும் இம்முறையில் இன்றுபோல் என்றும் செயற்பட்டு நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் நற்பணி செய்துவர செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

[25]

தாரகையும் - தண்மதியும் *

"எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து"

["27 திருக்கோயில்களைப் பரிபாலித்துவரும் தருமையாதீனம்" தாரகை நடுவண் தண்மதிபோல் விளங்குகின்றது" என்ற கூற்றினை நுட்பமுற விளக்கி - ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் சிறப்பியல்புகளையும் - அடியார் அன்பினையும் இக்கட்டுரை விளக்குகிறது.]

வழிகாட்டும் வள்ளல் :

இன்று கயிலைக் குருமணி அவர்கள் பரிபூரணம் அடைந்த இரண்டாவது ஆண்டுக் குருபூஜைத் திருநாள். இந்த நல்ல நாளில் நாமெல்லாம் இங்கே ஒன்றுகக் கூடி அவர்களைப்பற்றி நினைப்பதும், பேசுவதும் நம்மை நாம் உயர்த்திக்கொள்வதற்காக வேயாகும். பெரியவர்களுக்கும் உயர்ந்தோர்களுக்கும் இறைவன் தாமே ஞானம் வழங்கி நல்லருள் கூட்டுவிக்கிறன். இறைவன் அருள்பெற்ற நல்லாசிரியர்கள் நம்மை ஒத்தவர்களுக்கு நல்வழி காட்டி இறையருள் கூட்டுவிக்கும் வள்ளல்களாகத் திகழ் கின்றனர். இருந்தும் நாம் இதனை உணரமாட்டாமையினல் ஆசிரியர்களைப் போற்றுது கெடுகின்றேம்.

---

* *ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் இரண்டாவது ஆண்டுக் குருபூஜை விழாவில் திருவாய் மலர்ந்தருளி 10—12—1973 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

நன்மையும் தீமையும் :

தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் நன்மக்களது பெருமையை அழகாக ஒரு சிறிய பாட்டில் விளக்கியிருக்கிறார்.

" நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று "

நல்லாரோடு கூடுவதும், அவர்சொல் கேட்பதுவும், அவர்களது இணக்கமும் நமக்கு உயர்வு தருமாயினும், இவ்வுயர்வு உரம் பெற வேண்டுமானால் சிலவற்றை நீக்கவும் வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். அதுவும் நான்கு ஐந்து பாடல்கள் தள்ளிச் சொன்னாலும் நாம் கெட்டுப் போவோமென்று அடுத்த பாட்டிலேயே சொல்லுகிறார்.

" தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே – தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது "

திருவள்ளுவரும் பெரியாரைத் துணைக்கோடல் என்ற ஓர் அதிகாரம்வைத்து, சிற்றினம் சேராமை என்ற அதிகாரத்தையும் உடன் வைத்துள்ளது, தீயார் நட்பை விலக்கவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தவேயாகும். மிக உயர்ந்த நிலையில் உள்ள பெரியவர்களிடையே கருத்தொற்றுமை இருக்கும் என்பதற்கு இவை சான்றாக விளங்குகின்றன.

மன வளர்ச்சியே மனித வளர்ச்சி :

மனிதன் உயர வேண்டும் : மனித எண்ணங்களும் உயர்ச்சி பெறவேண்டும். உடல் வளர்ச்சியைவிட உள்ள வளர்ச்சியே முக்கியமானது. உள்ள வளர்ச்சிக்கு நம் முன்னோர்கள் பல வழிகளை எடுத்துக்காட்டி விளக்கி இருக்கின்றனர். உலகினர் பணம் பண்ண அறிந்துள்ளனர், மனம் பண்ண அறியவில்லை. இதனைப் பாரதியாரும்,

" துணிவெளுக்க மண்ணுண்டு எங்கள் முத்து மாரி
மனம் வெளுக்க மருந்தில்லை எங்கள்முத்து மாரி "

என்று பாடுகின்றார். நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு எளியவழி சான்றோர்களோடும் உயர்ந்தோ ரோடும் இணங்கி வாழ்வதேயாகும். மணிவாசகப் பெருமானும்,

" அடியேன், நின்னடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் "

என வேண்டுவது இக்கருத்துக்கு அரணாகிறது.

கயிலைக் குருமணி – கருணைக் குருமணி :

நமது கயிலைக் குருமணிபோன்ற பெரியோர்களை - குருநாதர் களை வழிபட்டால் நாம் உய்யலாம். கயிலைக் குருமணி அவர்கள் கருணையின் வடிவாகவே விளங்கினார்கள். தவறு செய்தவர் களிடமும் அவர்கள் கருணை குறையவில்லை. வெளியே பார்த்தால் கடுமைபோல் தோன்றும் - உள்ளம் கருணையினால் நிறைந்திருக்கும். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற குறட்கருத்துக்கு அவர்கள் வாழ்க்கை இலக்கியமாக அமைந்திருந்தது. இரண்டுங் கலந்த தனி அமைப்பு அவர்களிடம் இருந்தது; அவர்கள் திருவருள் வாழ்வில் நிகழ்ந்தன பலவும் வியப்பாகவே அமைந்தன. நாம் ஆழமாகச் சிந்தித்தபோது பல உண்மைகள் விளக்கமுற்றன. அவர்கள் அவதரித்தது முத்தித்தலமாகிய சிதம்பரம். பரிபூர்ணம் அடைந் ததோ காசியில். அவர்கள் பிறந்ததும் ஐப்பசித் திங்களில்; மறைவும் அதே ஐப்பசியில். இப்படிப் பல இயைபுகள் உள்ளன. இன்று கயிலைக்குருமணி அவர்கள் இருந்திருந்தால் 60 ஆவது ஆண்டுத் தொடக்க விழாவினைக் கொண்டாடுவோம். திருவருள் நமக்குக் கொடுத்துவைக்கவில்லை.

அடியார்க்கு அடியாராம் அன்புள்ளம் :

அவர்கள் துறவுநிலைபூண்டு, குருமகாசந்நிதானமாக விளங் கியபோதிலும் துறவிகளையும் அடியார்களையும் பாராட்டிப் போற்றும் பண்பினை உடையவர்களாக விளங்கிவந்தார்கள். எல்லார்க்கும் நன்றாம் பணிதல் என்பதனைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினார்கள். கேதார தரிசனத்தில் 'பலாரிபாபா' என்ற பெரிய துறவியை இருப்பிடம் தேடிச் சென்று கண்டு

போற்றினார்கள். காசியாத்திரையில், அரித்துவாருக்கு எழுந்தருளியபோது, ரிஷிகேசம் சென்று சிவானந்தரைக் கண்டதோடு அல்லாமல் அவர்களுக்கு உதவவேண்டுமென்ற எண்ணத்தில் விலை மதிக்கமுடியாத தமது கடிகாரத்தைப் பிறர் அறியாமல் வழங்கி வந்தார்கள். அதேபோல் திருக்குற்றாலத்திலும், மலை மீது 'புற்றடிச் சந்நியாசி' என்றொரு பெரியவர் இருப்பதைக் கேள்வியுற்று, கடத்தற்கு அரிய பாதைவழிச்சென்று, அவரைக் கண்டு வந்தார்கள். இதுபோலக் காசியிலும் ஒவ்வொரு முறை எழுந்தருளும்போதும் நூற்றுக்கு மேற்பட்ட சாதுக்களுக்குப் பண்டாரா எனப்படும் மாகேஸ்வரபூஜையைத் தாமே முன்னின்று, அவர்களுக்கு மாலை அணிவித்துச் செய்விக்கும் நியமமுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் குருமகா சந்நிதானமாயினும் தம்மளவில் தம்மை ஓர் சாதாரண மனிதராகவே கருதினார்கள். தமது ஈடேற்றத்திற்குத் தம்மளவில், மனிதராக - ஓர் பக்தராகவே அவர்கள் தம்மைக் கருதி வாழ்ந்தார்கள்.

வாழ்த்துவோம் - வாழ்வோம் :

கயிலைக் குருமணி அவர்கள் தொட்டது துலங்கும் என்ற உண்மை உலகறிந்ததாக இருந்தது. அவர்கள் ஹஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தார்கள். அவர்களது ஹஸ்தவிசேடத்திற்கு எடுத்துக்காட்டாக எவ்வளவோ நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்ட முடியும். அவர்கள் தொட்டது துலங்கியதோடு விட்டது விளங்குவதையும் இங்கே நாம் காணுகிறோம். இந்தக் குருபூஜைத் திருநாளில் குருமணி அவர்களைப் போற்றுவதன் மூலம் நாமே நம்மை உயர்த்திக்கொள்ளுகிறோம். இறைவனை நாம் வாழ்த்துவதும் நம்மை வாழ்வித்துக்கொள்ளவே என்பதனை மாணிக்கவாசகரும் விளக்குகின்றார். பட்டினத்து அடிகள் இதனைப் பொன்னின்மேல் வைத்துக் கூறுவார். பொன்னை அணிந்துகொள்ளுவதனால் பலவித நன்மைகளையும் பெறுவது நாமே தவிர பொன்னல்ல. அதுபோல இறைவனை வணங்குவதனால் நாமே பயன்பெறுகிறோம் என்பதையும் விளக்குகின்றார். எனவே, இத்தகு வழிபாடுகளால் ஒரு நூலளவாவது நாம் உயர்ந்தோமானால் அதுவே அவர்களுக்கு மகிழ்வாகும்.

தாரகையும் தண்மதியும் :

தருமையாதீனத்தின் அருளாட்சியில் திகழும் 27 திருக்கோயில்களையும் 27 விண்மீன்களாகவும், நமது ஆதீனத்தை முழுநிலவாகவும் உருவகித்துப் பலரும் குறிப்பிடுகின்றனர். தாரகை நடுவண் தண்மதிபோல் தருமையாதீனம் விளங்குவது உண்மையாயினும், இதன் உண்மையான அடிப்படையை நாம் சிந்திக்கவேண்டும். வானத்தில் சிறிதாகத் தோற்றங்காட்டும் விண்மீன்கள் சந்திரனைவிடப் பன்மடங்கு பெரியவை; அதோடு அவை சுயமாக ஒளிவிடும் தன்மையுடையன என்பது விஞ்ஞானம் கண்ட உண்மையாகும். ஆனால் சந்திரனோ சூரியனின் ஒளியை வாங்கிப் பிரகாசிக்கும் தன்மையுடையது. இங்ஙனம் நமது அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோயில்கள் விண்மீன்கள்போலச் சுயமாக விளங்கும் சிறப்புடையன. சூரியனது ஒளியை வாங்கிப் பிரதிபலிக்கும் சந்திரன்போலத் திருக்கோயில்களின் ஆசியில் ஆதீனம் அன்று தொட்டு இன்றுவரை எண்ணற்ற அருளறப் பணிகளை இயற்றித் தண்ணிலவாக ஒளிவிடுகின்றது. என்றென்றும் அவற்றின் இணைப்பும் ஆசியும் ஆதீனத்தின் பணிகளுக்கு இன்றியமையாது வேண்டத்தக்கதாகும். அன்பர்கள் இதனை நன்குணர்ந்து, ஆதீன அருளறப் பணிகளில் ஈடுபாடுகொண்டு திருவருளும் குருவருளும் பெற்று உய்வார்களாக.

[26]

நம்பந்தம் அறுத்த சம்பந்தர் மூவர் *

" அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் "

[தோத்திர ஆசிரியராக - சாத்திர ஆசிரியராக - குரு முதல்வராகத் திகழ்ந்த சம்பந்தர் மூவர் என்பதனை விளக்கி - இன்றைய நிலையில் மக்கள் உய்தி பெறுதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை வலியுறுத்தி நிறைகிறது இக்கட்டுரை.]

பிறப்பின் பயனைப்பெற முயல்வோம் :

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி, மற்றும் எண்ணிறந்த தாவர சங்கமங்களாய்ப் பிறந்தும் இறந்தும் இளைக்கின்ற உயிர்கள் அப்பிறப்புக்களை விட்டு மக்கட் பிறவியை அடைதல் கடலைக் கையால் நீந்திக் கரைசேர்ந்த செயல் போல அரியதினும் அரியது. அத்தகைய மக்கட் பிறப்பிலும் இறைவனை நேரே கண்ட அருளாளர்களும், அவர்களது அருள்மொழிகளும் நிரம்பத் தோன்றி நிலவும் செந்தமிழ் நாட்டில், பரசமயங்களிற் செல்லாத பாக்கியத்தைப் பண்ணிச் சைவர்களாகப் பிறப்பதற்கு நாம் முன்னைப் பிறப்புக்களிற் செய்த புண்ணியம் மிகமிகப் பெரிது. ஆயினும், அந்த அருமை பெருமைகளை நாம் கொஞ்சமும் நினையாமல் அல்லும் பகலும் உலகியலிலேயே உடலை ஓம்புதற்கும், ஆடம்பர வாழ்வு வாழ்தற்கும், எண்ணாத எண்ணம்

---

* *சீகாழியில் நிகழ்வுற்ற சைவ-சித்தாந்த மகா சமாஜ ஆண்டுவிழாவில் திருவாய் மலர்ந்தருளி 10—1—1974 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப் பெற்றது.*

எல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணுவதிலேயே காலத்தைக் கழித்தொழிகின்ருேம். இதனை விடுத்து அரிதிற் கிடைத்த பிறப்பின் பயனை அடைவதற்குச் சிறிதாயினும் முயலுதல் வேண்டும். அஃதாவது பெரும்பான்மையான நேரத்தை உடல் வாழ்க்கைக்குச் செலவிட்டபோதிலும் சிறிது நேரத்தையாவது ஆன்ம லாபத்தின் பொருட்டு நாம் செலவிடல் வேண்டும்.

ஆசைவிடுத்து ஆன்ம லாபம் தேடுவோம் :

புழுவுக்கும் குணம் நான்கு ; எனக்கும் அதே - புழுவுக்கு இங்கு எனக்கு உள்ள பொல்லாங்கு இல்லை" என்ற அப்பர் வாக்குப்படி, உண்பது, உறங்குவது, உலகியலில் வரும் இன்பத் துன்பங்களை மகிழ்ச்சியோடோ அல்லது வருத்தத்தோடோ அனுபவிப்பது, நாள்வந்தால் இறப்பது என்பது உலகில் உள்ள சிற்றுயிர்களுக்குங் கூடத்தான் இருக்கின்றன. அவைகளையே மனிதனும்செய்து கழிவானுனல், அவன், தன்னை மற்றைய பிறப்புக்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்வதனுல் என்ன பயன் !

முன்னே காட்டிய அப்பர் திருமொழியின்படி சிற்றுயிர் களாவது உணவு தேடி உண்டு வாழ்வதோடு நின்றுவிடுகின்றன ; பிற தீய குணங்களை உடையனவாயிருப்பதில்லை. ஏதோ இயற்கை அமைப்பில் பசிக்காகப் பிற உயிரை உணவிற்கு வேண்டும் அளவு கொன்று தின்பதோடு நின்றுவிடுகின்றன. மனிதன் 'தான் அளவற்றகாலம், அளவற்ற வசதியுடன் நல்வாழ்வு வாழவேண்டும்' என்று பேராசை கொண்டு, அந்தப் பேராசை காரணமாக வஞ்சனை, பொய், பொருமை முதலியவைகளை உடையவனுய்த் திட்டமிட்டுப் பிறருக்குத் தீங்கிழைத்து வாழத் துணிகின்ருன். "ஆசைக்கோர் அளவில்லை" என்ற தாயுமான அடிகள், "அகிலமெல்லாம் கட்டி ஆளினும் கடல் மீதிலே ஆணை செலவே நினைவர்" என்ருர். ஆனுல் இன்று கடல்மீதில் மட்டுமன்று ; வானத்திலும் தனது ஆணை செல்லவேண்டுமென்று மனிதன் ஆசைப் படுவதையும், அந்த ஆசையால் நிகழ்கின்ற அதிசயமான அட்டூழியங்களையும் கண்ணுலே காண்கிருேம். மிகமிக மேலான பிறப்பை எடுத்த மனிதன் இந்த ஆசை காரணமாக மிகமிக இழிந்த பிறப்புக்களிலும் கீழ்ப்பட்டவனு கின்ருன். இதுதான் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின்

பயனுகை உள்ளது. எனவே விஞ்ஞானம் மனிதனை மனிதனுக வாழச்செய்யாது; மெய்ஞ்ஞானமே மனிதனை மனிதனுக வாழச் செய்யும். அதனுல் விஞ்ஞானம் கூடாது என்பது அல்ல! மெய்ஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானம் பயன் தராது என்பதுதான் கருத்து.

தீநெறி விலக்கி நன்னெறி சார்வோம்:

மெய்ஞ்ஞானத்தைத்தர நிற்பனவே சமயங்கள் என்பது தெளிவு. எனவே, சமயமே மனிதனை மனிதனுக்கும் என்பது வெள்ளிடை மலை. ஆன்ம லாபம் மட்டுமன்று; உலகியலில் நல்வாழ்வு, சமுதாயநலம் என்பனவற்றைக்கூடச் சமயத்தின் வழியேதான் மக்கள்பெற இயலும். "எச்சமயத்தோர் சொல்லும் தீதொழிய நன்மை செயல்" என்று ஔவையார் கூறியதுபோல, யாதொரு சமயமும் மக்களைத் தீநெறியின் நீக்கி நல்வழியிற் செலுத்தத்தான் முயல்கின்றது. ஆனுல், சமயத்தைக் கடைப் பிடிக்கின்ற மனிதன் சமயத்திலும் நன்னெறியை விடுத்துப் பூசல் விளைக்க எண்ணுகின்றுன்; செய்கின்றுன். இது குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதற்கு ஒப்பானது.

"சைவ சமயமே சமயம்" என்றும், "சைவத்தின்மேற் சமயம் வேறிலை" என்றும் நம் முன்னேர்கள் கூறியவாறு, நமது சமயமாகிய சைவம், சமயங்கள் எல்லாவற்றிலும் தலையாய சமயம். இதை இன்றைய ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக்கொள் கின்றனர். நமது சிறப்பை நாம் உணர்ந்து உரைப்பது, பிற சமயங்களை இழித்தலாகாது.

சீர்மிகு காழியில் சித்தாந்தப் பெருக்கு:

நமது சைவ சமயம் இன்றைய விஞ்ஞானத்திற்கும், உடல் நலத்திற்கும், உலகியலுக்கும் ஒத்ததாய் இருந்து, அதே சமயத்தில் உயர்ந்த ஞானத்தையும் அளிப்பதாக உள்ளது. அத்தகைய ஞானத்தை வழங்கும் நமது சமயத்தில் ஞான சம்பந்தர்களாகவே பல ஆசாரியர்கள் விளங்கி அருள் நெறியைப் பரப்பினுர்கள். முதல் ஞானசம்பந்தர், திருஞானசம்பந்தர். அவர் திருவவதாரம் செய்து மூன்றுண்டிலே அம்மையின் ஞானப்பாலை உண்டு ஞானசம்பந்தராய் - ஞானத்தின் திருவுருவாய் விளங்கி

ஞானத் தமிழால் நமது நாட்டினை ஞான பூமியாக விளங்கச் செய்தார். அத்தகைய அருட்பேராசிரியர் அவதரித்தருளி அருள் பெற்ற அருமைத் தலமே இந்தச் சீகாழித் திருத்தலம். அறுபத்தெட்டு ஆண்டுகளாகப் பல வகையில் சைவத்தை வளர்த்து வரும் சைவசித்தாந்த மகாசமாஜம் இன்று இச் சீகாழித் திருத்தலத்தில் தனது அறுபத்தெட்டாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடுதல் மிக்க மகிழ்ச்சியைத் தருவதோடு, மிக்க பயனைத் தருவதுமாகும்.

நம்பந்தம் அறுத்த சம்பந்தர் மூவர் :

கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் அவதரித்து ஞான ஒளி பரப்பிய சமயாசாரியராகிய அந்த ஞானசம்பந்தரை அடியொற்றி, கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் சந்தானசாரியருள் ஒரு ஞானசம்பந்தர் வாழ்ந்தார். அவர் மறைகளையெல்லாம் நன்கு ஓதியுணர்ந்திருந் தமையால் 'மறைஞானசம்பந்தர்' என அழைக்கப் பெற்றார். சைவ சமயத்தின் நெடுங்கால வாழ்விற்குப் பல வகையில் வழி வகுத்த ஸ்ரீ உமாபதி சிவாசாரியராகிய பேராசிரியரை உலகிற்கு அருளிய பெருமை அந்த மறைஞான சம்பந்தருக்கே உரியது.

மறைஞான சம்பந்தரின் மாணக்கர் உமாபதி தேவரது வழியில் வந்த ஞான பரம்பரையில் கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் விளங்கிய ஞானசம்பந்தரே, நமது தருமையாதீன ஆதிபரமா சாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவரது அருள் நோக்கில் விளங்கிவரும் தருமையாதீனம் திருஞானசம்பந்தர் திருவருட் சிறப்பிற்கு முதலாகிய தோணியப்பர், சட்டைநாதர் ஆலயத்தை நன்கு புரந்துவருவதுடன், திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டருளிய திருமுலைப்பால் திருவிழாவை மிகச் சிறப்புற நிகழ்த்திவருவது பலரும் நன்கறிந்தது.

பிள்ளையார் விழாக் காணும் பெருமை தருமைக்கே!

திருஞானசம்பந்தர் தம் திருமணக் காலத்தில் அடியார்கள் புடைசூழ சிவசோதியில் கலந்தருளிய ஆச்சாள்புரம் ஸ்ரீசிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானமும் தருமையாதீன அருளாட்சிக்கு உட்பட்டது என்பதும், திருஞானசம்பந்தர் சிவ சோதியில் கலந்தருளிய ஐதிகத் திருநாள் ஆண்டுதோறும்

அங்கு மிகச்சிறப்பாக நிகழ்த்தப்பெற்று வருவதும் இங்கே குறிப்பிடத் தக்கனவாகும். ஞானசம்பந்தர் திருப்பெயரைத் தாங்கி விளங்கிய ஸ்ரீ ஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற தருமையாதீனம் இவ்விரண்டு திருக்கோயில்களையும் பரிபாலித்து வரும் சிறப்பிலிருந்து திருஞானசம்பந்தரோடு இவ்வாதீனத்திற்கு உளதாகிய தொடர்பு நன்கு விளங்குவதாகும்.

ஆளுடைய பிள்ளையாரின் அந்த அருள் நிலைக்கு இடமாகிய இத்திருத்தலத்தில் நிகழும் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் மாநாட்டினை நம் ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தரது அருள்வழி நின்று தொடங்கி வைப்பதில் நாம் மிக்க மகிழ்ச்சி கொள்கின்றோம். சமாஜ அன்பர்களின் விருப்பத்தையும், அதனை மிகச் சிறப்பாக நிறைவேற்றும் வரவேற்புக் குழுவினரையும், அவர்கட்கு உறுதுணையாய் நின்று உதவும் சீகாழிப் பெருமக்களையும் பாராட்டுகின்றோம்.

முனைந்து பணிசெய்யும் முதலியார் குடும்பம் :

சீகாழி என்றதுமே ஞானசம்பந்தரும், ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் அளித்த அம்மையப்பருமே நம்நினைவிற்கு வருவார்கள். அடுத்து எல்லோர் நினைவிலும் இடம்பெறுவது இவ்வூரில் நெடுங்காலமாக வாழ்ந்துவரும் சான்றாண்மைமிக்க முதலியார் குடும்பம், முதன்மையாரைத்தான் முதலியார் என்று அழைக்கிறோம். அப்பெயருக்கு ஏற்பவே அக்குடும்பத்தினர் அன்றும் இன்றும் நடையுடைபாவனைகளாலும் குணத்தாலும் முதன்மையுடையவராகவே திகழ்ந்து வருகின்றனர். "செல்வர்க்கழகு செழுங்கிளைத் தாங்குதல்" என்ற மூதுரைக்கு ஏற்பப் பலரையும் அரவணைத்துச் செல்லும் ஆற்றல் மிக்கது அவர்கள் குடும்பம். திருவாசக பூஜை அல்லது சிவபூஜையை, வழிவழியாகச் செய்து வருகின்ற நல்ல குடும்பம். பகைமை உணர்வு படைத்தவரையும் பாராட்டிப் பண்பாளராக்கும் குடும்பம். பல்வேறு வகையாக மாறிவருகின்ற காலப்போக்கிலும் இக் குடும்பத்தினர் சைவம், தமிழ், தர்மம் என்றால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு அறநெறி போற்றுபவராகத் திகழ்கின்றனர். அக்குடும்பத்தார் முன்னின்று,

இவ்வூரில் உள்ளவர்களையும் அருகிலுள்ளவர்களையும் இந்நல்லறப் பணியில் பங்குகொள்ளச் செய்து, அவர்களுடைய உதவியுடனும் ஒத்துழைப்புடனும் இம் மாநாட்டைச் சீரும் சிறப்புமாக நிகழ்த்துவிக்கின்றார்கள்.

முன்னோரும் போற்றினர் :

*1942*ஆம் ஆண்டில் இங்கு நிகழ்ந்த சைவ சித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழாவை அன்று நடத்திய அதே குடும்பத்தினரே இன்றும் இம்மாநாட்டை முன்னின்று நிகழ்த்துவிக்கின்றார்கள். இவ்வாண்டுவிழாவையும் இக்குடும்பத்தின் மூத்த தலைமுறையினரே நடத்த ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. திருவருட் செயல் அடுத்த இளந்தலை முறையினரால் நிகழ்த்துவிப்பதாக அமைந்தது. இவர்கள், வைதிகப்பொலிவோடும், தெய்விகச் சிறப்போடும் இவ்விழாவை நல்ல முறையில் கொண்டாட வேண்டும் என்று விரும்பித் தெரிவித்துச் சென்ற சுப்பராய முதலியாரது வார்த்தையைச் சிறப்பாக மேற்கொண்டு நிகழ்விப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. இவர்கட்கும் இவர்களுடன் ஒத்துழைத்து உதவும் மற்றைய நல்லறக் குடும்பங்கட்கும் இன்றுபோல் என்றும் இறையருளும் குருவருளும் மிகப் பெருகி வாழ்விப்பனவாக.

இடையறுப்பணி வேண்டும் :

இவ் ஆண்டு விழாவில் சைவர் மாநாட்டுடன், சைவ மங்கையர் மாநாடு, சைவ இளைஞர் மாநாடு நடைபெறுதல் மகளிரையும், இளைஞர்களையும் சமய உணர்வு உடையராக்குதற்கு வழியாகும். எனினும் இத்தகைய முயற்சிகள் ஆண்டுக்கு ஒருமுறை ஒருநாள் நடைபெறுதல் போதியதாகாது. சமய உணர்வை ஆடவர் பெண்டிர் இளைஞர் அனைவரும் அடைதற்கான பணிகளைப் பல நாளும் பலவிடத்தும் நிகழ்த்துதல் வேண்டும். சமாஜம், "சித்தாந்தம்" என்னும் மாத இதழ், "சைவ சித்தாந்தா" என்னும் ஆங்கில முத்திங்கள் இதழ் இவைகளை வெளியிட்டு வருவதும், ஆண்டுதோறும் இளஞ் சைவப் புலவர், சைவப் புலவர் தேர்வுகளை நடத்துவதும் சிறந்த சமயப் பணிகளே. மேலும் பல பணிகளைப் பயனுள்ள வகையில் நடைபெறச் செய்தல் வேண்டும்.

சமாஜம் செய்ததும், செய்ய வேண்டுவதும் :

தமிழ் மன்னர்களும், சைவ ஆதீனங்களும் போற்றி வளர்த்த சைவநெறியை, மன்றங்களும், சபைகளும் போற்றி வளர்த்துள்ளன. அவற்றுள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை, பூவாளூர் சைவ சித்தாந்த சபை, சென்னை சைவ சித்தாந்த மகாசமாசம் போன்றன குறிப்பிடத்தக்கவையாகும். சமாசம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே திருமுறைகள் பன்னிரண்டையும், சித்தாந்த சத்திரங்கள் பதினன்கையும் எளிய விலையில் வெளியிட்டமை மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அறுபத்தெட்டு ஆண்டுகளாகப் பணிபுரியும் சமாஜம், தனக்கென்று ஒரு கட்டிடமும், வேண்டிய பொருள் வசதியும் இல்லாதிருப்பது வருந்தத்தக்கதாகும். சைவக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் பலர் உலகாயதர்களாகி வருகின்றனர். அவர்களைச் சிவநெறிக்கி ஆளாக்கவேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது. பெரியவர்கள் தலைவர்களாக - வழிகாட்டிகளாக இருந்து, இளைஞர்களை முன்னோடிகளாக வைத்து, சமாசப் பணிகளைச்செய்ய, சமாசத்தில் உள்ள பெரியவர்கள் முன்வருதல் சைவத்திற்கும் சமாசத்திற்கும் நலம் பயப்பதாகும். வருங் காலத்தில் சமாசம் இம்முறையில் பணி செய்து பல்லாண்டு வாழ்வதாக.

கற்றலும் கேட்டலும் கடைப்பிடித்து வாழ்வோம் :

சைவர் மாநாடு முதலிய மாநாடுகள், இவ்வாண்டில் தக்க தலைவர்கள் தலைமையில் தகுதி வாய்ந்த அறிஞர்களது பேச்சுக் களுடன் இங்கு நடைபெறுதல் சிறப்பைத் தருகின்றது. தலைவர் களும், பேச்சாளர்களும் சைவத்தைப் பற்றிய பல உண்மை களையும் ஒழுக்க நெறிகளையும் அவர்கள் தங்கள் நுண்மாண் நுழைபுலனின் பயனை நன்கு விளக்குவார்கள். கேட்டு இன்புறு கின்ற யாவரும் கேட்டவற்றில் ஒரு சிறுகூற்றையாவது தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.

வாழ்க சமாஜம் ! வளர்க சைவம் !

விழாவின் அங்கமாக ஆலயங்களில் கூட்டு வழிபாடு நடைபெறச் செய்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு நற்பணி. அன்பர்கள் சென்று வழிபடும் ஆலயங்களில் அருட்டிரு மேனி கொண்டு எழுந்தருளியிருக்கின்ற இறைவன், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அறுபத்தெட்டாவது ஆண்டுவிழா இனிது நிகழ்ந்து பலருக்கும் சமயப் பற்றை விளைக்கவும், விழாவை நன்முறையில் முன்னின்று நடத்துவிக்கும் சீகாழி முதலியார் குடும்பத்தினரும், மற்றும் பெருமக்களும், விழாவில் பல்லாற்றானும் பங்கு பற்றிச் சிறப்பிக்கும் அன்பர்கள் பலரும் பன்னலங்களும் பெற்று நீடு வாழவும், வெள்ளி விழாப் பொன் விழாக்களைக் கண்ட சமாஜம் மேலும் வைரவிழாக் கண்டு பல்லாண்டுகள் சைவப் பணியாற்றி வளர்ந்தோங்கவும் திருவருள் புரிக என நம் செந்தமிழ்ச் சொக்கன் திருவடிகளைச் சிந்தித்து இவ்விழாவினைத் தொடங்கி வைக்கின்றேம். வாழ்க சைவம்! வளர்க சமாஜத்தின் பணிகள் !

[27]

ஆசிரியரும் - ஞானசிரியரும் *

"உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார் பேணிக் கொளல்"

[தமிழில் 'குரு' என்ற சொல் ஆசிரியரைக் குறிக்கும். இவர்கள், உலகியல் அறிவு உணர்த்தும் குரு என்றும், உண்மை ஞானம் உணர்த்தும் குரு என்றும் இருதிறப்படுவர். ஞானசிரியரைத் தெய்வமாகவே கருதுதல் நமது சைவ மரபு. அவரைப் பற்றினால் மனமாசு நீங்கும் என்ற பல செய்திகளை விளக்கி, இத்தகு ஞானசிரியராக விளங்குபவர் மெய்கண்டதேவ நாயனார் என்பதை உணர்த்தி இக்கட்டுரை நிறைகிறது.

குரு என்பதன் பொருள் :

இன்றையநாள் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாரின் குருபூஜைத் திருநாள். இப்புனிதநாளை இரண்டு நாட்களாக ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனாரின் அருள் வாழ்வினையும் அவர்தம் ஞான நூலாகிய சிவஞான போதத்தையும் நினைவு கூர்ந்து சிறப்பாகக் கொண்டாடு கின்றீர்கள். குருபூஜை என்பது ஞானசாத்திரத்தை அறிவுறுத்தி உயிர்கள் உய்யும் வழியை உபதேசித்த குருமூர்த்திகளுக்குச் செய்யப்பெறும் பூஜையாகும். குரு என்றால் யார்? குரு

---

* பெண்ணாகடம் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் குருபூஜை விழாவில் திருவாய்மலர்ந்தருளி 10—2—1974 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.

என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன என்பது பலருக்குத் தெரிவதில்லை. குருவை உலகியல் அறிவு உணர்த்தும் குரு என்றும், உண்மை ஞானம் உணர்த்தும் குரு என்றும் இருவகையாகக் கொள்வர். 'கு' என்பதற்குப் பாவம் - அறியாமை என்பன பொருளாகும். 'ரு' என்பதற்கு நீக்கம் என்பது பொருளாகும். ஆகவே குரு என்ற சொல்லுக்கு அறியாமையையும் பாவத்தையும் போக்குபவர் என்பதே பொருளாம். ஆன்மாக்களின் அறியாமையைப் போக்கி, அவை கடைத்தேற வழிகாட்டி, ஞான நெறியை உபதேசிக்கும் குருவினைத் தக்கவர்மூலம் அறிந்து அவரைச் சார்ந்து ஒழுகினால் நமது பிறவித் துன்பங்கள் நீங்கும்; பேரின்பம் தலைப்படும்.

குரு இருதிறப்படுவர் :

தமிழில் குரு ஆசிரியர் எனப்படுகின்றார். ஆசு - குற்றம். இரிதல் - நீக்குதல், மனக்குற்றங்களை - அறியாமையை நீக்குபவர் - என்பதுதான் ஆசிரியர் என்ற சொல்லுக்குப் பொருள். எனவே உலகியற் பொருள்பற்றிய அறியாமையை நீக்குகின்றவர் பள்ளி ஆசிரியர். நிலையுடைய பொருள்கள் இவை. நிலையில்லாத பொருள்கள் இவை என்று உணரமாட்டாத அறியாமையை நீக்கி உணர்வரிய மெய்ஞ்ஞானத்தை வழங்குபவர் ஞானசிரியர். அவரே குரு என்ற சொல்லால் பெரும்பான்மையும் அழைக்கப் பெறுகின்றார். மெய்கண்டார் சைவ சமயத்தினர் அனைவருக்கும் ஞானகுருவாக விளங்குபவர். அத்தகைய ஞானகுருவை உணர்ந்துகொள்வதோடு அவரை வழிபடவும் அவர் வழங்கிய மெய்ப்பொருள்களை உணர்ந்து உய்திபெறவுமே ஸ்ரீ மெய்கண்ட தேவரது குருபூஜைத் திருநாளாகிய இந்நாளில் சொற்பொழிவுகளையும் வழிபாடுகளையும் நிகழ்த்துகின்றீர்கள். குருவின் உபதேச மொழிகளை உட்கொண்டு சிந்தித்துத் தெளிவதே சைவப் பெருமக்களின் தலையாய கடனாகும்.

குருவும் சிவமும் வேறல்லர் :

இறைவனே கண்ணுதலும் கண்டக்கறையும் மறைத்து மண்ணிடையில் மாக்கள் மயல்போக்க மானிடவுருவில் குருவாக வருகிறான் என்பது சித்தாந்தச் செந்நெறியின் முடிபு. இதனையே திருமூலரும்,

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே"

என்று கூறியுள்ளார். இந்தப் பாடலுக்குப் பொருள் விளக்கம் தேவையில்லை. இத்தகைய குருமூர்த்தியைக் காண்பதும் அவர் அருள்வாக்கைக் கேட்பதும், அவர் திருநாமத்தை ஓதுதலும் அவர் திருவுருவை அல்லும் பகலும் அனவரதமும் சிந்தித்தலும் நமக்குச் சிந்தனைத் தெளிவையும் தெளிந்த அறிவையும் நல்க வல்லனவாம். இதனையும் திருமூலர் பாடல் நமக்குத் தெளிவிக்கிறது.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

அழுக்கு நீங்க வழி :

அழுக்கு என்பதைச் சித்தாந்த பரிபாஷையில் 'மலம்' என்று குறிப்பிடுவர். மலம் என்றாலும் அழுக்கு என்றாலும் ஒன்றுதான். அழுக்கு எல்லாப் பொருள்களிலும் பற்றி உள்ளது. மனத்திலும் அழுக்குச் சேர்கிறது. நித்தம் விளக்கும் பாத்திரங்கள் தூய்மையாக இருக்கும். பலநாள் விளக்காத பாத்திரங்கள் புளியால் தூய்மைபெறுவதில்லை. கடைசல் பிடித்தால்தான் அவை அழுக்கு நீங்கித் தூய்மைபெறும். அதுபோல உள்ளத்து அழுக்கையும் நாளும் நாளும் நீக்கவேண்டும். அதற்காகவே ஞான நூல்களை நாளும் படித்தல்வேண்டும் என்று சான்றோர்கள் வற்புறுத்துகின்றனர். படித்திருந்தும் பயிற்சி இல்லை என்றால் படித்தன யாவும் மறந்துவிடும். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற முதுமொழி இதனை நன்கு வலியுறுத்தும். நாள்தோறும் படித்துவரும் பயிற்சியால் புதிய தெளிவுதானே பிறக்கும். ஒரு நாள் செய்யும் குருபூஜையில் - வழிபாட்டில் மட்டும் இவை யாவும் கிடைத்துவிடமாட்டா. ஆண்டுதோறும் இவ்விழாக்களை நடத்துதலாலும், சாத்திரங்களையும் தேவாரத் திருமுறைகளாகிய தோத்திரங்களையும் நாம் அடிக்கடி கற்பதாலும் தெளிவு பெறலாம்.

சிவஞானபோதம் தந்தவர் :

வேத ஆகமங்களிலும் தேவாரத் திருமுறைகளிலும் பரந்து கிடக்கும் சித்தாந்த சாத்திரச் செம்பொருட் கருத்துக்களை ஒன்று திரட்டி வகைப்படுத்தி, எளிமையாகத் தமிழில் சுவையாக சிவஞானபோதம் என்ற நூல்வழியாக முதன்முதலில் தந்த பெருமை மெய்கண்டார்க்கே உரியது. வேதாகமங்களின் முடிந்த முடிபாக, என்றும் அழியாது நிலைபேறுடைய பொருட்கள் எவை என்பதனை மெய்கண்டார் விளக்குகிறார். மூன்று பொருள்கள் நிலையானவை என்பது அவரது சிவஞானபோதத்தில் விளக்கப் படுகிறது. கடவுள், உயிர்கள், உலகம் என்பன அவை. இவற்றை முறையே பதி, பசு, பாசம் என வடமொழியில் குறிப்பிடுவர். இப்பொருள்கள் மூன்றும் என்றும் உள்ளன; எனவே இவற் றிற்கு அழிவில்லை. தோன்றுவன யாவும் அழியும் தன்மையன. உலகம் தோன்றி நின்று அழிவது. தோன்றிநின்று அழியும் உலகத்திற்கு ஒரு தலைவன் வேண்டும். இத்தலைவனையே சிவபரம்பொருள் என்று குறிப்பிடுகின்றோம்.

கடவுள் உண்மைக்கு எடுத்துக்காட்டு :

கடவுள் உண்டா இல்லையா என்ற ஐயம் எல்லோருக்கும் எழுகிறது. இதை எளிமையாகச் சொல்லவேண்டுமானல் உடலில் உயிர் இருக்கிறதா? இல்லையா? என்பதைப் புரிந்து கொண்டால் இதற்கு விடை புரிந்து விடும். உயிரைக் கண்ணால் பார்க்க முடியாது. உடல் இயங்குவதைக்கொண்டு உயிர் உண்டு - இருக்கிறது என்பதை எல்லோரும் உணர்கிறோம்; ஒத்துக்கொள்கிறோம். அதைப்போலவே பூமண்டலம், சந்திர மண்டலம், சூரிய மண்டலம் அனைத்தும் அவற்றின் கதியில் சுழன்றுகொண்டிருக்கின்றன. அதனை ஊன்றி உணர்வோமானல், அது கடவுள் என்ற சக்தியால் நடக்கிறது என்பதை நம்மில் பலரும் தெளிந்துகொள்ளலாம். இதனைக் குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர்,

> "சாட்டி நிற்கும் அண்டமெலாம் சாட்டையிலாப்பம்ப ரம்போல்
> ஆட்டுவிக்கும் குற்றாலத் தண்ணலார்"

என்று குறிப்பிடுகிறார்.

உடல் இயக்கத்தால் உயிர் உண்மை அறியப்படுவதுபோல உலக இயக்கத்தால் இறைவன் உண்மை அனுமானித்து அறியப் படுகிறது. இதயத் துடிப்பு உயிர் முயற்சியால் நடைபெறுகிறது. அந்த உயிரை உள் நின்று இயக்குபவன் இறைவன்; உயிர்க்குத் துணையாக உதவுவன பஞ்சபூதங்களும், பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டான உடம்பும், உடம்பில் உள்ள உறுப்புக் களுமேயாகும். இவை இன்றேல் உயிர் ஒன்றையும் அறிய முடியாது.

முப்பொருள்களின் இயல்பு :

முப்பொருள்களில் இறை, உயிர் இரண்டும் அறிவுப் பொருள்; உலகம் அறிவில் பொருள். 'இறை உணர்வும் உயிர் உணர்வும் ஒன்றல்ல. வேறுபட்ட தன்மையுடையன. இறை-உணர்த்தும் அறிவு, உயிர் - உணரும் அறிவு. இதனைச் சூரியனும் கண்ணும்போல என்ற உதாரணத்தால் விளக்கலாம். சூரியன்-காட்டும் ஒளி; கண் - காணும் ஒளி. சூரிய ஒளியில்லாமல் கண் எதனையும் காணவியலாது. அது போலத்தான் இறைவன் உணர்த்தாமல் உயிர் எதனையும் உணராது. ஓரறிவு பெற்ற உயிர்களாகிய செடி கொடிகள் முதல் தேவர்கள் வரை அனைத் துயிர்களும் உணர்த்த உணருமேயன்றித் தாமே உணரா. இறைவனது அறிவு, பேரறிவு. உயிர்களின் அறிவு, சிற்றறிவு. இவ்வளவு நுட்பமான கருத்துக்களையும் இதுபோல இன்னும் பல நுண்பொருள்களையும் பன்னிரண்டே நூற்பாக்களில் நாற்பது வரியில் நமக்கு மெய்கண்டார் விளக்கியருளுகின்றார்.

சிவஞானபோதம் உணர்த்துவன :

இந்நூலைப் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என்னும் நான்கு இயல்களாகப் பகுத்துள்ளார். பிரமாண இயலில் முதல் மூன்று சூத்திரங்களால் முறையே கடவுள் (பதி) உண்மை, உலக (பாச – ஆணவம், கன்மம், மாயை) உண்மை, உயிர் (பசு) உண்மை என்னும் முப்பொருள் உண்மைகளைப் பிரமாணங்களால் விளக்குகின்றார். இலக்கண இயலில் நான்கு, ஐந்து, ஆறு சூத்திரங்களால் முறையே உயிரின்

பொது இலக்கணம், பாச இலக்கணம், பதியின் சிறப்பு இலக்கணங்கள் கூறப்படுகின்றன. சாதன இயலில் ஏழு, எட்டு, ஒன்பதாம் சூத்திரங்களால் முறையே சாதனை செய்வன உயிர்களாகவும், அவைகட்குக் குருவாக வந்து அருள்புரிவோன் இறைவனாகவும், அந்த உயிர்கள் சாதனை புரிகின்றபோது வாசனாமலம் தாக்காது துணையாய் நிற்பது திருஐந்தெழுத்தாகவும் விளக்கப்படுகின்றன. பயனியலில் பத்து, பதினொன்று, பன்னிரண்டாம் சூத்திரங்களால் முறையே உயிரைப்பற்றி நிற்கின்ற பாச (துன்ப) நீக்கமும், சிவப்பேறு (இன்ப ஆக்கம்) பெற்றுச் சீவன் முத்தராகும் நிலையும், சீவன் முத்தராயினும் ஆலயத்தையும் அடியவர் வேடங்களையும் அரன் எனவே தொழுதுய்யும் பயனும் விளக்கப்படுகின்றன. பிரமாணம் முதலிய நான்கு இயல்களாலும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் நான்கு வகையாக விளக்கப்பட்டிருப்பது உணர்ந்து மகிழத்தக்கது.

சிவஞானபோதம் உணர வாரீர் :


இத்தகு அருள் நூலைச் சைவர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் முதலில் தெளிவாகப் புரிந்துகொள்வதும், அதனை மற்றவர்களுக்கு விளங்க எடுத்துரைப்பதும் இன்றியமையாததாகும். நுட்பமான இவ்வாராய்ச்சி நூல், முதலில் விளங்கவில்லையென்றாலும், உள்ளம் வளர வளரத் தெளிவுபடும். 'கற்றலில் கேட்டலே நன்று' என்பது நமது ஆன்றோர் கொள்கை. இங்குள்ளோர் அனைவரும் சிவஞானபோதத்தை உணர வேண்டும் என்பதனாலேயே சென்ற ஆண்டில் நம் அன்பர் இரத்தின சபாபதியைக் கொண்டும், இவ்வாண்டு சுந்தரமூர்த்தியைக் கொண்டும் சிவஞானபோத விரிவுரைகளை மாதந்தோறும் நிகழ்த்தியுள்ளீர்கள். நிகழாண்டில் டாக்டர். சிங்காரவேலரால் விரிவுரை நிகழ்த்தப்பெறுகிறது. அனைவரும் இவ்விரிவுரையைத் தொடர்ந்து கேட்டுத் தெளிவுபெற வேண்டும். நம்முடைய அறிவு – ஆற்றல் – தகுதிகளுக்கு ஏற்ப இந்நூல் விளங்கும். இங்ஙனம் இதனை அனைவரும் ஓதி உணர்வு பெறவேண்டும் என்பதற்காகவே

சிவஞானபோதம் பன்னிரண்டு நூற்பாக்களையும் இதுபோது ஸ்ரீ மெய்கண்டார் ஆலயத்தில் கல்வெட்டாக அமைத்துள்ளோம். அச் சூத்திரங்களும் அதற்கான தெளிவுரையும் இன்று புத்தகமாகவும் அச்சிட்டு அன்பர்களுக்கு வழங்கப்படுகின்றன.

நன்முயற்சிக்கு வாழ்த்து:

மெய்கண்டார் பரம்பரையில் வந்த சைவ மெய்யன்பர்கள் பெருமுயற்சியுடன் இவ்வாலயத் திருப்பணிகளை நிறைவுறச் செய்து, குடமுழுக்கு நிகழ்த்தி, நித்திய நைமித்திக வழிபாடுகள் எல்லாம் குறைவற நிகழ்வித்து மாதச் சுவாதி வழிபாடுகளையும் ஆண்டுச் சுவாதி வழிபாட்டையும் சிவாசாரியர்களைக் கொண்டு மிகச் சிறப்பாக நடத்தி, கண்ணெனக் காத்து வருகின்றனர். இந்தப் பணிகளில் பங்குபற்றி வருகின்ற அன்பர்கள் அனைவரும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

மல்லியக்கொல்லையில்
பாலாஜி அட்டை தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டியபோது



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாசி வழங்கல்
(9—12—1973)

[28]

சமுதாயத்தில் செல்வர்கள் பங்கு *

> "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தற் பொருட்டு"

[செல்வம் முயற்சியின் விளைவேயாயினும், அதனை மக்கள் நலத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும், பயன்படுத்துதல் செல்வர்கள் கடமை என்பதனை வலியுறுத்தி, செல்வர்களுக்கும் - அவர்களிடம் பணியாற்றும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு ஏற்பட்டுச் சிறக்க வேண்டுவதன் இன்றியமையாமையையும் இக் கட்டுரை விளக்குகிறது.]

ஏற்றத் தாழ்வுகள் ஏன்?

இந்தியா மிகப் பெரிய நாடு; அதே நேரத்தில் ஏழைமை நிறைந்த நாடாகவும் இருக்கிறது. இங்கே ஏழைமை நிலவக் காரணம் என்ன? சில நாடுகள் செல்வம் கொழிப்பது ஏன்? என்றெல்லாம் நாம சிந்திக்கவேண்டும். மனிதர்களில் சிலர் செல்வராகவும் – சிலர் ஏழைகளாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன? இதனைச் சிந்தித்தாலே நாட்டின் நிலைமை நன்கு புரியும். முயற்சியும் – உழைப்பும் திறமையும் உடையவன் செல்வம் பெறுகிறான். முயற்சியின்மையும், திறமையின்மையும், சோம்பல் உண்மையும் உடையவன் ஏழைமையில் வாடுகின்றான். இது

---

* *மல்லியக்கொல்லை பாலாஜி பேப்பர் போர்ட்ஸ் (பி) லிட்.,க்கு அடிக்கல் நாட்டித் திருவாய் மலர்ந்தருளி 10—3—1974 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

பெரும்பான்மை. சிறுபான்மை இந்நிலைக்கு விதிவிலக்காக இருப்பதைக் காணலாம். அதனை மேற்கோளாகக் காட்டுவது நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்றதாகாது. உழைத்தவர்கள் உயர்வதையும் - உழைக்காதவர்கள் தாழ்வதையும் உலகியலில் காண்கின்றோம். செல்வமும் என்றும் ஒரே இடத்தில் நிலை பெற்றிருப்பதில்லை. "செல்வம், சகடக்கால்போல வரும்" "ஆறிடு மேடும் மடுவும் போலாம் செல்வம்" என்பன ஆன்றோர் வாக்குக்கள்.

வளர்ச்சிக்கு வழி :

தனி மனித முயற்சிக்குத் தக்கபடி அவன் வாழ்வு வளம் பெறுவதுபோல - ஒரு சமுதாயத்தின் உழைப்பு - தன்னம்பிக்கை இவற்றின் அளவிற்கேற்ப நாடும் முன்னேற்றமடையும். நாமும் பல முயற்சிகளில் ஈடுபடுகிறோம். ஆனால் முயற்சி சரியாகத் திட்டமிடப்படுவதில்லை. நல்ல துணிவும் — நல்ல செயலும் முறையான வளர்ச்சிக்கு வழிகோலும் என்பதில் ஐயம் இல்லை. தமது சக்தியையும் — தாம் மேற்கொள்ளும் செயலின் அளவினையும் சீர்தூக்கித் துணிந்தபின் ஒரு காரியத்தில் ஈடுபடுதல் வேண்டும். இவ்வறிவு இல்லையென்றால் முயற்சி வெற்றி பெறாது. இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார்.

> "உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
> இடைக்கண் முரிந்தார் பலர்"

என்ற குறட் கருத்தைச் சீர்தூக்கி முயற்சிகளில் இறங்கவேண்டும். எதிலும் அமைதியான நெஞ்சம் வேண்டும்; அவசரம் கூடாது. இத்தகு நெஞ்சுடைய மக்கள் வாழும் நாடு வளரும்.

எது நல்ல நாடு ?

வல்லவர்களாக நாம் இருப்பதோடு — நல்லவர்களாகவும் திகழ்தல் வேண்டும்; எந்த நாடு சிறந்தது என்ற கேள்விக்குப் புறநானூற்றில் ஔவையார் ஒரு விடை கூறுகின்றார். அது மேட்டு நிலமாக இருக்கலாம் - பள்ளமாக இருக்கலாம்; அல்லது

காடாக இருக்கலாம் – நாடாக இருக்கலாம். இவற்றால் ஒரு நாட்டை நல்ல நாடு என்று தீர்மானிப்பது இயலாது; எங்கே முயற்சிக்கு உரிய ஆடவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அங்கேதான் நாடும் நல்ல சிறப்புடையதாகும் என்பது அப் பாட்டின் கருத்தாகும்.

> "நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்ற பாட்டை நாம் சிந்திக்க வேண்டும். நாமும் நல்லவர்களாக இருக்கவேண்டும். நம் பக்கத்திலும் பலர் நல்லவர்களாக இருக்கத் தூண்டவேண்டும். திறன், உழைப்பு, ஊக்கம், நல்லதைச் செய்யும் நாட்டம் உடையவர்களாக மக்கள் இருந்தால் அப்பகுதி வாழும். நமது வல்லமைகளால் நம் நாட்டுக்கு உலகில் சிறப்பில்லை. நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் பெற்று வளர்த்த பெருமைக்குரிய நாடு நம் நாடு. சமீப காலத்தில் கூட காந்தியடிகளைப்போன்ற நல்லவர்களைப் பெற்று வளர்த்துத்தந்த பெருமை நமது நாட்டுக்கு உண்டு. 'நம் ஊரின் பெருமையால் நமக்குப் பெருமை என்ற நிலை மாறி, நம்மால் – நாம் வாழும் பகுதிக்குப் பெருமை' என்ற நிலை வரவேண்டும். நம்மைப் பொறுத்தவரை, ஆதீனத்தால் நாம் சிறப்படைவதைவிட, நம்மால் ஆதீனத்திற்குப் பெருமை சேர்க்க முடியுமா என்ற எண்ணங் கொள்வதே சிறந்தது.

> "நல்லது செய்தல் ஆற்றீராயினும்
> அல்லது செய்தல் ஓம்புமின்"

என்ற புறநானூற்றுப் பாடற்கருத்தை உணர்ந்து, தாம் தொடர்பு கொண்டிருக்கும் நிறுவனத்திற்கோ, சமுதாயத்திற்கோ, நம்மைப் பெற்று வளர்த்த நாட்டிற்கோ நாம் பெருமையைத் தேடித் தராவிடினும் சிறுமையை உண்டாக்காமலாவது இருக்கவேண்டும். இவ் வட்டாரத்து மக்கள் நன்முயற்சிகளில் ஈடுபட்டுத் தாம் வாழும் பகுதிக்குச் சிறப்புச் சேர்க்கவேண்டும்.

உழைப்பும் – உரிமையும் :

நாம் முயன்று உழைக்கவேண்டும். அதே நேரத்தில் மற்றவர்கள் முயற்சிக்கும் ஒத்துழைப்புத் தருதல் வேண்டும். மற்றவர்களுக்கு உழைப்பை நல்கி உரிய பங்கினையும் – பெருமையையும் நாம் பெறலாம். நமது உடம்பில் உள்ள உறுப்புக்கள்கூட தத்தம் உழைப்புக்குத்தகச் சிறப்பிக்கப்படுதலை உற்று நோக்கினால் அறியலாம். கை கால் முதலிய அனைத்து உறுப்புக்களும் அவை அவையும் உழைத்துத் தம் தம் பணிகளைச் செய்து சிறப்புறுகின்றன. அதேபோல இந்நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தம்மால் இயன்ற உழைப்பை ஈந்து பெருமை தேடித்தரவேண்டும். உடலுழைப்பும் வேண்டும் – அறிவு உழைப்பு (மூளை உழைப்பு)ம் வேண்டும். இரண்டும் இணைந்தால்தான் உயரலாம்.

சமுதாயச் சுழற்சி :

இந்த பாலாஜி அட்டைத் தொழிற்சாலை வைத்தியநாதப் பெருமானுக்கு உரிய இந்நிலத்தில் தொடங்கப்பெறுகிறது. இந்நேரத்தில் இறைவனருளைக் கருத்தில் கொள்ளவேண்டும். இறைவனோடு இதற்குத் தொடர்பு உண்டு. உலகத்தில் சும்மா இருந்து உண்டு வளர இறைவன் யாரையும் படைக்கவில்லை. உழைத்து உண்ணவே கைகால் முதலிய உறுப்புக்களை ஈந்து - அவற்றிற்கு ஆற்றல்களையும் வழங்கியுள்ளான். நம்மால் செயல்பட இயலாத பருவத்தில் இறைவன் பூரணமாக உதவுகிறான். குழந்தை தாய் வயிற்றில் இருக்கும்போது உணவு ஊட்டுகின்றான். குழந்தை பிறந்தவுடன் தாய் மடியில் பால் சுரக்கிறதே அதுவும் நியதியாக இறைவனால் ஆக்கப்பட்டதே.

இதனை,

"ஈயறியாப் பூந்தேனே எழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவில்இருந்து அமுதூட்டும் தாய்த்துணையே
நீஅறியாச் செயல்உண்டோ நிகிலபரம் பரமூர்த்தி"

எனத் திருக்குற்றாலத் தலபுராணம் அழகுற விளக்குகிறது. சிறு குழந்தையாக இருக்கும்போது அதன் தேவைகளை எல்லாம்

தாய் நிறைவேற்றுகிருள். வளர்ந்த பிறகு அதன் பருவத்திற்கு ஏற்ப அக்குழந்தையிடமிருந்தே சிறு சிறு வேலைகளை வாங்கிக் கொண்டுதான் உணவூட்டுகிருள். இதுபோல நம்மால் இயலாத போது பிறர் உதவிகளைப்பெற வேண்டும் என்ற எண்ணமும், வளர்ந்து உரம்பெற்ற பின் மற்றவர்களுக்கு, உதவ வேண்டும் என்ற எண்ணமும் வளர வேண்டும்.

செல்வர்கள் கடமை :

செல்வர்கள் தொழிலில் ஈடுபட்டே செல்வத்தைப் பெருக்க வேண்டும். வட்டிக்குவிட்டுப் பொருள் ஈட்டுவது தொழில்துறைப் பயிற்சி இல்லாதவர்களுக்கும் இயலாதவர்களுக்குமே உரிய தாகும். செல்வர்கள் தொழிலில் ஈடுபடுவதால் தொழில் நிறுவனம் இருக்கும் இடத்தைச் சேர்ந்த குடிமக்களும் பக்கத்து ஊர்களில் உள்ள குடிமக்களும் பயனடைவார்கள். தொழில் வளர்ச்சி சிறந்திருக்குமானுல் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கும். குடிமக்களும் செல்வ வளம் பெறலாம். தொழில் வளர்ச்சிக்கு இடையூருக வேலை நிறுத்தம் முதலியவற்றில் தொழிலாளர்கள் ஈடுபட்டால், தொழில்துறை பாதிக்கப்படுவதோடு தொழிலாளர்களும் பாதிக்கப் படுவார்கள். ஆகவே தொழிலாளர்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவித் தாங்களும் பயனடைய வேண்டும்.

முதலாளி தொழிலாளி பேதம் நீங்க :

முதலாளி தன் கடமை உணர்ந்து தொழிலாளிகளுக்குத் தேவையான - உழைப்பிற்கேற்ற வசதிகளைச் செய்துதரல் வேண்டும். அதேபோலத் தொழிலாளியும் நிறுவனத்தின் வளர்ச்சியில் நாட்டம் உடையவர்களாய் ஊதியத்திற்குரிய உழைப்பை நல்கி நிறுவனத்திற்கு நஷ்டம் வராமல் பாதுகாக்க வேண்டும். இந்த எண்ணம் மக்களிடையே செழிக்குமானுல் முதலாளி - தொழிலாளி என்ற பேதம் நீங்கி அமைதியான வளர்ச்சி உண்டாகும். நிறுவனத்திற்குத் தீங்கு வருமானுல் தொழிலாளி உயிர் கொடுத்தும் காக்க முற்படவேண்டும்.

" தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே "

என்ற அப்பர் வாக்கிற்கிணங்க இருவரும் கடமையை உணர்ந்து செயல்பட்டால் முதலாளி தொழிலாளி போராட்டத்திற்கே வழியேற்படாது.

இருவகை உழைப்பு :

இந்திய நாட்டின் நிலம் நாட்டு மக்கள் அனைவருக்கும் சொந்தம். உழைப்பும் - திறனும் உடையவர்களிடம் அது உள்ளது. நிலமுடையவர்கள் தம்மை அண்டி வாழும் வறுமை உடையவர்களை, சவலைப் பிள்ளைகள் போலக் கருதிப் பாதுகாக்க வேண்டும். உழைப்பு இருவகைப்படும். அறிவால் உழைப்பது ஒன்று. உடலால் உழைப்பது ஒன்று. உடல் உழைப்புக்கு ஓய்வு உண்டு. அறிவு உழைப்புக்கு ஓய்வு இல்லை. அறிவு உழைப்பு நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையானதென்பதனால்தான் அதற்கு அதிக ஊதியமும் சிறப்பும் தரப்படுகின்றன. இந்த உண்மையைப் பாமர மக்கள் புரிந்துகொள்வதற்கு நாம் உதவுதல் வேண்டும். விரைந்து செல்லும் வாகனங்களை மூளை உழைப் புடையவர்கள் பயன்படுத்துகிறார்கள். அது ஆடம்பரங்கருதிய தல்ல. அவ்வாகனங்களால் சேமிக்கப்படும் கால அளவுகளை மேலும் பயனுள்ளதாக்கவே இவைகள் உபயோகப்படுத்தப் படுகின்றன. இவையெல்லாம் சாதாரண மக்களுக்கு விளங்குவ தில்லை. இதனால் பேத உணர்ச்சி வளர்கிறது.

உழைப்பில் நம்பிக்கை :

இன்றைய தினம் இத்தொழிற்சாலையை இவ்விடத்தில் தொடங்குவதற்காக நம் அன்பர் நடராஜனும் - அவரது சகாக் களும் நம்மிடம் வந்தார்கள். உழைப்பில் நம்பிக்கை வைத்து அவர்கள் இவ்விடத்தை வேண்டினர். நாமும் இவ்விடத்தை நல்வழியில் பயன்படுத்த நினைத்தோம். அவர்கள் இதனைப்பெற்று இன்று பயன்படுத்திக்கொள்கின்றனர். நமக்கும் - அவர்களுக்கும் இதனால் பயன் விளைகிறது. நம்மை இந்நிலத்தை வழங்கியதற் காகப் பாராட்டினார்கள். பாராட்டு நமக்கல்ல. நடராஜனுக்கும் - அவரது சகாக்களுக்கும் - அவர்களது உழைப்புத் திறனுக்குமே யாகும். திருக்கோயில் வளர்ச்சிக்கு நாம் அனைவரும் உழைக்க

வேண்டும். அவ்வகையில் இவர்கள் உழைப்புப் போற்றத்தக்க தாகும். எல்லார்க்கும் இது பெருமை தருவதாகும். அவர்கள் செயலாற்றலால் இதனைச் சிறக்கச் செய்வார்கள்.

முயற்சி வழியில் மூவர் :

நம் அன்பர் நடராஜன் முதலிய மூவர் இதற்கு டைரக்டர் களாக அமைந்துள்ளனர். இது ஒரு சிறப்பாகும். உலக இயக்கமே மூவரால்தான் நடைபெறுகிறது. ஒடுக்குபவராகிய உருத்திரரே முதல்வர். கலகங்கள் முதலியவற்றை ஒடுக்கும் போலீஸ் பிரிவு முதல்வர் அதிகாரத்தில் இருப்பதை எண்ணிப் பார்த்தால் இது புரியும். இச்சை - ஞானம் - கிரியை எனச் சக்திகள் மூன்று; அயன் - அரி - அரன் எனத் தலைவர் மூவர், இடைகலை - பிங்கலை - சுழுமுனை என உயிர்ப்பு மூன்று; இவ்வாறு உலக இயக்கங்கள் யாவும் மும்மூன்று சக்திகளாக அமைந்திருப்பதுபோல - இத்தொழிற்சாலையும் மூவரால் இயக்கப் படுவது பொருத்தமேயாகும். உழைப்பில் நம்பிக்கை வைத்து உழைக்கும் இவர்கள் தந்தை, நமது ஆதீனத் திருக்கோயில்களில் திறமையாகப் பணியாற்றியவர். நல்ல உள்ளமும் - உழைப்பும் கொண்ட குடும்பத்தில் வளர்ந்த இவர்கள் தொடங்கும் முயற்சி வெற்றி பெற்று ஓங்கப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

[29]

சட்டமும் - கடமையும் *

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

[பழமை தந்த படிப்பினைகளை நினைந்து புதுமையில் நடைபோட வேண்டிய மக்களினம் இன்று அமைதி யின்மையையும் - வறுமையையும் ஏன் எய்தியிருக் கின்றன என்பதனை விளக்கி, இன்றைய ஆட்சியாளர் களும் - அவர்கள் கொண்டுவரும் சட்டங்களும் – அவற்றிற்கு மக்கள் தரும் மதிப்பும் எவ்வாறுள்ளன என்பதனையும்-மக்களின் மனமாற்றமும்-இறைவனின் கருணையும் கூடினுலன்றி இன்றைய சமுதாயம் மேம்படுதல் இயலாது என்பதனையும் இக்கட்டுரை நுட்பமாக விளக்குகிறது]

புத்தாண்டுப் பிறப்பு :

பழமையில் ஒரு சலிப்பும், புதுமையில் ஒரு மகிழ்ச்சியும் கொள்ளுதல் பொதுமக்களுக்கு உள்ள ஓர் இயல்பு. இதற்கு ஆண்டுகளின் மாற்றங்களும் விலக்கல்ல. வருகின்ற புத்தாண்டும் "ஆனந்தம்" என்ற பெயருடனே வருகின்றது. புத்தாண்டின் பெயரைக் கேட்கும் பொழுதே ஆனந்தமாகத் தான் இருக்கின்றது, அதன் பலனையும் ஒரு வெண்பா பின் வருமாறு ஆனந்தமாகக் கூறுகின்றது.

---

* தமிழ்ப் புத்தாண்டை ஒட்டி 10—4—1974 ஞானசம்பந்தம் இதழுக்கு வழங்கியருளியது.

"ஆனந்த ஆண்டதனில் ஆகாத தொன்றுமில்லை;
வானம் பொழியும் வரிவிளையும் — தேனே
கரும்புண்டாம் ஆமணக்குக் காணுது காயில்
வருந்தா னியம்குறைவாம் வந்து"

புத்தாண்டுத் தினம் மகிழ்ச்சிக்குரிய ஒன்று. நல்ல நாளுங் கூட, அதனை மக்கள் வழக்கம்போல வரவேற்று, நல்ல முறையில் கொண்டாடி மகிழ இருக்கின்றார்கள். புத்தாண்டுப் பிறப்பில் பஞ்சாங்கம் கேட்டு அந்த ஆண்டில் விளைய இருக்கும் பலன்களை அறிதல் மரபு. அந்த மரபும் தவறாமல் கடைப்பிடிக்கவேபெறும்.

சிந்தனை வேண்டும் :

புத்தாண்டுப் பிறப்பை இவ்வாறு மரபு பிறழாமல் கொண்டாடிப் பஞ்சாங்கத்தில் உள்ளதைப் படித்தோ அல்லது கேட்டோ போய்விடுதல் மட்டும் போதுமா? அவை பற்றிய சிந்தனை வேண்டாமா? "பஞ்சாங்கம் என்பது, 'திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்' என்னும் ஐந்து உறுப்புக்களால் அவ்வப்பொழுது அமையும் காலத்தின் தன்மையைக் கூறுவது. அதன்வழிக் காலத்தின் தன்மையை அறிந்துகொள்வது. மனிதன் அதற்கு ஏற்பத் தன் செயல் முறையை வகுத்துக் கொண்டு செயற்படுதற்கேயல்லது, "எல்லாம் காலத்தின்படி நடக்கும்" என்று சொல்லிவிட்டுக் கவலையற்று இருப்பதற்காக அல்ல.

இன்றைய நிலை :

புத்தாண்டை வரவேற்கும் மகிழ்ச்சியில் நாம் பழைய ஆண்டின் நிகழ்ச்சிகளை மறந்துவிடுதல் கூடாது. அவற்றை நினைவிற்கொண்டே அடுத்த ஆண்டில் நமது செயல் முறைகளை அமைத்தல் வேண்டும். பொதுவாக இன்று நாட்டில் எந்த இடத்திலும் அமைதியில்லை. எங்கும் வேலை நிறுத்தம், கிளர்ச்சி, வன்முறை இவைகளே காணப்படுகின்றன. சட்டசபைகளுக்குள்ளேயே கூடக் கூச்சலும், குழப்பமும் நிகழ்கின்றன. தேர்தலை நடத்திப் புதியதாக அமைக்கப்படும் சட்ட மன்றங்கள் மிகக் குறைந்த வாழ்நாளில் மறைந்து விடுகின்றன. இளைஞர்

சமுதாயம், பல்வேறு சூழலில் சிக்கித் தனது எதிர்கால நிலையைச் சிறிதும் கருத்திற் கொள்ளாது, மாலுமியில்லாக் கப்பல்போலத் தான் போவதே போக்காய்ப் பல்வேறு திசையில் செல்லத் தொடங்குகின்றது.

மக்களின் கடமை :

இத்தகைய அமைதியின்மைக்குக் காரணங்கேட்டால், ஒவ்வொருவரும் மற்றவர்மேல் குற்றம் சொல்லுகிறார்களேயன்றித் தங்கள்மேல் குற்றம் உள்ளதாக ஒப்புக்கொள்வதில்லை. தொழிலாளி முதலாளியையும், முதலாளி தொழிலாளியையும் குற்றம் கூறுதல், மக்கள் ஆட்சியாளர் மீதும், ஆட்சியாளர் மக்கள்மீதும் பழிபோடுதல் இவைதாம் இன்று காணப்படுகின்றன. அரசியலார் அவ்வப்பொழுது கொண்டுவரும் சட்டங்களில் சில, மக்கள் கடைப்பிடிக்க இயலாத வகையில் அமைதல் இவற்றிற்கு ஓரளவு காரணமாகலாம். என்றாலும், சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் மதிப்புத்தர மக்கள் கடமைப்பட்டவர்கள். அவ்வாறு இல்லாவிடில், எந்த அரசும் மக்களுக்கு நல்வாழ்வை அளிக்க இயலாது. ஆட்சியாளரும் சட்டங்களின் தன்மையையும், விளைவையும் சிந்தித்தே சட்டம் இயற்றக் கடமைப்பட்டவர்கள். இவையெல்லாம் எப்படி இருப்பினும், தன்னலமும், உழைப் பின்றியே உண்டு உயர விரும்பும் விருப்பமும், மற்றவர் படும் துன்பத்தைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்ளாத மனப்பான்மையுமே நாட்டின் இன்றைய நிலைக்குப் பெரிதும் காரணமாகும். மக்கள் இவைகளை விடுத்துப் பொதுநலம் பேணவும், உழைப்பும், ஈவு இரக்கமும் உடையவர்களாக இருக்கவும் உறுதியெடுத்துக் கொள்வார்களானால், அதுவே அவர்கள் உண்மையில் புத்தாண்டுப் பிறப்பை நன்முறையில் கொண்டாடுவதாக அமையும். அத்தகைய நல்ல உள்ளத்தை மக்கள் அனைவர்க்கும் வழங்க இறைவனை வேண்டுவது நமக்குக் கடமையாகின்றது.

இறைவனின் இயல்பு :

தேவி மான்மியத்தில் தேவியின் பெருமையைப்பற்றி சில கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அவை, தேவி வியாபகமான மாயாசொரூபமாக இருக்கிறாள். எல்லா உயிர்களிடத்தும்,

அவற்றின் அறிவு, புத்தி, ஆற்றல், பொறுமை, அமைதி, ஊக்கம், மனப்பான்மை, இரக்கம், மகிழ்ச்சி முதலிய அனைத்து வடிவாகவும் இருக்கின்றாள் என்பன. இஃதே இறைத்தன்மை யாதலால், இத்தகைய இறைவன்தான் இன்று எல்லா மக்களுக்கும் நல்லறிவையும், நற்புத்தியையும், ஆற்றலையும், பொறுமையையும், அமைதியையும், ஊக்கம் முதலியவற்றையும் தருதல் வேண்டும். இதை நாம் இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பாக, நம் ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர், அன்றே தம் ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமானிடம் செய்துகொண்ட விண்ணப்பம் ஒன்று உண்டு. அதில் அவர் இறைவனை நாள்தோறும் தம் உள்ளத்தில் எழுந்தருளி வந்து சித்தமயலைப்போக்கி, நற்புத்தியை நன்கு போதித்து, நிலையான பூரண இன்பத்திலே திளைக்கச்செய்தருளும்படி வேண்டுகின்றார்.

"நித்தம் எழுந்தருளி நின்மலனே என்றனக்குப்
புத்தி மிகமிகவும் போதித்துச் — சித்தமயல்
போக்குவாய் ; இன்பசுக பூரணத் திரண்டறவே
ஆக்குவாய் சொக்கநா தா"

இந்த விண்ணப்பம் இகம், பரம் இரண்டிற்கும் பொருந்துவதாய், வேண்டுவோர் வேண்டுவதைத் தருவதாகும். ஆகவே, ஆனந்த ஆண்டில் மக்கள் அனைவரும் இதனையே சொல்லி விண்ணப்பித்து, செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் நல்ல அறிவும், அருளும், அமைதியும், ஆக்கமும் பெற்று ஆனந்தத்துடன் வாழ்வார்களாக.

[30]

புராணங்கள் தரும் படிப்பினை *

"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்"

[திருஞானசம்பந்தப்பெருமானின் திருவருள் வாழ்வின் நுட்பங்களை விளக்கும் இக்கட்டுரை, சமய நீதிகளைக் கதைவடிவில் எடுத்துரைக்கும் நமது புராணங்கள், அரிய பல செய்திகளையுடைய கருவூலங்களாக விளங்குவன என்பதையும், சமய மரபுகள் சமுதாயத்திற்கு வழங்கும் அருட் கொடைகளையும் சிந்தனைக்கு விருந்தாகத் தருகிறது]

தனிப்பெருந் திருநாள் :

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

சமய உலகம் மகிழ்ச்சியோடு கொண்டாடத்தக்க தனிப் பெருந்திருநாள் இன்றைய 'திருமுலைப்பால்' திருநாள். திருஞான சம்பந்தப் பெருமான் உமையம்மை அளித்த சிவஞானப்பாலை உண்டு உலகம் உய்ய, "தோடுடைய செவியன்" என்று அடியெடுத்துத் தேவாரம் பாடத் தொடங்கிச் சிவநெறி விளக்கம் செய்ய முற்பட்ட திருநாள்.

---

* *சீகாழி திருமுலைப்பால் திருநாளில் திருவாய் மலர்ந்தருளி* 10—5—1974 *ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

திருவாதிரைச் சிறப்பு :

இன்றைய நக்ஷத்திரம் திருவாதிரை. திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்ததும் திருவாதிரை. திருமுலைப்பால் உண்டருளிய திருநாளும் திருவாதிரை. இருபத்தேழு நக்ஷத்திரங்களில் திரு என்ற அடைமொழி சேர்த்து வழங்கும் நக்ஷத்திரங்கள் இரண்டு; ஒன்று திருவாதிரை. இது சிவபெருமானுக்குரிய திருநக்ஷத்திரம். "ஆதிரை நாளுகந்தான்" என்று அப்பரடிகள் குறிப்பிடுகின்றார். பிறிதொரு நக்ஷத்திரம் திருவோணம்; இது திருமாலுக்குரியது. திருவாதிரை அனல் வடிவமாக விளங்கும் நக்ஷத்திரம். திருவோணம் தண்மையுடையதாய் விளங்கும் நக்ஷத்திரம். பொங்கு அழலுருவனை விளங்கும் சிவபிரானுக்குத் திருவாதிரையையும், தண்ணிய அலைகடலில் துயிலும் திருமாலுக்குத் திருவோணத்தையும் இணைத்துக் கூறுவர். அப்பனும் அம்மையுமாக விளங்கும் இவ்விரு தெய்வங்கட்கு வில்வமும் துளசியும் விருப்பமான பத்திரங்கள். வில்வம் - தங்கச் சத்துள்ளது. துளசி - வெள்ளிச் சத்துள்ளது. இவ்வாறெல்லாம் இந்நாட்டின் இரண்டு பெரிய சமயத்தின் தெய்வங்களும் போற்றப்படுவதைக் காணலாம்.

அன்புடையவர் யார் ?

ஞானசம்பந்தர் சிவபெருமானுக்குரிய திருவாதிரைத் திருநாளில் அவதரித்ததும், அந்நாளிலேயே திருமுலைப்பால் உண்டு சிவநெறி பரப்ப முற்பட்டதும் திருவருட் செயலாக அமைந்த பொருத்தமாகும். ஞானசம்பந்தர் இலைபடர்ந்த பொய்கையிடத்து அழுதலைக்கண்டு பால் சுரந்தாள் அம்பிகை; ஞானசம்பந்தரைப்பற்றிக் கேள்விப்பட்ட அவ்வமயமே பால் சுரந்தார் மங்கையர்க்கரசியார். அம்பிகையைவிட மங்கையர்க்கரசியார்க்கு ஏற்றம் கூறுவதுபோலச் சிவப்பிரகாச அடிகள் பாடுகிறார்.

> "இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
> முலைசுரந்த அன்னையோ முன்நின் — நிலைவிளம்பக்
> கொங்கை சுரந்தஅருட் கோமகளோ சம்பந்தா!
> இங்குயர்ந்தார் யார்சொல் எனக்கு."

என்பது அப்பாட்டு. குழந்தை அழுதபின் பால் கொடுப்பது இடையன்புடையார் செயலாகும். அழுதற்கு முன்னே

பாலளிப்பது தலையன்புடையார் செயலாகும். இதை அடிப்படையாகக்கொண்டு அம்பிகையைக் காட்டிலும் மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரிடம் பேரன்பு காட்டியவர் என்று உபசாரமாகக் கூறுகிறார் சிவப்பிரகாசர். மங்கையர்க்கரசியாரைச் சிறப்பித்தற் பொருட்டு அவ்வாறு கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டுமே தவிர உமையம்மையைவிட, அரசியார் உயர்ந்தவர் என்பது பாடற் கருத்தல்ல.

அழுதபிள்ளை பால் குடிக்கும் :

'அழுதபிள்ளை பால் குடிக்கும்' என்ற பழமொழி ஞானசம்பந்தர் வரலாற்றைச் சுட்டிக்காட்டும் இந்நாட்டுப் பழமொழியாக விளங்குகிறது. ஞானசம்பந்தர் சிவஞானப் பாலுண்ட இவ்விழா சீகாழியில் மட்டுமல்ல தலங்கள் தோறும் கொண்டாடும் பொது விழாவாகும். ஞானசம்பந்தர் வேத நெறி தழைக்கவும், சைவத்துறை விளக்கம் பெறவும், அழுது அம்மையளித்த ஞானப் பாலுண்டருளிய திருநாள்; உலகம் போற்றுவதற்குரிய உயர்ந்த திருநாள்.

குழப்பங்கள் தீர :

ஞானசம்பந்தர், ஞானப்பால் உண்ட இவ்விழாவும் ஏனைய சமய விழாக்களும் நாட்டுமக்கள் நன்னிலையில் வாழத் துணை புரிவனவாகும். நாட்டில் இன்று எழுந்துள்ள பலவகையான குழப்பங்களும் அகன்று மக்கள் மகிழ்வோடு வாழவேண்டுமானால், கடவுள் துணை வேண்டும்.

தெய்வ நம்பிக்கையும் பக்தி உணர்வும் மனிதனை மேலும் மேலும் உயர்த்துவன. அஸ்திவாரமில்லாத கட்டடம் – ஊற்றில்லாத கிணறு – மணமில்லாத மலர் சிறப்படைய முடியுமா? அதுபோலக் கடவுள் உணர்வு இல்லாத வாழ்வு எவ்வாறு சிறப்புறும்? சட்டத்தால் சாதிக்க முடியாததைச் சமயம் சாதிக்கிறது. சமயநெறி மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது. ஏற்றத்தாழ்வுகளை அகற்றுகிறது. புண்ணிய பாவங்கள் என்ற பெயரால், மனிதன் தீய செயல்களை விலக்கி, நல்ல செயல்களை மேற்கொண்டு வாழத் துணைபுரிகிறது. அச்சுறுத்தியும் வற்புறுத்தியும் சட்டம் சாதிப்பதைச் சமயம் எளிமையாகச்

சாதிக்கிறது. கடவுள் அருள் இல்லாமல் மனிதன் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைபெறச் செய்தல் இயலாது. இதை உணர்த்தும் புராண வரலாறுகள் பல.

கருவி இன்றியே காரியம் செய்பவன் :

இறைவன் திரிபுரமெரித்த வரலாற்றில் கூறப்படும் தத்துவத்தை நீங்கள் அறிந்திருக்கலாம். இறைவன் மேருவை வில்லாக வளைத்து வாசுகியைக் கயிறாக பூட்டிப் பூமி தேராகவும், சூரிய சந்திரர்கள் தேர்க்கால்களாகவும் தேவர்கள் தேர்க்கு அங்கங்களாகவும் வரத் தேர்மேல் ஏறிப் புறப்பட்டார் போருக்கு. நாம் இல்லையானால் சிவபிரான் எப்படித் திரிபுரமெரிக்கமுடியும் என்று எண்ணிய தேவர்களின் மனக்கருத்து இறைவனுக்குத் தெரிந்தது. குறுநகைபுரிந்தான் இறைவன். தேர் அச்சு முரிந்தது. முப்புரங்கள் பொடியாயின; தேவர்கள் ஆணவத்தால் தாங்கள் எண்ணிய எண்ணத்தைத் தவறு என உணர்ந்தனர். பிழை பொறுத்தருளுமாறு இறைவனைப் பணிந்தனர்; இறைவன் அருள் பாலித்தான் என்பது வரலாறு. தேவர்களின் துணையின்றித் தானே எதையும் சாதிக்கவல்லவன் பெருமான் என்பதை இவ் வரலாறு உணர்த்துகிறது. பிறிதொரு புராண வரலாற்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இக்கால மனிதன், இவ்வரலாற்றில் அமைந்த உண்மையை உணர்ந்து திருந்த வேண்டும். மனிதன், கடமை ஒழுக்கம் கட்டுப்பாடு இவற்றோடு வாழக் கடவுள் துணைவேண்டும் என்பதையும் கடவுள் துணை யின்றி இவ்வுலகில் ஒழுக்க நெறிகளை நிலைபெறுத்தல் இயலாது என்பதையும் இவ்வரலாறு உணர்த்துகிறது.

கடவுள் துணையின்றி ஒழுக்கம் நிலைபெறாது :

தாருகாவனத்து முனிவர்கள் 'கடவுள் இல்லை, ஒழுக்கமே வீடு பேறளிக்க வல்லது' என்ற கொள்கைகளையுடையவர்கள். தத்தம் கடமைகளை உணர்ந்து ஒழுக்கத்தோடு, வாழ்வதொன்றே போதுமானது' என்ற எண்ணம் உடையவர்கள். கடவுள் துணையின்றி இவற்றை எவரும் தம் வாழ்வில் கடைபிடித்தல் இயலாது என்பதை விளக்க இறைவன் பிக்ஷாடனராக எழுந்தருளுகின்றான். திருமால் மோகினியாக உடன் வருகிறார்.

முனிவர்களின் மனைவியர் இறைவனுடைய பேரழகில் மயங்கிக் கற்புநெறி இழந்தனர். மோகினியாக வந்த திருமாலின் வடிவழகில் மயங்கி முனிவர் தம் நிறை தளர்ந்தனர். கடவுள் அருள்தான் ஒழுக்கத்தோடு வாழத் துணைபுரியவேண்டும் என்ற உண்மையைப் பின்னர் உணர்ந்தனர். இறைவனருள் துணையின்றி மனிதன் கடமை ஒழுக்கம் இவற்றைக் கடைபிடித்து வாழ்தல் இயலாது. நாட்டில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் தெய்வநம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைவன என்பதை இவ்வரலாறு உணர்த்துகின்றது.

சமய மரபுகள் :

புராண வரலாறுகள் போலவே சமய மரபுகளும் சமுதாய நன்மைக்கு அமைக்கப்பெற்றன. ஆட்சி வசதிகட்கு ஏற்ப நாடு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை செய்தற்கு வசதியாக வயல்கள் வரப்புகள் அமைக்கப்பெற்றுப் பிரிக்கப்பெற்றுள்ளன. அதுபோல சமுதாய வளர்ச்சிக்கும் நடைமுறைக்கும் சாதிப் பாகுபாடுகள் அமைந்துள்ளன. சமுதாயத்தில் பல்வேறு பிரிவுகளாக இவர்கள் பிரிந்து தங்களுக்குள் வேறுபாடின்றிக் காழ்ப்புணர்ச்சியின்றி முன்னேற்றம் பெற்று உய்ந்தனர். ஆசாரம், சீலம், நாகரிகம், பண்பாடு இவற்றால் மக்கள் இனம் பிரிந்து சமுதாயத்தில் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். மேல்நிலையில் உள்ளவர்களுக்கு – சிவஞானியர் களுக்குச் சாதி வேற்றுமை இல்லை. மொழி - நாட்டு வேற்றுமைகள் இல்லை; யாதும் ஊரே யாவரும் கேளிர் (சுற்றத்தார்) என்ற கொள்கை உடையவர்கள் அவர்கள். ஞானசம்பந்தர் பாடும் பாடல்களுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் அருகில் இருந்து யாழ்வாசிக்கும் பணியைச் செய்துவந்தார். 'அந்தணரில் மேம் பட்ட அப்பூதி அடிகள் வேளாண் குலத்திலவதரித்த அப்பரடிகளைத் தெய்வமாகப் போற்றினர்' என்பதைப் பெரியபுராணம் கூறுகிறது. உலகியல் நிலையில் இப்பிரிவுகள் சமுதாய அமைப்பு வளர்ச்சிகளுக்கு ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இன்று அப் பிரிவுகள் அமைக்கப்பெற்ற நோக்கம் மாறிவிட்டது. உயர்வு தாழ்வு வேற்றுமைகள் உருவாகிவிட்டன. காழ்ப்புணர்வு மக்களிடையே தோன்றி உண்மையை மறைத்துவிட்டது. இந்நிலை மாறி வேற்றுமையில் ஒற்றுமை கண்டு உயரவேண்டும்.

சீகாழி நினைவு :

ஞானசம்பந்தர் வரலாற்றில் பொதுநிலையில் இவ்வாறு தோன்றும் கருத்துக்களோடு சிறப்பு நிலையில் நாம் அறிய வேண்டிய சிலவற்றையும் கூற விரும்புகிறோம். ஞானசம்பந்தர் தலங்கள் தோறும் சென்று இறைவனைத் தரிசித்துப் பதிகம் பாடியுள்ளார். எங்குச் சென்றாலும் தம்மை ஆட்கொண்டருளிய சீகாழிப் பெருமானின் நினைவு அவர் நெஞ்சத்தில் நீங்காமல் நிலைபெற்றிருப்பதைக் காண்கிறோம்.

திருவீழிமிழலையில் ஞானசம்பந்தர் தங்கியிருக்கும் காலத்தில் சீகாழி அந்தணர்கள் பலரும் சென்று 'காழிப்பெருமானைப் பிரிந்து பலநாட்கள் ஆயினவே; சீகாழிக்கு எழுந்தருளுங்கள்' என வேண்டினர். சம்பந்தரும் புறப்பட எண்ணியிருந்தார். அன்றிரவு ஞானசம்பந்தர் கனவில் பெருமான் தோன்றி காழிக் காட்சியை வீழிமிழலையில் காட்டுவதாகக்கூறி மறைந்தார். பிள்ளையார் விழித்தெழுந்து திருக்கோயிலுக்குச் செல்கின்றார். சீகாழிக் காட்சியைப் பெருமான் தோணியப்பராக ஞான சம்பந்தருக்குக் காட்டுகிறார். இருதலங்களையும் இணைத்துத் திருப்பதிகம் பாடுகிறார் ஞானசம்பந்தர். எல்லாத் தலங்களிலும் எழுந்தருளியுள்ள இறைவன் ஒருவனே என்பதை ஞானசம்பந்தர் வாயிலாக இறைவன் நமக்கு உணர்த்துகின்றார்.

நன்றி உணர்வு :

மதுரையில் ஞானசம்பந்தர் சமணர்களோடு நிகழ்த்திய அனல்வாதத்தில் திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்தபோது கிடைத்த பாடல் திருநள்ளாற்றுத் தேவாரப் பாடலாகிய 'போக மார்த்த பூண்முலையாள்' என்ற பாடலாகும். மதுரையில் சைவ நெறி பரப்பி மீண்ட ஞானசம்பந்தர் திருநள்ளாறு சென்று நன்றியோடு பெருமானை வணங்கிப் பாடுகிறார். மதுரை, திருநள்ளாறு இருதலங்களையும் இணைத்துப் பதிகம் பாடுகிறார். "பாடக மெல்லடி" என்று தொடங்கும் இப்பதிகப் பாடலில்,

"சூடகமுன்கை மடந்தைமார்கள் துணைவரொடும்
தொழுது ஏத்திவாழ்த்த
ஆடகமாடம் நெருங்குகூடல் ஆலவாயின்கண்
அமர்ந்த வாறே"

என்ற தொடரால் மதுரை மகளிர் தம் தம் துணைவரொடும் சென்று வழிபடுகிருர்கள் என்று கூறுமுகத்தால் திருக்கோயிலுக்குக் கணவனும் மனைவியும் இணைந்து சென்று வழிபட வேண்டுமென்ற குறிப்பையும் புலப்படுத்துகிருர் ஞானசம்பந்தர். அவர் தம் அருளிப்பாட்டின் திறத்தால் இன்றும் மதுரையில் மகளிர் தத்தம் துணைவரோடு சென்று வழிபடும் காட்சியைக் காணலாம்.

செந்தண்மை :

ஞானசம்பந்தர் வரலாற்றில் சமணர்களைக் கழுவேற்றியது பற்றிய ஆராய்ச்சி இன்னும் நடந்து கொண்டுதானிருக்கிறது. சமணர்கள் தாங்களே தேடிக்கொண்ட இம்முடிவுக்கு ஞான சம்பந்தரைப் பொறுப்பாக்குதல் கூடாது. அவரோடு வாதம் செய்ய முற்பட்டவர்களே சமணர்கள்தான். ஞானசம்பந்தர் இறைவன் திருவுள்ளக் குறிப்பினைக் கேட்டறிந்த பிறகே வாதத்திற்கு இசைகின்ருர். வாதத்தைத் தொடங்கிய சமணர்கள் தாங்களே, 'தோற்ருல் கழுவேறுவோம்' என்று ஒருமுடிவை வகுத்துக்கொண்டார்கள். முடிவில் தோல்வி அடைந்த அவர்களைப் பாண்டிய மன்னன் கழுவேற்றுகின்ருன்; செந்தண்மை பூண்ட அந்தணராகிய ஞானசம்பந்தர் இச் செயலைக் கண்டு மறுகிருர். வெற்றிபெற்றுச் சைவப் பெருமையை நிலை நாட்டிய ஞானசம்பந்தர் பின்பு திருக்கோயிலுக்குச் சென்று பாடிய 'வீடலால வாயிலாய்' என்ற பதிகத்தில்,

"குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தம்இன்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகமனே"

என்ற பாடலில் அவர் மனநிலை நன்கு புலனுகிறது.

நினைவும் செயலும் :

வாதில் தோற்ற சமணர்கள் அதனால் அடையும் இன்னலுக்காக ஞானசம்பந்தர் மறுகிய செயலே அவர்களை அவ்வின்னலினின்றும் மீட்டதாகின்றது. ஏனெனில் நல்லதாயினும், தீயதாயினும் அதனை மனத்தால் நினைதலே செய்வதற்கு ஒப்பாகும். 'நினைத்தலும் செய்தலோடு ஒக்கும்' என்று விளக்குவார் திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர். குத்தாலத்து இறைவன் பெயராகிய 'சொன்னவாறு அறிவார்' என்பதில் 'அறிவார்' என்பதற்கும் 'செய்வார் – செய்தார்' என்பதுதான் பொருள்.

"கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று ஒரு தொடர் பிற சமயங்களில் கூறப்படும். நம் சமயத்திற்கும் அது பொதுவானது தான். பெரியோர் சொல்லும் அறிவுரைகளைக் கேளுங்கள்; இதில் உங்கட்கு நன்மை கிடைக்கும் என்பது அதன்பொருள். 'கேட்டல்' என்பதற்குக் கேட்டு அதன்படி நடத்தல் என்பதே பொருளாகும். நினைத்தலும் செய்தலேயாதலால் 'தீய காரியத்தை மனத்தால் நினைத்தலும் கூடாது' என்பது விளங்கும். சிறிய குற்றம்தானே? இன்று மட்டும் இதைச் செய்தாலென்ன என்று நினைத்து செய்யப்புகும் மனிதன் பெரிய குற்றங்களுக்கு இரையாகி விடுவான். இதை உணர்த்தும் கதை ஒன்று உண்டு. மனிதனின் மனோ தத்துவத்தை இது விளக்குவது.

மனோதத்துவம் :

அரசன் ஒருவன் பொற்கிழி ஒன்றை நான்கு வாயில்கள் உள்ள ஒரு மண்டபத்தின் நடுவில்கட்டி, "மது வருந்துதல், விதவையை மணத்தல், புலாலுண்டல், பசுக்கொலை புரிதல் ஆகிய குற்றங்களை வாயில்கள்தோறும் வகுத்து இக்குற்றங்களில் ஒன்றை வேதாகமசீலர் செய்து இப்பொற்கிழியைப் பெறலாம்" என்று பறை அறைவித்தான், வேதாகமங்கள் அறிந்த ஏழை அந்தணன் ஒருவனுக்கு அதைப்பெற வேண்டுமென்று ஆசை

உண்டாயிற்று. 'நான்கு குற்றங்களில் சிறுகுற்றம்தானே இது' என்று தீர்மானித்து மதுவருந்தத் தொடங்கி முடிவில் அறிவு திரிந்து ஏனைய மூன்று குற்றங்களையும் செய்து பெருங்குற்றவாளி யானன் என்று கூறுவார்கள். சிறிய தவறுகள் பெரிய தவறுகளைச் செய்வதற்குத் தூண்டுகின்றன. மனிதன் எந்த ஒரு தவறுக்கும் மனதில் இடம் கொடுக்கக்கூடாது. ஒழுக்கம் மனஉறுதி இவற்றைப் பெறுதற்கு இதுபோன்ற விழாக்களில் ஈடுபட்டு மக்கள் கடவுளை வழிபாடு செய்யவேண்டும்.

திருமுறைக் கலாநிதி :


ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இத்திருமூலைப்பால் விழாவைச் சிறந்த முறையில் செய்விக்கும் திட்டங்கள் பலவற்றை வகுத்தருளினார்கள். ஞானசம்பந்தப் பெருமானை எழுந்தருளு வித்து அவருடைய வரலாற்றை எல்லோரும் அறியுமாறு அற்புத விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் திட்டத்தையும், பல்லாண்டுகள் திருமுறைப்பணி செய்த ஓதுவாமூர்த்தி ஒருவருக்கு 'திருமுறைக் கலாநிதி' என்ற பட்டம் வழங்கி ரூ, 501 பணமுடிப்பு வழங்கும் திட்டத்தையும் வகுத்தருளினார்கள். அப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்று அம் முறையில் பட்டம்பெறும் ஓதுவாமூர்த்தி சுப்பிரமணிய முதலியார் ஆவார். இசையறிவோடும் பக்தியோடும் திருமுறைத் தொண்டு புரிந்துவரும் அவர் இவ்விருது பெறுதற்கு மிகவும் பொருத்தமானவர். அவர் இவ்வாண்டு 'திருமுறைக்கலாநிதி' பட்டம் பெறுகிறார். 'திருஞானசம்பந்தர் திருவருளால் நலம் பல பெற்று வாழ்க' என வாழ்த்தி இப்பட்டத்தை சுப்பிரமணிய முதலியாருக்கு வழங்குகிறோம். அன்பர்கள் பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டு இறைவன் திருவருட் பேற்றுக்கு உரியவர்களாகுக என வாழ்த்துகிறோம்.

மதுரை, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் திருக்கோயில் தரிசனத்திற்காக
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஞானபீடம் அமர்ந்தபின்
மதுரைக்கு முதன்முதலாக எழுந்தருளியபோது



சிவதர்ம பாஸ்கர. சிவஸ்ரீ. ம. க. சுந்தரேச பட்டர் அவர்களும்
திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர்
திரு. நாராயணன் செட்டியார் அவர்களும்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்குப்
பொன்னாடை போர்த்தி வரவேற்கும் காட்சி
(26—5—1974)

ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசர் திருக்கோயிலில்
மதுரை நகரப் பெருமக்கள் அளித்த
வரவேற்பின்போது



தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாசி வழங்கல்
(26—5—1974)

[31]

அருமையும் - எளிமையும் *

"அருமை உடைத்தென் றஅசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

[மதுரை மாநகருக்கும் – சைவத்திற்கும் உள்ள நெருக்கமான தொடர்புகளை எடுத்துரைக்கும் இக்கட்டுரைக்கண், தில்லையில் இறைவன் அடியார்களுக்கு அரியனாகவும், மதுரையில் எளியனாகவும் இருந்து நிகழ்த்திய திருவிளையாடல்கள் பலவற்றையும் சிந்தனைக்கு விருந்தாக எடுத்து உரைக்கிறது.]

திருவருட் செயல் :

இன்று சேக்கிழார் பெருமான் குருபூசைத் திருநாள். சைவம் என்னும் பெருங் கட்டிடத்தை ஒழுங்குபடுத்தி வளர்த்துக்கொடுத்த பெருமைக்குரியவர் சேக்கிழார் பெருமான். சைவ மரபைக் காத்து வளர்த்த பெருமைக்கும் உரியவர். அப்பெருமான் இறையடி சேர்ந்த சிறந்த நாளாகிய இப்புனித நாளில் நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப்பெருமானைத் தரிசிக்கும் பேறு நமக்குக் கிடைத்தது திருவருட்செயலால் கிடைத்த சிறப்பாகும்.

---

* *முதன்முறையாக மதுரை ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் திருக்கோயிலுக்கு எழுந்தருளியபோது, மதுரை நகரப் பெருமக்கள் நிகழ்த்திய வரவேற்பில் திருவாய் மலர்ந்தருளி 10—6—1974 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

சிறப்புக்கள் இரண்டு :

இம்மதுரை மாநகரத்திற்குப் பல சிறப்புக்கள் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமான சிறப்பு இரண்டு. அவை, தமிழ் மக்களின் மொழியாகிய தமிழைச் சங்கத்தின் வாயிலாக வளர்த்ததும் தமிழர்களின் பழம்பெரும் கொள்கையாகிய சைவத்தை நீரும், நெருப்பும் அறிய நிறுவியதும் ஆகும்.

தமிழும் சைவமும் :

ஆலவாயண்ணல் இவ்விரண்டையும் பாதுகாத்துப் பரப்பி யருளினன். அதனால், அப்பெருமானையே ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டிலங்கும் தருமையாதீனமும் தனது குறிக்கோளுரையாக 'சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக' என்பதையே கொண்டுள்ளது. தருமையாதீனம், கடந்த நானூறு ஆண்டுக் காலமாகச் சைவமும் தமிழும் தழைத் தினிதோங்க அரும் பணியாற்றி வருகிறது என்பதை நாடு நன்கறியும்.

நமக்குச் சிறந்த எடுத்துக்காட்டு :

வெப்பு நோய் வாதத்திலும் அனல்புனல் வாதங்களாகிய வற்றிலும் சமணர்களை வென்று சைவ சமயந்தான் தலையாய தெய்வநெறிக் கொள்கையை உடையது என்பதை மதுரையில் இறைவனின் திருவருள் துணைகொண்டு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்த் திருஞானசம்பந்தர் நிலைநாட்டினர். பிற சமயத்தவரோடு வாதஞ் செய்வதற்குத் திருஞானசம்பந்தர் தாமாக முதலில் தலையிடவில்லை என்பது எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டிய முக்கியமான செய்தி. வாதத்திற் கழைத்ததும், ஒருமுறைக்கு மும்முறை வாதஞ் செய்ததும், வாதில் தோற்றவர்கள் கழுவேறவேண்டும் என்ற முடிவெடுத்ததும் அமணர் செயலேயாகும். வலிய வந்த வாதத்தையும் (வம்பையும்) திருஞானசம்பந்தர் தாமே ஏற்றுக்கொள்ளவில்லை. வலிய வாதத்திற்கு வருகின்ற அமணர்களிடம் வாது செய்ய, இறைவனின் திருவுள்ளக் கருத்து யாது என்று வினவி, பிரார்த்தனை செய்து இறைவனின் திருவுள்ளக் குறிப்பின் வழியே வாதத்தில் ஈடுபட்டார். இது நம்மனோர்க்கெல்லாம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அறவுரை :

நாம் மத சம்பந்தமான சண்டை சச்சரவுகளில் ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்பதும், அதே நேரத்தில் நமது சமய நெறியில் பற்றும் பக்தியும் கொண்டு நடந்துகொள்ளவேண்டும் என்பதும், யாராவது வம்பு வழக்கிற்கு வருவார்களேயானால் இறைவன் திருவுள்ளக் குறிப்பறிந்து வழக்குகளில் வெற்றிகாண முயலவேண்டும் என்பதும் நமக்கு அவர் வழங்கும் அறவுரைகளாகக்கொள்ளத்தக்கன.

தத்துவ நுட்பங்கள் :

பொதுவாக எல்லாச் சமயங்களும் நாட்டிற்கு வேண்டியனவேயாம். பள்ளிகளில் தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி முதலியன, பல்வேறு தரப்பட்ட மாணவர்களுடைய அறிவை வளர்க்கத் தேவைப்படுவனவே. அது போலவே பலதரப்பட்ட பண்பும், தரமும், தகுதியும் உடைய மக்களைத் தெய்வநெறியில் ஈடுபடுத்துவதற்குப் பல்வேறு சமயங்களும் இன்றியமையாதன என்பது ஊன்றி உணர்வார்க்கு நன்கு புலனாகும். இதனை உணராதவர்கள் சமயச் சச்சரவுகளிலும் சண்டைகளிலும் ஈடுபடுகின்றனர். சைவத்தைப் பொறுத்தவரை எல்லாச் சமயங்களிலும் கூறப்படுகின்ற தத்துவங்களோடு ஒத்து அவற்றுள் கூறப்பெறாத பல தத்துவ நுட்பங்களைத் தன்னுட் கொண்டிருக்கிறது. இவ்வுண்மையை நாயன்மார்களது வாழ்க்கை வரலாற்றுத் தத்துவ நுட்பங்களாலும், திருவிளையாடற் புராண வரலாற்று நுட்பங்களாலும் தெளிய உணரலாம்.

பொன்னம்பலமும் வெள்ளியம்பலமும் :

இத்தலத்திற்கு ஏற்ப ஒன்றை நினைவு கூர்தல் பொருந்தும். நடராசப்பெருமான் – கூத்தப்பெருமான் கூத்து நிகழ்த்தும் ஐந்து சபைகளில் இம் மதுரைப்பதி வெள்ளியம்பலமாகத் திகழ்வது. வெள்ளியம்பலத்தில் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை நிகழ்த்தியருளினான். பொன்னம்பலத்தில் கூத்து நிகழ்த்தும் இறைவனே அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றையும் நிகழ்த்தினான்.

அருமையும் எளிமையும் :

பொன்னம்பலநாதனின் அருளை அறுபத்து மூன்று நாயன்மார்களும் அரிதில் பெற்றனரேயன்றி எளிதில் பெறவில்லை. மதுரை வெள்ளியம்பலவாணர், கரிக்குருவிக்கு உபதேசித்தும் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தும் எளியவராய் ஆட்கொண்ட திறனைக் காண்கிறோம். எளிமையை மதுரையிலும் அருமையைத் தில்லையிலும் ஆண்டவன் அருளாலேயே உண்டாக்கினன் என்பதைப் பொன்னம்பலமும் வெள்ளியம்பலமும் காட்டி நிற்கின்றன. இறைவன் ஒருவனேயாயினும் எளிமையை இங்கும் அருமையை அங்கும் காட்டியிருப்பது அறிந்து மகிழத்தக்கதாகும். பொன் அருமையானது; வெள்ளி எளிமையானது. இங்குப் பொன்னின் அருமையையும், வெள்ளியின் எளிமையையும் இணைத்துக் காண்பது இனிமை பயக்கிறது.

திருவருட் பொருத்தம் :

வரவேற்புரையில் இன்று இருபத்தாறும்தேதி; திதியும் சஷ்டி (ஆறும் நாள்) இங்கு எழுந்தருளியிருக்கும் குருமகா சந்நிதானமும் இருபத்தாறுவது குருமகா சந்நிதானம் என்று பொருத்தத்தைக் குறிப்பிட்டார்கள். இது நாமாக அமைத்துக் கொண்டதல்ல; திருவருட் செயல். ஊன்றி நோக்கினால் நம்மில் பலரும் இதனை நன்கு உணரலாம். ஊன்றிக் கவனியாதபோது இவை எல்லாம் நாமாகவே செய்துகொள்வதாகத்தான் தோன்றும். அது உண்மை அல்ல.

சமய வளர்ச்சிக்கு :

சமய வளர்ச்சிக்கு ஆதீனங்களும், ஆலயங்களும் இப்பொழுது செய்துவரும் பணிகளைவிட மேலும் பல துறையிலும் சமய வளர்ச்சிப் பணிகளைச் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆதீனங்கள் ஆலயங்கள் எல்லாம் சமயத்தை ஒல்லும் வகையெல்லாம் பரவச் செய்வதற்காக எழுந்தனவே. ஆயினும், மக்களும் ஆலயங்களுடனும், ஆதீனங்களுடனும், சமயத் தொடர்பான மற்றைய மன்றங்களுடனும், சபைகளுடனும் ஒத்துப் பணிசெய்தால்தான் நாம் நினைத்த அளவிற்கு வளர்ச்சியடைய முடியும். அதிலும் முடியாட்சிக் காலமாயின் ஆதீனங்கள்,

ஆலயங்கள், மற்றும் சமய நிலையங்கள் மீது பொறுப்பைச் சொல்லலாம். குடியாட்சி உள்ள இக்காலத்தில் மக்கள் அனைவரும் அவரவரும் தத்தம் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தெய்விகப் பேரவை :

ஆதீனங்களிலும் மடாலயங்களிலும் உள்ளவர்கள் சமய வளர்ச்சிக்கு நல்ல அமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்து அதன்மூலம் சமயப்பணி செய்யக் கடமைப்பட்டவர்கள். அவ்வாறே தமிழ்நாடு தெய்விகப் பேரவை என்ற நிறுவனத்தை அமைத்து, பட்டிதொட்டிகளிலும் பட்டினங்களிலும் நல்ல பணி ஆற்றி வருகிறார்கள். அதில் உறுப்பினர்களாகச் சேர்ந்து, அதனை வளர்ப்பதன்மூலம் மக்கள் தங்கள் சமய உணர்வை வளர்த்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சைவ மெய்யன்பர்கள் இப்பேரவையின் கிளைச் சங்கங்களைப் பயன்படுத்திக்கொண்டு சமய உணர்வை வளர்ப்பதன்மூலம் தாமும் உயர்ந்து சமுதாயத்தையும் நாட்டையும் நன்கு வளர்த்துக்கொள்ள முயலல் வேண்டும்.

சமயம் வளர :

கிறிஸ்தவம் போன்ற பிற சமயத் தலைவர்களும் நிறுவனத்தை அமைத்துக்கொடுத்து மக்களுடைய உழைப்பையும் உதவியையும் கொண்டே சமயங்களை வளர்க்கின்றார்கள். அதுபோல் நம் மக்களும் ஆங்காங்குள்ள சமய நிறுவனங்களோடு கடமை உணர்வுடன் ஈடுபட்டு ஒத்துப் பணிசெய்து தாமும் உயர்ந்து தம்மைச் சார்ந்தவர்களையும் உயர்த்தித் தம் சைவ சமயம் வளரப் பணிசெய்ய முன்வருவார்களாக. இந் நல்லெண்ணத்தை மக்களிடையே எழுப்பி நற்பணி செய்யத் திருவருள் முன்னிற்குமாக.

வாழ்த்து :

மதுரை மாநகரத்தில் நகரப் பெருமக்கள், ஆலய அறங்காவலர்கள் சார்பிலும், சைவ சித்தாந்த சபை, பன்னிரு திருமுறை மன்றம், திருவள்ளுவர் கழகம், திருப்புகழ்ச் சபை, மதுரைநகர் சிவாசாரியர் சங்கம் முதலிய பல்வேறு சங்கங்கள் சார்பிலும் வரவேற்பு அளித்து, ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் தரிசனத்தைச் சிறப்புற நிகழ்த்துவித்தார்கள். அவர்கள் அனைவருக்கும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் எல்லா நலமும் பெருகுக என நல்வாழ்த்து வழங்குகின்றோம்.

[32]

திருநாட்களும் - தெய்வப் பணியும் *

> "நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
> வாள்அது உணர்வார்ப் பெறின்"

[விழாத் தத்துவங்களை விளக்கித் தொடங்கும் இக்கட்டுரை - திருநாட்களை நாம் எவ்வாறு பயனுள்ள வகையில் - தெய்வப்பணியும் - சமுதாயபணியும் இயற்றிக் கொண்டாடவேண்டும் என்பதனையும், பல்வேறு சமயக் கோட்பாடுகளுக்கிடையே சைவ சமயம் பெற்றிருக்கும் சிறப்பினையும், பிறவற்றையும் விளக்குகிறது.]

பெருவிழா :

நமது தருமையாதீன முதற் குருமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜைத் திருநாளை ஒட்டி இங்கே பத்து நாள் பெருவிழா இன்று முதல் தொடங்கி நடைபெறுகிறது. பெருவிழா என்பதை வடமொழியில் மகோற்சவம் என்பர். தமிழில் பெருவிழா என அழைக்கிறோம். ஒரு காலத்தில் தமிழில் உள்ளவற்றை வடமொழிச் சொல்லால் சுட்டுவதைப் பெருமையாகக் கருதினர். தற்போது வடமொழியில் சொல்லாது தமிழில் சொல்வது பெருமையாகவும் உரிமையாகவும் கருதப்படுகிறது.

** தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவின் அங்கமாக நிகழ்ந்த சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்துத் திருவாய்மலர்ந்தருளி 10—7—1974 ஞான சம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

சமயப் பயிற்சி வகுப்பு :

பெருவிழா என்றால் எல்லாவிதமான அங்கங்களும் இருக்க வேண்டும். குழந்தைகள், பெரியவர்கள், கற்றூர்கள், கல்லாதவர்கள் ஆண்கள், பெண்கள் என்ற பலதரப்பட்டவர்களுக்கும் விருப்பமான நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெற வேண்டும். பெருங்காப்பியம் என்ற காப்பிய வகையில் பல்வேறு வகைப் பட்ட உறுப்புக்கள் - சுவைகள் இருக்கவேண்டுமென்று இலக்கணங்கள் கூறுகின்றன. அதுபோலவே இங்கு நடைபெற விருக்கும் குருபூஜைப் பெருவிழாவில் மக்களை ஈடுபத்தச் சொற்பொழிவு, இன்னிசை, கதாகாலட்சேபம், நாதஸ்வர இசை போன்ற நிகழ்ச்சிகள் துணைசெய்கின்றன. அவற்றைப்போல இந்த சமயப்பயிற்சி வகுப்பும் விழாவின் முக்கியமான அங்கமாக அமைகிறது. விழாத் தத்துவம் என்ன என்பதை உணரவும், விழாவின் பயனை உணரவும், சமய நுணுக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும் தக்கார் பலர் கூடித் தெரிந்துகொள்வதற் காகவும், இவ்வகுப்பு இங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வகுப்பில் வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், சாத்திரம், தோத்திரம் போன்றவற்றின் பல்வேறு கருத்துக் களோடு நமது ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ குருஞான சம்பந்தப் பெருமானின் அருள் வரலாற்றையும், அவர்தம் அருள் நூல்களையும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குறிக்கோள் :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவநெறியை நமது நாட்டில் தோத்திரங்களாலும், சாத்திரங்களாலும் விளங்கவைத்த அருளாளர். சாத்திரத்தை உலகில் உபதேச வாயிலாகப் பரவச் செய்தவர். தம் நூல்கள் வாயிலாகவும் தம் சீடர்கள் வாயிலாகவும் சிவநெறி வளர்த்தவர். அவர்கள் நோக்கத்தை நிறைவேற்று வதும், அவர்கள் கருத்துக்களைப் பரப்புவதுமே நமது நோக்கமும் கடமையுமாகின்றன.

திருநாட்கள் :

பெரியவர்களின் திருநாட்கள் புனித நாட்கள், அந்நாட்களை நாம் கொண்டாடி மகிழ்தல் வேண்டும். ஆனால் நாமோ புனிதமான

நாட்களை வெறும் விடுமுறை நாள் என (Holiday) நினைத்து வேலை ஏதும் இன்றி அவமே கழித்து வீணடிக்கிறோம். பெரியவர்கள் திருநாட்கள் விடுமுறை நாட்கள் (Holiday) அன்று. அவை புனித நாட்கள் (Holyday). அந்நாட்களில் அப் பெரியவர்களை நினைவு கூர்வதையும் அவர்கள் நெறிநின்று பணி புரிவதையும், அவர்கள் கோட்பாடுகளைப் பரப்புவதையுமே நாம் விரும்பிச் செய்தல் வேண்டும். அவ்வப்பெரியோர்களின் வாழ்வியல் நெறிமுறைகளை இயன்றவரை அவர்கள் திருநாட்களில் நிறைவேற்றவேண்டும். உதாரணமாகக் கண்ணப்பர் திருநாளில் கண்ணில்லாதவர்க்கு உதவுதல், இளையான் குடிமாற நாயனர் திருநாளில் ஏழைகட்குச் சோறிடுதல், இயற்பகை நாயனர் திருநாளில் திருமணம் செய்துவைத்தல், தண்டியடிகள் நாயனர் திருநாளில் திருக்குளம் அமைத்தல், அப்பர் திருநாளில் உழவாரப்பணி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளல் நலமாகும். இதுவே உண்மையாகப் பெரியவர்களின் புனித நாளைக் கொண்டாடுவதாகக் கருதப்படும்.

சமயக் கொள்கைகள் :

இங்கு நிகழும் சமயப் பயிற்சி வகுப்பில் பல்வேறு சமயக் கோட்பாடுகளை நீங்கள் தெரிந்துகொள்ள இருக்கிறீர்கள். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பர் உலகாயதர். உலகம் என்பது ஒன்று உண்டு. ஆனால் அதனை இயக்கக் கடவுள் ஒருவர் வேண்டுவது இல்லை என்பது உலகாயதர் கொள்கை. கடவுள் இருக்கிறார்; மற்றவை யாவும் இல்லை. எல்லாம் கடவுளின் சாயல்களே என்பது சங்கரர்கொள்கை. இதை அத்வைதம் என்பர். கடவுள் உலகம் என்ற இவ்விரண்டோடு உயிர் என்ற ஒன்றையும் சேர்த்துப் பதி, பசு, பாசம் என முப்பொருள் உண்மையைக் கூறுவது சைவ சித்தாந்தம். இக்கொள்கையைத் திருஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர்கள் விளங்கக் கூறியுள்ளனர். வைணவர்களுக்கும் முப்பொருள்கள் உடன்பாடே. சங்கரர்க்கு வேதம் உடன்பாடு. ஆகமங்களிலும் அவை கூறும் நெறிகளிலும் உடன்பாடு இல்லை. அவர் கணபதி, சிவன், சக்தி, திருமால், ஆதித்தன் ஆகிய இந்த ஐவரையும் பூசிக்கும் பஞ்சாயதன பூஜையை வகுத்தார். நமது கோயில் வழிபாடு, கோயில் அமைப்பு முதலியன சங்கரர் கோட்பாட்டில்

இல்லை. ஆனால் அண்மையில் காசியில் இக்கோட்பாட்டின்படி கோயில் ஒன்றை அமைத்துள்ளனர். உயிர்களுக்கு இரக்கம் காட்டும் ஜீவகாருண்யத்தில் சைவத்தோடு ஜைனம் ஒத்திருக்கின்றது. வைணவம் சைவத்திலிருந்து பிரிந்ததாகக் கருதப் படுகிறது.

அகச் சமயங்கள் :

சைவத்தில் விஷ்ணுவிற்கு ஆன்மார்த்தம் பரார்த்தம், இரு பூஜையிலும் இடம் உண்டு. வைணவத்தில் சிவமூர்த்திக்கு ஒரு பூஜையிலும் இடம் இல்லை. வைஷ்ணவம் சைவத்திற்குப் புறம்பல்ல. அறியாமையால் சைவருள் சிலர் விஷ்ணு வழிபாட்டை விலக்கினர் ; வைஷ்ணவம் தனியாகப் பிரிந்தது. அகச்சமயங்களுள் இவ்வாறு சாக்தம், காணுபத்தியம், கௌமாரம் முதலிய மதங்களைப் பிரிக்க முயன்றனர். அம்முயற்சிகள் வெற்றிபெற வில்லை. முருக வழிபாடு தனியாகப் பிரியும் நிலையில்தான், கச்சியப்பர், கந்தபுராணம் பாடி "சிவகுமாரனே முருகப் பெருமான்" என வலியுறுத்தி அம்முயற்சியைத் தடுத்தார் என்பர்.

சைவ சித்தாந்தம் :

பதி, பசு, பாசம் என்ற இம்மூன்று பொருள்களும் ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப்படாததாய் – தோற்றம் ஈறு இல்லாததாய் – அனாதியாய் உள்ளவை. இவை தகுதியாலும் தன்மையாலும் தரத்தாலும் வேறுபாடு உடையன. இம் முப்பொருள்களின் இயல்பினையும், இவற்றுக்கிடையே உள்ள தொடர்புகளையும் சைவ சித்தாந்தம் நுட்பமாகவும் – தெளிவாகவும் விளக்கியுள்ளது.

எண் குணங்கள் :

பதியாகிய கடவுள் குறைவிலா நிறைவினனாக விளங்குகின்றான். உயிர்கள் எண்ணற்றன. கடவுள் ஒருவனே. பரிபூரணனாகத் திகழும் கடவுள் எட்டுக் குணங்களை உடையவன். தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம்

உடைமை என்பன இறைவனது எண் குணங்கள். இறைவனது எண் குணங்களை அவனைச் சார்ந்து வழிபடுவதன் மூலம் நாமும் பெறலாம். இதனை உலகியல் வாழ்வியலால் நன்கு உணரலாம்.

வெவ்வேறு குணங்களையுடைய ஆணும் பெண்ணும் திருமணத்தின் பின்னர் இணைந்து வாழ்ந்து வரும்போது, சில ஆண்டுகளில் ஒருவர் குணம், மற்றவர்பால் படிவதை உலகியலில் காண்கிறோம். இறைவனை வழிபடுவதால், அவனது உயர் குணங்கள் உயிர்களுக்கும் வாய்க்கும் என்பதனை இதனால் உணரலாம். பெற்றோர்களின் குணமும் செயலும் பிள்ளைகட்கு வாய்ப்பதும் இக்கருத்தை வலியுறுத்தும்.

ஆசிரியரிடம், மாணவன் சென்று வணங்கிநின்று பயில்வதால் மாணவன் தன் அறியாமையை நீக்கிக்கொண்டு தான் மேல்நிலை அடைகிறானே தவிர அதனால் ஆசிரியருக்குப் பயன் ஏதும் இல்லை. அதுபோல இறைவனை வழிபடுவதால் உயிர்களே உய்தி பெறுகின்றன. இதனைத் திருக்களிற்றுப்படியார் என்னும் சித்தாந்த முதற்படிநூல்,

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"

என விளக்குகிறது. எனவே, கருணையாளனாகிய பெருமானை வழிபட்டால் இறைவனது தூய தன்மைகள் உயிர்கட்குக் கைவரும். உயிர் சார்ந்ததன் வண்ணமாவது என்பது சித்தாந்தம். எண்குணம் உடையவனாகிய இறைவனைப் பலகாலும் வழிபட்டால் உயிரும் மெல்ல மெல்ல இறைவனது குணங்களைப் பெற முடியும்.

பதி இயல்பு :

பெருங்கருணையாளனாகிய இறைவன் உயிர்கள் கடைத்தேற வேண்டும்; மலத்திலிருந்து விடுபடவேண்டும் என்ற பெருங் கருணை காரணமாகவே உயிர்களைத் தனு கரண புவன போகங்களில் செலுத்துகின்றான். உயிர்கள் கருணையாளனாகிய இறைவனை வழிபட்டு உய்திபெறுதல் வேண்டும். உயிர்களைப்பற்றி யிருக்கின்ற அழுக்கு நீங்குகின்றவரையில் மீண்டும் மீண்டும் இறைவன் பிறவியை வழங்குகின்றான். இறைவனை உயிர்கள்

வழிபடுவதால், உயிர்கள் உய்திபெறுகின்றனவே அல்லாது நம் வழிபாட்டால் இறைவனுக்கு ஆவது ஒன்றும் இல்லை. இதனை மணிவாசகப் பெருந்தகை,

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே"

என்ற திருப்பாடலால் இனிதே விளக்கியருளுகிறார்.

வாழ்வில் இன்பத் துன்பங்கள் மாறி மாறி வருகின்றன. இன்பம் மட்டுமே உயிர்களுக்கு வழங்கப்படுமானால் உயிர்கள் கடைத்தேற முடியாது. இன்பத்தில் அறிவு பெரும்பகுதி வேலை செய்வதில்லை. துன்பமே அறிவு விளக்கத்திற்கும், அனுபவத்திற்கும் துணையாகும்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்ற திருக்குறள் இதனை வலியுறுத்துகின்றது.

பித்தன் என்பதன் பொருள் :

இறைவனது பெருங்கருணைத் திறத்தைச் சுந்தரர் அனுபவித்த இன்பத் துன்ப நிகழ்ச்சியின் மூலம் நாம் உணர்கிறோம். 'பித்தா' என்று தொடங்கியவர் இறைவன் கருணையை உணர்ந்து "அருளாளா" என விளிக்கிறார். பித்தன் என்ற சொல் அறிவு திரிந்தவன் என்ற பொருளில் இங்கே வழங்கவில்லை. பித்தன் என்பதற்குப் பேரருளாளன் என்ற பொருளே கொள்ளப்படுகிறது. சுந்தரர், பித்தா என்றதன் பின்னர் அருளாளா என்றழைப்பதைக் காணலாம். இதனைப் 'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழி விளக்கிக்காட்டும்.

உயிர்கள் உணர்த்த உணர்வன :

தானே உணரும் தன்மை இல்லாததாய் அறிவித்தால் அறியும் தன்மையுடையதாயிருப்பது உயிர். பசுவாகிய உயிர்கள்

எண்ணற்றன. இயல்பாகவே மலம் என்னும் அழுக்கினுட்பட்டு உயிர்கள் உழல்கின்றன. உயிர்கள் தாமே உணரும் ஆற்றல் உடையன அல்ல. அறிவித்தால் அறியும் பொருளாகிய உயிர், தான் உய்திபெறுவதற்கு உரியதாயிருப்பதால், இறைவனை வழிபட்டு உய்திபெறத் தகுதியுடையதாகின்றது. அறிவித்தால் அறியும் உயிரும் தானே கருவி ஏதுமின்றி அறியும் கடவுளும் தன்மையால் வேறுபாடு உடையன. உயிர்களின் இத்தன்மையை அப்பர் பெருமான்,

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே"

என்று அருளிச்செய்த திருப்பாடலாலும், நம் ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

"உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும் வகைகாணேன் – உணர்த்தியென்னுட்
பூண்டமல மாயைகன்மம் போக்கிச் சிவானந்தத்து
ஆண்டருள்வை சொக்கநா தா"

என்று அருளிய சொக்கநாத வெண்பாப் பாடலாலும் உணரலாம். தாயுமான அடிகளாரும், இறைவன் இயக்காது எதுவும் இயங்காது என்பதனை 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று குறித்தருளுதலையும் இங்கே நினைத்தல் வேண்டும்.

பாசத்தின் இயல்பு :

இத்தகு உயிரைப்பற்றி நிற்கும் பாசம் என்பது மலம் - அழுக்கு என்று கூறப்படும். இதனை, ஆணவம் மாயை கன்மம் என மூன்றாகப் பகுப்பர். ஆணவம் என்பது இருள்; உயிர்களை -

பொருள்களை மறைத்து நிற்பது; தன்னையோ பொருள்களையோ காட்டாத பேரிருளாகும். மாயாமலம் என்பது உயிருக்கு விளக்கம் தரும். தனு - (உடல்) கரணம் - (மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் உட்கருவிகள்) புவனம் - (உலகம்), போகம் (இன்பத் துன்பங்களைத்தரும் பொருளாம்). இவற்றை உயிர்கள் பெற்று உய்வதற்கு மாயாமலமே உதவுகிறது. கன்மம் என்பது உயிர் உடலோடுகூடிச் செய்யப்படுகின்ற செயல் முறைகளைக் குறிக்கும்.

வேதச் சிறப்பு :

வேதம் முதலிய பலவற்றைப் பற்றிய கருதுக்களை நீங்கள் இங்கே பயில இருக்கிறீர்கள். வேதம் எல்லாக் கருத்துக்களையும் உடையது. ஓர் பேராறு போன்றது. சைவம் துறை போன்றது. இன்னின்னார் இன்னின்ன கருமங்களைச் செய்ய வேண்டும் எனக் கட்டளையிடுகிறது வேதம். நித்திய கரும அனுஷ்டானங்களை அது வலியுறுத்துகிறது. எல்லாக் கொள்கைகளும் வேதத்தில் உண்டு. வேதத்தின் சாரமாகத் திகழ்வன ஆகமங்கள். பொதுவகைத் தருமங்களை வேதம் கூறுகிறது. சிறப்புத் தருமங்களை ஆகமங்கள் விளக்குகின்றன. வேதம்போலக் குறள் பொது அறங்களைக் கூறுகிறது. ஆகமம்போலத் திருமந்திரம் சிறப்பறங்களைச் சுட்டு கிறது. புராணங்கள் இவற்றையே மேற்கோளும் உதாரணமும் காட்டி விளக்குகின்றன. சூதமுனிவர் முதலியோர் புராணத்தின் வாயிலாக வேதத்தின் உட்பொருளை விளக்கினர். அரசகட்டளை போன்றது வேதம் என்றும், நண்பரின் அறிவுரை போன்றவை, புராண - இதிகாசங்கள் என்றும், மனைவியின் இன்மொழி போன்றவை காவியங்கள் என்றும் இவற்றின் விளக்கும் தன்மை யினைச் சான்றோர் விளக்கியுள்ளனர். வேதம் கர்மகாண்டம், ஞானகாண்டம் என இரண்டாகத் திகழ்கிறது. செயற்பாட்டைக் கர்மகாண்டமும் அதனால் ஏற்படும் விளக்கத்தை ஞானகாண்டமும் கூறுகின்றன.

ஆகமச் சிறப்பு :

சிவாகமங்கள் இருபத்தெட்டு. கோயில் அமைப்பு, கோயில் வழிபாட்டுமுறை, சமயத் தத்துவ நுட்பங்கள் முதலியவற்றை ஆகமங்கள் விளக்குகின்றன. புராணங்கள் பதினெட்டு. தோத்திரங்கள் (திருமுறைகள்) பன்னிரண்டு; சாத்திரங்கள் பதினுன்கு. இவற்றை எல்லாம் முழுமையாகத் தெரிந்துகொள் வதற்கு இங்கே காலம் இல்லை. இவற்றின் எல்லைக் கோடுகளைப் பற்றி மட்டுமே நீங்கள் இப்பத்து நாட்களில் அறிந்துகொள்ள இருக்கிறீர்கள். சமய நுட்பங்களைத் தக்க ஆசாரியன் வழியாகக் கேட்டும், உலக நிகழ்ச்சிகளின் வாயிலாக அனுபவித்தும் அறிதல் வேண்டும்.

சமய வாழ்வு :

இங்கே சமயப் பயிற்சி வகுப்பில் கற்பவற்றின் மூலம் சமயவாழ்வை நீங்கள் நுட்பந்தெரிந்து மேற்கொள்ளவும், மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டவர்களா கிறீர்கள். இந்தச் சமயப் பயிற்சி வகுப்பு செம்மையுற நடைபெற்றுப் பயனளிக்கச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

[33]

இன்றைய கல்வியில் சமய போதனை *

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

[சமுதாய முன்னேற்றத்திற்கு அடிப்படையான கடமையுணர்வை வலியுறுத்தி, சமுதாயச் சீர்கேடுகள் அகலவேண்டுமானால் இளைஞர்களுக்குச் சமயத் தொடர்பான கல்வி கற்பிப்பது ஒன்றே வழி என்பதனை விளக்கி நிறைகிறது இக்கட்டுரை.]

அனுபூதி பெற :

சைவர்கள் சைவ சமயக் குருபீடங்களாகிய ஆதீனங்களுடன் அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அப்படித் தொடர்பு கொள்வது, சமய தத்துவ விவரங்களை மக்கள் புரிந்து நன்னெறியில் நடக்கப் பெருந்துணையாகும். எப்போதோ ஓர் மரியாதைக்காகப் போய்ப் பார்க்கவேண்டும் என்று பார்ப்பதால் நலம் அடைய முடியாது. பள்ளியில் பயில்கின்ற மாணவன், என்றோ ஒருநாள் பள்ளிக்குச் சென்றுவந்தால் அவனது கல்வி வளம் எவ்வாறு பெருக முடியாதோ அதேபோலத்தான் என்றோ ஒருநாள் வருவோரும் நன்மைகள் பெறமுடியாது. அருள் நிலையங்களாகிய ஆதீன மடாலயங்களிலும், ஆலயங்களிலும் இடையீடில்லாத தொடர்பு கொண்டிருப்பவர்கள் பல வகையிலும் சமய நுட்பங்களைத் தெரிந்து அனுபூதியும், அமைதியும் கைவரப் பெறுவர்.

---

* *பின்னலூர், குடமுழுக்கு விழாவிற்கு எழுந்தருளி அன்பர்களிடையே திருவாய் மலர்ந்தருளி 10—8—1974 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

கடமை உணர்ச்சி :

இவ்வகையில் பின்னலூர் வாகீசம் பிள்ளை அவர்கள் நமது ஆதீனத்துடன் பல்காலும் தொடர்புகொண்டுவருவது பாராட்டற்குரியதாகும். அவர் அரசியலில் செய்த தொண்டைவிடச் சிறிது காலமாக ஆன்மீக இயலில் பணி புரிவதை மிக மிகப் பாராட்டுகிறோம். சிதம்பரம் ஆலயத்தில் ஆயிரத்தெட்டு வில்வமரங்களைப் பயிர்செய்து கொடுத்திருப்பதும் பாராட்டற்குரியது. ஆதீனங்களுக்கும் ஆலயங்கட்கும் மற்றும் பிற இடங்கட்கும் ஆயிரத்திற்கு மேற்பட்ட வில்வக் கன்றுகள் அனுப்பியதும் சிறந்த சிவப்பணியாகும். இப்போது தமது முன்னோர்கள் தம் குடும்பக் கோயிலாகக் கட்டிய இராமலிங்கேசுவரர் திருக்கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கும் சிறப்பாகச் செய்ய ஏற்பாடு செய்திருப்பது அவர்தம் தெய்வ பக்தியையும் கடமை உணர்ச்சியையும் புலப்படுத்துகிறது. வரவேற்புரையில் நம் அன்பர் கனகசபை பிள்ளை அவர்கள் சிந்தனைக்குரிய பல கருத்துக்களை வெளியிட்டார்கள். அக்கருத்துக்களில் சிலவற்றை நாம் விரிவாகச் சிந்திப்போம்.

கடமையும் உரிமையும் :

நாடு சுதந்திரம் பெற்றால் மட்டும் போதாது. சுதந்திரம் பெற்ற மக்கள் ஒவ்வொருவரும் நாட்டின் நலத்திற்காக அவரவர் கடமையைச் சரிவரச் செய்தல் வேண்டும். கடமையை உணர்ந்து கடமையைச் செய்யும் நாடுதான் அனைத்து வளங்களும் கொழிக்கும் நாடாகும். அவரவரும் தம்தம் கடமைகளைச் செய்யத் தவறினால் நாடு முன்னேற்றமடையாது. எனவே அவரவரும் கடமையைச் செய்வதிலேயே நாட்டமாயிருத்தல் வேண்டும். ஆனால் பெரும்பாலோர் கடமையைச் செய்ய மறந்துவிடுகிறார்கள். அப்படிச் செய்யாதவர்களை அவரவர்க்குரிய கடமையைச் செய்யச் செய்வதே அரசின் கடமையாகும்.

புறநானூற்றுப் புலவராகிய பிசிராந்தையாரது பாடல் ஒன்று இக்கருத்துக்கு அரண் செய்வதைக் காணலாம். மனித சமுதாயம் நரைதிரை மூப்புக்களினால் நலிவு படாமல் என்றும் இளமையோடும் அழகோடும் வாழவேண்டுமானால் அவரவரும் நல்லனவாகிய கடமைகளைச் செய்தும் அல்லனவாகிய தீமைகளைக் களைந்தும் வாழ்தல் வேண்டும்.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியர் என வினவுதிராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந்தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழுமூரே."

கடமை என்றவுடன் உரிமை பறிபோய்விட்டது என்று எண்ணத் தோன்றும். அவரவரும் கடமையைப் பூரணமாகச் செய்தால் உரிமை தானே கிடைக்கத்தான் செய்யும். தாய் தந்தையர் செய்யும் கடமை பிள்ளைகளுக்கு உரிமையாகிறது. பிள்ளைகள் செய்யும் கடமை தாய்தந்தையர்களுக்கு உரிமையாகிறது. மனைவி செய்யும் கடமை கணவனுக்கு உரிமையாகிறது. கணவன் செய்யும் கடமை மனைவிக்கு உரிமையாகிறது. மாணவன் செய்யும் கடமை ஆசிரியருக்கு உரிமையாகிறது. ஆசிரியர் செய்யும் கடமை மாணவனுக்கு உரிமையாகிறது. முதலாளியின் கடமை தொழிலாளிக்கு உரிமையாகிறது. தொழிலாளியின் கடமை முதலாளிக்கு உரிமையாகின்றது. அரசின் கடமை குடிமக்களுக்கு உரிமையாகிறது. குடிமக்கள் கடமை அரசுக்கு உரிமையாகிறது. அவரவரும் கடமையைச் சரிவரச் செய்தால் உரிமைக்குரலுக்கு ஏது இடம்? அவரவரும் செய்கின்ற கடமையே அவரவருக்கும் உரிமையை நல்குகின்றது. இதனாலேயே கீதையில் "கண்ணபிரான் கடமையைச் செய்; பலனில் பற்றுவையாதே" என்றார். இவ்வகையில் நமது அப்பர் சுவாமிகளும் இறைவனின் கடமையையும் மனிதனின் கடமையையும் இணைத்துக் கூறியுள்ளதைக் காணலாம்.

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்கின்றார்.

சமய பாட போதனை :

அரசின் கடமைகள் பலவற்றுள்ளும் கடமையை உணராத மக்களுக்குக் கடமையை உணர்த்திச் செயல்படுத்துவது தலையானது. அவற்றில் ஒன்று, கல்வி நிலையங்களில் சமய ஒழுக்க நீதி போதனைகளைக் கட்டாய பாடமாக நிகழ்த்துவது. இதனால் சமயங்களிடையே சச்சரவுகள் – சண்டைகள்வரும் என்று சொல்லக்கூடும். எல்லாச் சமயங்களுக்கும் அவ்வச் சமயத் தலைவர்களைக்கொண்டே பாடத்திட்டம் வகுத்தும், வகுப்புக்கள் அமைத்தும், பாடங்களைக் கற்பிக்கச் செய்தும், அவ்வச் சமயத்து மாணவர்களை அவ்வச் சமயங்களில் பயிற்சி பெறச்செய்தால் எந்தவகை இடையூறுகளும் ஏற்படமாட்டா. நமது நாட்டு அரசு மதச் சார்பற்ற அரசு. மதச் சார்பற்ற என்றால் எந்த ஒரு சமயத்தையும் சார்ந்து நடத்தல் கூடாது என்பதே பொருளாகும். சமய உணர்வோ – சமய நம்பிக்கையோ இல்லாதது என்பது பொருளன்று.

சமயச் சார்பற்ற அரசாக இருக்கும் இந்தியப் பேரரசானாலும் சரி, தமிழக அரசானாலும்சரி ஒன்று முதல் பதினொன்றும் வகுப்பு வரை அவ்வச் சமயத்தவர்க்குரிய பாடப் புத்தகங்களை அவ்வச் சமய நிலையங்களின் வாயிலாகவே வெளியிடச்செய்து அதனைக் கட்டாய பாடமாக நடத்தினால், மக்களாட்சி நடைபெற்றுவரும் இந்நாட்டில், அது மனித குலத்திற்குச் செய்யும் மாபெரும் நற்பணியாகும். இப்பணியைச் சமயச் சார்புள்ள இலங்கை அரசு பல்லாண்டுகளாக நடத்திவருவது குறிப்பிடத்தக்கதும், பாராட்டத்தக்கதும் ஆகும். பௌத்த மதத்தை, அரசாங்கச் சமயமாகக் கொண்டுள்ள இலங்கை அரசே, எல்லா மதத்தையும் சமமாக நடத்துகின்றபோது, சமயச் சார்பற்ற அரசாங்கம், கல்வி நிலையங்களிலே சமய பாடத் திட்டம் அமைத்து சமய வகுப்புக்களை ஏன் நடத்துதல் கூடாது? இது மக்களை வாழ்வாங்கு வாழவைக்கும் சிறந்த நெறியாகும். இதனை அரசியல்

துறையில் இருப்பவர்களாகிய நம் அன்பர் R. கனகசபைப் பிள்ளை போன்றவர்கள் கவனித்து ஆவன செய்தல் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நலம் பல பயப்பதாகும்.

இராமலிங்கேசுவரர் :

அரசியல் துறையில் நீண்டகால அநுபவம் உடைய நமது அன்பர் வாகீசம் பிள்ளை தமது கடமையை உணர்ந்து இராமலிங்கேசுவரர் கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்தல் அவருடைய தலையாய கடமையாகிறது. அதனை உணர்ந்து செயல்பட்டுவரும் அவரைப் பாராட்டுகிறோம். இராமபிரான் சீதாபிராட்டியை மீட்டுவந்தவுடன், "கோடிமாதவங்கள் செய்து குன்றினார் தம்மையெல்லாம்" (இராவணனை) சங்கரித்த தோஷம் நீங்குவதற்காக இராமநாதரை இராமேசுவரத்தில் பூசித்துப் பேறுபெற்றார். அந்த மூர்த்தியை இராமநாதர், இராமலிங்கம், இராமலிங்கேசுவரர் என்ற பெயர்களில் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் தாபித்து வழிபட்டு வருவதுபோல அமைந்ததே இத் திருக்கோயிலாகும். இராமலிங்கேசுவரர் என்ற திருப் பெயரில் இங்குப் பெருமான் விளங்குகின்றார்.

குடமுழுக்கு விழா :

திருக்கோயில்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தவறாமல் குடமுழுக்கு விழாச் செய்தல் வேண்டும். மனம், வாக்கு, காயங்களைத் திரிகரணம் என்பர். இம் மூன்றாலும் செய்யப்படும் மந்திரம் கிரியை, பாவனை இம் மூன்றும் வழிபாட்டிற்கு முக்கியமானவை. கோயிலில் திருப்பணி செய்து பிம்பங்களுக்கு (இறையவர் திரு உருவங்களுக்கு) அஷ்டபந்தனம் சாத்துதல் தெய்வத்தன்மை பிரகாசிக்கச் செய்வதாகும். பிம்பத்திலுள்ள பெருமானைக் கும்பத்திலுள்ள (குடத்திலுள்ள) புனித நீரில் ஆவாகனம் செய்து, தற்காலிகமாக அமைக்கப்பெற்ற கோயிலாகக் கருதப்படும் யாகசாலையில் எழுந்தருளச்செய்து வழிபாடு நிகழ்த்துவர். யாகசாலையைக் குடமுழுக்குச் செய்வோரின்

தூரத்திற்கும். தகுதிக்கும், வசதிக்கும் ஏற்ப அமைத்து, ஆல் அரசு முதலிய சமித்துக்களாலும் பசு நெய்யினாலும் வேள்வி செய்து 2, 4, 6, 8, 10 காலங்களாக வசதிக்கேற்பச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தி ஓம குண்டத்திலுள்ள எரியில் பொருள்களை இட்டு அவற்றை இறையிடத்தில் சேர்ப்பர். முறையாக யாகம் செய்கின்ற பொழுது இறைவன் அதனை ஏற்றருளி வேள்விமூலம் எழும் ஓமப் புகையினால் நல்ல மழை வேண்டுங்காலத்து மழை பெய்வித்து வளம் சுரத்தல் முதலிய பயனைத்தருகிறான். இதனைத் தரிசிப்பவர் நோயின்மை, நீண்ட ஆயுள் முதலிய இம்மை மறுமைப் பயன்களைப் பெறுகின்றனர்.

வாழ்த்து :

இத்தகைய கும்பாபிஷேகங்களை வேத ஆகம நெறி முறை வழுவாமல் செய்பவர்களும், கும்பாபிஷேகப் பணியில் பங்கு கொண்டவர்களும், இப்பணிக்கு உதவியவர்களும், கும்பாபிஷேகத்தைத் தரிசித்தவர்களும் எல்லா நலங்களும் பெற்று இன்புறுவர். எனவே அவரவரும் கடமையை உணர்ந்து கடமையைச் செய்தும்-செய்வித்தும் நலம்பல பெற்று நன்கு இனிது வாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

தருமையாதீனம் ஆவணிமூலப் பெருவிழாவில்
திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்களுக்குப்



'பல்கலை வித்தகர்' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கி
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
ஆசியருளியது
(21—8—1974)

[34]

மக்களும் - அறமும் *

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்"

[பக்திவலையில் படும் பரமனாக விளங்கும் செந்தமிழ்ச் சொக்கனுக்குகந்த ஆவணிமூல விழாவும், இதனை முறையாகத் திட்டமிட்டு நடத்திவரும் ஆதீனத்தின் சிறப்பும், அறங்களைப்பற்றிய விளக்கங்களும் - அறஞ்செய்தலில் மக்கள் கடமை என்ன என்பதும் இக்கட்டுரையால் விளக்கப்படுகின்றன.]

ஆவணிமூலத் திருநாள் :

தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருக்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானின் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்குபவர் சொக்கலிங்கப் பெருமான். இவர் பக்தர்கட்காக எளிவந்த கருணையைக் காட்டிய பெருநாளே ஆவணி மூலத் திருநாள். மாணிக்கவாசகருக்காக நரிகளைக் குதிரைகளாக்கித் தானே குதிரைச் சேவகனாக வந்த பெருநாள். பக்திப் பண்பாடுடையவர்களாகிய மாணிக்கவாசகர், வந்தியம்மை என்ற இருபெருஞ் சீரடியார்களுக்காக நரிகளைப் பரிகளாக்கியும், பரிகளை நரிகளாக்கியும், வைகையில் வெள்ளம் பெருகச் செய்தும், அவ்வெள்ளம் கரைபுரண்டோடும்போது அக்கரையை அடைக்கக் கூலியாளாக வந்து பிரம்படி பட்டும், பெண்சுமந்த திருமேனியில் புண்சுமந்தும் மண்சுமந்தும் இறைவன் திருவிளையாடல் செய்தான்.

---

* தருமையாதீன ஆவணிமூல விழாவில் வழங்கியருளிய இவ்வாசியுரை 10—9—1974 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.

பக்தி வலையில் படுபவன் பரமன் :

சொக்கநாதப் பெருமான் தன் பக்தர்களுள் ஒருவனாகிய தருமி என்னும் அந்தணனுக்குத் தமிழ்ச் செய்யுள் ஒன்றினைக் கொடுத்துப் பொற்கிழி பெறச் செய்தான். தன் சந்நிதியில் நின்று முக்காலங் களிலும் அன்போடும் பக்தியோடும் இசைபாடும் நியமம் பூண்ட பாணபத்திரனின் பக்தியைப் பாராட்டி, தன்பால் பக்திபூண்டு ஒழுகும் சேர மன்னனுக்குச் சீட்டுக் கவி கொடுத்துச் செல்வ வளம் நிறைவித்தான். இசைவல்ல பாணபத்திரனுக்கு இதந் தெரிந்து இசைபாடப் பொற்பலகை வழங்கியருளினான். பாண பத்திரன் மனைவி இசைவாதில் வெற்றி பெறச் செய்தான். இன்னும் பல நிகழ்ச்சிகளால் தெய்வநெறிப் பற்றுடைய புலவர்களை, செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் பாராட்டி ஊக்கப்படுத்தியிருக்கிறான் என்பதைத் திருவிளையாடல் புராணம் தெளிவாக அறிவிக்கின்றது.

ஆதீனப் பணி :

செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமானை ஈரெண் திறத்து உபசாரத்துடன் பூசித்துவரும் தருமையாதீனத் திருமடாலயம் தான் தோன்றிய நானூறு ஆண்டுக் காலமாக, அவ்வக்காலச் சூழ்நிலைக்கேற்ப, புலவர்களை ஆதரித்தும் பாராட்டியும் ஊக்கப் படுத்தியும் சிறப்புச் செய்து, சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கும் பணி செய்து வருவதைத் தமிழுலகம் நன்கறியும். திருக்கூட்டத்து அடியவர்களை நல்ல புலமை உடையவர்களாக உருவாக்கியும், அவர்கள் வாயிலாக நூல்கள் பலவற்றை இயற்றச் செய்தும், சமயத்தையும் தமிழையும் வளர்த்திருக்கிறது நமது ஆதீனம். அப்பணிகளில் குமரகுருபரர், சிதம்பரநாத முனிவர், சம்பந்த சரணாலயர், வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியவர்கள் சிறப்பிடம் பெறுபவர்கள்.

கயிலைக் குருமணியின் அறப்பணி :

முன்னோர்களைப்போலவே அண்மைக் காலத்தில் கயிலைக் குருமணி அவர்கள் திருமடத்தையும், அறத்தையும், பல்வகையிலும், புரந்து வந்திருக்கிறார்கள். திருக்கூட்டத்து அடியவர்களும், பிறரும் சமயக் கல்வியோடு தமிழ்க் கல்வியையும், பெறுவதற்கு வாய்ப்

பாகக் கல்லூரி நிறுவி, அவர்களை நல்ல புலமை உடையவர்களாகத் திகழச் செய்தார்கள். புலவர்களுக்கு ஆதீனப் புலவர் பட்டம் வழங்கியும், பல துறைகளிலும் சிறந்து விளங்கும், அறிஞர் களுக்குச் சிறப்புப் பட்டம் வழங்கியும், நம் சமயத்திற்கு ஆக்கம் தேடினார்கள். பிரசாரத்திற்கென வாகனம் வைத்து, பல சிற்றூர்களிலெல்லாம் புலவர் பெருமக்களைக்கொண்டு சமயப் பிரசாரம் நிகழ்த்துவித்தார்கள். தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் சமயப் பிரசாரத்திற்கென நிலையம் அமைத்து சமயப் பிரசாரம், தமிழ் வகுப்பு, சமய பாட வகுப்பு, முதலியவற்றை நடாத்தி, மக்களைச் சமயத்தில் – வழிபாட்டில் ஈடுபடுத்தினார்கள். தருமையில் உயர்பள்ளி நிறுவி, சிறுவர்கள் கல்வியறிவு பெற வாய்ப்பளித்தார்கள். தமிழகத் திருமடங்களின் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட "தமிழ்நாடு தெய்விகப் பேரவை" ஏற்படத் துணை நின்று, அதன் முதல் தலைவராக இருந்து செயல் முறைகளை நெறிப்படுத்தினார்கள். இத்தகைய பல்வகைப் பணி களுள் அறிஞர்களுக்குச் சிறப்புப் பட்டம் வழங்குவதைச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமானுக்கு உகந்த ஆவணிமூலத் திருநாளில் மேற்கொண்டு 21 நல்லறிஞர்களுக்குச் சிறப்புப் பட்டம் வழங்கிப் பாராட்டி யிருக்கிறார்கள்.

கயிலைக் குருமணி காட்டிய வழியில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மேற்கொண்ட அற வழியைப் பின்பற்றியே இரண்டு ஆண்டுகளாகப் புலவர்களுக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கின்றோம். ஒவ்வொருவரும் தனி மனிதனயிருப்பினும், சமுதாயத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பினும், சமய அற நிறுவனங்களின் தலைமையை ஏற்றிருப்பினும், அவரவரும் செய்யவேண்டிய கடமைகளைச் சிறப்பாகச் செய்யக் கடமைப்பட்டவர்கள். நாம் புதுவதாக அறம் செய்யாவிட்டாலும் பழமையாக இருப்பவற்றில் முன்னோர்கள் தொடங்கி வைத்த அறங்களை விடாமல் காப்பதே சிறந்த அறமாகும். அவற்றையும் செய்து, மேலும் புதுமையாகச் செய்வது சிறப்புடையது.

அறம் என்றால் என்ன :

ஒருவருக்கு அறம் செய்ய இயலாவிட்டாலும், அவர் அறம் செய்யவேண்டும் என்ற விருப்பம்கொள்வதே அறம் செய்வதற்கு ஒப்பாகும். இதனையே ஔவைப்பிராட்டியாரும், "அறம் செய விரும்பு" என்று கூறியுள்ளார். விருப்பம், முதலில் பேச்சில் செலுத்திப் பின் செயலில் கொண்டுவிடும். அறம் செய்ய விரும்பாதவர்க்கு அறம் வேம்பாக இருந்தாலும் தொடங்கிப் பழகினால் பழக்கத்தில் அவர்க்கும் அது கரும்பாக இனிக்கும். இதனையே "ஈத்துவக்கும் இன்பம்" என்று கூறுகிறார் திருவள்ளுவர். அறம் என்ற உடனே சிலர் தயங்குகின்றார்கள். பணம் வேண்டுமே என்று மயங்குகின்றார்கள். மனம் இருந்தால் போதும் பணம் தேவையில்லை. திருவள்ளுவர் சொல்லுகின்றார் அறம் என்றால் என்ன என்று,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

மனம் மாசு இல்லாதிருத்தல் அறம் என்று கூறி, மேலும் ஒரு குறளில் 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், ஆகிய இந்நான்கும் இல்லாதிருப்பதே சிறந்த அறமாகும்' என்கிறார். இவற்றைப் படித்த மக்கள், பொருள் இல்லாமல் அறம் செய்ய இயலாது என்று எண்ணுவது பேதைமையாகும். [மாசு என்பதைப் பொதுவாகச் சுட்டிக்காட்டிய திருவள்ளுவர், அதனை அடுத்து விரிவாகக் கூறிச் செல்கிறார்.] ஒவ்வொருவரிடத்திலும் என்ன பொருள் இருக்கின்றதோ அதை ஈதலே போதுமான அறம் என்பது புலப்படுகிறது. அதனால்தான் ஔவைப் பிராட்டியாரும் 'ஈதல் அறம்' என்று இயம்பினர். பாரதியாரும்,

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்"

என்று கூறியுள்ளார்.

எல்லோரும் அறம் செய்யலாம் :

எழுத்தாளன் ஒருவன் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்தல், எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தல், அறம், பாவம் இவைபற்றித் தெரியாதவர்களுக்கு அவற்றை விளக்கிச் சொல்லுதல், நீதிநெறிகளை எடுத்துக் கூறுதல் ஆகியவற்றுல் அறம் செய்யலாம். உடல் பலம் உள்ளவர்கள் உடல் ஊன முற்ரேர்க்கும், எளியவர்களுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்யலாம். வழக்கறிஞர்கள் வாதிப் பிரதிவாதிகளைச் சமாதானம் செய்து வைத்தல் முதலிய அறச் செயல்களில் ஈடுபடலாம். வாழ்க்கைக்காக எந்த எந்தத் தொழிலில் யார் யார் ஈடுபட்டிருக்கின்ருர்களோ அவரவரும் அந்த அந்தத் தொழில் மூலமாகவே ஏழை எளியவர்கட்கு உதவி செய்யலாம். இனியவர்கள், எளியவர்கள் முதலிய எல்லோருக்கும் செல்வந்தர்கள் தருமம் செய்யலாம். இவை எல்லாவற்றிற்கும் எடுத்துக் காட்டாகப் பெரிய புராணம் திகழ்கிறது.

நாயன்மார்களின் அறங்கள் :

திருநீலகண்ட நாயனுர் குயவராதலால் தம் தொழிலுக்கு ஏற்ப அடியவர்களுக்குத் திருவோடு செய்து கொடுக்கும் அறத்தை மேற்கொண்டார். நேச நாயனுர் தாம் நெசவுத் தொழில் செய்பவராதலின் அடியவர்கட்கு ஆடைகள் கொடுக்கும் அறப் பணியைச் செய்தார். திருக்குறிப்புத் தொண்டர் ஏகாலியராதலின் சிவனடியவர்களது ஆடைகளைத் தோய்த்து உலர்த்திக் கொடுக்கும் அறத்தால் சிறந்து விளங்கினுர். சிவனடியவர்கட்கு இடையூறு செய்பவர்களோடு எதிர்த்துப் போரிட்டு, அடியவர்கட்கு வரும் இடையூறுகளை நீக்கும் அறம் செய்தார் ஆண்மைமிக்க எறிபத்தர். இவ்வாறு தாம் மேற்கொண்ட தொழிலால் எளிய முறையில் அறம் செய்த நாயன்மார்கள் பலராவர்.

புலவர்க்குப் பாராட்டு :

அக்காலத்தில் அரசர்கள் புலவர்களைப் பரிசில்கள் ஈந்து போற்றினுர்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலம்,

அறிகிறோம். படைத்தொழிலில் சிறந்தவர்களுக்கு (வீரர்களுக்கு) ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பித்தனர். இக்காலத்தில் நமது அரசு "பத்மஸ்ரீ" முதலிய சிறப்புப் பட்டங்கள் வழங்கிச் சிறப்பிக்கின்றது. அதைப்போலவே நமது ஆதீனத்திலும், செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமானுக்குகந்த பெருவிழாவில் - ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவில் புலவர்களுக்குப் பட்டம் வழங்கிப் பாராட்டி, சிறப்புப் பட்டம் பெறும் புலவர்கள் வாயிலாக அறவுரை கூறச் செய்திருக்கிறது. இன்றைய விழாவில் சிறப்புப் பட்டம் பெறுபவர், அனைத்திந்தியத் தென்மண்டல வானொலி நிலைய நிகழ்ச்சி அமைப்பாளர்; சிறந்த எழுத்தாளர்; இனிய பேச்சாளர்; நல்ல கவிதை இயற்றும் திறம் மிக்கவர். பன்மொழி தெரிந்த பண்பாளர். இயல், இசை, நாடகம் என்ற முத்திறத்திலும் வித்தகர். நிர்வாகத் திறன் உடையவர். இவ்வாறு பல்வகைத் துறைகளிலும் சிறந்து விளங்கும் மீ. ப. சோமசுந்தரம் அவர்கட்குச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் "பல்கலை வித்தகர்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பெறுகிறது. இத்தகு புலவர்களைப் பாராட்டுவதன் மூலம் சமயத்திற்கும், மொழிக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும், ஆதீனத் திருமடம் அறப்பணி செய்து வருகிறது. சிறப்புப்பட்டம் பெற்ற மீ. ப. சோமசுந்தரம், விழாவில் பங்கு கொண்டுள்ள பக்தர்கள், கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் ஆகிய அனைவரும் நல்லனவற்றை அறிந்து போற்றி, தெய்வ நன்னெறிகளை மேற்கொண்டு நாட்டிற்கும், சமுதாயத்திற்கும், சமயத்திற்கும், மொழிக்கும் நற்பணி செய்ய அருள்புரிய ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

[35]

மனமாற்றமே மருந்து *

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்"

[மக்கள் மனந்திருந்தினால் அல்லாது நாடு திருத்தமுற இயலாது என்ற அடிப்படையை விளக்கி, சமுதாயத்தில் மாந்தர்க்குத் தகுதியும் பக்குவமும் உரியவர்களால் புகட்டப்பெறவேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தி, சைவர்களாக இருப்ப வர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகளைச் சுட்டி நிறைகிறது இக்கட்டுரை.]

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்குஉள வாகிய சின்னங்களே"

— அபிராமி அந்தாதி

திருவலம்புரத் தரிசனம் :

கீழப்பெரும்பள்ளம் – மேலப்பெரும்பள்ளம் ஆகிய இரு தலங்களிலும் எழுந்தருளியுள்ள இறைவனையும் இறைவியையும் ஆடி வெள்ளிக்கிழமையாகிய இன்று வழிபடும்பேறு நமக்குக் கிடைத்தது. எந்த ஒரு செயலும் நடைபெற வேண்டுமானால்

---

* *கீழப்பெரும்பள்ளம், திருக்கோயில் வழிபாட்டில் அன்பர்களிடையே திருவாய்மலர்ந்தருளி 10—10—1974 ஞானசம்பந்தம் இதழில் வெளியிடப்பெற்றது.*

அதற்கு ஓர் அடிப்படையான காரணம் வேண்டும். காரணம் இன்றி ஒருபோதும் காரியங்கள் நிகழா. நாமே இத்தலங்களைத் தரிசிக்க நினைத்திருந்தாலும், இதுபோது இங்குள்ள அன்பர்கள் அழைத்த காரணத்தாலேயே இன்று தரிசனம் கிடைத்தது.

பழவினையே காரணம் :

மனிதவாழ்வில் நடக்கும் நன்மை, தீமைகள் யாவற்றிற்கும் அடிப்படையான காரணத்தையே நம்முடைய பெரியவர்கள் வினை என்று குறிப்பிட்டனர். நெடுநாட்களாகக் குழந்தைப்பேறு இல்லாத அன்பர் ஒருவர் இக்கோயில் திருப்பணியில் ஈடுபட்டுத் திருப்பணிகளை நிறைவேற்றிய பின்னர், அவருக்குக் குழந்தைப் பேறு வாய்த்தது என்று இங்கே அன்பர்கள் குறிப்பிட்டார்கள். சில இடங்களைத் தரிசித்ததால் நோய் நீங்கியது என்றும் பலர் குறிப்பிடக் காண்கின்றோம். மேம்போக்காக இச் செயல்கள் ஒரு காரணம்போல் தோன்றினாலும் இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணம் பழவினையே என்பதை நம்மில் பலர் உணர்வதில்லை.

மனம் திருந்த வேண்டும் :

இன்றைய நாட்டுநடப்பில் சில விஷயங்களை மக்களுக்குச் சொல்லவேண்டுவது அவசியமாகிறது. எல்லாம் தெரிந்தவர்கள் மனித குலத்தில் இல்லை. சுயநலப் போக்குள்ள இன்றைய மனிதர்களின் மனம் திருத்தமுற வேண்டும். நாடு திருந்த வேண்டுமானால் வீடு திருந்த வேண்டும். தனிமனிதன் திருந்தினாலல்லது நாடு திருந்தாது. இந்தத் திருத்தம், தானே மக்களுக்கு, வந்துவிடும் என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. தீமைகளைப் பார்க்காதே! தீமைகளைக் கேட்காதே! தீமைகளைப் பேசாதே! என்பதை விளக்க இங்கு மேடைமீது மூன்று குரங்குப் பொம்மைகளை வைத்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் பார்த்தே, தம்மைத் திருத்திக்கொள்வது மேன் மக்களுக்கே இயல்வது. சாதாரண மக்களுக்கும் பக்குவம் வரவேண்டுமானால் நாம் அவர்களைச் சந்தித்து, உண்மைகளை எடுத்துரைத்தல் வேண்டும். முன்னர் வாழ்ந்த பெரியவர்களும், அருளாளர்களும் எப்படித் தங்களை வளர்த்துக் கொண்டார்கள் என்பதற்கு வரலாறுகள் உண்டு. அந்த வரலாறுகளை நாம் மக்களிடையே எடுத்துச்சொல்ல வேண்டுவது இன்றைய நிலையில் தேவைப்

படுகிறது. இன்றைக்குத் திருத்தம் பெற வேண்டியவர்கள் இளைஞர்களும், கீழ்நிலையில் உள்ளவர்களும் மட்டுந்தான் என்பதில்லை. முதியவர்களும் மேல் நிலையில் உள்ளவர்களும்கூட திருத்தப்பட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்.

தகுதியும் பக்குவமும் தேவை:

ஒரு பெரியவர் தன் மகன் இனிப்புப்பண்டங்களை அதிக விருப்பத்தோடு அடிக்கடி உண்பதை நிறுத்த எண்ணினார். ஆனால் மகன் கேட்கவில்லை. தான் பெரிதும் மதிக்கும் துறவி ஒருவரிடம் மகனை அழைத்துப்போய் இவன் அடிக்கடி இனிப்பு உண்ணும் பழக்கத்தைக் கைவிட, ஆசீர்வதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். துறவியோ, 'ஒருவாரம் கழித்து அழைத்து வருக' என்றார். அடுத்த முறை வந்தபோது 'பதினைந்து நாட்கள் கழித்து வருக' என்றார். மூன்றாம் முறை வந்தபோதும் இதேபோல் 'ஒரு மாதம் கழித்து அழைத்து வருக' என்றார். அடுத்து வந்தபோது துறவி, அச்சிறுவனிடம் 'இனிப்பை மிகுதியாக உண்பது கூடாது. அது உடலில் பலவகையான நோய்களை உண்டாக்கும். குறைத்து உண்டால் நோய் நீக்கத்துடன் நலமாக வாழலாம்' என்று கூறினார். அன்று முதல் அச்சிறுவனும் இனிப்புப்பண்டம் உண்பதை அறவே நிறுத்திவிட்டான். பின்னர் ஒரு நாள் பெரியவர், துறவியாரிடம் வந்து, சிறுவன் இனிப்பு உண்பதை நிறுத்திய செய்தியைக் கூறிவிட்டு, தாங்கள் பலமுறை வரச் சொல்லிய காரணம் என்ன என்று அடக்கத்தோடு வினவினார். துறவியார், 'தாங்கள் வந்தபோது நான் இனிப்பு உண்ணும் பழக்கம் உடையவனாக இருந்தேன். நான் என்னைப் பக்குவப் படுத்திக் கொள்ளாமல் பிறருக்குச் சொல்வது பொருந்தாது; அப்படிச்சொன்னால் கேட்பவர்களும் திருந்தமாட்டார்கள். அதனால்தான், நான் முதலில் என் பழக்கத்தை நிறுத்தி, என்னைத் தகுதியாக்கிக் கொண்ட பின்னரே, சிறுவனுக்கு இனிப்பு உண்பதால் வரும் தீமையை விளக்கிச் சொன்னேன். அவனும் அதைக் கேட்டுத் திருந்தி நடக்கிறான் என்பது மகிழ்ச்சிக்குரியது

நல்லவற்றைப் பிறருக்கு எடுத்துச் சொல்பவர்கள், அவ்வாறு சொல்வதைத் தம் வாழ்க்கையில் பின்பற்றி நடக்கவேண்டும். தாம் கடைப்பிடித்தால்தான் தம் கொள்கையை – தம்சொல்லைப் பிறர் மதிப்பார்கள்; கேட்டு நடப்பார்கள். நடைமுறையில் இனிப்பு உண்பதை மேற்கொண்டிருந்த என்னைத் திருத்திக் கொள்ளவே இத்தனை காலம் தேவைப்பட்டது. திருவள்ளுவரும்,

> "சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்"

என்று கூறியுள்ளமை இக்கருத்தை வலியுறுத்தல் காணலாம்.

அதைப்போலவே கேட்பவர்களும் பக்குவம் உடையவர்களாக இருக்க வேண்டும். பக்குவம் உடையவரா என்பதைத் தேர்ந்து பார்த்தே நம் கொள்கையைச் சொல்லவேண்டும். நான் தங்களைப் பன்முறை வரச்சொல்லியதைக் கேட்டு, அதன்படி தாங்களும் சிறுவனை அழைத்துக்கொண்டு வந்ததால், 'சொன்னால் சிறுவன் கேட்பான்' என்ற நம்பிக்கை எனக்கும் பிறந்தது. ஆகவேதான் சொல்ல முடிந்தது. சொல்பவருக்கும் சொல்லத் தகுதி வேண்டும். கேட்பவருக்கும் கேட்டு நடக்கும் பக்குவம் வரவேண்டும். நீங்களும் என் அறவுரைகளைக் கேட்கும் ஆர்வமுடையவர்கள்தானா என்பதை அறியப் பலமுறை வரச்செய்தேன். அச்சோதனையில் உங்களுக்கு அறவுரைபெறும் தாகம் இருப்பதை அறிந்தேன்' என்று கூறினார். ஸ்ரீ குருஞானசம்பந்தரும்,

> "அன்பு மிகஉண்டாய் அதிலே விவேகம்உண்டாய்த்
> துன்ப வினையைத் துடைப்பதுண்டாய் — இன்பம்
> தரும் பூரணத்திற்கே தாகமுண்டாய் ஓடி
> வரும் காரணர்க்குஉண்மை வை."

என்று கூறியருள்கிறார். இத்தகைய வேட்கை உடையவர்களே தாம் பெற்ற அறிவுரைகளைப் போற்றிப் பயன் கொள்வர்.

உண்மைச் சைவர்கள்:

இன்றைய நிலையை இக்கதை நன்கு விளக்கும். அன்பர், நாகலிங்கம் பிள்ளை பலமுறை நம்மை வந்து இங்கே எழுந்தருள அழைத்தமைபற்றிக் குறிப்பிட்டார். இதனால் அவர் பக்குவப் படவில்லை என்பது கருத்தல்ல. சைவர்களாக இருப்பவர்கள் அனைவருமே திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்துபவர் களாகவும், சைவத் திருமடங்களோடு தொடர்புடையவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதே இதன் கருத்தாகும். பள்ளியிலும், கல்லூரியிலுமாக, முறையாகப் பயிற்சி பெறுதவர்கள் எப்படி பி.ஏ., எம்.ஏ. முதலிய பட்டங்களைப் பெறுதல் கூடும்? அது போல, சைவத்திருமடங்களோடு தொடர்பில்லாத நிலையில் சைவர்களாக விளங்க எப்படி முடியும்? பிறப்பால் சைவர்கள் என்ற நிலையை விடுத்துச் சைவக் கொள்கைகளை அறிந்து கடைப்பிடிப்பதன் மூலம் சைவர்கள் எனப் பெருமை கொள்வதே தக்கதாகும்.

திருக்கோயில்களும் திருமடங்களும்:

இம்மை வாழ்வைப் பற்றியே நமது வாழ்க்கை இன்று அமைந்துள்ளது. மறைவுக்குப்பின் நாம் எங்கே போகிறோம், நம் நிலை என்ன? முற்பிறவிக்கும் இப்பிறவிக்கும் தொடர்புண்டா? இப்பிறவிக்கும் அடுத்த பிறவிக்கும் உள்ள தொடர்பு யாது? என்பன போன்ற வினாக்களுக்கு உரிய விடைகளையே நமது சமயமும் – சமயப் பேராசிரியர்களும் தெளிவாக விளக்கி உள்ளார்கள். இவற்றை அறிவிப்பதற்கே கோயில்களும் – மடாலயங்களும் உள்ளன. தன்னை நாடி வருபவர்களுக்கு உறுதிப் பொருள்களைக் கூறவேண்டிய கடமை திருக்கோயில்களுக்கும் – திருமடங்களுக்கும் உண்டு. மனிதர்கள் எல்லோரும் சமமான வர்கள் அல்லர். உயிர் வளர்ச்சிக்கு உரிய படிப்பினை எந்தப் பள்ளியிலும் இன்று கற்றுத்தருவதில்லை. மனம் அடங்கக் கற்கும் கல்வி இன்று வேண்டும். இவற்றை விளக்கவும், அனுபவங்களைக்

கூட்டுவிக்கவும் திருக்கோயில்களும் – திருமடங்களும் உள்ளன. இவற்றின் தொடர்பின்றி வாழ்பவர்கள் பிறந்த பிறவியின் பயனையே சிந்திக்காதவர்களாகவே மறைகிறார்கள்.

அனைவர்க்கும் உரிய கடமை :

நாம் கோயிலுக்குப் போவதால் – கோயிலுக்குப் பெருமை என்பதில்லை. நமக்கே நலம் விளைகிறது. பள்ளிக்கு மாணவன் தன் வளர்ச்சிக்காகப் போகிறானே அன்றி, பள்ளிக்கூடம் வளர்ச்சி பெற வேண்டுமென்று செல்வதில்லை. நம்மை நாம் திருத்திக் கொள்ளவும், அறவுரை பெறவும் நாம் அறநிலையங்களை நாடுதல் வேண்டும். இன்று திருக்கோயில்களிலும், திருமடங்களிலும் இத்தகைய அறவுரைகளை எடுத்துச் சொல்லத்தக்கவர்கள் இருக்கிறார்களா? என்று கேட்பதில் பயன் இல்லை. நமக்கு விளக்கமின்மையும், சோம்பலுமே இக் குறைபாடுகளுக்குக் காரணம். கோயிலுக்கு அடிக்கடி நாம் சென்று, அங்குள்ள சிவாசாரியர்களைச் சமய நுட்பங்கள் பற்றி வினவவேண்டும். ஏன் வெள்ளிக்கிழமைகளில் வழிபடுதல் சிறப்பாகக் கருதப்படுகிறது? அதுவும் ஆடி வெள்ளியும் தை வெள்ளியும் பாராட்டப்படுவது எதனால்? என்றெல்லாம் கேட்கத் தொடங்கினால், அவர்களுக்குத் தெரியவில்லை என்றாலும் தக்கவர்களை விசாரித்தாவது சமய நுட்பங்களை அவர்கள் தெரிந்து வைத்துக்கொள்வதோடு மற்றவர்களுக்கும் விளக்கிச் சொல்வார்கள். எனவே, கோயில் மடங்களில் இருப்பவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்று சொல்வதில் நமக்கு இருக்கும் உரிமையைவிட, அவர்களைத் தெரிந்தவர்களாக மாற்றுவதில் நமக்குப் பெரும் பங்கு உண்டு என்ற எண்ணம் பக்தர்களுக்கு வரவேண்டும். நாம் அடிக்கடி அறநிலையங்களோடு தொடர்பு கொள்ளவேண்டும். இது சைவர்களாக இருப்பவர்கள் அனைவருக்கும் உரிய கடமை ஆகும். பக்தர்கள் கோயிலுக்கு வருகிறார்கள் என்றால்தான் கோயில் நிர்வாகிகளும், அர்ச்சகர்களும் கோயிலைத் தூய்மையோடும், அருள் விளக்கத்தோடும் பேணுவார்கள். ஒருவரும் வரவில்லையென்றால், யாரும் நம்மைக்

கேட்கமாட்டர்கள் என்ற நினைப்பில் அவர்களும் அலட்சியமாக இருப்பார்கள். கிணற்றைப் பாழ்ங்கிணறு என்று கூறுவது அறியாமை. நாம் நாள்தோறும் அதனைப் பயன்படுத்தி இருந்தால் அதுவும் நன்னீர்க் கிணருக விளங்கும். நமக்கும் நீர் கிடைக்கும். அறநிலையங்களின் வளர்ச்சியும், சிறப்பும் மக்களின் தொடர்பால்தான் சிறப்படைய முடியும் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

இறைவனின் எளிவந்த கருணை :

சிறுவர்களின் குணமே பெரியவர்களிடமும் படிந்துள்ளது. சிறுவர்களிடம் ஒன்றைக் கடுமையாகச் சொல்லிக் கட்டளையிட்டால் அதைச் செய்ய அவர்கள் இணங்கமாட்டார்கள். ஆனுல் இதமாகச் சொன்னுல் கேட்டு நடப்பார்கள். தற்காலத்தில் பெரியவர்களும் பெரும்பாலும் அப்படியே இருக்கிருர்கள். செய்ய வேண்டியது தம் கடமை என்று எண்ணுவதில்லை. மனம் பக்குவம் உடையவர்களாய்ச் செயல்பட்டால்; நாட்டின் நிலை உயரும்; சமுதாயம் வளர்ச்சிபெறும். நாம் இங்கே எழுந்தருளியது பற்றிக் குறிப்பிட்டீர்கள். யாரும் எங்கும் போகலாம். நாம் வழிபடும் கூடற்பெருமானே எளிவந்த கருணையுள்ளம் கொண்டவனுய், தாயின்றி வருந்திய பன்றிக்குட்டிகளுக்கு அவற்றின் தாய்ப் பன்றியாகச் சென்று பால் கொடுத்து அருள் செய்தான். தன்பால் பக்தி உள்ளம் கொண்டுள்ள வந்தியம்மையின் துயர் துடைக்கக் கூலியாளாய்ச் சென்ருன். அதுபோல நாமும் இங்கே வருவதால் பயன் விளைவதாக இருக்கவேண்டும். சிலருக்காவது பயன் விளைய முடியுமென்ருல் வருவதில் மகிழ்ச்சி அடைவோம்.

முன்பு செய்தவத்தின் பயன் :

நாவரசரும், மணிவாசகரும் நமது குருமுதல்வராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானும் போன்ற அருளாளர்கள் நாம் கடைத்தேற எவ்வளவோ அறவுரைகளை விளக்கியுள்ளனர்.

அவற்றை முதலில் நாம் உணர்வதில்லை. அவை அனுபவத்திற்கு வரும்போது பாராட்டுகிறோம். பெரியவர்கள் அனுபவத்தைஒட்டி நாமும் முன்னேறவேண்டும். சொன்னதைச் சொன்னபடி நடை முறைப்படுத்தி வாழ நாம் பழகிக்கொள்ள வேண்டும். தாம் சொல்லியவற்றை முழுவதும் நிறைவேற்ற எல்லோராலும் இயலாது என்றாலும் இயன்ற அளவு சொல்லியவண்ணம் நிறைவேற்ற நடைமுறையில் பழகிக்கொள்ள வேண்டும். நாம் தொடங்கும்போது எடுத்துரைத்த அபிராமி அந்தாதிப் பாடலை நன்கு கவனித்தால் ஓர் உண்மை புலப்படும். இம்மையில் யானை, குதிரை, தேர் முதலிய அரச சின்னங்களோடு ஒருவன் வாழ்கின்றான் என்றால் அவன் முற்பிறப்பில் இறைவனடியில் செலுத்திய பக்திமையும் செய்த தவமுமே அதற்கு அடிப்படை என்பது விளங்குகிறது. நாட்டில் இல்லாதவர் பலராகவும் செல்வந்தர்கள் சிலராகவும் இருப்பதைக் காண்கின்றோம். இதற்குக் காரணம் முன்னைத் தவத்தின் பயன் என்பதை உணர வேண்டும். முற்பிறவியில் நல் வினைக்குக் காரணமாகிய தானம், தவம் முதலிய புண்ணியம் செய்தவர்கள் இம்மையில் வளம் பல பெற்று வாழ்வதோடு மறுமையிலும் இறைவனின் திருவடிப் பேற்றுக்குரியவர்கள் ஆகின்றார்கள். முற்பிறவியில் தானம், தவம் முதலிய புண்ணியச் செயல்களில் ஈடுபடாதவர்கள் நோய்களாலும் வறுமையாலும் துன்புறுகின்றார்கள். இதனையே திருவள்ளுவரும்,

"இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர்நோலா தவர்"

என்று கூறுவதைக் காணலாம்.

இறைவன் ஆட்சி அறஆட்சி! அங்கே அநீதி என்ற பேச்சே இல்லை. நன்மை செய்தவர்களுக்கு அவன் நன்மையையே தந்து வளர்க்கிறான்! தீயவர்க்குத் தீமையையே தந்து திருத்து கிறான்! இந்த அற உணர்வினை நாடு பெற்றுத் திருந்த வேண்டுமானால் மக்களை நெறிப்படுத்த வேண்டுமானால்—இவர்களை

ஈன்றெடுத்த மாதா – பிதாக்களும், உணர்த்தும் குருநாதனும் சரியாகக் கடமையினைச் செய்து காட்டித் தம்மைச் சார்ந்தவர் களைத் திருத்தவேண்டும். இளமை முதலே அறநெறிகள் புகட்டப் பட்டாலொழிய வருங்காலச் சந்ததிகளாவது திருத்தமுறுவார்களா என்பது சந்தேகமாகவே இருக்கும்.


துறவியின் தியாகம் :

வலம்புரம், காவிரித் தென்கரைத் தலங்களுள் ஒன்று. பாடல்பெற்ற இத்தலத்திறகு வழிபாட்டிற்கு வரவேண்டும் என நினைத்தோம். வலம்புரம் பற்றிய புராண வரலாறு தியாக உணர்வை ஊட்டத்தக்கது. ஒருமுறை பெருக்கெடுத்து வந்த காவிரி கும்பகோணத்திற்கு அண்மையில் உள்ள திருவலஞ்சுழியில் வரும்போது, வலமாகச் சுழித்தோடி பாதாளத்துள் புகுந்து விட்டது. காவிரியின் வளத்தைப் பெறமுடியாத மக்கள் இறைவனை வேண்டிக் குறையிரந்தனர். அரச முடியோ அன்றி ஓர் துறவி ஜடா முடியோ பலியிடப்பெற்றால் காவிரி மீண்டும் வெளிவந்து பாயும் என ஓர் அசரீரி தோன்றியது. நாடு காக்கும் மன்னன் பலியிடப் பெறுவதைவிட நாமே நம்மைப் பலியிட்டுக் கொள்ளலாம் என்று கருதிய ஏரண்ட முனிவர் தம்மையே பலியிட்டார். காவிரி மீண்டும் வெளிவந்து பாய்ந்தோடியது. வலஞ்சுழியில் தம்மைப் பலியிட்டுக்கொண்ட ஏரண்ட முனிவர் வலம்புரத்தில் வந்து எழுந்தருளினர். தன்னலங் கருதாது மக்கள் வாழ்விற்காகத் தம்மையே தியாகவுணர்வுடன் அர்ப்பணித்த ஏரண்ட முனிவரின் திருவுருவம் இன்றும் இக்கோயிலில் இருக்கிறது. இத்தகைய பாடல்பெற்ற திருத்தலமாகிய வலம் புரத்துக்கு எழுந்தருளக் கருதிய நம்மை இவ்வூர் அன்பர்கள் அழைத்தனர். மேலப்பெரும்பள்ளம் என வழங்கும் திருவலம்புரத் தரிசனம் கிடைத்தது.

அருள்நெறி வாழ்க்கைக்குக் கால்கோள் :


கீழப்பெரும்பள்ளத்து மக்கள் தங்கள் ஊரில் தனியே ஒரு சிவாலயம் இல்லாத குறையை உணர்ந்து ஓர் ஆலயம் எழுப்பி உள்ளனர். கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டா என்பது பழமொழி. இதனை உணர்ந்த இவ்வூர் மக்கள் இங்கே ஓர் அழகிய கோயிலை நிர்மாணித்துக் குடமுழுக்கும் செய்வித்து அதன் மண்டலாபிஷேக நிறைவிற்கு நம்மை அழைத்த போது நாமும் மகிழ்வுடன் வழிபாட்டிற்கு வந்தோம். இங்கு நாம் வருவதற்கு முன்பே – ஓராண்டிற்கு முன்பே நமது ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பெயரால் வார வழிபாட்டுக் கழகம் அமைத்து அதன் மூலம் அருளநெறிப் போதனைகளும் வார வழிபாடுகளும் நடத்தி வருவது மகிழ்ச்சி தருகிறது. கும்பாபிடேக விழாவில் ஏதேனும் குற்றங்குறைகள் நேர்ந்திருப்பினும், அதனை நிவர்த்தி செய்து கொள்வதற்காகவே இவ்வாறு மண்டலாபிஷேகத்தை நடத்துகின்றோம். இன்று இங்கே நீங்கள் குழுமியுள்ளது போல் தினமும் வந்து வழிபடவேண்டும். மக்கள் வந்தால்தான கோயில்களுக்குச் சத்தி. 'குழந்தையும் தெய்வமும கொண்டாடும் இடத்தில்' என்பது நம் நாட்டுப் பழமொழி. பரிந்து மகிழ்ந்து வர அழைத்தால் இறைவன் வருவான் என்பது நமது முன்னோர் வாக்கு. எனவே கோயில் கட்டியாயிற்று; கும்பாபிடேகம் முடிந்தது; மண்டலாபிஷேகமும் நடந்தேறியது; இனிக் கோயில் பக்கம் வேலை இல்லை என்று கருதாது 'இவை அருள்நெறி வாழ்க்கைக்குக் கால்கோள், தொடக்கவிழா' என்று கருதி நாளும் வந்து வழிபட்டு, இம்மை மறுமைப் பயன் பெற வேண்டுமென்று வாழ்த்தி, இத்திருப்பணியில் ஈடுபட்ட அன்பர்களுக்கும், பக்தர்களுக்கும் எல்லா நலன்களும் பெருகச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான
வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில்
தரிசனத்திற்கு
ஞானபீடம் அமர்ந்தபின் முதன்முதலாக எழுந்தருளியபோது



வைத்தீசுவரன்கோயில் எல்லையில்
தருமையாதீனம்
26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை,
பொதுமக்களும் கோயில் பணியாளர்களும்
பூர்ணகும்ப மரியாதைகளுடன் வரவேற்றல்

குருவடி துதிக்கும் திருக்கூட்டம்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
வைத்தீசுவரன்கோயிலில்,
வரவேற்பளித்த பெருமக்களுக்குப்
பொன்னாடை போர்த்தி அருளாசி வழங்குதல்

[36]

திருவருள் வாழ்வு *

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

[தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் அருள் வாழ்வில் அமைந்த திருவருட் குறிப்புக்களையும் – பக்தியோடு இணைந்த அவர்களது அருளாட்சிச் சிறப்பினையும் – குடிமக்களின் பங்கு இன்னது என்பதனையும் – அறநிலையங்களைப் பேணும் கடமை அனைவருக்கும் உண்டு என்பதனையும் இவ் ஆசியுரை பல்வேறு இலக்கிய – உபநிடத மேற்கோள்களுடன் விளக்குகிறது.]

புள்ளிருக்கு வேளூர் :

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தான் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே"

தருமையாதீனத்தின் இருபத்தேழு கோயில்களில் முதன்மையான திருக்கோயில் புள்ளிருக்குவேளூர். நமது ஆதீன மரபின்படி முதன்முதலாக இத்தல வழிபாட்டினைச் செய்ய

* *வேளூர் அன்பர்கள் நிகழ்த்திய வரவேற்பு வழிபாட்டில் திருவாய் மலர்ந்தருளி 10—12—1971 'ஞானசம்பந்தம்' இதழில் வெளியிடப்பெற்றது.*

25 – 26

வேண்டும் என்று எண்ணினேம். செல்வமுத்துக்குமாரனைத் தரிசிக்க வேண்டுமென்ற பெருவேட்கை நம் உள்ளத்தே பெருகிற்று. சென்ற சில தினங்களுக்குமுன் காசியில் பரிபூரணம் எய்திய கயிலைக் குருமணி அவர்கள் சிவசாயுச்சியமுத்திப் பெரும்பேறு எய்திய காலத்தே "முத்தையா" "முத்தையா" என்று அழைத்துக்கொண்டே பரிபூரணம் பெற்றூர்கள். பல நாட்கள் பெருமான் திருப்பெயரை ஓதி ஓதிப் பக்தி செய்தவர்களுக்கு இத்தகைய முத்திநிலை கைகூடும் என ஞானநூல்கள் கூறுகின்றன.

பணிவும் பரிசும் :

சென்ற கார்த்திகைத் திருநாள் குருவாரம், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் மௌனவிரதநாள். முத்துக்குமாரப் பெருமானது அபிஷேக ஆராதனைகளைத் தரிசித்து என்றுமில்லாத திருவருள் நினைவோடு நவரத்தின அங்கியில் உள்ள முத்தையாவின் பாதங்களை எடுக்கச்செய்து கண்களில் ஒற்றிக் கொடுத்து அணியச்செய்து வழிபட்டுக் காசிக்கு விடை பெற்றுச் சென்று, அங்கு! அப்பெருமான் திருவடிகளில் இரண்டறக் கலந்தார்கள். அக்குருமணியின் அருளாசியையே துணையாகக் கொண்டு அவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்வது நமது கடமை என்று கருதுகின்றேம். இன்று எண்ணற்ற பல வரவேற்பிதழ்களால் நம்மை வரவேற்றுப் பாராட்டியுள்ளீர்கள். நமக்குள்ள சிறப்புக்களால் இத்தகைய பாராட்டுக்கள் கிடைத்திருப்பதாக நாம் கருதவில்லை. எல்லாம் கயிலைக் குருமகா சந்நிதானத்தில் ஆற்றியுள்ள அரும் பணிகளுக்குக் கிடைத்த பரிசுகளாகவே கருதுகிறேம்.

திருவருள் வாழ்வு :

மணிவாசகர் கூறிய "நானூர் என் உள்ளமார் ஞானங்களார் வானேர்பிரான் என்னை ஆண்டிலனேல்" என்ற நிலையினைத்தான் நாமும் கருதுகிறேம். குருவருளும் திருவருளும் உணர்த்தி உணரும் நிலையே நம் நிலை. சாதாரண சிற்றூரில் வாழ்ந்த நம்மைப் பட்டினத்து சுவாமிகளாக மாற்றியது கயிலைக் குருமணியின் கைவண்ணம். குருமணி அவர்கள் அஸ்த விசேஷமுடையவர்கள். அவர்கள் மண்ணைத்

தொட்டாலும் பொன்னாகும். அவர்கள் திருக்கரத்தால் துறவுக் கோலம் அளிக்கப்பட்டவர்கள் இன்று நல்ல நிலைகளில் விளங்கு கின்றார்கள். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் மகா சந்நிதானமும், திருப்பனந்தாள் காசிமடம் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் அவர்களும் குருமணி அவர்களிடம் அருள் துறவுநிலை பெற்றவர்கள்.

திருவருள் அழைப்பு :

உலகியல் வாழ்வுக்கு அப்பால் விளங்கும் திருவருள் வாழ்வுதான் உலகை இயக்கிவருகிறது என்ற உறுதி உடையவர்கள் நம் குருமணி அவர்கள். அவர்களை நினைக்கும் போது சமயாசாரியர்களில் சுந்தரர் வரலாறுதான் நம் நினைவிற்கு வருகிறது. மேலைக் கடற்கரையில் உள்ள திருவஞ்சைக்களத்தில் வழிபட்டுக்கொண்டிருந்த சுந்தரர்க்கு உலக வாழ்வு போதும் என்ற நினைவு வந்தது. கயிலை வருமாறு அழைத்து அருளாணை அனுப்பினான் இறைவன். நம் குருமணியவர்கள் கீழைக் கடற் கரையில் உள்ள கயிலைமலையனைய செந்திற்பதியில் கந்தசஷ்டித் திருநாட்களில் மோனத் தவமிருந்த காலத்தில் அவர்கட்குக் காசிக்கு வருமாறு இறைவன் திருவருள் அழைப்பு விடுத்தான் போலும். அங்கேயே காசி செல்ல முடிவு செய்துவிட்டார்கள். காசிக்குச் சென்ற குருமணி அவர்கள் கங்கையாடவில்லை; விசுவேசனை வணங்கவில்லை. சென்ற 12 மணி நேரத்தில் சிவனடி சேர்ந்தார்கள் என்பதை நினைக்கும்போது திருவடிப்பேற்றிற்கே திருவருள் அழைத்துச் சேர்த்துக்கொண்டதாகத்தான் இதனை உணரமுடிகிறது.

அநாயாச முத்திப்பேறு :

மரணாவஸ்தைகள் எதுவுமில்லாமல், நோயிற் கிடவாமல் பாயிற் படுக்காமல், காலபைரவத் தலமாக விளங்கும் காசிக்குச் சிறந்த காலபைரவ அஷ்டமி தினத்தில் இருந்த நிலையில் முத்தி நிலை கூடினார்கள். 'அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார் மடக்கொடியாரோடு மந்தணங்கொண்டார், இடப்பக்கமே இறை நொந்தது என்றார், கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே' என்ற நிலை இல்லாமல் மூன்று சிறந்த மருத்துவர்கள் உடன் இருந்தும் அவர்கள் அநாயாசமாக முத்திப்பேறெய்தியதை எண்ணி எண்ணி உலகம் போற்றுகிறது.

பக்தியும் - பண்பும் :

தருமையாதீனத்தில் இருபத்தாறரை ஆண்டுகள் அருளாட்சி செய்து சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்கள் எனப் போற்றியவர்கள். எண்ணற்ற திருப்பணிகளைச் செய்தும், இமயம் முதல் குமரிவரை உள்ள தலங்களுக்கு யாத்திரை சென்று வழிபட்டும், மானுடர் அணுக ஒண்ணா மலையாகிய கயிலாய மலையைத் தரிசித்தும், மகா கும்பாபிஷேகங்கள் பல நிகழ்த்தியும் அன்பர்கள் உள்ளத்தில் அழியாத இடம் பெற்றவர்கள். இந்தியக் குடிமக்கள் அனைவரும் அவர்களது பத்தியையும் பண்பு நலங்களையும் பாராட்டுகின்றனர். அவர்களால் இருபத்தாறரை ஆண்டுகள் வளர்க்கப்பெற்ற நம் ஆட்சியும் அவர்களது அடிச்சுவடுகளைப் பின்பற்றியதாகவே அமையும்.

நிர்வாகச் சிறப்பு :

இன்று சைவ மெய்யன்பர்களும் குடிமக்கள் பலரும் பொது மக்களும் நமக்கு வரவேற்பளித்துள்ளனர். புறச்சமயத்தவர் களாகிய புங்கனூர் இஸ்லாமியர்கள் நமக்குச் செங்கோல் வழங்கியுள்ளனர். ஆட்சியில் வளைவில்லாமல், மனத்தில் கோணலில்லாமல் நேர்மையாக நடக்கவேண்டுமென்பதை நினைப்பிக்கிறது செங்கோல். நம் திருமடத்தினைச் சேர்ந்த குடிமக்களில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் உள்ளனர். அனைவரும் ஒன்றுபட்டுத் திருமடத்தின்பால் அன்பு செய்து வருகின்றனர். இந்த நிகழ்ச்சி மதவேறுபாடற்ற நமது ஆதீன நிர்வாகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

பரிசின் உட்கோள் :

பஞ்சாயத்து யூனியன் வெள்ளிக் கோபுரம் ஒன்றைப் பரிசாக வழங்கியுள்ளது. முடி மன்னர்களும் அவர்களுக்குப்பின் வந்த ஆங்கிலேய அரசாட்சியும் திருக்கோயில்களின் பராமரிப்புக்களைத் திருமடத்தின்பால் ஒப்படைத்தன. இன்றைய அரசினரும் திருமடத்தின் திருக்கோயில்கள் நல்ல நிலையில் விளங்குவதைப் பாராட்டுகின்றனர். பஞ்சாயத்து யூனியனும் கோபுரத்தை நம்மிடம் ஒப்படைத்திருப்பது, திருக்கோயில் நிர்வாகம்

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் விரும்பி எழுந்தருள்கின்ற
புள்ளிருக்கு வேளூரில் பொறற்பார்ந்த வரவேற்பு



முடியாட்சி கண்டிட்ட முற்கால மன்னரெலாம்
கற்கோயில் பலதந்து காக்க வைத்தா ரன்றைக்கு
குடியாட்சி கொண்டோங்கும் குடிமக்கள் இந்நாளில்
பொற்கோயில் தந்தின்று புதுக்குகிறார் அவ்வழக்கம்.

திருமடங்களிடமே இருக்கவேண்டும் என்ற அவர்கள் கருத்தை நமக்குத் தெரிவிக்கின்றது. ஆதீனத் திருக்கோயில்களைச் சேர்ந்த குடிமக்கள் இலக்ஷத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அனைவரும் ஒன்றுபட்டுத் தொண்டு செய்தால் தான் கோயில் தழைக்கும். திருமடம் செழிக்கும். குடிமக்களும் தழைப்பார்கள்.

திருக்கோயில் வளர்ச்சி :

தருமம் தலைகாக்கும், என்பது ஒரு பழமொழி. தருமம் செய்தால் செய்த தருமம் நம்மைக் காக்கும்; என்று ஒரு பொருள். நம் குடும்பங்களில் தருமத்திற்கென்று கொஞ்சம் நிலம் விட்டால் சொந்த சொத்தெல்லாம் போய்விட்டாலும் தருமத்திற்கு என்று விடப்பட்ட நிலம் விற்கமுடியாதாகையால் அந்நிலம் நம்மைக் காக்கும் என்றும் ஒரு பொருள் சொல்வார்கள். கயிலைக் குருமணி அவர்கள் இந்தத் தேவஸ்தானக் குடிமக்களுக்கு நிலப் பட்டா வழங்கினார்கள். ஒருசிலரே அதனைப் பெற்றுக்கொள்ள முன்வந்தனர். கிஸ்தி கட்டவேண்டிய கடமை வந்துவிடுமோ என்று அஞ்சிப் பலர் முன்வரவில்லை. கோயில்வேறு நாம்வேறு என்ற நினைப்பு மாறிப் பரஸ்பரம் ஒத்துழைத்தால்தான் கோயில்கள் வளரும்.

உபநிடதக் கூற்று :

கடவுள் சென்னையில் வியாபாரியாக, வேலூரில் விவசாயியாக நம் நிலைகளுக்கு ஏற்ற நிலைகளில் இருந்து அருள் செய்கின்றான். கோயில் நம்முடையது; திருமடம் நம்முடையது என்ற எண்ணம் மக்களிடையே வளரவேண்டும். பலவகை அறங்களைக் கண்காணிக்கும் தலைமைப் பொறுப்புமட்டுமே நம்முடையது. இத்தனைச் சொத்துக்களுக்கும் அதிபதி என்று நாம் எண்ணவில்லை. ஒரு மனிதன் தன் தேவைக்கு மேற்பட்ட பொருள்களை வைத்திருப்பதைப் பாவம் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. பெருந்தீனி தின்பவன் என்று சிலரை நாம் குறைசொல்வதைப் பார்க்கிறோம். நம்மிடையே சிலர் புகுந்து நமக்குள்ள உறவுகளைக் கெடுக்க முயல்வார்கள். தாய் தந்தையர்கள் அடிக்கவும் அணைக்கவும் உரிமை உடையவர்கள்

என்பதை மக்கள் உணரவேண்டும். கடிதோச்சி மெல்ல எறிதல் சிலவேளைகளில் நிகழலாம். குடிமக்கள் கடமையுணர்ந்து பணி செய்யக் கடமைப்பட்டவர்கள் என்பதை உணரவேண்டும்.

அடித் தளமும் கலசமும் :

நிர்வாகம் என்பது ஒரு மனிதனது இயக்கம் போன்றது. எல்லா உறுப்புக்களும் அவனோடு ஒத்துழைக்கும்போதுதான் மனிதன் செயலாற்றமுடியும். சிப்பந்திகளும் குடிமக்களும் கை கால் முதலிய உடலுறுப்புப் போன்றவர்கள். நாம் மூளையாக அல்லது இதயமாக இருந்து உறுப்புக்களை இயக்குகிறோம். கோபுரத்தின் அடித்தளமாக – தூண்களாக – சுதைச் சிற்பங்களாக நீங்கள் விளங்குகிறீர்கள். கோபுரக் கலசமாக நாம் விளங்குகின்றோம். எல்லோரும் இணைந்து செயலாற்றுவதுதான் ஸ்தாபனம் செழிக்கப் பயன்தருவது. இறைவன் தோன்றாத் துணையாயிருந்து எல்லோரையும் பாதுகாப்பான். அவனது ஆலயங்களைக் காப்பது நம் கடைமை. செந்தமிழ்ச் சொக்கன் திருவருளாலும் செல்வமுத்துக்குமரன் திருவருளாலும் எல்லோரும் இனிது வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

[37]

தெய்வ பக்தியும் - தேச பக்தியும் *

"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவர்க்கு
இறையொருங்கு நேர்வது நாடு"

[வங்கதேச உதயத்திற்குப் பாடுபட்ட இந்தியப் பெரு வீரர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியினை வியந்து – தேச பக்தியும் தெய்வ பக்தியும் மனித வாழ்விற்கு இரு கண்கள் போன்றன என்பதனை விளக்கி – நாடு காக்கும் வீரர்களின் நலங் காக்கும் பொறுப்பு யாவர்க்கும் உரியது என்பதனை வலியுறுத்தி நிறைவுபெற்றுள்ளது இவ்வாசியுரை.]

மனிதாபிமானம் :

சகோதர நாடாகிய பாகிஸ்தான் தவறான எண்ணத்தால் விளைவித்த 'பங்களாதேஷ்' உரிமைப் போரில், நாம் விரும்பாமலேயே, மனிதாபிமான உணர்ச்சியின் அடிப்படையில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டுவதாயிற்று. இப்போர் முற்றி, நமது கிழக்கு எல்லையிலும், மேற்கு எல்லையிலும் தீவிரமடைந்து பல்லாயிரம் மக்களுக்கும் பெருந்தீங்கு விளைத்தது.

---

* *திருவாரூரில் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர், திரு. மு. கருணாநிதி அவர்களிடம் ரூபாய் 25001—00க்கான காசோலையைத் தேசியப் பாதுகாப்பு நிதிக்காக வழங்கி, வாசித்தளிக்கப்பெற்று 10-1-1972 'ஞானசம்பந்தம்' இதழில் வெளியிடப்பெற்ற ஆசியுரை.*

வரலாறு காணு வெற்றி :

நமது நாட்டின் பெருமையைப் பெரிதும் உயர்த்தக்கூடிய நிலையில், நம் முப்படை வீரர்களும் ஒன்றுபட்டு உறுதியாக நின்று இதுவரை வரலாறு காணாத ஒரு மாபெரும் வெற்றியைப் பதினைந்தே நாட்களில் வாங்கித்தந்து, சுதந்திர வங்காள தேசத்தை உருவாக்க உதவியிருக்கிறார்கள். இப்பெருமை கிடைக்கக் காரணமாக இருந்த நம் வீரர்களில் பல்லாயிரவர், நமக்காகவும், நம் தாய் நாட்டிற்காகவும் உயிரைத் தியாகம் செய்துள்ளார்கள்; பல்லாயிரவர் உடலைத் தியாகம் செய்து ஊனமடைந்துள்ளார்கள்; பல்லாயிரவர் தாமிருந்த ஊரையும், நாட்டையும், உற்றார் உறவினரையும் தியாகம் செய்து அன்னியரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளார்கள்.

தியாகராசர் தந்த கலைஞர் :

தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இந்திய நாட்டிற் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. நிதி மிகுந்தவர் பொற்குவையாக, நிதி குறைந்தவர் காசுகளாக, ஆண்மையாளர் உழைப்பாக, அதுவும் அற்றவர் வாய்ச்சொல்லாகத் தியாகம் செய்ய முன்வர வேண்டும். அயிராவணத்தையும், அமரர் நாட்டையும் தியாகம் செய்து, ஆருயிர்களை மதித்து, அடல் விடை ஏறும் அண்ணல், தியாகராசப்பெருமான் வீற்றிருக்கும் தியாகத்தலமாகிய திருவாரூரில், ஒவ்வொருவரும் தியாகம் செய்ய வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாகத், தியாகராசர் தந்த கலைஞர். கருணாநிதியின் கரத்தில்நம் முடைய தியாகத்தைப் பொன்னாகவும், பொருளாகவும் வழங்கத் திருவருள் கூட்டியிருப்பது மிக்க பொருத்தமுடையதாக அமைந்திருக்கிறது.

தெய்வ பக்தியும் - தேச பக்தியும் :

தெய்வ பக்தியையும், தேச பக்தியையும் இரு கண்ணெனப் போற்றியவர்கள் தருமையாதீன மகாசந்நிதானங்கள். தருமை

ஆதீனக் குருமணிகளின் புனித வரிசையில் 25வது குருமணியாக, சைவமும் – தமிழும் தழைக்க அருளாட்சிபுரிந்து, சமீபத்தில் காசித் தலத்தில் முத்திப்பேறெய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் நினைவாக, நமது ஆதீனத்தின் சார்பில் ரூபாய் 25,001க்கும், ஆதீனப் பணியாளர்கள் சார்பில் ரூபாய் 2,501க்கும் உரிய காசோலைகள் இத்துடன் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழக முதல்வர் மேற்கொண்டிருக்கின்ற நல்லறப் பணிக்கு நம் தமிழ் மக்கள் பல்லாற்ருனும் உதவி, தமிழகத்தின் நன்றி உணர்வைப் பலப்படுத்துவார்கள் என்பது உறுதி. போரில் நாம் மாபெரும் வெற்றி அடைந்திருப்பதுபோல், போருக்குத் துணைநின்ற போர் வீரர்களின் குடும்பங்களின் நல்வாழ்விற்குப் பெருந்தொகை வழங்குவதிலேயும் வெற்றிபெற்றுத் தமிழ் மக்களின் பெருமையை நிலைநாட்டிக்கொள்வது இன்றியமையாதது. இவ்வறப்பணி எல்லா வகையிலும் சிறக்கச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைப் பிரார்த்திக்கிறேம்.

உயிரா வ(ண்)ணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிர் ஆவணம் செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி
அயிராவணம் ஏருது ஆனேறு ஏறி
அமர்நா டாளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமேயென் அம்மானே நின்
அருட் கண்ணுல் நோக்காதார் அல்லாதாரே

[38]

மக்களும் - சமயமும் *

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"*

[முதலில் மனிதன் மனிதனாக வாழ முயன்று அதில் வெற்றிபெற்ற பின்னரே அவன் தெய்வநிலை பெற முயலுதல் வேண்டும்; அத்தெய்வநிலை எய்தவும் திருவருள் கூட்டுவிக்க வேண்டும் என்பனபோன்ற வற்றையும் மக்கள் கடமைகளையும் விளக்கி, சமயங்கள் யாவும் மக்களை ஈடேற்றவே பாடுபடு கின்றன என்பதை வலியுறுத்தி இக்கட்டுரை நிறைவு பெறுகிறது.]

மனிதன் மனிதனாக வாழ...!

*சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.*

ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவ சமாதி எய்திய குருமூர்த்த ஆலயம் ஸ்ரீ ஞானம்பிகை சமேத ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக விளங்குகிறது. அப்பெருமான் எண்ணிய—எண்ணங்கள் – கருதிய

---

* தருமையாதீனக் குருபூஜைப் பெருவிழாவில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைத்துத் திருவாய் மலர்ந்தருளி 10—6—1972 'ஞானசம்பந்தம்' இதழில் வெளியிடப்பெற்றது.

கருத்துக்கள் நாட்டில் பரவவேண்டும். அதனால் மக்கள் மக்களாக உயர்ந்து வாழவேண்டும். மனிதன் தேவனாவது என்பது பின்னால். மனிதன் மனிதனாக வாழச் சமயநெறி இன்றியமையாதது. இக் கருத்தை விளக்கவே பெரியபுராணம் எழுந்தது. சைவ – சமயத் தலைவர்களாக விளங்கிய பெருமக்கள், நம் வாழ்க்கை நெறி முறைகளை நாம் நன்கு வகுத்துக்கொள்ள வழிகாட்டியுள்ளனர்.

சமயஞானம் கைவர...

பல்வேறு சமயங்களை – கொள்கைகளை அனைவரும் அறிந்து தெளிய இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளால் நமக்கெல்லாம் சமய ஞானம் கைவரவேண்டும். குறிப்பாக இளைஞர்கள் சமய நெறிகளை நன்கு அறிந்துகொள்ளவேண்டும். அவர்களிடையே சமய உண்மைகளை எடுத்துச் சொல்லி, சமய உணர்வை வளர்க்க வேண்டுவது அவசியம். 'ஒருவர் ஒருவற்கு ஆற்றுதிர்' என்பது சங்க இலக்கியம். சமய உணர்வுடையவர்கள் முயன்றால் நன்மைகளையும் விரைவில் பரவச் செய்ய முடியும். அறிவுடைமை குறைவாகவும், அறியாமை மிகுதியாகவும் இருப்பதனால் நம்மால் நல்லவைகளை விரைவில் பின்பற்ற முடியவில்லை. அறியாமையில் இருந்து உலகைக் கரையேற்றுவது என்பது கடவுளாலும் முடியாது. முடியாது என்றால் எப்போதும் என்பதில்லை. உயிர் ஓரளவாவது பக்குவம் பெற்றால்தான் இறையருளும் சித்திக்கும். சூரியனால் தாமரை மலர்கிறது; ஆனால், அரும்பு மலர்வதில்லை. ஆனால், அரும்பாவதும், மலர்வதும் சூரியகிரணத்தால்தான் என்பது உண்மை. எனவே, உயிர்கள் பிறப்பதும் உணர்வதும் அவனருளால்தான் என்பது விளங்குகிறது. உயிர்களும் நாளும் முயன்றுவந்தால், அவற்றிற்கு முழுவளர்ச்சியைக் காலப்போக்கில் இறைவன் தருவான்.

சமயங்கள் மக்கள் வாழ்விற்கே :

மனித பேதங்களுக்கு ஏற்ப, கொள்கைகளும் பலதரப் படுகின்றன. கருத்து வேறுபாடுகள் அவரவர் அறிவின் தரத்திற்குத் தகுந்தாற்போல் அமைவன. எல்லாச் சமயங்களும்- கொள்கைகளும், நாட்டு மக்கள் நலமாக வாழவேண்டும் என்பதற்காகத் தோன்றின என்பதை யாவரும் மறுக்கமுடியாது.

எல்லாச் சமய உண்மைகளையும், நன்மைகளையும் நாம் அறிய பல சமய அன்பர்கள் இங்கே கூடியுள்ளார்கள். அவற்றுள் உயர்ந்த ஒருசில கருத்துக்களையாவது நாம் மேற்கொள்ளவேண்டுமென்ற கருத்திலேயே இம்மாநாடு அமைக்கப்பட்டுள்ளது.

ரசிகமணியின் சீடர் :

அருமையானவற்றையும் ரசிக்கத்தெரியாதவர்கள் சிலர் உண்டு. சிறிய செய்திகளை ரசிப்பவர்களும் உண்டு. இங்கே சிறப்புரையாற்ற வந்திருக்கும் நீதிபதி. மாண்புமிகு மகராஜன் அவர்கள் சிறந்த ரசிகர். ரசிகமணியின் சீடர், கம்ப ராமாயணத்தில் ஈடுபாடும் புலமையும் கொண்டவர்; சமய பக்தியுடையவர்; அவர் மக்களோடு உறவாடத் தலைப்பட்டுள்ளார். மகராஜனை இரு என்பது உலக வழக்கு. அவர் பேச்சோடு மகாநாடு களைகட்டத்தொடங்கும்.

வீர சைவத் திருமடம் :

சமயங்களுள் ஒன்று வீர சைவம், சைவத்தோடு சிறு சிறு பேதங்களைக் கொண்டது. வீர சைவ மடத்தின் அதிபரும் இங்கே வந்திருக்கிறார்கள். வீர சைவம், வீரபத்திரரால் தோற்றுவிக்கப் பட்டது. சிவபெருமானின் குமாரர்கள் நால்வர், இரண்டுபேர் வியாபகம் உடையவர்கள். இரண்டுபேர் வியாபகம் இல்லாதவர்கள். விநாயகரும், முருகனும் நிக்ரக அனுக்கிரக மூர்த்திகள். வீரபத்திரரும், பைரவரும் சம்ஹார மூர்த்திகள். வீர சைவர்கள் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். இங்கே வருகைதந்திருக்கும் வீர சைவ மடத்து அதிபதி அவர்கள், பொருளாதாரத்தில் தாழ்ந்திருந்த கும்பகோணம் மடத்தை நடத்தும் பொறுப்பினை ஏற்று 40 ஆண்டுகளாக முயன்று தற்போது அதனை வளர்த்துவருபவர்கள். சொத்து நம்மைத்தேடி வரவேண்டும் என்ற கொள்கை உடையவர்கள்; எளிய, இனிய பண்பாளர்; அவர்கள் வீர சைவம்பற்றி ஒரு எல்லை வகுத்து இன்று காட்டுவார்கள். இவ்விழா எல்லாவகையிலும், எல்லோருக்கும் பயன்தர ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளைச் சிந்தித்து, அனைவருக்கும் ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி திருக்கோயிலில்
பக்தர்களும் பணியாளர்களும் அளித்த வரவேற்பின்போது,



திருவாவடுதுறை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் உடன் வீற்றிருக்க,
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாசி வழங்குதல்

[39]

அன்பிற்குத் தலைசாய்த்த ஐயன் *

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"

[திருப்பனந்தாளில் எழுந்தருளி அருள்வழங்கும் இறைவன் ஒரு பெண்ணின் பேரன்பிற்குத் தலைசாய்த்து – ஒரு சீரடியாரின் உள்ளன்பிற்குத் தலைநிமிர்ந்த இனிய வரலாறுகளை விளக்கித் தொடங்கும் இக்கட்டுரை – திருவைந்தெழுத்தின் சிறப்பினையும் – திருக்கோயில்களிடத்து மக்களுக்கு உள்ள உரிமையினையும் பிறவற்றையும் இனிது விளக்கி நிறைவுபெறுகிறது.]

அன்பிற்குக் குழைந்த ஐயன் :

இன்று ஒரு நல்லநாள். திருப்பனந்தாள் தேவஸ்தானத் தரிசனத்திற்குத் தருமை, துறைசை இரு மகாசந்நிதானங்களும் எழுந்தருளியுள்ளனர். தலவிருக்ஷத்தின் பெயரால் விளங்கும் தலங்கள் பல. அவற்றுள் ஒன்று திருப்பனந்தாள். இங்குத் தலவிருக்ஷம் பனை. ஊரின் திருப்பெயர் திருப்பனந்தாள். ஆனால் இங்குள்ள கோயிலின் பெயர் தாடகையீச்சரம் என்பது. தாடகை வழிபட்டதால் தாடகையீச்சரம் என வழங்கப்படுகிறது. இங்குத் தாடகையின் அன்புக்குப் பெருமான் தலைவளைந்தான்.

---

* திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி திருக்கோயில் தரிசனத்திற்கு ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் உடன்வர, தருமை துறைசை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் எழுந்தருளியபோது, ஆலயப் பணியாளர்கள் அளித்த வரவேற்பு வழிபாட்டில் திருவாய் மலர்ந்தருளி 10—7—1972 'ஞானசம்பந்தம்' இதழில் வெளியிடப்பெற்றது.

1300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருஞானசம்பந்தர் வழிபாட்டிற்கு வந்தபோது பாடிய தமது பாடலில் தாடகையீச்சரம் என்று இத்தலத்தைக் குறித்துள்ளார். இராமாயணத்தில் வரும் தாடகை வேறு. இங்குக் கூறப்பெறும் தாடகை வேறு. இவள் இத் தலத்தில் பெருமானுக்கு அன்போடும், ஆசாரத்தோடும் மலர்மாலை தொடுத்துக் கொடுக்கும் பணியை மேற்கொண்டிருந்தாள். மலர் எடுக்கும்போதும் மலர்மாலை தொடுக்கும் போதும் வாயைக் கட்டிக்கொண்டு வாய்பேசாது இருக்க வேண்டும் என்று புட்பவிதியில் கூறப்படுகிறது. அம்முறைமை தவறாது மலர் எடுத்துத் தொடுத்து அணிவித்து வழிபாடு செய்து வந்தாள் தாடகையென்னும்பெண். அவள் ஒருநாள் தனது வழிபாட்டின்போது பெருமானுக்கு மலர்மாலை அணிவிக்கையில் ஆடைநெகிழ்ந்தது. ஆடையைச் சரிசெய்து கொண்டு மாலை அணிவிக்கலாம் என்றால் ஆசாரம் குறைந்துவிடுமே என்று பரிதவித்தாள். ஆசாரம் குறையாமல் மாலை அணிவிக்க முயன்றாள்; தன் இரு முழங்கைகளினாலும் ஆடையை இடுக்கிக் கொண்டு மாலை அணிவித்தாள். பெருமான் தாடகையின் அன்புக்கு இரங்கித் தலைவளைந்து மாலையை ஏற்றுக்கொண்டார். உள்ளபடியே அன்புசெலுத்தி மலர்மாலை அணிவித்ததால் சுவாமி தலைசாய்த்தார்.

மன்னன் முயற்சி :

சிலபல ஆண்டுகள் கழித்து, அங்கு வழிபாட்டிற்கு வந்த சோழமன்னன், பெருமான் திருமேனி சாய்ந்திருப்பதைக் கண்டு வருந்தி, நேரே நிமிர்த்தி வழிபட எண்ணினான். தாடகையின் அன்புக்குத் தலைவளைந்த பெருமானை அன்பினால் நிமிர்க்க முயன்றான். அதனால் அவன் தன்னுடைய நால்வகைப் படைகளையும் பயன்படுத்தி இலிங்கத்தை நிமிர்க்க முயற்சி செய்தான்; நிமிர்க்க முடியவில்லை.

> "செங்கண் வெள்ளேற்றின் பாகன் திருப்பனந்தாளில் மேவும்
> அங்கணன் செம்மைகண்டு கும்பிட அரசன் ஆர்வம்
> பொங்கித் தன்வேழமெல்லாம் பூட்டவும் நேர்நில்லாமைக்
> கங்குலும் பகலும் தீராக் கவலையுற்றழுங்கிச் செல்ல"

என்பது சேக்கிழார் வாக்கு. பெருமான் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை; சோழனும் அன்போடுதான் நிமிர்க்க முயன்றான். ஆனால், அந்த அன்பு தாடகை அன்பின் அளவிற்கு இல்லை.

குங்குலியக்கலயரின் குறைவிலா அன்பு :

திருக்கடவூரில் குங்குலியத் தொண்டு செய்து வந்தார் குங்குலியக்கலய நாயனார். அவர் சோழ மன்னனின் செயலை அறிந்தார். சோழ மன்னன் ஈடுபட்ட பணியில் தாமும் ஈடுபட விரும்பினார். திருப்பனந்தாள் சென்று,

"தேனலர்க்கொன்றையார்தந் திருமேனி
பூங்கச்சேய்ந்த
மானவன் கயிறுபூண்டு கழுத்தினால்
வருந்தலுற்றார்."

இலிங்கத்தில் சுற்றியிருந்த கச்சில் முடியிட்ட கயிற்றின் மற்றொரு முனையைத் தம் கழுத்தில் சுருக்கிட்டு இழுத்தார். அன்புக்கிரங்கும் அண்ணலும் நேர்நின்றார். ஆழமான அன்புக்கு - பக்திக்குக் கட்டுப்படுபவன் ஆண்டவன் என்பதை இவ்வரலாறு விளக்குகிறது. இங்கு ஆலயப்பணியாளர்கள் அளித்த வரவேற்பிதழில் இரு மகாசந்நிதானங்களையும் அப்பர் சம்பந்தரோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

திருக்கயிலாய மரபு :

சிந்தை இடையறு அன்பும் திருமேனிதனில் அசைவும் திகழ வீற்றிருக்கிறார்கள் துறைசையாதீன மகாசந்நிதானம் அவர்கள். அம்பலவாணர் என்ற பெயர் தாங்கியுள்ளார்கள் அவர்கள். அம்பலவாணர் பஞ்சாக்கரமே வடிவானவர். பஞ்சாக்கர தேசிகர் தான் திருவாவடுதுறை ஆதீனத்தை ஸ்தாபித்தவர்கள். (குரு) ஞானசம்பந்தர் தருமையாதீனத்தை ஸ்தாபித்தவர். ஞானசம்பந்தர் பெயரும் பஞ்சாக்ஷரம்தான். இது பக்த பஞ்சாக்ஷரம்; ஒற்று நீக்கி எண்ணினால் பஞ்சாக்ஷரம். பஞ்சாக்ஷரத்தை ஓதினால் நலம் அடையலாம். பெருமிழலைக்குறும்பர் சுந்தரமூர்த்தி நாயனார் பெயரை ஓதி நலம்பெற்றார். அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரின் பெயரைச் செபித்து நலம் பெற்றார்.

"மீனவன் செவியினூடு மெய்யுணர் வளிப்போர்கூற
ஞானசமபந்தர் என்னும் நாமமந்திரமும் செல்ல"

என்று சேக்கிழார் குறிப்பிடுவார். ஞானசம்பந்தரை அழைத்தல் நலம் என்று மங்கையர்க்கரசியார் பாண்டிய மன்னுக்கு அறிவித்த

வுடன் அரசனின் உடல் வெப்பு சிறிது குறைந்தது. இதுவும் பக்த பஞ்சாக்ஷரத்தின் மகிமை. பஞ்சாக்ஷரம் முக்கியமானது. பஞ்சாக்ஷரத்தை உபதேசம் செய்யும் மரபில் திருக்கயிலாய பரம்பரையில் வந்தவர்கள் இரு மகாசந்நிதானங்களும். அவர்களிடம் பஞ்சாக்ஷரத்தை உபதேசவாயிலாகக் கேட்டு மக்கள் உய்தி பெறுவார்களாக.

காசிவாசியின் கனிவான அன்பு:

தாடகை அன்புக்குப் பெருமான் தலைவளைந்தார். நமது முத்துக்குமாரசுவாமித் தம்பிரானின் அளவிலாத அன்புக்குக் கட்டுப்பட்டு இருமகா சந்நிதானங்களும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்திற்கும், திருக்கோயில் தரிசனத்திற்கும் எழுந்தருளியுள்ளார்கள். உங்கள் முன்னிலையில் இருமகா சந்நிதானங்களையும் இருக்கச்செய்த பெருமை அவர்களுக்கு உண்டு.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும், காசிவாசி அருணந்தித் தம்பிரான் அவர்களும் காசியில் முக்திபெற்றமை குருவும் சிஷ்யரும் ஒரு பெரு நிலையைப் பெற்ற திருவருள் வியப்பாக உள்ளது. அண்மையில் முக்திபெற்ற காசிவாசி அருணந்தித் தம்பிரான் அவர்கள் 533 அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார்கள் குங்குலியக்கலயனார் செய்த தொண்டு நிலைபெற வழிவகுத்தார்கள். திருக்கடவூரிலும் திருப்பனந்தாளிலும் கலயனார் தொண்டுநிகழ அறக்கட்டளை வகுத்துள்ளார்கள். குங்குலியக்கலயர் அப்பரையும் ஞானசம்பந்தரையும் திருக்கடவூரில் வரவேற்று உபசரித்தார். அதுபோல் இரு மகாசந்நிதானங்களையும், ஸ்ரீ காசி மடத்தில் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள் வரவேற்று உபசரித்தார்கள். ஸ்ரீ காசி மடம் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்களின் அன்பினால் திருப்பனந்தாள் ஆலய தரிசனத்திற்கு எழுந்தருளிய மகாசந்நிதானங்களுக்கு ஆலயப் பணியாளர்களால் வரவேற்பு அளிக்கப்படுகிறது; எல்லாம் இங்குள்ள மக்களின் அன்புஎன்றே சொல்ல வேண்டும்.

கோயிலும் மக்களும் :

அன்பின் மிகுதியால் ஒவ்வொருவரும் எங்கள் அருகில் வந்து வணங்கி மகிழ விரும்புகிறீர்கள். பெரிய கூட்டத்தில் அது முடியக்கூடியது அல்ல. நமது தேவஸ்தானத்திற்கு நாம் அடிக்கடி வரும் வாய்ப்பு உண்டு. அப்பொழுது அனைவரையும் சாவதானமாகக் காணவும் விரிவாகப் பேசவும் நேரம் இருக்கும். இப்பொழுது சுருக்கமாக இரண்டொன்றைச் சொல்லவேண்டியுள்ளது. தேவஸ்தானத்துக்கு உள்ள நிலத்தில் இருந்து வரும் விளைவை அருணஜடேசுவரசுவாமி சாப்பிட்டுவிட வில்லை. அதனால் பயன் அடைபவர்கள் அர்ச்சகர் முதல் உள்ள தேவஸ்தானப் பணியாளர்களும், திருவிழாக் காலங்களில் பணிசெய்யும் குடிமக்கள், தொழிலாளர்கள், இசைவாணர்கள் முதலியவர்களும், வழிபாட்டிற்கு வரும் யாத்திரிகர்கள் முதலிய பலருமேயாகும். இதைப் புரிந்துகொள்ளாமல் கோயில் நிலத்தை வைத்துக்கொண்டு யாரோ வாழ்கிறார்கள் என்று யாராவது சொன்னால், அதை நீங்களும் சரி என்று நம்பிவிடக்கூடாது.

குடிமக்கள் நல்வாழ்வில் ஆதீனத்தின் பங்கு :

இன்றும், நிலத்தை உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்று சட்டம் வந்துவிட்டதாக ஒரு வதந்தி உண்டானதைக் கேட்டுச் சில குடிமக்கள் ஒன்றும் புரியாமல் ஒரு மகிழ்ச்சி யடைந்தார்கள். ஆனால் இரண்டு நாள்கூட அந்த மகிழ்ச்சி நிலைபெறவில்லை. உடனே அப்படி ஒன்றும் சட்டம் வரவில்லை என்று ஏற்பட்டுவிட்டது. உழுகின்ற மக்களுக்கு அரசாங்கம் ஏதாவது நன்மை செய்யுமானால் அதைச் செயற்படுத்துவதில் நமது ஆதீனம் முன்னணியில் இருக்கும் என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறோம். ஆகவே குடிமக்களுக்கு ஏதாவது குறைகள் இருக்குமானால் அதை நம்மிடம் நேராகவேதெரிவித்துக் கொள்ளலாம்; அதற்கு வேண்டிய பரிகாரம் உடனடி யாகவே செய்யப்படும். குடிமக்கள் நம்முடைய மக்கள் என்று

தான் ஆதீனம் கருதியிருக்கின்றது குடிமக்களும் அதுபோல ஆதீனமும், ஆலயமும் நம்முடையது என்று அன்பு கொள்ள வேண்டும். அப்படித்தான் இருக்கின்றீர்கள்; என்றாலும் இடையிடையே சில வதந்திகளால் உங்கள் உள்ளம் எப்படியோ கலக்கம் அடைகின்றது; அத்தகைய கலக்கம் தேவையில்லை.

மக்கள், கடவுளிடம் பக்தி செலுத்தி நன்மையடைய விரும்புகிறார்கள். கடவுட் காரியங்களுக்குப் பயன்படும் தேவஸ்தான நிலத்தைக் குத்தகைக்கு வைத்திருப்பவர்களும் ஆண்டவனுக்குரிய பங்கைத் தவறாமல் செலுத்தி ஆண்டவன் அருளை நிரம்பப் பெறுவார்களாக.

இன்று இரு மகாசந்நிதானங்களும் இங்கு எழுந்தருள்வதற்குக் காரணமாய் உள்ள காசிமடத்துத் தம்பிரான் அவர்களுக்கும் இங்குப் பெருந்திரளாகக் கூடி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்பு அளித்த மக்கள் பலருக்கும் குருவருளாலும், திருவருளாலும் எல்லா நன்மைகளும் இனிது பெருக வாழ்த்துகிறோம்.

"சூழ்தரு வல்வினையும் உடல்தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல்மிக ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல்பொங்கரவும் புனைந்த
தாழ்சடையான் பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே."

தருமையாதீனம் ஆவணிமூலப் பெருவிழாவன்று

(20—8—1972)

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் சந்நிதியில்



தருமையாதீனம் 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குப்
பொன்னுடை போர்த்தி,
சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர்
திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்களுக்கு
'மும்மொழிக்கொண்டல்'
என்ற பட்டமளித்து ஆசி வழங்கியருளல்

[40]

இறைவன் திருவுள்ளம் *

" அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு "

[அடியார் எனப்படுவார் யார், அவர்கட்கு ஆண்டவன் கருணை வெளிப்படுவது எவ்வாறு என்ற வினாக்களுக்கு விடை கூறித் தொடங்கி - இறைவன் அருளிப்பாட்டின் உட்கோளை அறிவதும் - அவன் திருவுள்ளக் குறிப்பை விளங்கிக் கொள்வதும் சமய நெறி நிற்பவர்களின் கடமை என்பதனை விளக்கி 'மதுரை நிகர் தருமை' என்பதனை மேற்கோள்காட்டி நிறைவுபெறுகிறது இவ்வினிய கட்டுரை.]

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் !

ஆசாரியர் கடமை :

அடியார் என்னுஞ் சொல் எல்லா உயிர்களையும் குறிப்பது அன்று. தேர்ந்த மெய்ஞ்ஞானத் தெளிவுடையோரே அடியார் எனப்படுவர். அத்தகு அருளாளர்களையே 'நடமாடுங் கோயில் நம்பன்' எனத் திருமூலர் குறிக்கிறார். இறைவன் அருள் எண்ணி வியக்கும் அத்தகு அடியார்களுக்கு இறைவன் எளிவந்தவனாய் அருள் புரிவான் என்பதனை விளக்குவதே இவ்வாவணிமூலப்

* தருமையாதீனம் ஆவணிமூலப் பெருவிழாவில் திருவாய் மலர்ந்தருளி 10—9—1972 'ஞானசம்பந்தம்' இதழில் வெளியிடப்பெற்றது.

பெருவிழா. ஒருசில அடையாளம் உடையவர்களே அடியார்கள் என்று எண்ணுவது அசம்பாவிதம். எல்லா மனிதர்களும் ஒரே தன்மையுடையவர்களல்லர். மேருமலை வேறு – சாதாரண மலைகள் வேறுதான் என்பதை உலகியலில் அறியலாம். உலகில் ஏற்றத் தாழ்வுகள் இயற்கையானதாகும். அதனை அறிந்திருந்தும் மாயா உலகம் மயங்குகின்றது. அவற்றை எல்லாம் விளக்க வேண்டுவது நம்மனோர் கடமை.

இறைவன் கருணை :

இறைவன் தாழ்நிலையில் உள்ள உயிர்கள் மாட்டும் கருணை பூண்டு அருள் வழங்கினார். உயர்ந்தார் - தாழ்ந்தார் என்று நோக்காது, உயிர்களின் தகுதி அறிந்தே இறைவன் கருணை மலர்கிறது. பன்றிக்குட்டிக்கு அருள்சுரந்த வரலாறு இறைவனின் அருளை விளக்கவல்லது. அதிலும், எல்லாப் பன்றிகளுக்கும் அருள் கிடைத்துவிடவில்லை. பூர்வஜன்ம புண்ணியமும் தகுதியும் பெற்றதனால்தான் பன்றிக்கு இப்பேறு கிடைத்தது. இறைவன் அருள்செய்ய என்றும் காத்திருக்கிறான்; நாம்தான் அத்தகுதிக்கு உயர்வதில்லை. நல்ல பண்புள்ள உயிர் கிடைக்காததால் இறைவன் ஏங்கித் தவிக்கிறான். பிட்டு வாணிச்சியாய், யாருமற்ற அனாதையாய், அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னையவள் தரும்பிட்டுப்பிட்டுண்டு தலையன்பில் இறைவன் கட்டுண்டார் என்றால் அவர் பெருமையை எண்ணவேண்டும். பல பெருஞ்செல்வர்கள் அக்காலத்தும் இருந்திருப்பார்கள். ஆனால் அவர்கட்கெல்லாம் இறையருள் கிடைக்கவில்லை. அன்பு நிறைந்த-ஆண்டவனின் கருணை உணர்ந்த ஆன்மாவிடம் இறைவன் கருணையாக இருந்ததையே இவ்வாவணிமூல விழா நமக்கு உணர்த்துகின்றது.

அருளிப்பாடுகள் உட்கோள் :

ஒரே கல்லில் இருமாங்காய் அடிப்பதுபோல ஆண் - பெண்ணாக விளங்கும் உலகில் இருசாரார்க்கும் ஒருசேர இறைவன் அருள் வழங்குகிறார். உலகம் சிவமும்-சத்தியுமாய் விளங்குகின்ற உண்மையை இவ்வருளிப்பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன. மாணிக்கவாசகர்பொருட்டு வந்திக்கு அருள் பாலிக்கிறார். திருநாவுக்கரசரை – திலகவதியாரைக் கொண்டு உய்விக்கிறார். திருஞானசம்பந்தர் பெருமையை – குலச்சிறையார் – மங்கையர்க்கரசியார் அன்போடு இணைத்து அருளுகிறார்.

மதுரை நிகர் தருமை :

பண்சுமந்த பாடலுக்கு ஏங்கித்தவிக்கும் இறைவன் புண்ணைப் பரிசாகப் பெற்றார். இவற்றைப் பழங்கதையாக நாம் பேசவில்லை. எதனையும் உழைப்பால் பெறவேண்டும் என்ற எண்ணத்தை வாழ்வில் மேற்கொள்ளவே இவ்விழாவை மதுரையிலும், மதுரையையே ஒத்த தருமையிலும் கொண்டாடுகிறோம். 'தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்தருள்' என்ற குமரகுருபரர் வாக்கு இதனை மெய்ப்பிக் கிறது. மதுரையிலும் சொக்கேசன், தருமையிலும் சொக்கேசன்! மதுரையிலே சித்திவிநாயகர், தருமையிலும் சித்திவிநாயகர்! இதனைப் பாராட்டும் விழாவாக – புலவர்களைப் போற்றும் புனித விழாவாகக் கயிலைக் குருமணி அவர்கள் பட்டமளித்துப் பாராட்டிச் சிறப்பித்து வந்தார்கள்.

இறைவன் திருவுள்ளம் :

நமது குன்றக்குடி திருமடத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட திருப்பத்தூர் தேவாரத்தில் நாவரசர்பெருமான் இறைவன் தருமிக்குப் பொற்கிழி அளித்தருளிய மதுரைத் திருவிளையாடலைச் சிறப்பித்துப் பாடுகிறார்.

> " நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
> நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண் "

என்பது திருத்தாண்டகம். ஒரு சிவாசாரிய இளைஞன், திருமேனி தீண்டிப் பூசிப்பதற்குப் பிரமசரியம் தடையாக இருக்கிறது என்ற உயர்ந்த நோக்கில் இறைவனிடம் பொருள் வேண்டுகின்றான். இறைவன் தகுதி அறிந்து வந்து உதவி செய்கிறார், தருமி திருமணத்திற்குப் பொருள் தந்த நோக்கத்தை ஆழச் சிந்தித்தால் இறைவன் திருவுள்ளம் புலப்படும். திருமணம் ஒரு புனிதமான நிகழ்ச்சி. பலர்க்கு அதன் நோக்கம் தெரிவதில்லை ஐந்தாறு உயிர்களை ஈன்று பாதுகாக்கும் புனிதப் பணியிலேயே இறைவன் திருமணத்தைப் படைத்து ஒரு சுவை வைத்து உயிர்களை இயக்குகிறார். எதையும் விருப்போடு நாம் செய்ய வேண்டும் என்பதை ஊன்றி நோக்கினால் திருமணத் தத்துவம் நன்கு புலப்படும். இவ்வடிப்படையில்தான் இறைவன் அருள் தருமிக்குக் கிடைத்தது. எனவே, இத்திருவிளையாடல்கள் எல்லாம் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்ய உயிர்களை ஊக்குவிக்கவே என்பது விளங்குகிறது.

மும்மொழிக்கொண்டல் :

இவ்வாதீனத்தின் 24ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் பதினன்கு பெருமக்களை ஆதீனப் புலவர்களாக ஏற்றருளினர்கள். நமது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திரு. சி. அருணை வடிவேலரை ஆதீனப் புலவராக ஏற்று இருபத்தொரு பெரு மக்களுக்குப் பட்டமளித்துச் சிறப்பித்தார்கள். அவ்வகையில் இவ்வாண்டு எல்லாவகையிலும் சிறப்புவாய்ந்த அன்பர் சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்களுக்குச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் சொக்கநாதப் பெருமான் சந்நிதியிலேயே 'மும்மொழிக்கொண்டல்' என்ற பட்டம் வழங்கப்பெற்றிருக்கிறது.

ஞானசம்பந்தம் :

ஔவையார் ஒருவரா? பலரா என்ற ஐய்யப்பாடு நம்மிடையே உண்டு. சம்பந்தர் என்ற பெயர் பலகாலத்தே பெருமக்கள் பலர்க்குத் திருப்பெயராக அமைந்திருக்கிறது. இப்பெயர் வேறுபாடுகளை நம் முன்னோர்கள் தெளிவான அடைமொழிகள் மூலம் வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார்கள். திருஞானசம்பந்தரே சம்பந்தர் என்ற பெயருக்கு முதலாமவர். அம்மை குழைத்தூட்டிய சிவஞானம் கைவரப்பெற்றமையின் 'திருஞானசம்பந்தர்' என வழங்கப்பெற்றார். சந்தானசாரியர் பரம்பரையுள் மூன்றாமவர் மறைவல்ல திறத்தால் 'மறைஞானசம்பந்தர்' என வழங்கப் பெற்றார். நமது தருமையாதீன முதற் குரவராக விளங்கியவர்கள் குருபீடம் நிறுவினமையின் 'குருஞானசம்பந்தர்' எனப் பெயர் பெற்றார். நமது சைவ மரபே எல்லாம் ஞானசம்பந்தம் உடையதுதான். தருமையாதீனக் குருமகா சந்நிதானங்கள் கையொப்பமெல்லாம் 'ஞானசம்பந்தன்' என்பதுதான், அதன் நோக்கமே இப்பீடத்தில் எழுந்தருளும் மகா சந்நிதானங்கள் யாவரும் ஞானசம்பந்தராகவே கருதப்படுகிறார்கள் என்பதே. நாம் ஞானபீடமேறிய பிறகு முதன் முதலில் ஒரு ஞான சம்பந்தத்திற்குப் பட்டம் வழங்க வாய்த்திருப்பது திருவருட் செயலாகவே அமைந்தது.

பாராட்டுக்குரிய தகுதி :

இன்று சிறப்புப் பெற்ற அன்பர் சம்ஸ்கிருதத்தில் எம். ஏ., பட்டம் பெற்றவர்; ஆங்கிலமும், பின்னல் தமிழும் கற்றுத் தேர்ந்தார்; நிர்வாகத் திறன் மிக்கவர். அடிக்கடி பூசல் நடைபெற்றுக்கொண்டிருந்த திருவையாற்றுக் கல்லூரியை

இவர் முதல்வராகப் பதவி வகித்த ஐந்தாண்டுக்காலம் அமைதியாக நடத்தினர். இத்தகு திறன்மிக்கவரைப் பல்கலைக் கழகப் பதிவாளராகத் தேர்ந்தெடுத்த தமிழக அரசைப் பாராட்டுகிறேம். வடமொழியில் கவி இயற்றும் வல்லமை மிக்கவர். வரம்போடு உபகாரியாக இருப்பவர். தம்மால் இயன்றதைச்செய்ய அஞ்சாத குணநலம் அவர்க்குரியது. அவரது ஊர் குணமங்கலம் என்பது. அவ்வூர்ப் பெயர்ப் பண்பு அவரிடம் உள்ளது. அவர் தந்தை பெரியபெருமாள் பிள்ளை சிறந்த சிவபக்தர்; சிவனடியார்களைப் பேணுபவர். சிவானந்த முனிவர் முதலாய அடியார்களுக்குப் பொருள் உதவிப் போற்றி பெருமைமிக்கவர். தம் புதல்வர்களுள் ஒருவரைத் தமிழுக்கும், ஒருவரைச் சம்ஸ்கிருதத்திற்கும் அவர் தந்தை அளித்தவர். சம்ஸ்கிருதத்திற்கு அளித்த புதல்வரே இன்று இங்குச் சிறப்புப் பெறுகிருர்.

மொழி வளர்ச்சியும் - சமய வளர்ச்சியும் :

தற்காலத்தே தமிழ் கற்றவர்களுள் பலர் தங்கள் பிள்ளைகளை பி. காம்., எம். காம்., போன்ற தொழில்வணிக, பட்டப் படிப்புக் களில் செலுத்துகிருர்கள். இவர்களாலெல்லாம் தமிழ் வளராது. உண்மையில் இறைவனே தமிழை வளர்த்துவருகிருர். கிறித்துவர்கள் தங்கள் பிள்ளைகளுள் ஒருவரைச் சமயத்திற்கு அளிக்கிருர்கள். அதுபோலச் சைவர்களும் சமய வளர்ச்சிக்குத் தங்கள் பிள்ளைகளுள் ஒருவரை ஆட்படுத்தவேண்டும் வித்தகம் பேசாது, பணி செய்துவரும் மேகம் ஒத்த இவர்களுக்கு 'மும்மொழிக்கொண்டல்' என்ற பட்டத்தை ஸ்ரீ குருஞான சம்பந்தர் வாயிலாகவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் அருள் துணைக்கொண்டும் வழங்கும் வாய்ப்பை இறையருள் இன்று கூட்டி வைத்திருக்கிறது. இன்று நமது ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் ஆண்டுவிழாவும் இவ்விழாவோடு இணைந்து நடைபெறுகிறது. அக்கல்லூரியிலேயே பயின்ற நாம் அதனை நிருவகிக்கும் பொறுப்பையும் ஏற்று நடத்தும்படித் திருவருள் கூட்டியிருப்ப தாகவே கருதுகிறேம். இன்று பட்டம் பெற்ற நல்லன்பர்க்கும் – ஏனையோர்க்கும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் பெருகப் பிரார்த்திக்கிறேம்.

[41]

தனிமனிதனும் - சமுதாயமும் *

''பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்''

ஞானசம்பந்தருக்கு ஆயிரம் பொன் அருளிய திருவாவடுதுறை தலச்சிறப்பினை விளக்கி, நம் முன்னோர் செய்த புண்ணிய பாவங்களும் - பெருமை சிறுமைகளும் நம்மையே சாரும் என்பதனை எடுத்துரைத்து, சமுதாய மேம்பாடுகளெல்லாம் தனி மனித ஒழுக்கத்தாலும் முயற்சியினாலுமே அமைவன என்பதனை வலியுறுத்தி நிறைவு பெறுகிறது இவ்வாசியுரை.

குறைவிலா நிறைவே குணக்குன்றே கூத்தனே
குழைக்கா துடையானே
உறவிலே னுனையன்றி மற்றடியேன் ஒருபிழை
பொறுத்தா லிழிவுண்டே
சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச் செம்பொனே
திருவாவடு துறையுள்
அறவனே யெனை அஞ்சலென்றருளாய் ஆரெனக்குறவு
அமரர்கள் ஏறே,

தலச் சிறப்பு :

இன்று ஒரு சிறந்த நாள்; கோமுத்தீஸ்வரர் ஒப்பிலா முலையம்மை திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழாவைக்

---

* *திருவாவடுதுறை, ஸ்ரீ கோமுத்தீசுவரர் திருக்கோயில் மகா கும்பாபிடேக விழா மலரை வெளியிட்டுத் திருவாய் மலர்ந்தருளி* 10—9—1972 '*ஞானசம்பந்தம்*' *இதழில் வெளியிடப்பெற்றது.*


தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள்
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்திற்கு
எழுந்தருளியபோது
(28—6—1972)



தருமையாதீனம்
26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களையும்
துறைசையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களையும்
ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் வரவேற்றல்

திருவாவடுதுறை ஆதீனம்
ஸ்ரீ கோமுக்தீசுவரர் திருக்கோயில்
மகா கும்பாபிஷேக விழா
(27 – 8 – 1972)

குன்றக்குடி, துறைசை, தருமை
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களு
பனசை ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகளும்





கண்டுகளித்துச் சிறந்த சிவ புண்ணியத்தினை ஈட்டிய நிறைவில் நாம் கூடியிருக்கிறோம். அம்பிகை பசுவாக அவதரித்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றது திருஆவடுதுறை. ஞானசம்பந்தருக்கு உலவாப் பொற்கிழியளித்தவர் இங்குள்ள பெருமான். சித்தர்கள் பலர் தங்கி வழிபட்ட சிறப்பும், திருமூலர் போதியடியில் இருந்து மூவாயிரம் ஆண்டுகள் மோனத் தவம் பெருக்கித் திருமந்திரத்தை நமக்கு வழங்கியதும் இத்தலத்திற்குத் தனிச் சிறப்பைத் தருகிறது.

இப்புனித நாளில் மலரை வெளியிடுமாறு கேட்டுக்கொண்ட சங்கரம்பிள்ளை 'பன்னூறு கும்பாபிஷேகங்கள் செய்த தருமை ஆதீன மகா சந்நிதானத்தின் திருக்கரத்தால் வெளியிட்டருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நாம் அருளாட்சி ஏற்றுச் சிறிதுகாலத்தில் இன்னும் ஒரு கும்பாபிஷேகத்தையும் செய்யவில்லை. அப்படியிருந்தும் பல நூறு கும்பாபிஷேகங்கள் செய்தவர்கள். என்று அவர் கூறியதில் ஒரு பொருள் – ஒரு தத்துவம்கூட இருக்கிறது. நமக்கு முன் அருளாட்சி நிகழ்த்திய கயிலைக் குருமணி அவர்கள் பல கும்பாபிஷேகங்களைச் செய்தருளியவர்கள். முன்னோர்கள் செய்த புண்ணியங்கள் எல்லாம் அவர்கள் பரம்பரையில் வருவோர்க்கும் உண்டு. முன்னோர் பட்ட கடன்களும், வருவாய்களும் அவர்களின் பின் வருவோர்க்கு எவ்வாறு உரிமை உடையனவோ அவ்வாறே முன்னோர் செய்த புண்ணிய பாவங்களும் நமக்கு உரிமையுள்ளன. சங்க நூல்களில் ஒரு வரலாறு உண்டு. முரசு கட்டிலில் துஞ்சிய மோசிகீரனுர்க்கு அவர் உறங்கும்வரை கவரி வீசினுன் ஒரு காவலன் என்று. அதுபோலச் சேதுபதி ஒருவர் உறங்கிய புலவர் ஒருவர்க்குப் பங்கா இழுத்தாராம். புலவர் எழுந்து வருந்தியபோது 'பங்கா இழுப்பதும் முன்னோர்கள் செய்திட்ட பாக்கியமே' என்று பாடி மகிழ்ந்தார் என்று கூறுவார்கள். அதுபோல நாம் செய்யும் புண்ணிய பாவங்கள் நமக்குப்பின் வருவோர்க்கும் உரிமையுடையன என்று கருதி நாம் வாழவேண்டும்.

திருப்பணி ஆர்வம் :

திருவாவடுதுறை ஆதீனம் மகா சந்நிதானம் அவர்களைக் காணும்போதெல்லாம் அப்பர் பெருமான் நினைவிற்கு வருகிருர். சிந்தையிடையரு அன்பும் திருமேனிதனிலசைவும்' கொண்டு

அப்பரடிகள் போலவே விளங்கும் திருவாவடுதுறையாதீனம் மகா சந்நிதானம் அவர்கள் மிகச் சிறப்பாக இத்திருக்கோயிலைத் திருப்பணிகள் செய்து மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தியுள்ளார்கள். இவர்கள் அருளாட்சியேற்று ஐந்தாண்டுக் காலத்தில் திருவிடைமருதூர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது. மேலும் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் அவதரித்த இடத்தில் ஓர் ஆலயம் எழுப்ப இருக்கிறார்கள். திருப்பெருந்துறைத் திருக்கோயில் திருப்பணி நிகழ்ந்துகொண்டிருக்கிறது. விரைவில் இத்திருக்கோயில்களின் குடமுழுக்கு விழாக்களைக் காண இருக்கிறோம். திருக்கயிலாய பரம்பரையில் தோன்றிய சைவ ஆதீனங்கள் பதினெட்டு; அவற்றின் ஞான பிதாவாக விளங்குபவர் மெய்கண்டார். மெய்கண்டார் சிவஞானங் கைவரப்பெற்று முத்திப்பேறுற்ற திருவெண்ணெய்நல்லூரிலுள்ள மெய்கண்டார் திருக்கோயிலை மிகச் சிறந்தமுறையில் திருப்பணிகள் செய்து மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தத் திருவுளம்பற்றியுள்ளார்கள்.

தனிமனிதனும் — சமுதாயமும் :

நல்லறங்கள் பலவும் செய்தற்கமைந்த திருமடங்கள் அவற்றின் கடமைகளைச் செம்மையாகச் செய்துவருகின்றன என்பதை உலக மக்கள் உணரவேண்டும். தனிமனிதன் திருந்தினால் நாடு திருந்தும்; மக்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து சமயப் பணிகள் செய்து சிறக்கவேண்டும். இங்கு நிகழ்ந்த மகா கும்பாபிஷேக விழாவையொட்டிச் சைவ சமயக் கோட்பாடுகளையும், பல்வேறு தத்துவங்களையும், தேவார — திருமுறைகளின் பொருள் நலங்களையும் விளக்கும் பல்வேறு பெருமக்களின் கட்டுரைகளோடு கூடிய விழாமலர் ஒன்று வெளியிட்டுள்ளார்கள். துறைசை மகா சந்நிதானம் அவர்கள் விருப்பின்படி இன்று இம்மலரை வெளியிடுவதில் மகிழ்வுகொள்கிறோம். மலர் மக்கள் உள்ளத்தில் சிவமணம் பரப்பி மகிழ்விக்க ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீசுவரசுவாமி திருக்கோயில்
வழிபாட்டிற்குப் பின்னர்



துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்
துறைசைத் திருமடத்திற்கு எழுந்தருளல்
(15—12—1971)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில்



தருமை, துறைசையாதீனங்களின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள்
கொலுக்காட்சி வழங்கியபோது
ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
கொலு வழிபாடு நிகழ்த்தி அருளாசி பெறுதல்

திரு அருட் செய்தி

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	16	ஆன்மார்ந்த	ஆன்மார்த்த
6	6	பாடல்பெற்ற	பாடப்பெற்ற
8	11	நன்ருக	நன்ருகா
8	12	தோன்ருய	தோன்றிய
18	33	ஆதீன குரு	ஆதீனக் குரு
41	27	ஞானசாரிராகிய	ஞானசாரியராகிய
42	21	ஈாடாகாது	ஈடாகாது
43	2	ஈடுபத்தியது	ஈடுபடுத்தியது
63	10	தமிழிகத்தில்	தமிழகத்தில்
71	20	பகுதினர்	பகுதியினர்
86	27	நெடுமாரரும்	நெடுமாறரும்
100	20	10—9—1963	10—9—1973
114	23	சீர்த்திருத்தம்	சீர்திருத்தம்
130	2	பெற்றியார் பேணி	பெற்றியார்ப் பேணி
163	10	ஈடுபத்தச்	ஈடுபடுத்தச்
176	1	தரத்திற்கும்.	தரத்திற்கும்,
201	22	அமர்நா	அமரர்நா
213	25	வேண்டுன்கிருன்	வேண்டுகிருன்.
215	11	போற்றி	போற்றிய